வானதி பதிப்பகம்

# அஞ்சலி

லா.ச.ராமாமிர்தம்

# அஞ்சலி

லா. ச. ராமாமிருதம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

வானதி முதற் பதிப்பு : ஆகஸ்ட் 1994

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 32-00

நேரு அச்சகம், 43, அம்மையப்பன் தெரு, சென்னை—600 014

# பஞ்சபூதக் கதைகள்

இக் கதையையும், இந்த அடுக்கில் நான் எழுத விருக்கும் மற்றக் கதைகளையும் என் இளைய சகோ தரிக்குப் பக்தியுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இருந்தவரையில், அவள் இக்கதையின் பின்னணியில் பாயும் காவிரியேபோல் கன்னியாகவும், தாய்மை நிரம்பியவளாயும், களங்கமற்றவளாயும், எல்லாம் தெரிந்தவளாயும், பாரியாகவும் இயங்கிவிட்டு பிறகு அஸ்திபூர்வமாக சமுத்திரத்தில் கலந்து நித்யையாகி விட்டாள்.

எங்கும் நிறைந்த பேருயிரில் இப்பொழுது அவள் உறைவதால் என் சமர்ப்பணத்தை அவள் ஏற்றுக் கொள்கிறாள் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஏனெனில், இக்கதையைப் படிப்பவர் என் சத்துருக் களோ, மித்துருக்களோ, எவராயிருப்பினும் சரி, அவரை அது எப்படிக் கிளறினும்—ஆழ்ந்த சிந்தனை யிலோ, நீண்ட பெருமூச்சிலோ, நெஞ்சின் தழுதழுப் பிலோ, கன்னத்தில் துளித்த ஒரு கண்முத்திலோ, கனம் தழைந்த புன்னகையிலோ— அவள்தான் அப்படித் தோன்றித் தெரிகிறாள்.

லா. ச. ராமாமிருதம்

# உயிர்

கரையோரம், என் தோளில் பானையைத் தாங்கிக் கொண்டு நின்றேன். பானையில் விரிசலோ என்னவோ, பாலும் நீரும் கசிந்து, கழுத்திலும் மார்பிலும் வழிந்தது. கால்களை சிற்றலைகள் கழுவின.

''கொஞ்சம் முன்னால் வா—'' சாஸ்திரிகள் என்னைப் பிடித்துக் கொண்டார்.

என் பலம் கொண்ட மட்டும் பானையை எட்ட சமுத்திரத்தில் வீசியெறிந்தேன். காத்திருந்த கைபோல் ஒரு அலை எழுந்து பானையை ஏந்தியதை விழி மறைத்த கண்ணீர்த் திரையூடே கண்டேன். அலையின் சுழிப்பில் என் தங்கையின் அஸ்தி அவ்வண்ணம் மறைந்த அந்த க்ஷணமே 'தரங்கிணி' கருவூலமாய், அவள் பெயரோடு நெஞ்சில் ஊன்றிப்போனாள்.

அவ்வளவு சிறிய பொறியினின்று, கணத்திலும், த்ருணத்தில் கதை எப்படி உண்டாகிறது?

இது இன்றைக்கு ஏறக்குறைய இருபத்தி ஏழு வருடங்களாய் எழுத்தில் ஈடுபட்டிருக்கும் எனக்கு இன்னும் புரியாத இன்பத் திகைப்பாய்த்தான் இருக்கிறது.

ஆனால் ஒன்று சொல்வேன். வாழ்வில் நித்தியத்தின் சாயை நம்மேல் படருவது ஒரு சில நிமிடங்கள்தான். அறிந்தோ அறியாமலோ, அந்நிமிடங்களுக்காகத்தான் நாம் உயிர் வாழ்கிறோம், நீக்கிறோம், வைத்திருக்கிறோம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

என்னெதிரே அகன்ற கடல் விரிவில் ஜலமுகமாய் என் சகோதரியை, ஜன்மத்தின் பிரதிநிதியாய் என் கற்பனையில் கண்டேன்—என்று ஒருவேளை சுலபமாய்க்கூட—இப்போது சொல்லிவிடலாம். ஆனால் அப்போது என்ன தோன்றிற்றோ அது தரங்கிணியெனும் பெயரில் அருவியாகப் பெருகிப் பாய்ந்து அதன் அழுத்தத்தினின்று நான் விடுதலை பெற்றேன்.

நான் ஏறிய கரையில் நின்று என்னின்று பெருகியதைக் கவனிக்கையில் நான் காண்பது இது அத்தனையும் என்ன எங்கள் குடும்பத்திற்கு நேர்ந்துவிட்ட சோகம். அதன் புயல் தணிந்து அப்புயலினின்றே பிரிந்த தென்றலென் சோகத்தின் காவிய சொரூபந்தானே!

ஆனால் இத்தனையும் அதன் அருவத்தில், அத்தனையும் அழிக்கும் துக்கத்தின் விபத்தில்கூட, நெஞ்சில் எப்படிப் பதிவாயிற்று? ஊழிக்கும் பின்னர் இருப்பேன் என இவ்வழி தன் அழியாமையை உணர்த்தும் உயிரின் பெருமைக்கு இதுதான் சான்றோ?

இவ்வுயிரே பஞ்சபூதங்களின் சேர்க்கைதானே? ஜலத்தின் தன்மையாய், உயிரின் தன்மையை ஓரளவேனும் ஆராய முடிந்தால், பிற நான்கின் களங்களிலும், அவை அவைகளின் இயல்பை உயிரில் உருவேற்றிக் கண்டால் என்ன?

இந்தச் சோதனையின் விளைவுகள்தாம் இந்த முயற்சி.

இம்மாதிரி நியமித்துக்கொண்டுவிட்டேனே, இது சாத்தியமா? இந்நியமனங்களை உருவாக்குவது எப்படி என்ற கவலை எனக்கு ஏற்படவில்லை. தரங்கிணிக்கு நேர்ந்ததுபோலவே மற்ற நால்வரும் தோன்றுவார்கள். முன்னே பின்னே அவ்வளவுதானே? எனும் நம்பிக்கை மாத்திரமல்ல, அவர்கள் ஏற்கெனவே தோன்றியிருக்கிறார்கள். சோதனையில் அவர்களை வெளிப்படுத்த

வேண்டியதுதான் பாக்கி. சொல்லின் வேளையில் அவர்கள் வெளிப்படுவார்கள் எனும் தீர்மான உணர்வே எனக்கு உண்டு.

பார்க்கப்போனால், ஜன்மங்களே உயிரின் உடை மாற்றம்தானே! உயிரே, உணர்ச்சிகளின், எண்ணங்களின் வேஷப் பொருத்தம்தானே! ஆகையால் அந்தந்த வேஷம் அந்தந்த சமயத்தின் பொருத்தத்திற்கேற்ப வரும். அப்படி வருவதுதான் அதன் வெற்றி. அவ்வெற்றிதான் அதன் இலக்கணமுமாகும்.

காகிதத்தில் பேனா முள்ளால் கீறி, வெள்ளை கறுப் பானதுதான் எழுத்து அல்ல. எழுதினவன்தான் எழுத் தாளன் அல்ல.

எண்ணத்திலும், உணர்ச்சியிலும், உணர்விலும் உள்ள எழுச்சியிலுமே, நம் கையெழுத்தின் முழு சீறலுடன் கதையும், கவியும் நாம் சிருஷ்டித்துக்கொண்டேயிருக் கிறோம். நெஞ்சில் விழுந்த ஒவ்வொரு கீறலுமே ஒவ்வொரு தனித் தனிக் காவியம்தான். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்றாள் கிழவி. அம்மாதிரியே இதுவும் ஒரு மனப்பழக்கம்தான். இம் மனப்பழக்கம்தான் ரஸானுபவம். இந்த ரஸானுபவத்தை இக்கதைகள் அளிப்பின், அதுவே வாசகர் அவரவர் மூலம், அவைகளின் நிறைவு.

பஞ்சபூதங்கள் தோன்றிய வரிசையில் இக்கதைகள் தோன்றவில்லை. இக்கதைகள் தோன்றிய வரிசையில்தான் இங்கு சேர்ந்திருக்கின்றன. தரங்கணிக் (ஜலம்) கடுத்த இரண்டு மூன்று மாதங்களில் ஜமதக்னி (அக்னி). அதற்குச் சில மாதங்கள் கழித்துப் பூரணி (பூமி). பூரணிக்கு ஏறக் குறைய இரண்டு வருடங்களுக்குப் பின் காயத்ரீ (காற்று). அதற்கும் எட்டு வருடங்கள் கழிந்தபிறகு ஏகா (ஆகாயம்). ஆக மொத்தம், இவ்வரிசை முற்றுப்பெற பன்னிரண்டு வருடங்கள் பிடித்தன.

"இவர் இதழ்கள் என்று ஒரு வரிசை எழுதினார். இப்பொழுது பஞ்சபூதங்கள் என்று இன்னொரு வரிசை யென்கிறார். இம்மாதிரி ஒரு வேலியைப் போட்டுக்கொண் டால்தான் இவருக்கு எழுத வருமோ?" என்று ஒரு நண்பர் (நான் அவரைச் சந்திக்கவில்லை) கேட்டதாக, இத் தொகுப்பு உருவாகிக் கொண்டிருக்கையில் எனக்கு எட்டிற்று.

இந்தக் கேள்விக்கு இரண்டுவிதமாயும் பதில் சொல்ல லாம். இரண்டும் பொருந்தும்.

இவ்வரிசை தோன்றக் காரணம் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். நண்பர் 'வேலி' என்று மனதில் எதை வைத்துக்கொண்டு சொன்னாரோ அறியேன். ஆனால் அந்த ப்ரயோகம் எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கின்றது.

விடுதலை, விடுதலை என்கிறோம். உண்மையில் விடுதலையை அடைய முடியுமோ? பூரண விடுதலை என்பதே உண்மையில் உண்டோ? வேலிக்கும் விடு தலைக்கும் என்ன வித்தியாசம்? வேலி எட்ட நகர நகர நேரும் சிருஷ்டியின் விஸ்தரிப்பைத்தான் விடுதலையென்று கொள்ளலாம். ஆகையால், வேலி, விடுதலை இரண்டுமே. மனநிலைகள் தாம். வேலியெனும் மனநிலையின் படிப்படி யான விடுதலையைத்தான் இவ்வுருவகங்களில் ஆராய முயன்றேன். இந்நோக்கம்தான் இக்கதைகளின் ஊக்கம், உயிருக்கு அஞ்சலி.

லா. ச. ராமாமிருதம்

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | தரங்கிணி | (ஜலம்) | 1 |
| 2. | ஜமதக்னி | (அக்னி) | 52 |
| 3. | பூரணி | (பூமி) | 99 |
| 4. | காயத்ரீ | (காற்று) | 149 |
| 5. | ஏகா | (ஆகாயம்) | 223 |

# தரங்கிணி

"என் தாயே! என் தாயே!"

கண்களில் நீர் துளும்ப, தரங்கிணி, ஜலத்தை அப்படியே ஆலிங்கனம் செய்துவிடுபவள் போன்று, இரு கைகளையும் விரித்துக்கொண்டு நின்றாள். நல்லவேளை, வேறெவரும் அங்கில்லை. அவள் கணவன் மார்மேல் கட்டிய கைகளுடன் அவள் முகத்திலாடும் நிழல்களைக் கண்டு அதிசயித்து நின்றான்.

தரங்கிணி அவன்மேல் சாய்ந்து, அவன் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டாள்.

"என்னைப் பைத்தியம்னு நினைச்சுக்க மாட்டேளே?"

அவன் பதில் பேசவில்லை. புன்னகை புரிந்தான். தரங்கிணி முன்றானையால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"என்னமோ தெரியல்லே; இத்தனை நாள் கழிச்சு இதைப் பார்க்கறப்போ என்னையுமறியாமல் என்னை என்னவோ பண்றது! இப்படிக் கரையோரமா நடப் போமா?"

நடையோரம் நெளிந்து வளைந்து நிமிர்ந்த தென்னைகளில் மட்டைகள் சாமரம் ஆடி அசைந்தன. ஓரிரண்டு நட்சத்திரங்கள் வானில் மூச்சுவிட ஆரம்பித்துவிட்டன. திரையிறங்கி வரும் இருளில் ஜலம் வெள்ளைச் சிரிப்புச் சிரித்தது.

வழிப் பொருள்களை அடையாளம் கண்டுகொள்கையில், காலடியில் மணல் 'சரக் சரக்' எனப் புதைகையில், அவள் கண்களில் கருவண்டுகள் ஜ்வலித்தன. அவனுக்குச் சரியாகக் காலை வீசிப் போடுகையில் அவள் இடைகீழ்க் கடையும் தொடைகள் அவனைக் கவர்ந்தன. அவை அவனுள் கிளறும் வேகம் தாங்காது கண்களை மூடிக் கொண்டான். இமைத்திரையில் குதிரையின் சப்பைகள் நீந்தின; உரமிகுந்து வேர்வையில் பட்டுப்போல் மின்னும் கருஞ் சப்பைகள்; செவிக்குமெட்டா லயத்துடன் இதயத்தைத் தொட்டுக்கொண்டு எழுமொரு வேகம் அவனைச் சுற்றிலும் சுழித்தது.

''ஏது! நாம் இதன் ஊற்றுக்கே போய்விடப் போகிறோமா என்ன?''

''இன்று முழுக்க இப்படியே நடந்திண்டிருக்க எனக்கு இஷ்டம்தான். எனக்குச் சலிக்கவே சலிக்காது.''

''ரிஷி மூலம் நதி மூலம் தேட வேண்டாம் என்று சொல்லுவார்களல்லவா?''—அவனுக்குச் சலிப்பு இல்லை; ஆனால், அவளைச் சீண்ட அவனுக்குப் பிடித்தது.

என் மூலம் இதுதான்! என் மூலம் தெரிய உங்களுக்கு ஆசை இல்லையா?''

''நீ தரங்கிணி!''

''அது சரி, என் மூலம் உங்களுக்கு நான் சொல்ல வேண்டாமா? இதுதான் என் தாய். இங்கே உக்காருங்கோ, சொல்றேன்.''

இரவுப் பூச்சிகள் ''கிர்க் கிர்க்''கென்றன. மணல் மெத்தைமேல் முகம் மறைந்த இருளில் பின்னிருந்து அவள் குரல் உருவற்ற உயிரோடு விறுவிறுத்தது.

''எனக்கு அம்மா இல்லை—அதனால், இதுவே என் தாய். அப்பாவும் எனக்கு நினைப்பில்லை; அவரே உயிரோடு இருக்காரோ இல்லையோ? அவர் போனவிடம்

இன்னும் தெரியவில்லை. திடீர் திடீர்னு அவர் போயிடுவார். ஏதாவது நினைப்பு எடுத்துண்டுட்டா, அதே பித்தாய் ஊர் ஊராய் அலைஞ்சுண்டு இருப்பார். ஆனால் எதிலும் நிலையா நிற்கமாட்டார். நடு வழியிலேயே, ஆரம்பிச்ச காரியத்தை மறந்துட்டு. இன்னொரு மோகத்தைப் பிடிச்சுண்டு திரும்புவார். சங்கீதம்னா ஒரே பித்து! யாராவது நன்னா பாடறான்னு அவர் மனசுலே பட்டுட்டா, அவன் போற இடமெல்லாம் ஊர் ஊராய்ப் பின்னாலேயே துரத்திண்டு போவார் அவருடைய அப்போதைய லக்ஷிய புருஷனை ஒத்தரும் குத்தம் சொல்லி மீள முடியாது. அடிக்கப் போயிடுவார். ஆனால், அந்த ஜுரம் அவரை விட்டவுடனே, அவ்வளவுதான்—அவரே அவருடைய மஹானை சாக்கடையிலே போட்டுப் புரட்டிடுவார். எதிலுமே அப்படித்தான். அவரை நம்பி பெண்ணைக் கொடுத்தப்புறம்தான், கொடுத்தவாளுக்கு அவரை எதுக்குமே நம்பறத்துக்கில்லையென்று தெரிஞ்சுது. உருப்படியா எதுக்குமே உதவாமே போயிட்டார். இதெல்லாம் உங்ககிட்ட சொல்றேனே, உங்களுக்கு என்னைப் பத்தி எளப்பமா யிருக்கோன்னோ? இதுவரைக்கும் ஏன் சொல்லலேன்னு கோவமாயிருக்கோன்னோ?"

"ஆமாம்."

அவளுக்குத் திக்கென்றது. அவன் கையைத் தேடினாள்.

"நிஜமாவா?"

"ஆமாம்; உன்னைத் தள்ளி வெச்சுட்டு, மறு கல்யாணமும் பண்ணிண்டுட்டு, அப்புறம்தான் நாளைக்குப் பல் தேய்க்கப் போகிறேன்!"

"அப்பா!"—தரங்கிணி பெருமூச்செறிந்தாள். "நான் நிஜமா பயந்தே போயிட்டேன்! என்ன செய்வேன்? என்னால் எதையுமே மனசுலே பூட்டி வெச்சுக்க முடியறதில்லே. அதுவும் இன்னிக்கு, இத்தனை நாளைக்கு

அப்புறம், இந்த ஓடற தண்ணிக் கெதிரே உக்காந்துண்டு என்னால் எதையுமே என்னுள் நிறுத்தி வெச்சுக்க முடியாது. இன்னிக்கு என் மனசு கட்டுக் கடங்காமல் ஓடறது—என் மனசில் இருக்கும் எல்லாமே. ஆமாம். எல்லாமே!''

''அப்புறம் சொல்லு.''

''ஆமாம்; இன்னிக்கோ நாளைக்கோன்னு அம்மா என்னை நிறை வயிறாயிருந்தாள். அப்பா மேல்துண் டோடே வெளியிலே போயிட்டு மூணு மாதமா விலாசமே தெரியாமல் இருந்தவர், ஒருநாள் சாயந்திரம், என்னவோ எதிர்த்திண்ணைக்குச் சீட்டாடப் போயிட்டு வந்தாப் போலே அவ்வளவு அனாயாஸமா, நிஷ்கவலையா, சாவ காசமா, ''மா-ஆ-ஆ-யே-மாம் பாஹி-ஸ்ரீ பாஹி-மாம் மாயே''ன்னு பாட்டை முனகிண்டு வீட்டுள்ளே நுழைய றார்! அம்மா தாழ்வாரத்துலே ஏதோ பாத்திரத்தை எடுத்துக் குனிஞ்சு நிமிர்ந்துண்டிருந்தாள். அவளை அப்படிப் பார்த்ததும் அப்பாவுக்குக் கொஞ்சம் 'திக்'குனு ஆயிடுத்து. அவரையும் அறியாமல் என்ன தோணித்தோ தெரியல்லே, கைக்காரியத்தைப் பிடுங்கிக் கீழே வெச்சார்.

'நெற்றியிலே வேர்வை கொப்புளிச்சு நிக்கறதே, காற்றாட ஆத்தோரமா கொஞ்சம் போயிட்டு வருவோம் வா'ன்னார்.

''பாட்டி கூடத்திலே பாயிலே படுத்திருந்தாள். அவளுக்கு வயசு தள்ளாமை.

''இதுதானாடா சமயம்? எங்கே போயிருந்தே, என்ன பண்ணினே?''

''எங்கப்பாவுக்குத் தனியா ஒரு மூர்க்கம் உண்டு. சமயம் போது எதுவுமே இல்லாத மூர்க்கத்தனம்.

''ஏன்? என் ஆம்படையாளோடு நான் கொஞ்ச நாழி பேசறதுகூடச் சகிக்கல்லையா? நான் அப்படித்தான் கூட்டிண்டு போவேன்'' என்று இரைந்தார்.

''அம்மாவுக்கும் அப்போ அப்படி வர வெக்கமா இருந்தது. மனசும் இல்லை. இடக்குப் பண்ணினாள்.

''நான் சொல்றேன், நீ கேட்கப் போறையா இல்லையா?'' அப்பா அதிகாரம் பண்ணினார்.

''தர்க்கம் பண்ணுவதைவிடத் தணிந்துபோவதே மேல் என்று அம்மா எதிர்பேசாமல் கிளம்பிவிட்டாள்.

''வாசல்படி தாண்டினதுதான், அப்பாவுக்குக் காரம் எல்லாம் எங்கோ சிட்டாப் பறந்தோடிப்போச்சு.

''வழியெல்லாம் விரலைச் சொடக்கிண்டு 'மாயே' மெட்டை முனகிண்டு நடந்தார். இதோ, இங்கேதான், மணலில் உட்கார்ந்ததும் ஏதோ ஆரம்பித்தார்.

''என்ன போ, ராஜி! நேத்து அனக்காபுத்தூர் குதிரை வாஹன உத்ஸவத்துக்குப் போயிருந்தேன். சேந்தரம்பள்ளி ஆறுமுகம் நாயனம் வாசிச்சான். இந்த 'மாயே' பாட்டை ஊதியிருக்கான், பாரு! ஹூம்! நாலு வீதியையும் வளைச்சாச்சு, பாட்டு முடிஞ்ச பாடில்லை. வெளுத்துக் கட்டிட்டான், போ! இத்தனைக்கும் அடைப்பம் தூக்கறவன்தான்! நேத்திக் காலையிலேகூட அவன்கிட்டத் தான் பண்ணிண்டேன். 'என்னடாப் பாவி, கழுத்தை வெட்டறயே' என்றுகூடக் கேட்டேன். வாத்தியத்திலே புத்தியை வெச்சுண்டிருந்தால் கத்தி கழுத்தை வெட்டாமல் என்ன பண்ணும்? 'அடே! சுவரை வெச்சுண்டுதான் சித்திரம் எழுதணும். கத்திதாண்டா உன் வயத்துப் பிழைப்பு. துருத்தி ஆத்ம திருப்தி அவ்வளவுதாண்டா' என்று புத்தி சொன்னேன். சொன்னேனே யொழிய, பயல் வாசிப்பைக் கேட்டப்புறம் எனக்கே தாங்கல்லே. ஸ்நானம் அப்புறம் பண்ணிண்டாலும் போறதுன்னு அவனை அப்படியே கட்டிண்டுட்டேன்—''

''அம்மா 'ஓ'ன்னு அழுதுட்டாள். 'நீங்கள் இப்படித் தான் எப்போதைக்கும் இருக்கப் போறேளோ?ன்னு கேட்டாள்.

''அப்பா முழிச்சார். 'என்ன? எப்படி?'

''நல்ல வேளையா இதுவரை பெத்ததெல்லாம் தக்காமல் போச்சோ, நான் நல்லதங்கா மாதிரி நடுச் சந்தியிலே நிக்காமே நிக்கறேன்! ஆனால் நம் குடும்பத் துக்கு இனிமேல் கதி மோக்ஷமே கிடையாதா? உங்களுக்கு திருந்தறதா உத்தேசமே யில்லையா?''

''அப்பா கொஞ்சம் அலண்டு போயிட்டார். 'என்னை என்னடி பண்ணச் சொல்றே? என்னை எதிலுமே தக்க வொட்டாமல் ஏதோ ஒண்ணு தள்ளின வண்ணமா யிருக்கே! நான் என்ன பண்ணுவேன்? இத்தனை வயசுக்கு மேல் என்னைத் திருத்த முடியும்னு உனக்குத் தோண றதா? இனிமேல் நான் திருந்தித்தான் என்ன ஆகணும்?''

''இந்த ரீதியிலே இரண்டுபேரும் ஏதோ ரொம்ப நாழி தர்க்கம் பண்ணியிருக்கா. அம்மாவுக்கு அழுது அழுது மூஞ்சி வீங்கிப்போச்சு. மாரே வெடிச்சுடும் போலிருந்தது. அம்மா திடீர்னு கண்ணை மலர மலர முழிச்சாளாம். அப்பா பயந்துபோய், சின்னக் குழந்தை மாதிரி, 'நான் இனிமே சரியா இருக்கேண்டி.'ன்னு சொல்லித் தவிச்சாராம். அம்மாவுக்குப் பேச்சே திடீர்னு மூச்சு ஆயிடுத்தாம்.

''எனக்கு இடுப்பு வலியெடுத்துப் போச்சு. எப்படி யாவது வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்த்துடுங்கோ.''

அப்பா அம்மாவைப் பாதி தூக்கிண்டும் பாதி இழுத்துண்டும் போனார். ஆனாலும் முடியல்லே. அதோ. அங்கே அந்தத் தென்னைமரம் தெரியறது பாருங்கோ,

அதன் பக்கத்திலே ஒரு தாழம்புதர். அதுவரைக்கும் போனதுமே, அம்மா, 'என்னை இந்த மறைவிலே விட்டுடுங்கோ, விட்டுடுங்கோ'ன்னுட்டா.

''அப்பா அப்படியே அங்கே விட்டுட்டார். அங்கே அம்மா, என்னைத் தாழம் புதரண்டை பெத்திண்டிருக்கையில், இங்கே அப்பா இந்த மணல்லே, குட்டி போட்ட பூனை மாதிரி எப்படி அலைஞ்சிருப்பார் என்கிறதை இப்போ நினைச்சாக்கூட சிரிப்பாய் வரது.

''அம்மாவுக்கு திடீர்னு ஆச்சர்யமான பலந்தானிருந்திருக்கணும். அந்த நிமிஷத்துலே, 'காவேரியம்மா, இந்த நிலைமையிலிருந்து, இங்கே வேறொருத்தரும் வராமல், என் மானம் தப்பி, என்னை மீட்டேன்னா, பொறந்த குழந்தையை உன்னிடத்திலேயே அலம்பிக்கறேன். இது உன் குழந்தை'' என்று வேண்டிண்டாளாம். அப்படியே பாருங்கோ, நான் பிறந்ததுமே, அந்த உடம்போடே இங்கே வந்து இந்த ஜலத்துலே என்னை அலம்பி, தோளிலே போட்டுண்டு வீடு வந்து சேர்ந்துட்டாள்.

''ஆனால் அம்மாவுக்கு அதுக்குமேலே அவள் பலம் தோத்துப்போச்சு.

''அந்த ஆயாசம்தான் தாங்கலையோ, இல்லாட்டா, இப்படி நடுவழியிலே என்னைப் பெக்கும்படி நேர்ந்துவிட்ட வெட்கமோ, அப்பா திருந்தாத ஏக்கமோ எதுவோ, பெத்ததே சாக்காய்க் கிடந்து ஒரு மாஸத்துக்கெல்லாம் செத்துப்போயிட்டா. பாச்சையா வெளுத்த ஊசி உடம்போடே பாட்டி என்னைக் கூடத்திலே வளர்த்தி விட்டிருப்பாளாம். வம்பு அடிக்கவும், கரண்டியைத் 'தலைவெட்டி' சர்க்கரை, காப்பிப் பொடி, கடுகு, உப்பு கடன் வாங்கவும் கொடுக்கவும் வராளே, பக்கத்தாத்து ராதா, எதிர்த்தாத்து சீதா, இவாளோ அல்லது பத்துப்

பாத்திரம் தேய்க்கற செங்கமலமோ சின்னம்மாளோ, ஆளுக்குக் கொஞ்சம் என்னை எடுத்து விட்டுட்டுப் போவாளாம். இதெல்லாம் பாட்டி எனக்கு அப்புறம் பேச்சு வாக்கிலே சொன்னதுதான். என்னை அப்படி எடுத்துவிட்டவள் ஆளுக்கு ஒரு பிடியாய் உயிரை வளர்த்து விட்டவர் எலும்பையெல்லாம், நாளடைவிலே இந்த ஆற்றிலேயே கரைச்சாச்சு.

''அப்பாதான் எனக்குத் 'தரங்கிணி'ன்னு பேர் வெச்சா. அந்த 'மாயே' பாட்டினுடைய ராகமாமே அது!''

''ஆமாம். உங்கப்பா உங்கள் வீட்டுக்கு நல்லவ ரில்லையோ என்னவோ, அவர் விஷயங்களை அநுபவிக்கத் தெரிந்தவர் என்று தெரிகிறது.''

''நீங்கள்தான் மெச்சிக்கணும், என்ன வேண்டி யிருக்கு!'' இருளில் தரங்கிணி அலுப்புடன் கையை உதறினாள். ''பேர் வெச்சதோடு சரி; அவர் மாறல்லே. ஒருநாள் தெருக் குப்பையிலே அக்கும் அலக்குமா ஒரு வைத்தியப் புஸ்தகம் கிடந்ததாம்; அதையெடுத்து வெச்சுண்டு வீட்டிலே ரெண்டு நாள் சேர்ந்தாப்போலே சோத்தைக்கூட மறந்துட்டுப் புரட்டிண்டிருந்தாராம். அப்புறம் அதிலே பேர் கண்ட மூலிகை ஒண்ணைத் தேடப் போறேண்டா ராஜான்னு போனவர்தான்; இன்னும் வரப்போறார்! பாட்டிக்குக் கொள்ளி போடக்கூட வரல்லே. கிழவி அடுத்த தெருவுலே என் மாமா தலையிலே என்னைக் கட்டிட்டுப் பிராணனை விட்டாள். நான் அங்கேதான் வளர்ந்தேன். என் வளர்ப்பே இப்படித்தான். இங்கே உறவாத்துலே கொஞ்ச நாள், அங்கே தெரிஞ்சவா வீட்டிலே கொஞ்ச நாள், தெரியாதவா ஆத்திலே கொஞ்ச நாள்...என் அம்மா என்னை எப்போ காவேரிக்குப் பெண்ணா ஆசீர்வாதம் பண்ணிவிட்டாளோ, அப்படியே

தான் நான் ஆயிட்டேன்—வேண்டியவா வேண்டாதவா எல்லாருக்கும் ஒண்ணாய், ஆத்து ஜலம் மாதிரி, எங்கெங்கோ எப்படி எப்படியோ, ஒரு சமயம் ஒடுங்கி, ஒரு சமயம் பெருகி ஒரு சமயம் ஒதுங்கி, ஒரு சமயம் நெருங்கி, எல்லோர் கைப்பட, எல்லாச் சொல்லும் பட வளர்ந்தேன்—''

அவள் குரல் நடுங்கிற்று.

''தரங்கிணி! எப்படிப் பேசுகிறாய்! உன் வாக்கைக் கேட்கையில் அசூயையாய்க்கூட இருக்கிறது.''

''எதுக்கு?''

''கனமிகுந்த அர்த்தங்களை நய மிகுந்த வார்த்தைகளில் எப்படி உன்னால் இழைக்க முடிகிறது? அதுவும் கொஞ்சம்கூடக் கசப்பில்லாமல்!''

' நீங்கள் சொல்வதெல்லாம் உங்களுக்குத்தான் புரியும். இங்கே இப்படி உட்கார்ந்திருக்கையில், இப்படித்தான் வார்த்தைகள் வரது. அவ்வப்போ மனசில் தோன்றுவதை அப்படியே தோன்றியபடி உங்களுக்கு மாற்றிவிடப் பார்க்கிறேன்; அவ்வளவுதான்.''

ஆழ்ந்த யோசனையில் அவன் குரல் தாழ்ந்தது.

''அது அவ்வளவு சுலபமென்று நினைக்கிறாயா?''

''என் சின்ன வயசில் பாவாடையும் சொக்காயுமாய் நான் வளைய வரும் நாளில், அடிக்கடி இங்கே வந்து, பின்னால் கையைக் கட்டிண்டு கரைமேல் நிற்பேன். இது எனக்கு நன்னா நினைவிருக்கு. அம்மா என்னைப் பெத்த இடத்தைச் சுத்திச் சுத்தி வருவேன். அந்த இடத்திலிருந்து இந்தக் கரைக்கு நேர்க்கோட்டில் நடந்துவந்து இரண்டையும் ஒண்ணாகச் சேர்த்துவிட்டதாக நானே நினைச்சுப்பேன்.

''இந்த ஜலத்தை அடிக்கடி உள்ளங்கையில் எடுத்து விரலிடுக்குகளின் வழியா என்மேலேயே விட்டுப்பேன். அதில் எனக்கு ஏதோ அலாதி அர்த்தம் மனசுக்குத் தெரியும்; ஆனால் வார்த்தைக்குப் புரியாது.

''எனக்கு அடிக்கடி ஜலதோஷம் வந்துவிடும். என்னை ஜலத்தில் நுழையக் கூடாதுன்னு தடுப்பா. தப்பளைன்னு திட்டுவா. ஆனால் திருட்டுத்தனமா நான் இங்கே வந்து போயிண்டுதான் இருப்பேன்.

''அந்த ஊரிலே வெள்ளம் வந்தது; இந்த ஊரிலே ஜலம் பெருகித்து; வீடு, வாசல், மண்ணு, ஆடு மாடு, மனுஷாளையெல்லாம் அடிச்சுண்டு போச்சுன்னு எங்கே யாவது யாராவது பேசிண்டிருந்தால், உடனே அதுமாதிரி ஏன் நம்ம ஊர் ஜலம் பெருக மாட்டேன்கறதுன்னு எனக்கு ஏதோ ஏமாத்தமா, நமநமுன்னு வருத்தமாக்கூட இருக்கும். உடனே இங்கே வந்து நின்னுண்டு அதுமாதிரி யெல்லாம் வெள்ளம் வந்து, ப்ரமாதமா தென்னை மர உயரத்துக்கு ஜலம் வீங்கி, நான் அதில் மிதக்கற மாதிரி யெல்லாம் நினைச்சுப்பேன். இத்தனை ஜலம் ஓடறதே, இதுக்கெல்லாம் மையமா ஏதோ ஓர் இடம் இருக்கா? நமக்குத் தெரிஞ்சவா, தெரியாதவா எல்லாம் செத்துப் போனப்பறம் அவா அஸ்தியெல்லாம் கரைச்சிருக்குமே, அதெல்லாம் ஒண்ணுகூடி, அங்கே, அந்த நடு வயித்துலே தானே தங்கியிருக்கும்?— சொல்லுங்கோ, சும்மா யிருக்கேளே!''

''உம்—சொல்லு. உனக்கு இன்னும் என்னென்ன தோன்றுகிறதோ அதெல்லாம் சொல்லு.''

''ஏன், உங்களுக்குச் சிரிப்பாயிருக்கா?''

''இல்லை இன்பமயமாயிருக்கிறது உன் சொல். சொல் வதெல்லாம் சொல், சொல்!''

"அப்புறம் இவாளெல்லாம் மறுபடியும் அந்த நடு வயத்திலிருந்தே உசிரோடே வெளிப்பட்டு எங்கேயாவது பிறந்துண்டிருப்பாளோன்னோ? அந்த ஜலத்தைத்தானே வயலுக்குப் பாய்ச்சி, அந்த ஜலம் ஊறித்தானே பயிர்கள் வளர்ந்து, அப்புறம் அந்தம் பயிரால்தானே நாம் உயிர் வாழ்கிறோம்? அந்த உயிர் தானே மறுபடியும் மறுபடியும் நம் வயிற்றில் உயிர் வைக்கிறது!

"ஒருதடவை ஊரில் வாந்திபேதி வந்தது. உசிர்களைச் சுருட்டிண்டு போச்சு. 'இந்த ஆற்று ஜலம் அசுத்தப்பட்டுப் போச்சு, இதை ஒத்தரும் உபயோகப்படுத்தக் கூடாது'ன்னு தண்டோரா போட்டு, பாராகூடப் போட்டுட்டா. ஆனால், எனக்கு அப்படியெல்லாம் தோணல்லே.

"நம்ம அம்மா என் தாய், தன் குழந்தையை அப்படித் தின்னுடுவாளா என்ன? ஒருநாள் மத்தியான்னம் இங்கே வந்தேன். நல்லவேளையா ஆள் ஒருத்தரும் இல்லை. ஜலம் என்றைக்கும் போல்தான், நிறைஞ்சு தாராளமா பரவி ஓடிண்டு இருந்தது. நான் வேணும்னு கரையோரமா கவிழ்ந்து படுத்து, ஆடு மாடு குடிக்குமே அது மாதிரி வாயை நேரே ஜலத்தில் வெச்சு உறிஞ்சி வயிறு நிறைய குடிச்சுட்டு வீட்டுக்கு ஓடியே வந்துட்டேன். என்னை ஒண்ணும் பண்ணல்லே. அதுக்கென்ன சொல்றேள்?"

"நீ தரங்கிணி."

"நான் பார்க்கிற, பழகற மனுஷாளையும் இந்த ஜலரூபமாய்த்தான் புரிஞ்சுக்கறேன். எந்தெந்த விதமா, எப்படி எப்படி, எந்த அளவுக்குன்னு எல்லாம் கேட்கா தேங்கோ எனக்குச் சொல்லத் தெரியல்லே. ஆனால் அப்போ மொதக்கொண்டு அப்படித்தான் நினைச்சுப்பேன்.

"என் சிநேகிதி ஒருத்தியிருந்தாள். அவள் ஜலம் மாதிரி 'கிளுக் கிளுக்'குன்னு சிரிப்பாள்.

என் மாமாவுக்குச் சில சமயத்திலே கோபம் வரும். அவருக்குக் கோவம் வந்துட்டால் வாயிலே வராத வார்த்தையெல்லாம் சொல்லித் திட்டுவார். அப்போ உச்சி வெய்யிலில் ஜலம் சுக்கலும் கரைசலுமா ஓடற நினைவு எனக்கு வரும். அவர் கண் சிவப்பு அடிவண்டல் மண் மாதிரி இருக்கும்.

''எனக்கு இன்னொரு சிநேகிதி இருந்தாள். கலியாண மாகி மூணு மாசம்கூட வாழல்லே. குறைப்பட்டு ஆத்துக்குத் திரும்பி வந்துவிட்டாள். அவள் வந்த முதல் நாள் எனக்கு மறக்கவே மறக்காது. எதுத்தாத்திலேதான் இருந்தாள். ஜட்கா வண்டியிலேருந்து கீழே யிறங்கினாள். நல்ல சிவப்பு! உடம்பிலே உடுத்திண்டிருந்த ஜப்பான் சில்க் புடவை அப்படித் தூக்கியடிச்சுது, பாருங்கோ. ஆனால் அவள் மூஞ்சிதான் இப்போ என் கண் முன்னால் நிக்கறது—பளிச்சுன்னு, கன்னம் மழ மழன்னு, நெற்றி வெறிச்சுன்னு, முகத்திலே, கண், மூக்கு, உதடு, கன்னம் எதிலேயுமே எந்த மாதிரியான அசைவுகூட இல்லை. அப்படித்தான் விடிகாலை வேளையில் ஜலம் முணுக்குனு கூட அசையாமல் அப்படியே நிற்கும். அப்பறம் நாம் தான் அதைக் கலக்கி, அதன் வயத்தைக் கலக்கறோம். நீங்கள் பாத்திருக்கேளோ?''

''நான் பார்த்ததில்லை. ஆனால் நீ சொல்லுகையில் பார்க்கறேன்.''

''ஆனால் அந்தப் பெண் எப்பவுமே அப்படியில்லே. அப்புறம் ஏதோ பேசிச் சிரிச்சுக் கூத்தடிச்சுண்டுதானிருந் தாள். அன்னிக்கு அப்படி ஜட்கா வண்டியிலே வந்து இறங்கினவளா இப்படியானாள் என்று அடையாளம் கூட கண்டுபிடிக்க முடியல்லே. அவளுக்கு இன்னும் கொஞ்சம் அடக்கம் இருக்கலாம்னு அவள் அம்மாகூட சொல்லுவாள். ஆனால் அவள் கேக்கற வழியாயில்லே. என் மாமிகூட அப்புறம் அந்தப் பெண்ணோடெ நான் சேரப்படாதுன்னு

உத்தரவு போட்டுட்டா. வரவா போறவா எல்லோ ரோடேயுமே கையைக் கொட்டி சிரிச்சுண்டு ஜலம் மாதிரி கலகலப்பாயிருப்பாள்.

"எங்கள் ஊருக்குப் புதிசா ஒரு போஸ்ட்மேன் வந்தான்—"

"உம். சரி— இந்தக் கதை எப்படி முடியும் என்று எனக்குத் தெரியும்.

"எல்லாத்தையும் சொல்றாப்போலே இதையும் உங்களுக்கு நான் சொல்றேன். அப்புறம் அவள் ஒருநாள் ஆத்துலேயில்லை. அந்தத் தபால்காரனுமில்லை. அவன் ஏதோ மணியார்டர் பணம் எத்தையோ சுளையம் பண்ணிண்டு ரெண்டுபேருமே ஓடிப் போயிட்டா."

தரங்கிணி தலை குனிந்து மண்ணை அள்ளி ஆஹுதி சொரிய ஆரம்பித்தாள்.

"மூணு மாதம் கழிச்சு இதில்தான் அவள் உடல் மிதந்து வந்தது. தேகத்தில் ஏதோ படை படையாய்ப் பரவியிருந்தது. நான்கூட அவளை அப்போ பார்த்துட்டேன். எப்படியும் அவள் என் சிநேகிதி இல்லையா! இப்போ யிருந்தால் இன்னும் என்னைவிட மூணு நாலு வயது பெரியவளாயிருப்பாள்; அவ்வளவுதான். நானும் அவளும் ஒரு சமயம் சாயந்திரம் இந்த ஆற்று மணலில் உட்கார்ந்துண்டு, சின்ன வயதின் சிறு பிள்ளைத்தனத்தில், திடீர்னு ஒருவர்மேல ஒருவருக்குப் பால் பொங்கி வழியும் பிரியத்தில், ஒத்தரை விட்டு ஒத்தர் பிரியவே போறதில்லை, அப்படியே கலியாணமாகி அவா அவா தனித் தனியாப் பிரிந்து போனாலும், கடிதாசு எழுதிண்டு எங்களுடைய அருமையான சிநேகிதத்தை எப்படி எப்படி வளர்ப்போம்னு கையடிச்சுச் சத்தியம் பண்ணிண்டதெல்லாம் எனக்கு நினைவு வந்தது.

"அவள் உடம்பைக் கரையிலே எடுத்துப் போடறத்துக்குக்கூட எல்லாருக்கும் பயம்.

"கரையோரத்திலே, போலீஸ் வரவரைக்கும் அவள் ஜலத்திலேயே கிடந்தாள். சின்ன அலை மெள்ள மெள்ள அவள் முகத்தில் மோதி மோதிக் கழுவுகையில், 'அப்படியெல்லாம் சத்தியம் பண்ணிண்டோமே, இவள் கதி எப்படி ஆயிடுத்து பார்த்தையா!' என்று மனசிலே நினைக்காமல் இருக்க முடியல்லே."—அவள் குரல் தழு தழுத்தது.

"அவள் கதி அப்படி! உன் கதி?"

அவள் சோகத்திலிருந்து பேச்சை அவன் திருப்ப முயன்றான்.

"என் கதி? நீங்கள் வந்தேள்! மாமா ஜாதகங்கள் தேடாத இடமெல்லாம் தேடிச் சலித்துப் போனப்புறம், 'ஏண்டா என் கஷ்டம் போறாதுன்னு என் தங்கை என் தலையில் ஒரு கல்லைச் சுமத்திவிட்டுப் போனாள் என்று எரிச்சல் பட ஆரம்பிச்ச சமயத்தில் நீங்கள் என் வாழ்க்கையுள் ஒரு புதுப்ரவாகம் மாதிரி வந்தேள்' 'அடியே, பக்கத்தாத்து மாதுர்பூதமய்யர் ஆத்துலே புதுசா ஒரு பையன் தங்க வந்திருக்கானே, அவன் ஜாதகமும் வேண்டாம் மண்ணும் வேண்டாம், எனக்கு எதிலும் நம்பிக்கை கிடையாது, மனப் பொருத்தம் இருந்தால் போரும் என்று சொல்றாண்டி' என்று மாமா என் மாமியிடம் பேசிக் கொள்கையில் இப்படியும் கூட இருக்காளா என்ன என்று நான் நினைச்சுண்டு, நேரே காவேரியம்மன் கிட்டே நடு வெய்யிலே ஓடிவந்து கேட்டதுண்டு அப்புறம் நீங்களும் என்னைப் பார்க்கவும் வந்தேள். ஆனால் என்னிடத்தில் என்ன கண்டேள்?"

அவள் விரல்கள் அவன் முழங்கையைத் தொட்டன.

சிறிய இருளில் அவன் பற்கள் பளீரென்றன.

''உன் பேரைக் கண்டேன். போகப்போக உன் பேரைப்போல்தான் நீயுமிருக்கிறாய் என்பதைக் கண்டு கொண்டிருக்கிறேன்.''

''நானும் என் வீட்டாரும் மஞ்ச நீராடிய பின் நாலாம் நாள் இங்கே பாலிகை கொட்டவந்த பொழுது என் மனஸுக்குள் என்ன வேண்டிண்டேன்னு தெரியுமா?''

''தெரியுமா?'' என்று அவன் திருப்பிப் பரிகசித்தான்.

''உங்களுக்கு எல்லாமே சிரிப்புத்தான். இருந்தாலும், நான் சொல்லுவேன். சொல்லத்தான் போறேன். 'ஏ காவேரி! நீ என்னை எப்படி இதுவரை காப்பாத்தி என்னை எப்படி க்ஷேமப் படுத்தினையோ அதேமாதிரி, எங்கள் குழந்தைகளையும் காப்பாத்திக் கொடுக்கணும். உன் கரையிலேயே என் குழந்தையைப் பெற்றுக்கொள்ள நான் ஆசைப்படுவேன்.—''

அவன் பதில் பேசவில்லை, சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

அவளுக்கு எரிச்சலாய் வந்தது. அவன் வாயிலிருந்து சிகரெட்டை 'வெடுக்'கெனப் பிடுங்கி எறிந்தாள். இருளில் அதன் நுனிப் பொறி கர்ணம் அடித்துத் தூரத்தில் விழுந்து அவிந்தது.

''ஏன் நீங்கள் இந்த மாதிரி பண்றேள்? நான் குழந்தைப் பேச்செடுத்தாலே வேறே எதிலேயோ ஏன் இப்படி முனையறேள்? ஏன் இப்படி அலக்ஷியமா இருக்கேள்?''—அவள் குரலில் கோபக் கண்ணீர் தளும்பிற்று.

அவன் குரல் இருளில் மெத்தென்று இறங்கிற்று.

''நீ குழந்தை குழந்தை என்று பேசும்போதெல்லாம் என்னையும் உன்னையும் பிரித்துப் பேசுகிறாய். இவ்வளவு நாழியாய் நீ சொன்னதெல்லாம் எனக்கு இன்பமாயிருக்கிறது. அத்துடன் இழைகிறேன். நீ சொல்வதோடு நான்

இயங்குவதால், உன்னோடும் நான் ஒன்றாகிவிடுகிறேன். இந்த நிலையை ஏன் மறுபடியும் இரண்டாக்குகிறாய்? ஏன் என்னை இப்படித் துண்டிக்கிறாய்?''

''ஏன் இந்தமாதிரியெல்லாம் புரியாதபடிப் பேசி, என்னை வேதனைப் படுத்தறேள்? நான் என்ன, உலகத்தில் இல்லாததாய் என்ன சொல்றேன்?''

''உலகத்தில் இருக்கிறதெல்லாமே சரியாய் நடக்கிற படி நடந்துகொண்டிருக்கின்றதென்று உனக்குள் எண்ணமா?''

தரங்கிணி திகைப்புற்றவளாய்த் தன் எதிரே இருளிலும் பளபளக்கும் வெள்ளைத் தகட்டை நோக்கினாள்.

''எனக்கென்ன தெரியும்?''

''உனக்கு இந்த ஆறு ஒன்றுதான் தெரியும். சாக்கடைகளும் ஜலதாரைகளும் நீ அறிவாயோ? நான் அறிவேன்.''

''இந்தப் பாஷையை விட்டுப் பளிச்சுன்னு உங்களால் சொல்ல முடியாதா?''

''எனக்குத் தோன்றுவதை விளக்க எனக்கு இந்தப் பாஷையை விடப் பளிச்சென்று வேறு கிடையாது. இதெல்லாம் நாம் விட்டுடுவோம். ஒன்றே ஒன்று மாத்திரம் நீ என்னிடம் சொல். சினிமாவில் கேட்கிற மாதிரி கேட்கிறேன். ஆனால், என்னால் கேட்காமலும் இருக்க முடியவில்லை; ஒரே வார்த்தையில் சொல்லிவிடு. உனக்கு என்மேல் ஆசையில்லையா? என்னை நீ விரும்பவில்லையா?''

''ஏன் அப்படிக் கேக்கறேள்? என்னை நீங்கள் அப்படிக் கேக்கறப்போ எனக்கு மனசு ஏதோ இம்சை பண்றது.''

அவன் பெருமூச்செறிந்தான். அவளுடைய பதிலுக்குக் காத்திராமலே, "ஆனால் நீ எனக்கு ரொம்பவும் வேணும்; நீ இல்லாவிட்டால் நான் இல்லை. சில சமயங்களில் நான் உன்னைத் தொடுவதுபோல் எனக்கு ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது."

அவள் அவன் கையைப் பற்றினாள். அவன் இருளில் புன்னகை புரிந்தான்.

'நாம் ஒருவரை யொருவர் தொடும்போதெல்லாம் தொடுகிறோம் என்று அர்த்தமில்லை. ஒருவரையொருவர் நெரியக் கட்டி, அதனால் மூச்சுத் திணறினால்கூட நாம் தொட்டுக் கொள்வதில்லை; ஆனால், நீ எட்டவிருக் கையில், என் கண்ணெதிரில்கூட இல்லாமல் என் நினைவு கூட இல்லாமல், நீ ஏதோ வேலையாய் இருக்கையில், அச் சமயம் நான் உன்னைப் பார்க்கவோ நினைக்கவோ நேர் கையில், நான் எப்படியோ உன்னோடு இழைந்துவிடு கிறேன். அந்தச் சமயங்களில் எனக்கு மனசில் ஓர் அலாதி அமைதி ஏற்படுகிறது. உன்னிடம் எப்படியும் ஒரு குளுமை இருக்கிறது நமக்குக் கலியாணமாகிப் பத்து வருஷங்களாகின்றன. ஆனால், அவ்வப்போது கிட்டும் இந்த அமைதியிலோ, குளுமையிலோ அதை நான் அநுபவிக்கும் நிறைவிலோ ஓர் எள்ளுக்கூடக் குறைய வில்லை. தனியா யிருந்திருக்கிறேன். இனியும் நேர்ந் தாலும் இருப்பேன். தனியாயிருக்கலாம்; ஆனால் தனிமையா யிருத்தல்—அப்பா...!" பயங்கரத்தில் அவன் சிலிர்த்துக்கொண்டான்.

அவள் அவனை அணைத்துக்கொண்டாள்.

"உங்களைச் சில சமயங்களில் எனக்குப் புரியல்லே... ஆனால் நீங்கள் படும் கஷ்டத்தை ஸகிக்கவும் முடியல்லே. நீங்கள் என்ன படுகிறீர்களோ அதை உங்களிடமிருந்து வாங்கிக்கொண்டுவிட நான் என்ன செய்யணும்?"

புன்னகை புரிந்தவாறு அவள் முதுகைத் தட்டினான். "நீ ஒன்றும் செய்ய வேண்டாம். இப்போது எனக்கு ஒன்றும் இல்லை."

தென்னைமட்டை ஓலைகளின் சலசலப்பு காற்றில் மிதந்து வருகையில் வானம் பெருமூச்சு விட்டது போலிருந்தது.

"சரி, வா. போவோமா? நேரமாய்விட்டது."

போக மனமிலாது தரங்கிணி தண்ணீரைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

* * *

திடீரென நடுநிசியில் அவள் விழித்துக்கொண்டாள். மூச்சுத் திணறி, விழிகள் பிதுங்கின. கழுத்தை அவன் கைகள் நெரித்துக்கொண்டிருந்தன. படுக்கையில் அவள் பக்கமாக அவன் திரும்பிக்கொண்டிருந்தான். தூக்கத்தில் பயத்தின் கோபமும் சப்தங்கள் அவன் வாயில் காழத்தன. ஒருவாறாக அவன் பிடியை அவள் இரு கைகளாலும் உதறியெறிந்தாள். எழுந்து அவனை பலமாய் அசக்கினாள்.

"எழுந்திருங்கோ, எழுந்திருங்கோன்னா...!"

"ஊ...ம்?" சட்டென விழிப்பு வந்துவிட்டது.

"ஆ... என்ன? ஏதாவது பிதற்றினேனா என்ன?"

"பிதற்றினேளா? அத்தோடு விட்டால் போதாதா?" நெஞ்சைத் தடவிக்கொண்டாள். இன்னும் வலித்தது.

அவன் எழுந்து உட்கார்ந்தான்.

முதல் வகுப்பு வண்டியில் அவர்கள் இருவர்தான்.

"இந்தாங்கோ, கொஞ்சம் தீர்த்தம் குடிங்கோ. என்ன கனா?"

"என் தாயாரைக் கொன்று கொண்டிருந்தேன்."

"ஆ...?" அவன் தோளண்டை போய்க்கொண்டிருந்த அவளது கை சட்டெனப் பின் வாங்கிற்று. அவன் நேருக்கு நேர் அவள் முகத்தை இன்னமும் பார்க்கவில்லை. தனக்குத்தானே தன் கனவைத் தன்னெதிரே விரித்துப் போட்டுக்கொண்டிருந்தான்.

"நான் கரையில் நின்றுகொண்டிருக்கிறேன். வெள்ளம் அமோகமாய்ப் புரண்டு அம்மாவை அடித்துக்கொண்டு போகிறது. நான் அவளைத் தூக்கக் கை நீட்டுகிறேன். என்னையும் தன்னுடன் இழுத்துவிட்டாள்; நான் தப்பப் பார்க்கிறேன். ஆனால் விடமாட்டேன் என்கிறாள். என் இடுப்பைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு, கோரமாய்ச் சிரித்தவாறு என்னை உள்ளே இழுக்கப் பார்க்கிறாள். திணறுகிறேன். அவள் கழுத்தை நான் பிடிக்க, என்னை அவள் உள்ளே இழுக்க, ஜலம் என் மூக்கு, கண், செவியில் புகுந்து நான் கத்த வாய் திறக்கையில் வாயுள்ளும் புகுந்து விழித்துக்கொண்டேன்."

அவன் முக முழுவதும் வேர்வை கொப்புளித்திருந்தது. தலைமயிர் அடை அடையாய்க் கசகசத்தது. அவள் கையி லிருந்து டம்ளரை வாங்கி, ஜலத்தை மடக்கென்று அவசர மாய்க் குடித்தான். ஜன்னலுக்கு வெளியில் ரயில் தூரத்தை உதைத்துக்கொண்டிருந்தது.

வெளியே பார்த்தபடி: "நான் என்னைப்பற்றி உன் னிடம் முழுக்கச் சொல்லவில்லை, தரங்கிணி. நான் கசந்து கசந்து தொப்புள் வரை கசந்து உடலெல்லாம் விஷ மாய்ப் போனேன்! என் தாய் ஒரு வாழாவெட்டி.

"நான் வயிற்றில் இருக்கும்போதே அசட்டுத்தன மாய்ப் புகுந்த வீட்டாரை ஆக்ரமித்துக்கொண்டு தாய் வீடு வந்துவிட்டாள். பிறந்த வீட்டு அகந்தையின்

ஊட்டமும் சேரவே அப்புறமும் புத்தி வரவில்லை. எப்பவுமே வரவில்லை. என்றேனும் ஒருநாள் தன் கணவன் தேடிக்கொண்டு வருவான் என்று மனப்பால் குடித்தாள். விஷயம் முற்றிப்போனபிறகு மனதில் தோன்றினாலும் தன்னிடத்திற்கு திரும்பத் தைரியம் போய்விட்டது. பிறந்த வீட்டுச் சோற்றைச் சோறாகத் தின்றுகொண்டு ஊர் சிரிக்க, வந்த இடத்திலேயே தங்கிவிட்டாள். எனக்கு எட்டு வயதாகியும் அப்பா என் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. பெற்ற பிள்ளைமேல்கூட எண்ணம் இல்லை பார் என்று என் தாயும் அவள் வீட்டாரும் குற்றம் மறைக்க அப்பாவை ஏசுகையில், அந்த வயதிலேயே என்னையறியாமல் எனக்கு ரத்தம் கொதிக்கும். இப்படி வீட்டில், பேச்சுவாக்கில், வெளியில் நாலுபேர் வார்த்தை வாக்கில், விஷயம் என்னுள் ஊறி, ஒருநாள் தாங்க முடியாமல் வீட்டை விட்டு ஓடிவிட்டேன். நடந்தே நாற்பது மைல் கடந்து அப்பா வீட்டைத் தேடியடைந்து கதவை யிடித்தேன். மெலிந்த உடம்புடன் ஒருவர் கதவைத் திறந்தார்.

“அப்பா, நீதானே என் அப்பா?” என்று நான் அவரை முதன் முதலாய்க் கேட்ட கேள்வி இன்னமும் என் காதில் ஒலிக்கிறது. புழுதி படிந்த என்னை அப்படியே அவர் வாரிக்கொண்டார். “நான் உன் அப்பனோ இல்லையோ, கண்டிப்பாய் நீதான் என் மகன்” என்றார். இப்போப்போல் இருக்கிறது. என் முகத்தை நனைத்த அவர் கண்ணீர் இன்னமும் உலரவில்லை. அந்தக் கேள்வியிலும் அந்தப் பதிலிலும் சூக்ஷ்மமான—விதவிதமான—அர்த்தங்களைச் சமயத்துக்குத் தக்கவாறு இன்னமும் தோன்றிக்கொண்டிருக்கின்றன. மனம் சளைக்கும் போதெல்லாம், இந்தக் கேள்வியையும் பதிலையும் ஞாபகப் படுத்திக் கொள்கையில் புதுப் பலம் பெறுகிறேன்.

“அப்பா, நீதானே என் அப்பா?”

''நான் உன் அப்பனோ இல்லையோ, நீதான் என் மகன்.''

''நான் அப்புறம் இன்னமும் என் தாயைக் காணப் போகிறேன். அப்பாதான் எனக்குச் சமைத்துச் சாதம் போடுவார். நான் என்னிடம் போய்ச் சேர்ந்த சமயத்தில் அவருக்கு ரொம்ப நெருங்கியவர்கள் இறந்தோ அல்லது தூர தேசமோ போய்விட்டார்கள். அவரும் அவருள் என்ன விரக்தியோ தெரியவில்லை. ஸ்திரி இல்லாத ஆணாகவே இருந்துவிட்டார். அவர் அப்படி இருக்க வேண்டிய அவசியமேயில்லை. ஆனால் அவர் ஏன் அப்படியிருந்தார், யார் மாதிரி இருக்க முயன்றார் என்று எனக்கு இன்னும் தெளிவாகப் புரியவில்லை. அப்பாதான் எனக்கு வாத்தியார். பகல் முழுவதும் உழைப்பில் ஊன்றியிருந்துவிட்டு இரவு வந்ததும் பாடம் சொல்லிக் கொடுப்பார். என்மேல் அவருக்கிருந்த பாசத்தை எனக்கே முழுக்க முழுக்க அறிந்துகொள்ளவும் பயமாயிருக்கிறது.

''சில சமயங்களில் அவர் என்னை, வயதாகியும் மடி மீது வைத்துக்கொண்டு, நான் எவ்வளவோ கஷ்டப்பட்டுவிட்டேன். தன்னந்தனியாகி விட்டேன். ஆனால் அன்று நீ கதவை இடித்து உன் குழந்தை முகம் நிமிர்த்தி என்னை 'அப்பா, நீதானா என் அப்பா?' என்று கேட்டதிலிருந்து எனக்கு மறுபடியும் நம்பிக்கை வந்துவிட்டது நான் உனக்காகக் காத்திருந்த நாளெல்லாம் வீணாளில்லை அல்லவா? இனிமேல் நான் இறந்தாலும் சரி, அல்ல இது வரை எனக்கு நேர்ந்த சோதனைகள் போதாதென்று நீயே என்னை முந்திக்கொண்டாலும் சரி, நான் வாழ்க்கை பலனில்லை என்று இனி சொல்லமாட்டேன்' என்பார். அவர் சொல்வது புரியாது, ஆனால் இன்பமாயிருக்கும்.

''என் தந்தையும் நானும் அண்ணன் தம்பிகள். அவர் பக்கத்தில்தான் படுப்பேன். அவர் உடம்பெல்லாம் அன்புதான் ஓடிற்றேயொழிய இரத்தம்கூட ஓடவில்லை. சில

சமயம் அவரை நான் லேசாகத மதாட்டுக்கூட பார்த்துக் கொள்வேன். உடம்பும் சற்றுப் பூஞ்சைதான். என் மனத்திலிருப்பதைக் கண்டுகொண்டு புன்னகை புரிவார். அந்த சமயங்களில் அவர் முகம் பலகணி திறந்ததுபோல் திடீரென வெளிச்சமாகும்.

''நான் ஒவ்வொரு பரீட்சையாக நன்கு தேறிவந் தேன். கடைசியில் உத்தியோகப் பரீட்சைக்கு டில்லிக்குப் போனேன். இந்தியாவில் நாலு பட்டணங்களிலிருந்தும் பொறுக்கியெடுத்தாற்போல் நானூறு பேர் பரீட்சைக்கு வந்திருந்தனர். அத்தனைபேரிலும் முதலாய்த் தேறினேன். விஷயத்தை நான் தந்தி மூலமாவோ, தபால் மூலமாவோ. அப்பாவுக்குத் தெரிவிக்கவில்லை. நேருக்கு நேர் சொல்லி முகத்தைப் பார்க்க வேண்டாம்? அன்றே வண்டியேறி மூன்றுநாள் பிரயாணம் செய்து ஊர் திரும்பினேன்.

''அவர் என்னை தூரத்தில் வரும்போதே கண்டுவிட் டார்.''

'அப்பா, பாஸ்!' என்று கத்தினேன்.

''அப்பா என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே மிரளமிரள விழித்தார்.

''என்னப்பா? ஒண்ணுமே சொல்லமாட்டேேன் கிறையே! நான் பாஸ் அப்பா, பஸ்ட் கிளாஸில் பாஸ்— அப்பா என்னவோ சொல்ல முயன்று கையைத் தூக்கித் தூக்கிக் காட்டி, தடாலென்று என்மேல் விழுந்து விட்டார். கண்கள் என்னையே பார்த்த பார்வையில், வாய் சிரிப்பிலும் அப்படியே உறைந்து போய்விட என் ஆலிங்கனத்தில் அவர் சவமாய்க் கொண்டிருந்தார்.

''குளிக்கப் போனவிடத்தில் மூழ்கிப்போய் நான் இறந்து போய்விட்டோம், என்பதை உணரும் உணர்வு மாத்திரம் இருந்தால் எப்படி இருக்கும்! கொஞ்சநஞ்சம்

சுவாமி பூதங்களில் எனக்கு இருந்த நம்பிக்கைகள் எல்லாம் அன்று முறிந்துபோயின. நம்பிக்கைகள் முறிந்தபின் மனிதனுடைய தனிமை தாங்கக்கூடியது அல்ல. முறிந்த நம்பிக்கையைத் திரும்ப அப்படியே பெறுவது என்பதும் இல்லை.

''குழந்தை குழந்தையென்று நீ ஏங்குகிறாய். ராமேசுவரம், அரசமரம் என்று இன்னும் உன்னைப்போல் எத்தனையோ பேர் தேடியலைகிறார்கள். என்னத்தைத் தேடுகிறார்கள்? எதற்கு? எனக்குச் சிரிப்பு வருகிறது. அவர்களைப் பார்த்தால் வெறுப்பாய்க்கூட இருக்கிறது. நான் என் அப்பனுக்கு எமனாயிருந்தேன்.''

அவனுக்குக் கமற ஆரம்பித்துவிட்டது. சிகரெட்டைப் பற்றவைத்துப் பலமாய் இழுத்தான்.

தரங்கிணி மௌனமாய் அழுதுகொண்டிருந்தாள்.

* * *

''ஏ, தரங்!''

அவன் குரல் உள் அறையினின்று எழுந்தது

ஓவ்!''

தரங்கிணி வெளியறையில் பெட்டியிலிருந்து துணி மணிகளையெடுத்து அலமாரியில் அடுக்கிக்கொண்டிருந்தாள்.

''உனக்குப் பிடிக்கவில்லையோன்னோ?

''எது?''

முகத்தில் சோப்பு நுரையுடன் கையில் கத்தியை ஏந்தியவண்ணம் அவன் வெளியே வந்தான். உதட்டோரங்கள் குறுநகையில் குழிந்திருந்தன.

''இந்தமாதிரி—நான் தான் என் உத்தியோகத்தில் ஊர் ஊராய்ச் சுற்றவேண்டியிருக்கிறதென்றால் உன்னையும்

கூட இழுத்துக்கொண்டு நாடோடிகள் மாதிரி நாலு நாள் அங்கே, எட்டுநாள் இங்கே என்று ஹோட்டலில் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு ஊர் ஊராய்ச் சுற்று கிறோமே, இதுதான்!''

''கொஞ்சம் அலுப்பாய்த்தானிருக்கு. ஒரு வேலையும் இல்லாவிட்டால், அதுவும் இம்சைதான். நீங்கள் காலை யில் கிளம்பிப் போனப்பறம் நீங்கள் திரும்பி வரவரைக்கும் எனக்கு என்ன வேலையிருக்கு சொல்லுங்களேன்? வீடு இருந்தால் ஏதாவது வேலை இருந்துண்டேயிருக்கும். ஒண்ணுமில்லாட்டா எதையாவது கொட்டியிறைச்சுட்டு அள்ளிப் பொறுக்கிண்டாவது இருக்கலாமே!''

''உனக்கு இது பிடிக்கவில்லையோன்னா?''

''அப்படியும் சொல்லிவிட முடியுமா?''

தரங்கிணி அலமாரிக் கதவை மூடிவிட்டு கீழே கிழித்துப் போட்டிருந்த காகிதச் சுக்கல்களைத் திரட்ட ஆரம்பித்தாள். ''இப்போ புதுப் புது ஊர்களாய்ப் பார்க் கிறேன். ரயில் பிரயாணம் செய்யறேன். அந்த அந்த இடத்து வினோதங்களை அழைச்சுண்டுபோய்க் காண்பிக் கறேள். இதெல்லாம் நான் ஆத்திலே கட்டுப் பெட்டியாய் உட்கார்ந்திருந்தால் கிட்டுமா?''

கத்தி தாடிமேல் இறங்குகையில் 'கிறிங் கிறிங்' கென்றது.

''எத்தனை ஊர சுற்றினாலும் உனக்கு உன்னூர் சப்பாத்திப் புதரும், ஊர்க்கோவிலின் ஒடிசல் மணியும் தானே பிடிக்கிறது? அப்புறம் உன்னைப் பெத்த அந்த ஆறு—ஊவ்...''

''என்ன?''

''வெட்டிக்கொண்டேன்— உன்னோடு பேசிக் கொண்டே.''

''எல்லாமே ஏளனம் என்றால் அப்படித்தான். நீங்கள் என்னை எங்கெங்கோதான் அழைச்சுண்டு போறேள். ஏன் அந்த அந்தக் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போகமாட்டேன்கறேள்? இன்னிக்குச் சாயந்திரம் வாங்கோ போவோம்!''

அவன் முகத்தை 'விறு விறு'வென்று டவலில் வேகமாய்த் துடைத்துக் கொண்டான்.

''எனக்குக் கோவில் வேண்டாம்,''

அவள் முகம் விழுந்தது கண்ணாடியில் தெரிந்தது.

''ஆனால் போவோரை நான் தடுக்கவில்லை. வேணுமானால் நீ போய் வாயேன்.''

''இன்னிக்குப் போகத்தான் போகிறேன். வெள்ளிக் கிழமையாயிருக்கு.''

''ஜமாய்! உன் புருஷனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டிக்கொள். சரி வா, சாப்பிடப் போவோமா? ஓயாமல், சாம்பார், கறி கூட்டு, ரஸம்...''

''ஆமாம், நீங்க என்னவேணுமானாலும் சொல்லிக் கோங்கோ—அந்த சுண்டக்காய் வத்தக்குழம்பும் சுட்ட அப்பளமும் கிட்டற நாள் என்னிக்கினு நான் ஏங்க ஆரம்பிச்சாச்சு.''

ஒரு பையன் வந்து பரிமாறினான். பத்துப்பன்னிரண்டு வயதுதானிருக்கும். ரேக்குச் சிவப்பு. நடுவகிடு எடுத்து சிகையின் மயிர்க்குஞ்சங்கள் பளபளத்துக்கொண்டு தோள் வரை தாழ்ந்து, சுருண்டு தொங்கின. பட்டை பட்டையாய் விபூதியை இட்டுக்கொண்டு புருவ மத்தியில் குங்குமம் ப்ரகாசிக்கத் தன்னையே கீழே இழுக்கும் கனத்தைத் தூக்கிக்கொண்டு: ''சாம்பார் போதுமா அம்மா?'' என்று உற்சாகத்துடன் கத்தினான். அவன்

போவதையும் வருவதையும், தரங்கிணி கவனிப்பதை அவள் கணவன் பார்த்துப் புன்னகை புரிந்தான். அவளும் அதைப் பார்த்துவிட்டாள்.

"பார்த்தேளா, குழந்தையை! பழனியாண்டவர் மாதிரியே இருக்கான்!"

அவன் ஒன்றும் பதில் பேசவில்லை. ஆனால் ரஸத்தைத் தூக்கிக்கொண்டு வேறு ஆள் வந்தபோது தரங்கிணியின் முகத்தில் தெரிந்த ஏமாற்றம் அவனுக்கு சற்று பரிதாபமாய்த்தானிருந்தது. "ஏன், அந்தச் சின்னப் பையன் இல்லை?" என்று கேட்டான்.

மோரைத் தூக்கிக்கொண்டு பையன்தான் வந்தான். அவள் கணவன் அவள் காதண்டை குனிந்து "பழனியாண்டவரைச் சேவித்துக்கொள்" என்று ரகசியமாய்ச் சொல்லிவிட்டு ஊறுகாயைத் தொட்டுத் தொண்டை நாக்கில் இழுத்துக் கொண்டான். பையனுக்கு அது காது கேட்டு விட்டதோ என்னவோ, சிரித்த முகத்துடன் அம்மாவிடம் போய் சாவதானமாய் நிறுத்திப் பரிமாறினான். அப்புறம் கூட அங்கேயே நின்றிருந்தான். வாயிதழ்கள் மலர்ந்தபடியிருந்தன.

* * *

ப்ரசாதத் தட்டை ஏந்தியபடி தரங்கிணி மாடிப்படியேறி அறையுள் நுழைந்து விளக்கைப் போடுவதற்காகக் கதவோரத்தில் இருந்த பொத்தானை அழுத்த—இல்லை, பொத்தான்மேல் வைத்த விரல் அழுத்தாமல் அப்படியே நின்றது. எதிரில் சுவரோரமாய்ப் போட்டிருந்த கட்டிலின் மேல் ஒரு தணல்பொறி கனிந்தது. அம்மாதிரி அவள் கணவன் புகையை உறிஞ்சி இழுக்கையில் அவனுக்கு மனம் சரியில்லை என்று அவள் அறிவாள். அவன் சீற்றங்களை அவள் அறிவாள். அப்போது அவனை யாரும் நெருங்குவதற்கில்லை. முன்பின் சுவடு இலாது கக்கிக் குமுறி எழும் எரிநீர்ச் சுழிகள் அவை.

அவள் விளக்கை ஏற்றவில்லை. மேஜையின்மேல் தட்டை வைத்துவிட்டுப் போய் அவன் பக்கலில் அமர்ந்தாள்.

''என்ன படமெடுத்திருக்காப்போல் இருக்கு!''

அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

அவள் கழுத்தையணைத்து தன் பக்கம் இழுத்தான். அவள் தன்னை விடுவித்துக்கொண்டாள்.

''ஏனாம்?''

''ஒன்றுமில்லை. இப்போ என்ன அதைப் பற்றி?'' என்று சிரித்துக்கொண்டே மறுபடியும் அவளை அணைக்க முயன்றான்.

''இல்லை; உங்கள் புகைச் சிரிப்பெல்லாம் வேண்டாம். வீஷத்தை முழுக்கக் கக்கிடுங்கோ. உங்களை முன்னால் சுத்தி பண்ணியாகணும். இல்லாட்டா வயத்தில் அத்தனையும் வெச்சிண்டு எல்லாரையும் வேக அடிச்சூடுவேள்.''

''ஹூ!''

''சொல்லுங்கோ!''

''ஒன்றுமில்லை.''

''பரவாயில்லை, சொல்லுங்கோ.''

''இன்றைக்கு ஆச்சரியமாய், நீ எதிர்பாராத வெகுமதி உனக்கு தயார் பண்ணிவைக்கலாம் என்றிருந்தேன். அது என்னடாவென்றால் புஸ்வாணமாய்ப் போய்விட்டது. அதுதான்.

''அப்படி என்ன வெகுமதியோ?''

''இன்றைக்கு நமக்குப் பரிமாறினானே அந்தப் பையனை உனக்கு ரொம்பவும் பிடித்திருந்ததோன்னா?''

மௌனமானாள்.

''என்ன பதிலே யில்லையே? ஊம் கொட்டினால் அல்லவா?''

''ஊம்...''

''இப்போதுதான் சற்று நேரத்திற்கு முன் ஒரு எண்ணம் தோன்றிற்று. அந்தப் பயலை நம்முடனேயே கூட்டிக் கொண்டால் என்ன? லட்சணமாயிருக்கிறான். புத்திசாலி என்றும் தோன்றுகிறது. நினைத்ததுதான், எனக்கு ஒரே உற்சாகம் உண்டாகிவிட்டது. அவனைத் தேடிக்கொண்டு சமையல்கட்டுக்குப் போனேன். அவனைக் காணோம். வாசல் பக்கம் போனேன் காணோம். பின் கட்டுக்குப் போனேன். அங்கே இருந்தான். என்ன பண்ணிக்கொண்டிருந்தான் என்று நினைக்கிறாய்?''

''என்ன?''

அவன் சிகரெட்டை வீசி யெறிந்துவிட்டு கட்டிலி லிருந்து குதித்து, அறையின் குறுக்கே முன்னும் பின்னும் நடந்தவாறு கோபாவேசத்துடன் கையை வீசிக்கொண்டு கத்த ஆரம்பித்துவிட்டான்.

''தோய்க்கிற கல்லின்மேல் குந்திட்டுக்கொண்டு உட்கார்ந்து, ஒரு சுருட்டைப் பிடித்துக் கொண்டிருந் தான்.''

அவள் சிரித்துவிட்டாள்.

இல்லை, இல்லை; அப்படியில்லை அது!'' அவன் மேஜைமேல் கோபத்துடன் அறைந்த அறையில் அதன் மேலிருந்த தட்டு அதிர்ந்தது. ''சிரிக்கற சமாசாரம் இல்லை. வாண்டுப் பயல்! இவனைப்பற்றி இன்று காலை யெல்லாம் நாம் நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் என்ன, நான் நினைத்துக்கொண்டு வந்ததென்ன, இவன் இப்போது பண்ணிக் கொண்டிருக்கிறதென்ன? எனக்கு ஒரேயடியாய்ப் பொங்கிக்கொண்டு வந்துவிட்டது.

''என்னடா, இப்பொ நீ குடிக்கிற சுருட்டு உன்னை விட நீளமாயிருக்கும் போலிருக்கிறதே!' என்றேன். அவனுக்கு அப்போதாவது ஒரு பயம் ஏற்படவேண்டாம்? சர்வ சாதாரணமாய்ப் புகையை ஊதிவிட்டு, 'அதைப் பத்தி உனக்கென்னய்யா? காசு என் காசுதான்.' என்றான். விட்டேன் பார், ஒன்று! 'அப்பாடா' என்று செவியைப் பொத்திக்கொண்டான். அப்புறம் நான் அங்கு நிற்க வில்லை விடுவிடுவென்று வந்து அவனைத் தொட்ட கையைக் கழுவிக்கொண்டு இப்பொழுதுதான் கட்டிலில் உட்கார்ந்தேன்.''

தரங்கிணி மௌனமாய் இருந்தாள். அவன் இன்னொரு சிகரெட்டைப் பற்றவைத்தான்.

''எல்லாம் தலைகீழாய்ப் போய்விட்டது. 'நான் குட்டிச் சுவராய்த்தான் போவேன். என்னைச் சரிப்படுத்த உரிமையில்லை' என்று சட்டம் படிக்கிறதுகள்.''

''அதனாலே நீங்கள் அவனிடம் உங்கள் கைவரிசை யைக் காண்பிச்சேளாக்கும்!''

அவன் குரல் தடித்தது. ''ஏன்? நீயும் எனக்குச் சட்டம் படிக்க ஆரம்பித்து விட்டாயா?''

''இல்லை. ஆனால் நீங்கள் அவனுக்கு அப்பாவா?''

''அப்பாவா?''— அவன் சீற்றத்துடன் கட்டிலிலிருந்து தாவிக் குதித்தான். ''என் பிள்ளை இப்படியிருந்தால் என்ன பண்ணுவேன் தெரியுமா? என் பிள்ளை! என் பிள்ளை!!'' உணர்ச்சி வேகத்தில் அவனுக்கு மூச்சு அடைத்தது.

அவள் சாவதானமாய், ''உங்கள் கையிலிருப்பது என்ன?'' என்றாள்.

அவன் தன் கையில் கனிந்துகொண்டிருக்கும் சிகரெட்டை அப்போதுதான் புதிதாய் நினைவோடு கண்டான். அதை ஜன்னலுக்கு வெளியே வீசியெறிந்தான்.

அவன் ஆவேசம் புசுக்கென அவிந்தது. கால்கள் வெட வெடத்தன. களைப்புடன் கட்டிலில் சாய்ந்தான். அவள் அப்படியே அவனைத் தழுவிக்கொண்டாள்.

''எப்படியும் நான் கெட்டுப்போனாலும் என் பிள்ளையும் கெட்டுப்போக இஷ்டமாயிருக்குமா?'' அவன் குரல் தழுதழுத்தது.

அவள் ஒன்றும் பதில் பேசவில்லை. அவனை குழந்தை போல் அணைத்துக்கொண்டிருந்தாள்.

அம்மாதிரிச் சமயங்களில்தான் அவன் அவளை வெகுவாய் நாடினான். அவனை அலைக்கும் தீயை, அவள் நெருக்கத்தின் குளுமையில்தான் ஆற்றிக்கொள்ள முடிந்தது.

ஜன்னலுக்கு வெளியே வானத்தில் மேகங்கள் யாருக்கோ வழிவிடுவனபோல் பிரிந்து இரு பக்கங்களிலும் ஒதுங்க ஆரம்பித்தன.

அவள் திடுக்கென்று, ''நான் இப்போ ஒரு பித்துக் கொள்ளி ஆகப்போகிறேன்'' என்றாள்.

''சந்தோஷம்.''

''உங்களை ஒரு கேள்வி கேக்கப்போறேன்.''

''பித்துக்கொள்ளி கேள்வி!''

''ஆமாம், உங்களுக்கு என்னைப் பிடிக்கிறதோ?''

''ம்...ம்...ம்''

''உறும வேண்டாம். பதில் சொல்லுங்கோ.''

''என்ன, இது எந்த நாவலில் எத்தனாவது பக்கம்?'',

''எனக்கு அதிலெல்லாம் இஷ்டம் இல்லைன்னு உங்களுக்குத் தெரியும். படிச்சால்தான் கேக்கத் தோணுமோ? இல்லாட்டா லோகத்திலே இந்தக் கேள்வியே கிடையாதா?''

"என்ன சொல்லவேண்டும் என்கிறாய்?"

"பிடிக்கறதுன்னு சொல்லிட்டுப் போங்களேன்."

"பிடிக்கிறது."

"எவ்வளவு பிடிக்கிறது?"

அவன் பதில் பேசவில்லை. அவளைத் தோளில் பற்கள் பதியக் கடித்தான். வீல் என்று கத்தினாள்.

"அவ்வளவு பிடிக்கிறது!"

"விளையாடாமெ நேர்ப் பதிலாகச் சொல்லுங்கோளேன்."

"கடவுளே நேர்ப் பதில் கொடுப்பதில்லை."

"நீங்கள்தான் அவருக்குப் போட்டி ஆச்சே. பதில் சொல்லித்தான் பாருங்களேன்."

"சொல்கிறேன். இப்போது என் மனம் உன்னிடம் இருக்கும் நிறைவில், இந்த வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலேயே இந்த நிலையிலேயே நான் இறந்துபோய்விட வேண்டும். அவ்வளவு பிடிக்கிறது உன்னை."

அவன் தன் மனத்தைப் பெட்டிபோல் திறக்கும் அதிர்ச்சியில் அவள் உடல் குலுங்கிற்று.

"ஏன் சாவு சாவு என்கிறீர்கள்?"

"அது தான் நிஜம்" பெருமூச்செறிந்தான். "உன்னை விரும்பும் விதமும் நான் சொன்னவிதம்தான். நீ கேட்டாய்; நான் சொன்னேன். அவ்வளவுதான்!"

அவள் கைகள் அவனைச் சுற்றி இன்னும் இறுகின.

"அப்படியானால் நீங்கள் நான் இப்போ சொல்லப் போவதைக் கேட்கப்போறேள்."

"ஓஹோ! கேட்கப் போகிறேனோ?"

''ஆமாம். சத்தியமாய்க் கேட்கப் போகிறீர்கள்.''

''சத்தியமா? இதென்ன! புதிது புதிதாய் வார்த்தை நடமாடுகிறது?''

''ஆமாம்!—சத்தியமாய்த்தான்!''

''அது எப்படி யிருக்கும்?''

''இதென்ன, இப்படிக் கேட்கிறளே. இத்தனை நாழி எதைப்பற்றி நீங்கள் பேசிக்கொண்டிருந்தேள்?''

''நான் ஒன்றும் பேசவில்லையே.''

''என்மேல் உங்களுக்கு இருக்கும் பிரியத்தை எந்தத் தினுசில் நீங்கள் ஸ்தாபிச்சிண்டிருந்தேள்?''

அவன் சிரிப்பில் அறை எதிரொலித்தது.

''நான் சாவில் என் நிறைவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்?''

''சாவு என்பது உங்கள் பாஷை. சத்தியம் சாதாரண மான என் பாஷை என்று வெச்சுக்கோங்களேன். ரெண்டு பேரும் சொல்லும் விஷயம் ஒண்ணேதான்.''

''வெச்சுக்கோங்களேன், பண்ணிக்கோங்களேன் என் றெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் இன்னி முழுக்க என்ன, என்றைக்குமே வைத்துக்கொண்டிருக்கலாம்; எதை வேணுமானாலும் பண்ணிக்கொண்டிருக்கலாம்.''

''அப்படியல்ல இப்போ. இப்போது நிச்சயமாய் ஒன்றைச் செய்யப்போகிறோம்.''

''எதை?''

''நான் இப்போ உங்களுக்குச் சொல்லப்போவதை, செய்யறேன்னு சொல்லுங்கோ—சத்தியமாய்ச் செய்யப் போறேன்'னு.

''என்னை அந்த வார்த்தை ஏதோ வேதனைப்படுத்து கிறது'' என்று அவன் முனகினான்.

''பயமாயிருக்கா?''

''பயமா?''— அவனுக்கு ரோஷம் பொங்கிவிட்டது. ''எதுக்குப் பயம்? நான் எதுக்கும் பயப்படமாட்டேன்!''

அப்படின்னா சொல்லுங்கோளேன்.

''சரி சத்தியமாய்ச் செய்கிறேன், மனுஷ சாத்தியத் திலிருந்தால்.''

''நீங்கள் இன்னொரு கலியாணம் எனக்காகப் பண்ணிக்கொள்ளப் போகிறீர்கள்.''

அவ்வறையில் ஓர் இமைநேரம் நித்தியத்தின் கனம் தொங்கிற்று. ஜன்னலுக்கு வெளியே நிலவு கொடுக்கரி வாள்போல் முளைத்திருந்தது.

மறுகணம் அவன் அவளைத் தன்னிடமிருந்து வீசி யெறிந்த வேகத்தில் அவள் எட்டடி தூரம் போய்த் தரையில் வீழ்ந்தாள். அவளது பின்மண்டை மேஜை விளிம்பில் 'ணக்'கென்று மோதும் சப்தம் அறை முழுதும் அதிர்ந்தது.

அவன் எழுந்து விளக்கைப் போட்டான்.

அவன் கண்களில் தணல் வீசிற்று. கடித்த பற்களி னிடையிலிருந்து வார்த்தைகள் சீறிக் கொப்புளித்தன.

''சூன்யக்காரி! சூன்யக்காரி! கோயிலுக்குப் போய் சூன்யம் வைக்கத் தெரிந்துகொண்டுதான் வந்தாயா! இந்தக் கைகேசி வரம் கேட்கத்தான் இவ்வளவு ஆர்ப் பாட்டமா?''

அவள் பின்மண்டையில் அடிபட்ட இடத்தைத் தேய்த் துக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள். ஆனால் முடிய வில்லை. பின்னுக்குத்தான் தள்ளிற்று.

"சத்தியமாம் சத்தியம்! உன் வீட்டுப் புழக்கடையில் போட்டிருக்கும் கொத்தமல்லி பாரு, அது!"

"வாய்வழி வெளிக்குதிக்க அஞ்சும் ஆபாச வசை மொழிகள் இன்னும் எத்தனையோ அடுக்கடுக்காய்ப் பற்களிடையில், அவன் நாக்கு நுனிமேல், வாய்க் கூரையைப் பிளக்கப் பார்ப்பது அவளுக்கு நன்றாய்த் தெரிந்தது. அவள் எழுந்திருக்க முயன்றாள். முடியவில்லை.

"நீங்கள் என்ன வேணுமானாலும் திட்டிக்கோங்கோ. எனக்கு ஒண்ணும் ஒட்டிக்—ஆ!"—அவள் கண்கள் சொருகிட்டன.

"இப்போது என்ன மாயம்!"

அவன் அருகே வந்து குனிந்து அவளை அப்படியே வாரித் தூக்கினான்.

அவள் அலறினாள். "ஐயோ—இடுப்பு! இடுப்பு! கயண்டுட்டாப்போல் அப்படித் துடிக்கிறது!"

அவளைக் கட்டிலில் கடத்தினான்.

குங்குமப் பொட்டின்மேல் கோயில் ப்ரசாதமாய் இட்ட உதிரி விபூதிப் பொட்டின் மணம் அவன்மேல் கமழ்ந்தது.

"நான் போய் டாக்டரை கூட்டி வருகிறேன்."

அவள் அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "இருங்கோ. இன்னும் கொஞ்ச நாழி. இன்னும் சொல்றேன். நீங்கள் மறு கல்யாணம் பண்ணிண்டுதான் ஆகணும். அதுதான் சரி!"

"சரி சரி, நான் டாக்டரைப் போய்க் கூட்டி வருகிறேன்."

"பத்து வருஷங்கள்! பத்து வருஷங்களாக்கும்! லேசில்லை பத்து வருஷங்கள். இன்னும் நாலு வருஷம் இப்படியே போனால் நான் கிழவி."

''உஷ்! சும்மா இரு...''

''நீங்கள் இதனாலேயே வேறே ஆயிடுவேளா, ஆயிட முடியுமா?—நீங்கள் என்றைக்கும் என் சொத்துத்தானே! எல்லாமே என்னுடையதுதான்— நீங்கள் என்னிஷ்டப்படி கேட்கிறேள், அவ்வளவுதான். நீங்கள் மாத்திரம் என்ன, எனக்கு இளையாளாய் நான் கேட்கிறவளும் என்னுடையவள்தான். உங்களால் அவள் வயிற்றில் பிறக்கப் போவதும் என்னுடையதுதான். என்னுடையதுதான் என்றால் என்ன? நம்முடையது! நமக்கு என்று ஒண்ணு வேணும், கண்டிப்பாய் வேணும்.''

''உஷ்! தரங்கிணி.''

''உஷ்!'' அவளும் கூடச் சேர்ந்து சின்னக்குழந்தையைப் பயமுறுத்துவதுபோன்று, மூக்கின்மேல் விரலை ஆட்டிக் கண்களை உருட்டி விழிக்க முயன்றாள். ஆனால் உண்மையில், வலியின் ஜன்னி அவள்மேல் மெதுவாய் இழுக்கும் திரைக்குப் பின் போய்க்கொண்டிருந்தாள், போகும் வழியில் ஏதேதோ பிதற்றிக்கொண்டே.

''நமக்கு என்று ஒண்ணு கண்டிப்பாயிருக்கணும். கோயிலுக்கு இன்னிக்குப் போனதிலே இதை நான் கண்டிப்பாய்க் கண்டுவிட்டேன்.''

''எதை?'' கவலையுடன் அவன் அவள் நெற்றியில் கை வைத்தான். அதில் முத்துக் கொதி ஏற ஆரம்பித்து விட்டது.

''ஒண்ணு என்பதை! அது இருக்கோ இல்லையோ, அத்தனைபேரும் அதைச் சுத்தித்தானே வரா! எல்லாருக்குமே அந்த ஒண்ணு இருக்கு என்கிற திடம் இருக்கா என்ன? இல்லாவிட்டாலும் அந்த ஒண்ணு என்கிற எண்ணமாவது அவசியமாய் வேண்டியிருக்கு. இது எனக்குக்கூடத் தெரிகிறது. உங்களுக்கு ஏன் தெரியவில்லை? உங்க அப்பாவுக்கு நீங்கள் அதுவா இருந்தேள்.

என் அம்மாவுக்கு நான் இருந்தேன். நீங்கள் அந்த எண்ணத்தை யிழந்துவிட்டு வரட்சியாய்த் தவிச்சுண்டிருக்கேள். எனக்கு நன்றாய்த் தெரியும். ஏன் என்றால் இன்னும் நாலு வருஷம் இப்படியே போனால், நானும் அந்த எண்ணத்தை இழந்துவிடுவேன்; நானும் வரட்சி ஆயிடுவேன். நான் வரண்ட அப்புறம் உசிரோடிருக்க மாட்டேன். ஆனால் எனக்கு உயிர்மேல்தான் ஆசை. நான் செத்துப்போனாலும் உசிரோடு இருக்கணும் உசிர் மேலே எனக்கு அவ்வளவு உசிர். அதனாலே எனக்கு அந்த ஒண்ணு கண்டிப்பாய் வேணும். என் மூலம் இல்லாவிட்டாலும் உங்கள் மூலமாவது நமக்கு வேணும்...'

* * *

டாக்டர் வந்து பரிசோதிக்கையிலும் அவள் பிதற்றிக் கொண்டுதானிருந்தாள். தலை பரவாட்டல் ஆடியது. மூடிய கண்களின் மேல் புருவங்கள் மாத்திரம் நெரிந்தன.

"ஆமாம். கண்டிப்பாய் ஒண்ணு இருக்கணும். ஊருக்கெல்லாம் ஒரே நதி ஓடறாப்போலே, நதியில்லாட்டா கிணறாவது இருக்கணும். குளிக்காவிட்டாலும் குடிக்கவாவது ஜலமில்லாவிட்டால் என்ன செய்வோம்? எப்படி உயிர் வாழ்வோம்? அதனாலே எல்லாரும் மொண்டுக்கோங்கோ, வந்து வந்து மொண்டுக்கோங்கோ—வாளியிலும் தவலையிலும் குடத்திலேயுமா மொண்டுக்கோங்கோ. வாங்கோ வாங்கோ—அடி கண்ணாட்டி! நீ கூட வந்தையா—சொம்பைக் கொண்டு வந்தையா?—அம்மா வரல்லியா? அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா? உன்னாலே தூக்கிண்டு போக முடியுமோ? நான் தூக்கிண்டு வரட்டுமா? வேண்டாமா? நீயே போறையா? சரி போ! வாங்கோ! வாங்கோ! எல்லோரும் வாங்கோ...!"

பின்னால் கையைக் கட்டிக்கொண்டு அவன் அவ்வண்டை நின்றான். அவன் கண்களோரத்தில் வெள்ளை விழிகளில் ஊசிகள் பாய்ந்துகொண்டிருந்தன.

டாக்டர் தன் சோதனைகளை முடித்துக்கொண்டு நிமிர்ந்தார்.

"இடுப்பு எலும்பு ஒண்ணு முறிந்திருக்கிறது. அதாவது பரவாயில்லை. மண்டையிலே உளளூற அடி பட்டிருக்கிறது. எப்படி எங்கே இவ்வளவு இசை கேடாய் விழுந்தாங்க? நான்போய் ஆம்புலென்ஸ் அனுப்பறேன்."

* * *

"எங்களூர் ஜலம் வத்தவே வத்தாது. நூலாகவாவது ஓடிண்டுதானிருக்கும். காவேரியா, லேசா? என்னென்று நினைச்சுண்டிருக்கே? வாயிலே வெச்சா கல்கண்டு தோத்தது போ—உ—ஹூம்—என்னன்னுடி நினைச்சுண்டு இருக்கே!—ஐயோ அம்மா வலிக்கிறதே! எங்கேடி போயிட்டே!"

* * *

"எனக்கு நீச்சல் தெரியும்னு உங்களுக்குத் தெரியுமோ? ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் எங்கள் ஊரிலே பத்து நாள் தங்கியிருந்தார். அவர் ஆம்படையாளும் கூட வந்திருந் தாள். நம்மாதிரிதான்!—

கலகலவெனக் குழந்தைச் சிரிப்பு.

"அந்த மாமி மலையாள சீமை அவள்தான் எனக்கு நீச்சல் கற்றுக் கொடுத்தாள். அடேயப்பா! அவள்மாதிரி ஆம்பளைகள்கூட நீஞ்ச முடியாது. ஜலத்திலே மல்லாக்கப் படுத்து மணிக்கணக்கில் மிதப்பாள் மத்தியான வேளை யிலே ஒருத்தருக்கும் தெரியாமல் போயிடுவோம் அவள் மாதிரி மிதக்காட்டாலும் கொஞ்ச நாழியாவது என்னாலே மிதக்க முடியும்..."

"ஒருநாள் மழை பேஞ்சுது. ஓடிப்போய் ஜலத்தில் விழுந்தேன். என்னைத்தவிர ஒருத்தருமில்லை. மல்லாந்து படுத்து, வாயைத் திறந்துண்டு கட்டையாய் மிதந்தேன்.

மழைத்துளியை நேரே வாயிலே பிடிக்கணும்னு ஆசை. நம்மைச் சுற்றித் தூறல் கொட்டினாலும், வாய்க்கு நேரே மூத்து எங்கே விழறது? விழறப்போதானே விழுப்!''

*  *  *

''போடி! அவருக்கு என்ன தெரியும்? குழாயடியில் ஸ்நானம் பண்ணிப் பண்ணி ஜல விஸ்தீர்ணத்துக்கே வர மாட்டேன் என்கிறார்! அதை அவரால் அடையாளம் கூடக் கண்டுபிடிச்சுக்க முடியவில்லை. ஆனால் அவர் மேல் தப்பில்லை. அவரை அப்படிப் பண்ணிவிட்டாள், என்ன பண்றது. அவர் எவ்வளவு பெரிய ஜலம் என்று அவருக்கே தெரியல்லே. இருந்தாலும் எவ்வளவு நல்லவர் தெரியுமா? ரொம்ப ரொம்ப நல்லவர். ரொம்... ம்...ம்...ப!''

கட்டிலின் ஒரு பக்கம் அவன் நின்றுகொண்டிருந்தான். இன்னொரு பக்கம் கூழாங்கல் கண்ணாடிகளுக்குப் பின் பத்திரமாய்க் கவலைப்பட்டுக்கொண்டு டாக்டரும் நின்றார்.

''உங்கள் மனைவியை ஏதோ ஓர் எண்ணம் அழுத்திக் கொண்டிருக்கிறது ஸார். பாருங்கள் இடுப்பு எலும்பு கூடி விட்டது. ஜுரம் விட்டுவிட்டது. ஆனால் நினைவு மாத்திரம் தெளியவில்லை. What is it?

''இன்னும் எத்தனை நாள் இப்படி இருக்கு?''

உதட்டைப் பிதுக்கினார். கைகளை விரித்தார். ''எப்படிச் சொல்ல முடியும்? இதுவரை நாலு மாதங் களாகிவிட்டன. I don't know. Wait, ஏதோ சொல் கிறாள்.''

அவளுடைய பார்வையற்ற கண்கள் அவளுள்ளே தாழ்ந்திருந்தன. கற்சிலையின் புன்னகையில் உதடுகள் லேசாய்க் குழைந்தன.

"நான் ஒருநாள் குளிச்சுண்டிருந்தேன். அப்போ ஜலத்திலே ஒரு பூ மிதந்து வந்தது..."

கை விரல்கள், தாமாகவே மொக்கவிழ்ந்த மலரின் உருவை அமைப்பதில் மார்மேல் புலுபுலுத்தன.

"ஒரு சின்ன சொம்பளவு பெரிசுக்கு, வெள்ளை வெளேர்னு... அப்பா; என்ன அழகு தெரியுமா? நான் அதை எங்கிருந்து வந்ததுன்னு கேக்கல்லே. பிணத்து மேலே போட்டதா, மணத்து மேலே போட்டதான்னு கவலைப்படல்லே. எந்த இடத்துலே முளைச்சுது, கிள்ளின பூவா, தள்ளின பூவா, உதிர்ந்த பூவான்னு யோசனை பண்ணல்லே. எடுத்து அப்படியே கொண்டையிலே சொருகிண்டு ஜலத்தின் நிழலில் என்னைப் பார்த்துண்டேன். நான் அழகாயிருந்தேன். என்னைவிட அது அழகா யிருந்தது. ரொம்ப நாள் அது வாடவேயில்லை."

டாக்டர் தன் மோவாயை யோசனையுடன் தடவினார்.

"Wonderfull wonderfull! உங்களுக்கு ஏதாவது புரிகிறதோ?"

'ஆம' என்ற முறையில் அவன் தலையை அசைத்தான். இறுகிய தாடைகளில் மாலைகள் வழிந்தன.

"What is it?"

"இப்பொ என்ன அதைப்பற்றி! இவளைக் கவனித்துக் கொள்ளுங்கள். நான் இரண்டு நாட்களில் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வேகமாய் வெளியே சென்றான்.

* * *

"ஊஹூம் நான் மனசிலே ஒண்ணும் ஒளிச்சுக் கல்லையே! உள்ளே ஒண்ணும் வெளியே ஒண்ணுமா நடந் துக்கல்லையே! நான் கைகேசியில்லை. என்னைத் தெரி

யல்லே? என்னைப் பாருங்கோ, சற்றே திரும்பிப் பாருங்கோ! நான் தரங்கிணி! மா—ஆ—ஆயே! ஸகாயே! அம்மா, தாகமாயிருக்கே!—''

*　　　*　　　*

''இல்லை; நான் சொன்னதை வேணும்னா மறந்துடுங்கோ. சத்யம்னு சொன்னால் மாத்திரம் உங்களை என்னால் கட்டிவிட முடியுமா, என்ன? நான் உங்களை விடுவிச்சுட்டேன். இனிமேல் நீங்கள் உங்களை விடுவிச்சுக் கோங்கோ. உங்கள் இஷ்டம் இனிமேல். இனிமேல் இதைப் பற்றி நான் பேசப்போறதில்லை. சத்தியமாப் பேசப் போறதில்லே. ஆனால் ஒண்ணு மாத்திரம்...'' அந்த 'ஒண்'ணைப் பிடித்துவிடுவாள் போலும் அவள் உள்ளங்கை கிண்ணம்போல் குழிந்தது.

''இதோ பாரம்மா, உங்கள் புருஷன் வந்திருக்கிறார். உங்களுக்கு ஏதோ கொண்டு வந்திருக்கிறார்.''

''ஆ? யாரு? எனக்கு தூக்கம் வரது—''

''தரங்கிணி, இந்தா! வாயைத் திற. ஆ! அப்படி! என்ன, அடையாளம் தெரியறதோ! இதைக் குடித்து விட்டுத் தூங்கு.''

''என்னது, தீர்மானம்?''

''எந்த ஜலம், அடையாளம் தெரிகிறதா? தரங்கிணீ! தரங்கிணீ!''

அவள் பதில் பேசவில்லை. மார்மேல் போர்வை லேசாய் மிதக்க ஆரம்பித்துவிட்டது. டாக்டர் குனிந்து அவளை உற்று நோக்கினார். அவர் நிமிருகையில் முகம் ஒளி வீசிற்று.

''தூங்குகிறாள். வெளியே வாங்கோ. It is good—நீங்கள் என்ன பண்ணினீர்கள்? What? வெறும் water? Amazing! Amazing!

*　　*　　*

பாதியிரவில் தரங்கிணி திடுக்கென விழித்துக்கொண்டாள். அவளுக்குத் தூக்கம் சரியாயில்லை. முழங்கால்களைக் கட்டிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தாள். ஜன்னலுக்கு வெளியே கொல்லைப்புறத்தில் பட்டை நிலா ஜமாய்த்துக் கொண்டிருந்தது. தென்னந்தோப்புகளின் மரங்களின் சந்துகளின் வழி சற்று உன்னிக் கவனித்தால் ஆற்றுமணல் இப்போதுகூட நன்றாய்த் தெரியும். எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். என்று அவளுக்கே தெரியவில்லை. ஆனால் திடீரென்று அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

''தரங்கிணி!''

கண்களை அவசர அவசரமாய்த் துடைத்துக் கொண்டாள். அறைவாசலில் அவன் உருவக்கோடுகள் அடைத்துக்கொண்டிருந்தன.

''இதோ இருக்கேன்?''

''தூங்கவில்லை?''

''இல்லை. இப்பொத்தான் முழிப்பு வந்தது. நீங்களும் வந்தேள்.''

''எனக்குத் தூக்கம் வரவில்லை''— பெருமூச்செறிந்தான். ''உன்னோடு பேசலாம் என்று வந்தேன்.''

''இருங்கோ, விளக்கை யேத்தறேன்.''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.'' உள்ளே வந்தான்.

''என்ன, சுற்றுமுற்றும் பாக்கறேள்?''

''உட்காரத்தான், இங்கே நாற்காலியிருந்ததே!''

''கட்டிலிலேதான் இடம் இருக்கே உட்காருங்கோ'' அவளுக்கு ஏனோ மறுபடியும் துக்கம் அடைக்க ஆரம்பித்து

விட்டது. ஒரு தடவை மூக்கை சிந்தினால் எவ்வளவோ சௌகரியமாயிருக்கும். ஆனால் பயம் தான் அழுவது அவருக்குத் தெரிந்துவிட்டால்?

சற்றுநேரம் கல்லைப் போட்டாற்போல் இருவரும் மௌனமாயிருந்தனர்.

''எனக்கு இன்று ஆபீஸிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. லீவு எல்லாம் எல்லை கடந்து எடுத்தாயிற்று இவ்வளவு தூரம் என் விஷயத்தில் அவர்கள் சலுகையாயிருந்ததே எனக்கு ஆச்சரியம். எட்டு மாதங்கள் சேர்ந்தாற்போல் உன்னிடத்தை விட்டு அசையவில்லை பார். மறுபடியும் வெளியூர் சுற்ற வேண்டும்.''

அவள் ஒன்றும் பதில் பேசவில்லை.

''இந்தத் தடவை அவர்கள் வகுத்திருக்கும் Tour ஐ முடிக்கக் குறைந்தது ஐந்து மாதங்களாவது ஆகும். ஆனால் இந்தத் தடவை உன்னைக் கூடவே கூட்டிக் கொண்டு போகப் போவதில்லை.''

அவள் வயிற்றுள் ஏதோ நெளிந்து புரண்டு மடிந்தது. ஆனால் சும்மா தானிருந்தாள்.

அவன் பார்வை ஜன்னலுக்கு வெளியே ஊன்றியது. 'உனக்கு ஒன்றும் அசௌகரியமாயிருக்காது என்று நினைக்கிறேன். உன் சொந்த இடத்திலேயே இருக்கிறாய். உன்னைச் சுற்றிலும் உனக்கு வேண்டிய மனுஷாள்தாம். பக்கத்தாத்து மாமியை ராத்திரி வந்து துணைக்குப் படுத்துக்கொள்ளச் சொல்லு, என்ன?''

''சரி.'' (ஐயோ இந்த மூக்கை என்ன பண்ணுலாம்?)

''நாளைக் காலையே புறப்படுகிறேன்'' அவன் கைகள் சீவனற்று மடிமேல் கிடந்தன.

''தவிர, இதுதான் சரி என்று நினைக்கிறேன்.''

''எது?''

''இப்படி நான் உன்னை விட்டுப் போவது.''

மறுபடியும் மௌனம்,

''கீச்கீச்''

வெளியே ஆகாயத்தில் ஒரு குருட்டுப் பறவை.

''தரங்கிணீ!''

''ம்...ம்!''

அவன் தன் உள்ளங்கையைப் பார்த்துக்கொண்டே ''நீ சந்தோஷமாயிருக்கிறாயா!''

''இல்லாமலென்ன?''

''இல்லை. நீ இல்லை.''

''இருக்குன்னா இல்லை என்போம். இல்லேன்னா இருக்கு என்போம். இப்படித்தான்—''

அவன் வெகு பொறுமையுடன, சற்றுப் பணிவுடன் கூட, ''இல்லை, அப்படியில்லை. இப்படித்தான் இருந்தோமா, இதற்கு முன்னால்?''

''இப்போ எப்படியிருக்கோம்?''

''எப்படியிருக்கோமா?''-சிரித்தான். ''இதுமாதிரி தான். நான் வருகிறேன். வந்த இடத்தில் என்னை யறியாமலே உட்கார இடம் தேடுகிறேன். நான் வந்தால் நீ சர்வமரியாதையுடன் எழுந்து நிற்கிறாய். ஏதோ பேசுகிறோம் பேசிக்கொண்டிருக்கையில் முன் வார்த்தை மறந்துவிடுகிறது பின் வார்த்தை மறந்துவிடுகிறது. வாய் வார்த்தை அப்படியே வாயில் உறைந்துபோய்க் கல்லாய்த் தொங்குகிறது. பேச்சு சிக்குகிறது. இப்படித்தான் நாமிருந்தோமா? இத்தனை வருடங்கள் கழித்து இந்தச் சொற்ப காலத்துள் நம்மிடையில் ஏன் இப்படியெல்லாம் நேர்ந்து விட்டது? கைகாட்டி மரங்கள்கூட நம்மைவிடக் கல

கலப்பாயிருக்கின்றன. தரங்கிணி, இப்போது நினைத்துக் கொள்கிறேன். இன்று மாதிரியிருக்கிறது. இன்றைக்கு ஒரு வருடத்துக்கு முன், நாம் உண்மையென்று நினைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் மனத்திலிருப்பதை மாற்றிக் கொண்டதெல்லாம் வெறும் பிதற்றலாகவும். இப்பொழுது நம்மேல் படர்ந்துவரும் பொய்மைதான் நிலையாகவும் மாறிவிடும் போலிருக்கிறது. இனி என்னால் இதைச் சகிக்க முடியாது. நான் நாளைக்குப் போய்விடப் போகிறேன் என்பதை ஒரு நினுசில் வரவேற்கிறேன். இந்தப் பொய் மையிலிருந்து விடுதலையல்லவா? திரும்பி வருகையில் எப்படியிருப்போம் என்று—''

அவளிடமிருந்து அழுகையும் சிரிப்பும் கலந்து ஏதோ ஒரு புதுச் சப்தம் உடைந்து வந்தது. சோகம் கரை கடந்த பின்னர் தோன்றும் ஏளனம் அவள் குரலில் ஒலித்தது.

''உண்மை என்றைக்கும் பிதற்றலாய்த் தானிருக்கும். அவாளவாளுக்கு உள்ளுக்கு உள்ளுக்கிருப்பதை விண்டு பார்த்தாலோ, பார்க்கப் பார்த்தாலோ பேத்தல்தான். நாம் விண்டு பார்த்ததுள், நாமே சின்னக் குழந்தையாய் உட்கார்ந்திருந்ததை நாமே கண்டோம் நமக்கு அது ஆச்சரியமாகவும் இன்பமாயுமிருந்தது இப்போ அந்த நிலையிலிருந்து மீண்டுவிட்டோம்—இல்லை மீண்டு விட்டோம்னு நினைச்சுண்டிருக்கோம். நாமே நமக்கே காரணமில்லாமல் ஏற்படுத்திக்கொண்ட அக்ரமம்தான் இது!'',

''உஷ்—தரங்கிணி, அழாதே'' அவன் கைகள் மடியிலிருந்து எழுந்து எழுந்து தவித்தன. அவள் கண்கள் அவன் கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தன. அவன் எழுந்தான்.

''எங்கே போறேள்?''

அவன் மௌனமாய் நின்றான். அவள் குரல் கேவிக் கொண்டே போயிற்று. அவன் கரங்களைப் பிடித்து இழுத்துத் தன்மேல் அணைத்துக் கொண்டாள். அவள் கைகள் அவன் தோள்களினடியில் விலா எலும்புகளை நொறுக்கிவிடுவனபோல் இறுகின. நெகிழ்ச்சியில் கரைந்து விடுவான்போல் இருந்தது அவனுக்கு.

'என்னை விட்டுட்டு எங்கே போறேள்?' மார் வெடிக்கும் அழுகையில், உருக்குழம்பிப்போன சப்தங்கள் அவளின்று புறப்பட்டுக் கொண்டிருக்கையில்—அங்கங்கள் இருளில் ஒன்றையொன்று தேடித் தவித்து அடையாளம் கண்டு கொள்கையில்—

தென்னந்தோப்புக் கப்பால், பட்டை வீறும் நிலாவில் வான் கவான் கீழ் காவேரி, குழந்தைகளின் சண்டையைப் பார்த்துப் பார்த்துக் கேட்டுக் கேட்டுப் பழுத்துப் பருமனான பாட்டி நினைத்து நினைத்துக் குலுங்கி நகைப் பதுபோல், தன் வெள்ளைச் சிரிப்பைச் சிரித்துக்கொண்டு பரவி, ஓரே அன்புப் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்குத் தெரியாத ரகசியங்களே இல்லை. கலக்கு பவளும் அவளே; கலங்குபவளும் அவளே. தெளிபவளும் அவளே; தெளிவிப்பவளும் அவளே. ஆற்றுபவளும் அவளே. ஆறுபவளும் அவளே.

அவன் வெளியிற் செல்லுமுன் வாசற்படியில் சற்று நேரம் ஏதோ சொல்ல வாயெடுத்துத் தயங்கி நின்றான்.

''தரங்கிணி!''

''என்ன?''

''ஒன்றுமில்லை—'' என்று தனக்குத்தானே தலை யாட்டிவிட்டுப் போனான்.

கிணற்றுக் கைப்பிடிச் சுவரின்மேல் தொங்கிய தாம்புக் கயிறின்மீது ஊரும் வண்டின்மேல் நிலைத்த பார்வையுடன் தரங்கிணி கொல்லைப்புறக் குறட்டில் தூண்மேல் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். பக்கத்தாத்து மாமி பக்கத்தில் பருப்பு நோன்பிக் கொண்டிருந்தாள்.

''தரங்கிணீ!''

''ஏய், ஏடி!''

அப்புறம் அவளுக்குப் பொறுக்க முடியவில்லை. எழுந்து பக்கத்தில் போய் அவள் முகத்தின் எதிரில் விரலைச் சுண்டினாள்.

''உம்—என்ன மாமி?'' தரங்கிணி திடுக்கென விழித்துக் கொண்டாள்.

''மூச்சு இருக்கா இல்லையான்னு பார்த்தேன்.''

இருவருக்கும் சேர்ந்தாற்போல் சிரிப்பு வந்துவிட்டது.

''நீ என்ன யோசனையில் இருக்கேன்னு எனக்குத் தெரியும்!''

தரங்கிணியின் கண்களில் வினாவெழுந்தது.

''ஒரு மாதமா தபால்காரன் உன் வீட்டு வாசற்படி யேறாமல் தாண்டிண்டு போறான்னுதானே!''

''ஆமாம்; நீங்கள் இன்னும் கேலி பண்ணிண் டிருங்கோ. நாங்கள் ரெண்டுபேரும் நேத்திக்குத்தான் மாலை மாத்திண்டோமோன்னோ?''

மாமி மறுபடியும் நோன்ப ஆரம்பித்தாள். ''இதுக்கெல்லாம் நேத்திக்கு இன்னிக்குன்னு உண்டாடி? நேத்தி மாதிரிதான் இன்னிக்கு. இன்னிமாதிரிதான் நாளைக்கும். எனக்கு எவ்வளவோ விஷயங்கள் நேத்து மாதிரிதான் இருக்கு. இன்னிக் காத்தாலே மொதக் கொண்டு முக்கு வீட்டிலே அமர்க்களப் படறதே, என்ன

தெரியுமோன்னோ? ரெண்டு வருஷத்துக்கு முன்னாலே நடந்த சமாசாரம் இன்னிக்குத் தொடர்ந்துண்டிருக்கு.''

''என்னவாம்?''

''நீ இல்லை அப்போது. இங்கே தருமாம்பா இருக்கா பாரு, ரெண்டு வருஷத்துக்கு முன்னாலே திடீர்னு அவளுடைய கழுத்துச் சங்கிலியைக் காணோம். எங்கே தொலைச்சுட்டதோ, தெரியல்லே. அவள் ஆம்படையான் எவ்வளவு மூர்க்கன்னு ஊர் தெரிஞ்ச விஷயம். நெய் முட்டையைக் காக்கா கொத்திண்டு போச்சுன்னா, எந்தக் காக்கா கொத்திண்டு போச்சு, ஊரிலேருக்கற காக்காயெல்லாம் என்னெதிரே கொண்டுவந்து நிறுத்து என்பான். அதுவும் கழுத்துச் சங்கிலியைக் காணோம்னா, உசிரோட கொன்னுப்பிடுவான். தொலைச்சுப்பிடுவான் வெச்சுக்கோ. அவன் மூர்க்கம் எவ்வளவு ப்ரசித்தமோ, அவ்வளவு ப்ரசித்தம் தருமியின் அசடும். ஜோடி எவ்வளவு வகையா மாட்டிண்டிருக்கு, பார்!

''தருமி 'டக்'குன்னு வேலைக்காரக் குட்டி மேலே பழி வைச்சுட்டாள். எண்ணெய்ப் பிசுக்கெடுக்க, சோப்புத் தண்ணில் டப்பாவில் ஊறப்போட்டு வெச்சிருந்தேன். கிணத்தடியிலே இருந்தது. அடுப்புச் சாதத்தை கிளறிட்டு வரத்துக்குள்ளே காணோம்'னு ஒரேயடியா சாதிக்கறா. என்ன பண்றது? நாங்களும் அப்போ அவளை நம்பினோம்னுதான் வெச்சுக்கோ. அசடுகளுக்கெல்லாம் ஒரு தனிச் சமத்து உண்டு, தெரியுமோன்னோ? நிஜமோ பொய்யோ பிறத்தியார் தங்களை நம்புபம்டி, கடைசி வரையில் சொன்னதையே சொல்லிண்டிருக்கும். அந்தப் பெண் மானி. நல்லபடி வாழ்ந்து நசிச்சுப்போன குடும்பம் போலிருக்கு. இங்கே வேறே திட்டி மிரட்டியிருக்கா. வீட்டுக்குப் போனால் அங்கேயும் ஆம்படையான் மானம் போச்சேன்னு—அவள் திருடின்னு நினைச்சுண்டு—

அடிச்சிப் புடைச்சிருக்கான். அன்னி ராத்திரி சீமெணைணயை மேலே ஊத்திக் கொளுத்திண்டுடுத்து!"

தரங்கிணி செவிகளைப் பொத்திக் கொண்டாள்.

மாமி சுவரஸ்யமாய் வாய் எச்சிலை உள்ளுக்கு உறிஞ்சிக் கொண்டாள். "அது அப்படிப் போச்சா? அதுக்கு அப்புறம் தருமியின் ஆம்படையானும் செத்துப் போயாச்சு. தருமியும் கோலம் பண்ணிண்டு வெள்ளையும் உடுத்திண்டாச்சு. இன்னிக்குக் கார்த்தாலே ஆத்துக்குக் குளிக்கப் போனாள் போன இடத்துலே தோய்க்கிற கல் வாட்டமாயில்லைன்னு, அதை நகத்திப் புரட்டினாக்கே அதன் அடியிலேருந்து நீளமா பாசி பிடிச்ச கடிகாரச் சங்கலியை எடுக்கறா! இந்தத் தண்ணிக்கு முதல் கொண்டிருக்கிற திருட்டுத்தனத்தைப் பாரேன்! தனியா யிருந்தால் ஒருவேளை அதை அமுக்கியிருப்பாளோ என்னவோ. கூடவே பக்கத்தாத்துப் பொண்ணும் போயிருக்கு. அவ்வளவுதான். ஊரெல்லாம் பத்திண்டு டுத்து. அநியாயமாய் ஒரு பெண்மேலே அபவாதம் சொன்னியே சொன்னியேன்னு தெருவிலே போறவா எல்லாம் மெனக்கெட்டு அவள் வீட்டுள்ளே புகுந்து புகுந்து மூஞ்சியிலே துப்பிட்டுப் போறாள்.

செத்துப்போன அந்தப் பெண்ணின் ஆம்படையான் வந்தான். அவன் ஒண்ணும் சொல்லலே. 'ஏ பாப்பாத்தி என் பெண்சாதியைக் கொன்னவளே நீதான்! இப்பொ நீ அந்தச் சங்கிலியைப் போட்டுக்கிட்டு நிக்கறதைப் பார்க்கணும்' என்கிறான், போறுண்டியம்மா, போறும், நம்ப மானமே போறது—என்னடி?"

தரங்கிணிக்குத் திடீரெனக் கண்கள் சொருகின. வயிற்றைக் குமட்டிற்று. குடுகுடுவென்று குறட்டோரம் ஓடினாள்.

"என்னடி, உடம்பு சரியில்லையா?"

தரங்கிணி திகைப்புடன் தன் குமட்டலின் விளைவை பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் நெற்றியில் வேர்வை துளித்து நின்றது; மாமி பக்கத்தில் வந்து கையைப் பிடித்தாள். திடீரென்று மாமி முகத்தில் மேகங்கள் விலகி சிரிப்பின் ஒளி முகம் முழுவதும் சிதறிற்று. தரங்கிணியின் முகத்தை இருகைகளாலும் வழித்து நெற்றியில் நெறித்துக் கொண்டாள். சொடக்குகள் 'சொடசொட'வென உதிர்ந்தன. அவசர அவசரமாய் சமையலறைக்குள் நுழைந்து சர்க்கரை டப்பாவை எடுத்துவந்து தரங்கிணியின் கையில் கொடுத்துத் தன் கையை நீட்டினாள். அவள் முகத்தில் குறும்பு மிளிர்ந்தது.

அவள் செய்கைகள் மண்டைக்குள் தோய்கையில் தரங்கிணியின் கண்கள் அகல விரிந்தன. தேகமாத்யந்தம் 'விர்'ரென்றது. அவளுள் நேர்ந்த உள் உதயத்தின் தகதகப்பில் அவள் கண்கள் தாழ்ந்து, உள்ளுக்கிழுத்த திரிபோல் வெளிப் பார்வை மங்கியது. தூக்கத்தில் நடப்பவளாய் விட்டாள். மாமியின் பக்கமிருந்து திரும்பிய கால்கள் மெதுவாய்க் குறட்டைக் கடந்து, கொல்லை ரேழியைக் கடந்து—

"தரங்கிணி!"

முற்றத்தைக் கடந்து—

"எங்கேடீ போறே? ஏடி தரங்கிணி!"

முற்றத்திற்கு அப்பால் அகன்ற தாழ்வாரத்தைக் கடந்து—

"சரிம்மா; நான் இப்படியே ஆத்துக்குப் போறேன் கொல்லைக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கோ."

அவளுக்குக் காது கேட்கவில்லை. அவள் தன் வசத்திலில்லை. அவள் கால்கள் அவளை வாசல் அறைக்குள் தாங்கிச் சென்று மேஜைக்கெதிரே நாற்காலி

யில் அமர்த்தின. கைகள் மேஜைமேல் இருந்த அட்டையையும் காகித அடுக்கையும் பக்கத்தில் இழுத்துக் கொண்டன. மசியில் பேனாவைத் தோய்த்து, கை தானே எழுத ஆரம்பித்தது.

"—உங்களுக்கு இந்தச் சமயத்தில் என்ன எழுதறதுன்னு தெரியல்லே, உங்களுக்கு நான் இப்போ சொல்லணும்னு ஆசைப்படற விஷயங்கள் எங்கிட்டேருந்து எழும்பற வேகத்திலேயே என்னை அமுக்கறது, நான்..."

"போஸ்ட்!"

அந்தக் கூவல் அவளைக் கட்டியிருந்த மந்திரத்தை அவிழ்த்தது. தரங்கிணி எழுந்து கவரைக் கையில் வாங்கிக் கொண்டு கொல்லைப்புறம் சென்றாள். கதவுகள் எல்லாம் திறந்தன திறந்தபடியிருந்தன.

தென்னந்தோப்பைத் தாண்டி ஆற்றங்கரைக்குச் சென்றாள். ஜலத்துக்கு எதிரில் மணலில் உட்கார்ந்து கொண்டு சாவகாசமாய் ஓரங்களில் மஞ்சள் தடவிய கவரை முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்துவிட்டு உடைத்தாள். பூவிதழ்கள் இரண்டும் அட்சதையும் மடியில் சிதறின. தரங்கிணி படித்துக்கொண்டே போனாள். விழிகள் முன்னும் பின்னுமாய் வரிகள்மேல் ஓடி அவைகளின் அர்த்தத்தைப் பருகுகையில் அவளையறியாமலே கைகளிலிருந்து கடிதம் நழுவி மடியில் விழுந்தது. அவள் அதை எடுக்க முயலவில்லை. ஜலத்தைப் பார்த்தவண்ணம் அப்படியே சிலையாய் உட்கார்ந்திருந்தாள்.

எத்தனை நாழியோ?...தோய்க்கும் கல்லருகில் சிற்றலைகள் தத்தம் தோள்களை இடித்துச் சிரித்துக் கொண்டிருந்தன.

வானில் தங்க ரதம் ஒன்று உருவாகி எழும்பியது. கொத்துக் கொத்தாய்ச் சடைபிடித்த பிடரி மயிர் அலை மோத, தலைகள் உதறிக்கொண்டு வெள்ளைக் குதிரைகள் தாமே தோன்றி ரதத்துடன் தம்மைப் பூட்டிக்கொண்டன. ரதம் நகர்ந்தது. சக்கரங்களினடியில் அகிற்புழுதி தோகை தோகையாய் எழும்பிற்று.

ஆனால் தரங்கிணி இன்னும் நிலை அசையாது அப்படியேதான் உட்கார்ந்திருந்தாள். அர்ச்சனைப் புஷ்பங்கள்போல் அவள் கண்களிலிருந்து கண்ணீர் உதிர்ந்தவண்ணமிருந்தது.

# ஜமதக்னி

நினைவு திரும்பியபோது அது தூக்கத்திலிருந்து விழிப்பா, மூர்ச்சையினின்று மீண்ட தெளிவா நிச்சயமாய்ப் புரியவில்லை. மரங்களின் இலைகளிலிருந்து இருண்ட ரகசியங்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தன. நிலவின் செங்கோளம் வானை உதைத்து எழும்பிக் கொண்டிருந்தது.

மாஞ்சி கண்களைத் தேய்த்துக்கொண்டாள். இமையின் உள்புறம் மின்னல்கள் வெட்டின. அவைகளின் 'பளீ'ரில் பாச்சு குதித்து விளையாடினான். அரைஞாண் தவிர உடலில் வேறேதுமில்லை. விண்ணெனத் தெறித்த வயிறும், சோழிகளைக் குலுக்கினாற் போன்ற அவன் சிரிப்பும் அவள் மார்மேல் மோதின. அவன் கண்களை மறக்கவே முடியாது. ஒன்றில் ஒரே நட்சத்திர ஜொலிப்பு; மற்றதில் சற்று பஞ்சடைந்தாற்போன்று மங்கிய ஓட்டம். பிறப்பின் வார்ப்பே அப்படி.

மாஞ்சியையும் அறியாமல் தொண்டை கேவிற்று. அவள் சப்தமே அவளுக்கு அச்சமாயிருந்தது. குழந்தைகள் முழிச்சுண்டுடுத்தோ? எழுந்து விளக்கைத் தூண்டினாள். இல்லை. மீனாவும் நீனாவும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். நீனாவின் உதட்டோரத்தில் 'சொள்' வழிந்து காய்ந்தது. மீனா திறந்த வாயுடன் லேசாய்க் குறட்டை விட்டுக்கொண்டிருந்தாள்.

மாஞ்சி நீனாவின் பாவாடையைச் சரிப்படுத்தி, மீனாவின் வாயை மூடியிருத்தினாள். "எத்தனை தடவை தான் சொல்றது மீனா, வாயைத் திறந்துண்டு தூங்கா தேடின்னு?" ஆனால் தூங்கறவாளுக்குத் தூங்கறப்போ எப்படித் தூங்கறோம்னு தெரியும்?

எதிர்ப் படுக்கைப்பக்கம் அவள் கண்கள் சென்றன. அவள் கணவனைக் காணோம். படுக்கையை விட்டெழுந்து ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தாள். மொட்டை மாடியில் அவன் உருவம் தெரிந்தது.

"இத்தனை நாழிக்குமேலே என்ன பண்றேள்?"

பின்னால் அவள் குரல் திடீரெனக் கேட்டதும், சற்றுத் திடுக்கிட்டாற்போல் அவன் அவள் பக்கம் திரும்பினான்.

"ஓ நீயா?"

"பின்னே யாருன்னு நினைச்சேள்?"

மாஞ்சி உடம்பை ஒடுக்கிக் கொண்டாள்.

"உங்களுக்குப் பனி அடிக்கல்லே? சட்டைகூடப் போட்டுக்காமல் இப்படி நிக்கறேளே!"

"மாஞ்சி, இங்கே வா."

அவள் கணவனின் விரிந்த கைகளின் வீச்சிற்குள் அடையும் போதெல்லாம் மாஞ்சிக்கு ஓர் உணர்ச்சி ஏற்படும்—ஆடு மாடுகள் மேய்வதற்கென ஏதோ வேலி போட்டுத் தடுத்த பரந்த அடைப்பிற்குள் நுழைவது போல். இத்தனைக்கும் ஜமதக்னி அவ்வளவு உயரம் என்றோ ஒற்றைநாடியென்றோ சொல்வதற்கில்லை. ஆயினும், இடுப்பிலிருந்து விசிறி எழுந்து விரிந்த மார்பிலிருந்து கைகள் முழங்கால் வரை நீண்டு தொங்கின. அந்த மார்விரிவும் கைவீச்சினாலேயே, நடையுடை பாவனைகளிலும், சில சமயங்களில், அவன் கால்களைச் சற்று அகல விரித்துப் பூமியில் அழுந்த ஊன்றி நிற்கும் தோற்றத்தில்,

அவன் உடல் முழுதுமே ஒரு வேகம் சுழன்று ததும்புவது போல் ப்ரமாதமான உணர்ச்சியைப் பார்ப்பவர் மனத்தில் தருவித்தது.

கன்னத்தை லேசாய் அவன் மார்மேல் தேய்த்துக் கொண்டாள்.

"உங்களுக்குத் தூக்கம் வரல்லையா?"

"இல்லை. வா என்றால் வருமா?"

"தோ—! அதென்ன?"

அவள் கைகாட்டும் வழி, எதிர் வீடுகளின் மொட்டைமாடிகளுக்கு அப்பால், தோப்புகளினிடையில் ஒரு சுடர் ஆடிற்று.

"மாஞ்சி, உள்ளே வா."

இருளில் அவன் முகத்தை அவள் பார்க்க முடிய வில்லை.

"என்னது அது, இத்தனை நாழிக்குமேல்? எந்த விளக்கு அப்படி எரியறது?"

"மாஞ்சி, உள்ளே வா."

"ஏன், சொல்ல மாட்டேளா?!"

அவன் குரல் இறுகிற்று.

"மாஞ்சி, அதுதான் பாச்சு."

"அடே என் கண்ணே, பாச்சு!" மாஞ்சி நெருப்பை மிதித்தவளாய் விட்டாள்.

"நீயாடா எரியறே!"

"மாஞ்சீ!"

மீனாவும் நீனாவும் மாஞ்சியின் கதறலில் விழித்துக் கொண்டு ஒன்றும் புரியாமல் திகிலில் தாங்களும்கூடச்

சேர்ந்து ஒலமிட ஆரம்பித்துவிட்டனர். கீழ்க்கட்டி லிருந்து தூக்கம் கலைந்த குரல்களின் முனகல்கள் எழுந்தன.

மாஞ்சீ! பார் உன் வேலையை!—''

மாஞ்சி வாயுள் முன்றானையைத் திணித்துக்கொண்டு குழந்தைகளைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

''பாச்சு எங்கேம்மா? பாச்சு ஏம்மா என்கிட்டே தாச்சுக்கல்லே? பாச்சுவை எங்கேம்மா தூக்கிண்டு போயிட்டா?''

''நீனா தூங்கு!—'' மீனா தன் தங்கை வயிற்றைத் தட்டினாள்.

''பாச்சு ஓம்பாச்சி ஆயிட்டான்.''

மீனா நீனாவைவிடக் கொஞ்சம் பெரியவள். ஆதலால் நீனாவைவிட, சமயம், போது, விஷயம் அறிந்தவள். நீனாவுக்குப் பதிலும் சொல்ல அறிந்தவள். அத்துடன் மீனா கொஞ்சம் 'அத்துரு'.

''பாச்சுவை இனிமே பார்க்கவே முடியாதா?''

''ஓ பார்க்கலாமே! இன்னும் பத்து நாளைக்கப்பறம் ஆத்துலே குத்துவிளக்கேத்துவாளே, அதுலே அவனைப் பார்க்கலாம். இப்போ நம்ம தூங்கலாம்—''

''மாஞ்சி பார்த்தையா, இதுகள் எவ்வளவு சுருக்கப் புது நிலைமைகளுக்குத் தங்களைச் சரிப்படுத்திக்கொண்டு விடறதுகள்! அதுகளின் பேச்சிலும் எவ்வளவு உண்மை இருக்கிறது! எனக்கும் மீனா சொன்னது போல்தான் இன்று காலை தோன்றிற்று. என்னையும் உன்னையும், மற்றும் காரியத்தை ஒப்பேற்ற வந்தவர்களையும் காரியத்தில் இயங்குபவர்களாகத் தனியாகப் பிரிந்துப் பார்க்க முடிந்தது. நான் சொல்வது உனக்குப் புரிகிறதோ? இதோ

பாச்சுவின் உயிர் பிரிந்துபோய்விட்டது. அவனை உள்ளிருந்து என்னிரு கைகளிலும் ஏந்தி வந்து கூடத்தில் கிடத்துகிறேன். நீயும் மற்றவர்களும் என் பின்னாலேயே வந்து பாச்சுவின்மேல் விழுந்து ஏதேதோ சொல்லி அழுகிறீர்கள். வெளியிலிருந்து சேதி கேட்டு யார் யாரோ ஓடி உள்ளே வந்து அழுகிறார்கள். நான் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். அவனைப் பெற்றவன் நான். மனம் பாசத்தில் குழம்புகிறது. அப்படிக் குழம்பிக்கொண்டிருக்கையிலேயே, என்னென்னவோ சந்தேகங்கள். இங்கே இப்படி இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நிற்பது நானா? இதோ கூடத்தில் பயனற்று விழுந்து கிடப்பது என் வித்தா? சுற்றிச் சுற்றி வருவோரும் அழுவோரும் அவரவர் அவரவர் தாமா? மாஞ்சி மாஞ்சிதானா? பாச்சு பாச்சுவேவா! இப்போதான் பாச்சு இல்லையே! பாச்சு இல்லையானால் இதுவரை பாச்சுவாயிருந்தது யார்?

பாச்சு மறுபடியும் என்னுள்ளேயே புகுந்துகொண்டானா? மாஞ்சி, (ஸத்தியமாய் பாச்சுவின் சிரிப்பை என்னுள் நான் கேட்டேன்.)

குளிருக்கடக்கமாய்க் கம்பளியை இழுத்துக் கழுத்து வரை போர்த்துக்கொண்டாற்போல் பாச்சு ஆனந்தமாய் ஜ்வாலையில் நித்திரை செய்கிறான். துக்கம் பீறிடுகிறது.

எட்டிப் பார்ப்பது பாச்சுவின் முகமா, என் முகமா? நெருப்பைக் கொட்டுகிறேன். யார்மேல்? என்மேலா? நெருப்புப் பற்றிக் கொள்கிறது. எரிவது யார் பாச்சுவா நானா?

''போறும், போறும் போறுமே—!'' மாஞ்சி செவிகளைப் பொத்திக்கொண்டு கதறினாள்.

''பாச்சுதான் ஒரு தினுசில்—ஆனால் இன்னொரு தினுசில், உண்மையான முறையில், பாச்சு இல்லை.

நானா? இல்லை. ஆனால் உள்ளுக்கும் உள்ளுண்மையான முறையில் நான்தான் அப்படி எரிகிறேன். நான் மாத்திரம் இல்லை. வித்திலிருந்து வித்தாய் இறங்கிவந்து எனக்கு முன்னால் இதேமாதிரி தோன்றி மறைந்த எத்தனையோ நான்கள் திகுதிகுவென்று எரிகின்றன. எத்தனையோ நான்கள் அடங்கிய ஒரே நான் எரிகிறது.''

அவன் இரு கைகளிலும் முகத்தை புதைத்துக்கொண்டு தலையை உதறினான்,

''தான் உண்டாக்கிய நெருப்பில் நான் திருப்பித் திருப்பித் தன்னையே காய்ச்சிக்கொள்கிறது. காயக் காய விடுபடும் அழுக்குகள்தாம் நாம். பாச்சு, ஜமதக்னி—நான்—மீனா—நீனா''

''ஹா—!'' மாஞ்சி பயங்கரத்துடன் குழந்தைகளை அவன் பார்வையிலிருந்து மறைத்து அணைத்துக் கொண்டாள்.

''நீயும்தான்—''

''நீங்கள் என்ன சொல்றேள்? என்ன சாபமிடறேள்? அப்படிப் பார்க்காதேங்கோ—''

''மாஞ்சி, பார்! இன்றில்லாவிடில், என்றேனும் எத்தனையோ லட்ச நாட்கள் கழித்தாவது ஒருநாள் வரப் போகிறது.''

அவன் அவளையே பார்க்கவில்லை.

''கணப்புச் சட்டியின் நடு மையத்திலிருந்து கடைசியாய் எடுக்கும் தங்க உருண்டைபோல், இந்த மஹா சூளையிலிருந்து ஒரு லக்ஷிய புருஷன் வெளிப்படப் போகிறான். அந்த ஜோதி ஸ்வரூபம் உருவான பின் இந்தச் சூளைக்கு வேலையில்லை. அப்புறம் காலம்கூட இல்லை. அநித்யமான வாழ்க்கையை நித்யப்படுத்திய

பிறகு காலம் எதற்கு? இந்தச் சிருஷ்டியின் லட்சிய புத்திரனே சிருஷ்டியின் அதிபதியாகவுமிருக்கப் போகிறான்—ஓ!'' திடீரென அவன் தன்னையிழந்தான். விரலைச் சொடுக்கினான். ''எனக்கே இப்பொழுது நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்று நிச்சயமாய்த் தெரியவில்லை. ஆனால்—ஆனால்—'' கையை வீசினான். வார்த்தைகள் ஒன்றன்பின் ஒன்று புரண்டுவந்து தடுக்கின.

''ஆனால், புரிந்ததும் புரியாததுமாய் வலைக்குப் பின்னால் உருவம் மங்கலாய்த் தெரிகிறது. அந்த நிழல் சில சமயங்களில் மேலே தட்டுகையில் அந்தத் தகதகப்பே தாங்க முடியவில்லை—''

''அந்த நாள் எப்போ வரும்?'' அந்த நாள் அடுத்த நாளே விடியக் காத்திருப்பதுபோல் மாஞ்சி கேட்டாள். அந்தக் கணம் தன் துயரத்தைக்கூட மறந்தாள்.

அவன் புன்னகை புரிந்தான்.

''மாஞ்சி, சில சமயங்களில் நீ குழந்தைதான்! என்று என்றா கேட்கிறாய்? ஒருநாள்—அன்று; ஒரு குழந்தை. என்றென்று சொல்ல? யார், எப்படி என்று சொல்வது? என்றோ? ஆனால் ஒவ்வொரு பிறப்பும், இருப்பும், இறப்பும் அன்றைத்தான் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

''நீங்கள் என்ன சொல்றேள்?''—மாஞ்சிக்குத் தூக்கக் கலக்கம் ஆரம்பித்துவிட்டது.

''நாம் இறக்கவில்லை ஏனெனில் நம்மால் இறக்க முடியாது. உயிர் பிறந்தது எப்படியோ ஏனோ, பிறந்து விட்டது. பிறந்த பின் அதனால் இறக்க முடியவில்லை. இருந்துதான் ஆக வேண்டும். ஆனால் சரியாய் இருக்கும் முறையைத் தேடித் தேடி, இருந்து இருந்து, மாற்றி மாற்றி, மாறி மாறித் தவித்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் நம் தவிப்பு.''

அவன் முகம் அனல் குழம்பிற்று. ''இதுதான்—'' திடீரென அவள் கையைப் பிடித்து மூர்க்கமாகத் தன் பக்கம் இழுத்தான். கண்கள் திரிகள்போல் எரிந்தன.

''ஏன், நீ கேட்ட நாள் நாளையாகவே இருக்கலாம்; இப்போது உன் வயிற்றில் உருவாகிவரும் உயிரே அந்தக் குழந்தையாயிருக்கலாம்.''

அவள் கூந்தலைப் பிடித்து இழுத்துத் தலையை நிமிர்த்தினான்.

''நாம் நம்மையறியாமலே நம்முடைய உண்மையான தன்மையை அறிய முயன்று கொண்டிருக்கிறோம். அந்தத் தன்மையை நம் பிள்ளையின் மூலம்தான் நாம் அறிய முடியும். தகப்பன்—பிள்ளை, தாய்—பிள்ளை, மறுபடியும் பிள்ளை, தகப்பன்; சங்கிலியின் ஒவ்வொரு கொக்கிதான் வித்திலிருந்த மரத்திலிருந்தொரு வித்து. ஆனால் வித்தெல்லாம் வித்தல்ல; ஒருநாள் முத்தானதொரு வித்து. ஒரே முத்து. அதுதான் அந்த நாள். மற்றதெல்லாம் அம்மகனுக்குக் காத்திருக்கும் வேளைதான்.''

மாஞ்சிக்கு மண்டை கிறுகிறுத்தது. அவன் மடியில் தலைகவிழ்ந்தாள். அவன் விரல்கள் அவள் கூந்தலின் வங்கிகளில் வளைந்து நெளிந்தன விளக்கின் சுடர் குன்றி நீலமாகி அவர்களை இருள் சூழ்ந்தது.

* * *

நீனா ஓடிவந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டாள்.

''அம்மா, அம்மா! அப்பா வந்தூத்தாடீ...''

பின்னாலேயே மீனாவும் வந்தாள்.

''அம்மா, ஆமாம்மா, அப்பா!''

ஜமதக்னி நீனாவின் காதைத் திருகினான்.

"ஏது, இன்றைக்குக் குழந்தைகளுக்கு அப்பாமேல் இவ்வளவு பிரியம்!"

"எல்லாம் காரணமாத்தான்—"

மாஞ்சி சிரித்திக்கொண்டே, கையில் தட்டுடன் சமையலறையிலிருந்து வந்தாள். அவளுக்குமேல் மூச்சு வாங்கிற்று. நான்கு மாதங்களுக்கு முன்னிருந்ததைவிட, இடுப்பு இப்பொழுது நன்கு அகன்றிருந்தது.

"இந்தாங்கோ இன்னி டிபன்!"

கழற்றிக்கொண்டிருக்கும் சொக்காய்க்குள்ளிருந்து அவன் குரல் 'என்னது?' என்றது.

"கடலையுருண்டை. இன்னிக்கென்னவோ வாய்க்கு இது வேணும் போலிருந்தது."

"கோலிக் கணக்கில் ஒரே அச்சில் இப்படி உருட்டுவதற்கு எவ்வளவு சாமர்த்தியம் வேணும்!"

"ஆமாம், குழந்தைகளுக்கு இதுக்குமேலே கொடுத்தால் உடம்புக்காகுமா? இல்லை, பெரிசாயிருக்கேன்னு புட்டுக் கொடுத்தா வாங்கிக்குமா நம்ம குட்டிகள்? என்ன அப்படிப் பார்த்துண்டே நிக்கறேள்?"

அவள் குரல் அவன் காதில் விழவில்லை. அவன் 'அக்கா'வைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். பெரிது பண்ணிய புகைப்படத்திலிருந்து அக்கா சிரித்துக் கொண்டிருந்தாள். மாஞ்சி இந்த வீட்டில் புகுந்த நாளிலிருந்து அந்தப் பார்வை, கூடத்திலிருந்தே அவள் நடமாட்டங்களையும் செய்கைகளையும் ஊன்றிக் கவனிப்பதுபோல் அவளுக்குத் தோன்றும். பெரிய அழகில்லை. ஆனால் முகத்தில் நல்ல களை. பீறிடும் சிரிப்பை இழுத்துக் கட்டிய புன்னகையில், முக முழுதும் உள்ளொளி விட்டுப் பிரகாசித்தது.

மாஞ்சி அக்காவைப் பார்த்ததேயில்லை. ஆனால் இப்போது அவளுக்கு ஏனோ நினைவு வந்தது. கணவனும் மனைவியுமாய்க் கையைப் பிடித்துக்கொண்டு சத்திரத்திலிருந்து வீட்டுள் நுழைந்ததும் நேரே ஜமதக்னி இந்தப் படத்தண்டை வந்து நமஸ்கரித்த பின்தான் தாயை வணங்கினான். அங்க அசைவில் அவள் பக்கம் அவன் முகம் தற்செயலாய்த் திரும்புகையில் அவன் கண்களில் ஸ்படிகம் வழிவது கண்டாள். தானும் படத்திற்கு விழுந்து கும்பிட்டு எழுந்திருக்கையில், படத்திலிருந்து அந்த அன்பு கனிந்த நோக்கு அவள் மேலும் குனிகையில், நெஞ்சை என்னவோ செய்தது. அது ஒரு நிமிஷந்தான். ஆனால் அதே பார்வைதான் அன்றிலிருந்து இன்னமும். மீனா—நீனா—பாச்சு—இவர்கள் எல்லோருக்கும் முன்னால் ஒண்ணு—அன்றிலிருந்து இன்னமும்.

ஜமதக்னி தட்டை எட்டி நகர்த்தினான். அவன் முகம் மாறிவிட்டது.

"அப்பா, நேக்கு அப்பா நேக்கு?"

"இந்தா எடுத்துக்கொள்ளுங்கள்—"

மாஞ்சிக்கு ஏனோ பயமாயிருந்தது, தான் ஏதோ தவறு இழைத்துவிட்டாற்போல்.

"உங்களுக்குப் பிடிக்காதா?"

அவன் பதில் பேசவில்லை. கைகளை மடியின்மேல் நின்றாள். ஏனோ அவளுக்குப் பயமாயிருந்தது.

தன்மேல் கவிந்த படலங்களைச் சட்டெனக் கலைத்துக் கொண்டு ஜமதக்னி தலை நிமிர்ந்தான். அவளைப் பார்த்து சிறுநகை புரிந்தான்.

"ஏன் நிற்கிறாய் மாஞ்சி? உட்கார்"

மாஞ்சி நெற்றிப் பொட்டைத் தடவிக்கொண்டாள்.

முற்றத்தில் இருள் மடிமடியாய் விழுந்துகொண் டிருந்தது. சுவர்களில் விதவிதமாய்த் தோய்ந்த கறைகள் குழைய ஆரம்பித்துவிட்டன. தூணின் உச்சி பீடத்தில் கட்டிய கூட்டில் தாய்க்குருவியும் குஞ்சுகளும் 'கீச்கீச்.'

ஜமதக்னி எழுந்து படத்தின்கீழ் நின்ற குத்துவிளக்கை ஏற்றினான். அமுக்கி வைத்திருந்த உயிருடன் சுடர் திரியிலிருந்து குதித்தெழுந்தது. மாஞ்சிக்கு நெஞ்சு துள்ளிற்று. நெஞ்சைத் தொட்டுக்கொண்டாள். படத்தில் கண்கள் சிமிட்டிப் பளீரிட்டன.

அவன் அசைவற்று நின்றான். ஓடும் பாம்பை நெஞ்சில் அழுத்தினாற்போல் அக்கணம் நில்லென அந்தரத்தில் நின்றது ஒரு கணம்தான். ஸ்தம்பித்த நேரம் மறுபடியும் தான் இழந்த வேகத்தைப் பன்மடங்கு பெருக்கிக்கொண்டு வெள்ளமாய் இறங்கிற்று. மாஞ்சிக்கு மூச்சுத் திணறிற்று. மறுபடியும் நினைவு வருகையில் அவன் பேசிக்கொண்டிருந்தான்,

''—ததும் எனக்காக கடலையுருண்டை பண்ணினது எனக்குத் நினைவு வந்துவிட்டது. அதிலிருந்து இன்னமும் எது எதுவோ எங்கெங்கேயோ...''

அவனுடைய விசன மூச்சு, அரவுபோல் அவள்மேல் விழுந்து சுருண்டு கழன்று கொண்டது.

''இது ரொம்ப நாளைக்கு முன்னால்; எனக்கு ஒண்ணரை வயசிருக்குமாம். அக்காவுக்கு அப்போது பதி னொன்று தாண்டிப் பன்னிரண்டு. இடையில் ஏதேதோ பிறந்ததாம். ஒன்றும் தங்கவில்லை. நாங்கள்தான் மிச்சம்.

''அம்மா வீட்டுக்கு விலக்கு. வாசலிலிருந்தபடி பதம் சொல்லிக்கொடுத்து என் சகோதரி சமைத்துக்கொண் டிருந்தாள். அக்கா அப்பொழுது முதற்கொண்டே ரொம்ப கெட்டிக்காரியாம். கண் பட்டது கை செய்யும்.

''அன்றைக்கு என்னவோ தானே கடலையுருண்டை பிடிக்க வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டாள். அம்மா 'வேண்டாண்டி' என்று வாசலிலிருந்த வண்ணம் கத்தக் கத்தக் கும்மட்டியில் வெல்லப்பாகு வைத்துவிட்டாள். அது சரியாக வருகிறதா என்று பார்ப்பதற்காகக் கொஞ்சம் கரண்டியில் எடுத்து ஜலத்தில் நனைத்து நூல் பார்த்து விட்டு என் நாக்கில் கைப்பாகைக் கொஞ்சம் இழுத்துவிட்டாள். நான் குழந்தை அவள் அந்தப்பக்கம் பார்த்துக் கொண்டிருக்கையில் நானே சப்பையில் நகர்ந்து வந்து காயும் பாகில் கையை வைத்துவிட்டேன்.

'''க்றீச்'சென நான் போட்ட அலறலில் அக்கா கை வேலையை அப்படியே கீழே போட்டுவிட்டு ஓடிவந்து என் கையைப் பிடித்து இழுத்த வேகத்தில் இசைகேடாய் வாணாய் சாய்ந்து அத்தனை பாகும் அவள் கைமேல் கொட்டிவிட்டது.''

மாஞ்சி கன்னங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

சமையலறையில் கோடியடுப்பில் கொள்ளிக்கட்டை சரிந்தது. தீ நாக்குகள் துள்ளி விளையாடின.

ஜமதக்னி தீக்குச்சியின் கட்டையால் விளக்குச் சுடரைத் தூண்டினான்.

''அக்காவுக்குக் கை சொஸ்தமான பிறகு கைக்கட்டை அவிழ்த்தபோது கை பார்க்கச் சகிக்கவில்லை. அதைப் பார்க்கும்போதெல்லாம்— அதுவும் அந்த முகத்தைப் பார்த்துவிட்டுக் கைமேல் கண்ணிறங்கும் ஒவ்வொரு தடவையும் எங்களுக்கு வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டும்.

எனக்கு ஒன்று என்றுமே மறக்காது.

எனக்கு வயது ஐந்து அல்லது ஆறு இருக்கும். அக்கா ஜன்னலண்டை உள்ளங்கையில் மோவாயோடு ஏதோ யோசனை பண்ணிக்கொண்டிருந்தாள் அவள் உட்கார்ந் திருந்த விசுப் பலகை கொஞ்சம் உயரம். அதன்மேல் நான் ஏற முடியாமல் ஏறி, அவள் மடியில் உட்கார்ந்துகொண்டு அவள் கைத் தழும்பைத் தொட்டுத் தடவிப் பார்த்து "என்ன அக்காது?" என்றேன்.

அவள் பதில் பேசாமல் கண்ணைக் கொட்டாமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்னக்கா என்னையே இப்படிப் பாக்கறே? ஏங்க்கா அழறே?" கன்னத்தில் வழிந்த கண்ணீரை அப்படியே ஒரு விரலால் வழித்து விசிறி எறிந்தாள். 'ஒண்ணுமில்லேடா கண்ணு!' என்று என்னை அப்படியே இறுக்கிக் கட்டிக்கொண்டாள். 'அது நீடா!'

"எது, இதுவா?" கைத் தழும்பை மறுபடியும் நான் வியப்புடன் தடவினேன்.

அவள் பதில் பேசவில்லை. அவள் கன்னங்கள் குழிந்து பளபளத்தன. என் முகத்தை இறுகப் பிடித்துக்கொண்டு இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டாள். இப் போதும் என் எலும்பு உருகுகிறது.

அவள் வெளிச்சம் என்மேல் ஆடியவண்ணம் இருந்தது. அவள் பார்வையை வாசற்படியிலிருந்து பள்ளிக்கூடம் வரை தாங்கிச் செல்வேன். வீட்டுக்குத் திரும் புகையிலும் அந்தப் பார்வை எனக்காகக் காத்திருக்கும். அவள்கூட இல்லை. அவள் பார்வை. நடுக்கூடத்தில் ஏற்றி வைத்த விளக்குமாதிரி, தான் இருந்த இடத்தி லிருந்து கொண்டே தன்னைச் சுற்றிலும் தன்னொளியை வீசிக்கொண்டிருப்பாள்.

இப்பொழுது தெரிகிறது. அவள் தன்னையே என்மேல் கொட்டிக்கொண்டு விட்டாள். அவளே அவளை, அன்று பற்றிய தீ உள்ளே பிடித்துக்கொண்டு எரிகையில் வேறு மாதிரியாய்த்தான் ஆகிவிட்டாள். பேச்சிலும் செய்கைகளிலும் ஏதோ ஒரு அர்ப்பணித்த தன்மை, ஒரு விரக்தி. அதனால் அவளுக்கு எங்களிடமில்லாத ஒரு முழுமை. எப்பவும் ஒரு சுறுசுறுப்பு, ஒரு கலகலப்பு. சிரித்துக் கொண்டு முகமலர்ச்சியாயிருப்பாள. ஆனால் அந்தச் சிரிப்பை அவள் சிரிக்கும்போதே அதைத் தன்னிடம் தனக்கென்று வைத்துக்கொள்ளாது எல்லோருக்கும் உடனே பங்காய் அள்ளிக் கொட்டிவிடுவது போன்றிருக்கும். உண்மையில் அவள் சாதாரணம் மீறியவளானாள். எதற்குத் தன்னை அப்படித் தனக்குள் அர்ப்பணித்துக் கொண்டு விட்டாளோ அதுவாய்த் தானாகிக்கொண்டிருந்தாள். அதன் வழியே தன்னை வேகமாய் விரட்டிக் கொண்டிருந்தாள்.

வயது ஏறஏற அதற்குத் தகுந்தாற்போல் நான் ஆகாயத்தை எப்படிச் சுண்டு விரலால் எட்டித் தொடுவது, சமுத்திரத்தைச் சாக்கடையாய் எப்படித் தாண்டுவது, ஒரே நாளில் விதை விதைத்துப் பயிராக்கிப் பழ மறுப்பது என்றெல்லாம் மாடிக் கட்டைச் சுவர்மேல் உட்கார்ந்து, சில சமயங்களில் யோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்.

'அம்பீ!—' என்று எதற்காகவாவது கூப்பிட்டுக் கொண்டே கைவளை குலுங்க மாடிப்படி தடதடவென ஏறி வருவாள்.

''என்ன அக்கா!''

''அக்கான்னு கூப்பிடாதேன்னு எத்தனை தடவை சொல்வேன்! அதுவும் லட்சுமின்னு ஆத்துலே பேரை வெச்சுட்டு!''

அவனுள் திடீரென பொட்டெண உடைந்து ஜமதக்னி விக்கி விக்கி அழுதான். விளக்குச் சுடர் ஆடி ஆடி நெளிந்தது. கைகளுள் புதைந்த முகத்திலிருந்து உடல் வரை ஒரு ஜ்வாலை கிளை பிரிந்து அவன்மேல் ஓடிற்று.

'என்னால்தானே லட்சுமிக்கு இப்படி நேர்ந்தது! நான் ஏன் இப்படி இவளுக்குச் சாபமாய் விளைந்தேன்?'' என்று சில சமயங்களில் என்னால் எண்ணாமலிருக்க முடியவில்லை. ஆனால் அவள் என் எண்ணங்களைக் கண்டுகொண்டு பந்தை உதைப்பதுபோல் அவ்வளவு அனாயாஸமாய்ச் சிரித்துக்கொண்டே அவைகளை என்னின்று உதறியெறிவாள்.

''என்னடா என் கையைப் பார்த்துப் பொருமிண்டு இருக்கே? நான் சில விஷயங்களில் விடுதலை ஆனவள். உங்கள் எல்லோரையும்விட மேலானவள் தெரியுமா?''

பாதி புரிந்ததும் புரியாததுமாய், புரிந்தாற்போல் சிரிப்பேன், தலையை ஆட்டிக்கொண்டு. கைப்பிடிச் சுவரின்மேல் வந்து உட்காருவாள், ஒரு காலை ஆட்டிக் கொண்டு. ஒரு நிமிஷம்கூட அசையாது அவளால் இருக்க முடியாது.

''பார் உங்களுக்கெல்லாம் நான் தாயாயிருக்கேன். அப்பா உள்படத்தான். அம்மாவுக்குத்தான் கையாலாக வில்லையே, உங்களை யார் பாத்துககறா? நீங்கள் அத்தனைபேரும், என்னைப் பெற்ற என் அம்மாவையும் சேர்த்துத்தான் நீங்கள் என் குழந்தைகள். ஆனால் அப்பவே நான் உன் குழந்தை, உனக்கு நான் முன்பிறப்பு தான். ஆனால் உன்னைத் தவிர எனக்கு யார் கதி? எனக்குப் படிப்பில்லை, படிப்பில் ஆசையுமில்லை உன் சோற்றில் ஒரு பங்கு எனக்குக் கொடுக்காமல் போயிடப் போறயா இல்லாட்டா நான்தான் விடப்போறேனா?

எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்கும். திடீ ரென எழும் வாஞ்சை தாங்க முடியாதபடி உடலை அழுத்தும்.

"ஏன் இப்படி வதைக்கிறாய்?"

"நான் உன்னை விடப்போவதில்லை. என் வேளை வரும் சமயத்தில் உன் மடியில் தலை வைத்துத்தான் உயிர் விடப்போகிறேன். ஒரே சமயத்தில் மாதாவும் குழந் தையுமாய் யாரால் இருக்க முடியும்? அந்தப் பராசக்தி யாலும் என்னாலும்தான்! நான் நெருப்பில் குளிச்ச வளடா!"

இப்படித்தான், ஒவ்வொன்றிலும், தன் சோகத்தின் காவிய கனத்தைப் பூவின் இதழ்கள்போல், அவ்வளவு அழகுடன் மணத்துடன் லேசாய் அவளால்தான் உதிர்க்க முடியும்.

அப்பா எப்படியேனும் அவள் கையை மறைத்து யாருக்காவது கையைப் பிடித்துக் கொடுத்துவிட வேண்டு மென்று மலைப் பிரயத்தனங்கள் பண்ணினார். அநேக மாய்ச் சாதிக்கக்கூடச் சாதித்துவிட்டார். வரனுக்கு வடக்கே எங்கோ தூர தேசத்தில் உத்தியோகம்.

"லட்சுமி, அவன உன்னைப் பார்க்கவரும் வேளைக்கு நீ பிடில் கிடில் ஒன்றும் வாசிக்க வேண்டாம். கைமேல் மேலாக்கைப் போட்டு மறைத்துக்கொண்டு. மறைத்துக் கொள்வதற்காக மறைத்துக்கொண்டிருக்கிறேன் என்றும் காண்பித்துக்கொள்ளாமல் சாதாரணமாய் உட்கார்ந்து கொண்டிரு. எல்லாம் சரியாய்ப் போய்விடும்!"

"என்னப்பா! இதெல்லாம் எத்தனை நாளைக்கு முடியும்னு நினைக்கிறேள்?" லட்சுமி அலுப்புடனதான் பேசினாள்.

''இப்போ எனக்கு இத்தனை வயசுக்குமேலே இனிமேல் என்ன! உங்கள் ஏற்பாடெல்லாம் சரிப்படாதப்பா. எல்லோரையும்போல் நான் இருக்கேனா? கலியாணமோ சத்தியத்தின் ஏற்பாடாய்ப் பண்ணறோம். அதைப் பொய்யில் சாதித்துவிட முடியுமா? ஏதோ பிச்சைக் கயிறுக்கு ஆசைப்பட்டு அப்புறம் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி அவஸ்தைப்பட எனக்கு உடம்பிலே சக்தியிருந்தாலும் மனசுலே இல்லே. அதைவிட செத்துப் போயிடறதே—''

அப்பாவக்குக் கனகோபம் வந்துவிட்டது.

''எனக்கு அப்பவே தெரியுமே. இந்தமாதிரி மட்டந் தட்டிப் பேச உனக்குப் புத்தியும் உண்டு, அதற்குத் தகுந்தாற்போல் உனக்கு இடமும் கொடுத்தாச்சு. நீதான் சகலமும் அறிந்தவள் என்று பேசாதே. எங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். எப்படியும் எனக்கப்புறம் தான் நீ பிறந்தாய் என்பதை மறந்துவிடாதே!''

லக்ஷ்மி பதில் பேசாமல் கையில் ஒரு பூவைத் திருகிக் கொண்டு நின்றாள். அப்பாவுக்கு அவசரம் கொஞ்சம் தணிந்தது.

''லக்ஷ்மி! லோகத்தில் எல்லோருமே பாவிகள் என்று நினைத்துக்கொள்ளாதே. எல்லோர் வீட்டிலும் ஒருசமயம இல்லாவிட்டால் ஒரு சமயம் எண்ணெய் காய்ந்து கீழே கொட்டியிருக்கும்; பால் பொங்கி வழிந்திருக்கும்; குத்துவிளக்கை ஏற்றும்போது முன்றானையில் தீப்பிடித்திருக்கும். முதலில் கொஞ்சம் கஷ்டமாயிருந்தாலும் அப்புறம், நீயும் கையில் ஒன்று ஏந்திக்கொண்ட பிறகு—எல்லாம் சரியாய்ப் போய்விடும். உன்னைவிட மோசமான ஊனம் ஏற்பட்டவர்களுக்கெல்லாம் விடிந்திருக்கிறது. உலகத்தில் ஈவு, இரக்கம், தயை அநுதாபம் எல்லாம் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம்—எல்லாவற்றிற்கும் வழியிருக்கிறதடீ!''

லக்ஷ்மி எரிமலைபோல் சீறினாள்.

''இரக்கமும் தயையும் எனக்கு வேண்டாம்—'' அவளுடைய திடீர் உக்ரத்தைக் கண்டு அப்பா பயந்து பின்னடைந்தார்.

''என்ன லட்சுமி இப்போ—?''

''உங்கள் வழியெல்லாம் எனக்குத் தெரியாதா? ஏதோ ரெண்டு காசைக் கூட வீசி எறியறதுதானே, உங்கள் வழி, ஏதோ உங்கள் கிட்டேயிருக்குன்னு! போங்கோ அப்பா இங்கே விட்டுப் போயிடுங்கோ! அம்பி, அப்பாவை வெளியே போகச் சொல்.''

வெகுநேரம் கழித்து அறையுள் நான் மறுபடி போக நேர்ந்தபோது, இருட்டிக் கிடந்தது. விளக்கைப் போட்டேன். ஜன்னல் விளிம்பின்மேல் முழங்காலைக் கட்டிக்கொண்டு பதுங்கிய மிருகம்போல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். கண்களில் மங்கிய தணல்கள் நகநகத்துக் கொண்டிருந்தன.

நான் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன்.

''லக்ஷ்மி!''

அவள் தலை நிமிர்ந்தது. பார்வையில் என்னை அடையாளம் கண்டுகொண்ட சோடையில்லை. அந்நியனைப் பார்ப்பதுபோல் இருந்தது.

''அம்பி, என் விஷயத்தில் நீ எவ்வளவு கெட்டவனாய் வேணுமானாலும் இருந்துக்கோ. ஆனால் என்மேல் உனக்கு இருக்கும் இரக்கத்தினால், அதற்காக என்மேல் பிரியமாயிருக்காதே. அதுமாத்திரம் என்னால் ஸகிக்க முடியாது. கழுத்தில் கல்லைக் கட்டிண்டு கொல்லைக் கிணற்றில் இறங்கிடுவேன். இது சத்தியம்—ஆமாம். சத்—''

''லக்ஷ்மீ!''

''ஆமாம்.'' சட்டென்று எழுந்து அறையின் ஒரு மூலையை வெறித்துக்கொண்டு நின்றாள்.

'கண்டிப்பாய் நான் உன்னிடமிருந்து உன் இரக்கத்தைச் சகிக்கமாட்டேன். பார்! எனக்கென்று நான் எதையும் வெச்சுக்கல்லே. எல்லாத்தையும் எல்லாருக்கும் கொடுத்துவிட்டேன். உங்கள் இரக்கத்தை நான் விரும்பவில்லை. வாசலில் காத்துக்கிடக்கும் நாய்க்கு எச்சிற்கலை எறிவதுபோல்!''—

எனக்கு உடல் பறந்தது. ''லக்ஷ்மி! லக்ஷ்மி!''

என் அலறல் கேட்டு அவளுக்கு நினைவு சற்றுத் திரும்பிற்று.

''என்ன அம்பீ? என்னடா நான் பேசிண்டிருக்கேன்?'

அவள் தலை சுழன்றது. நான் தாங்கிக்கொண்டிராவிட்டால் மடேரென வீழ்ந்திருப்பாள். அவளை மெதுவாய்த் தரையில் கிடத்தினேன். அவளுக்கு நினைவில்லை. அன்றிரவு ஜூரம் கண்டுவிட்டது. ஜூரமா அது? மழு! ஊரிலிருந்த முலைப்பாலத்தனையும் கொண்டுவந்து நெற்றியில் நனைத்துப் போட்டும் மண்டையிடி தாங்கக் கூடியதாயில்லை. பக்கத்தில் சென்றாலே அனல் வீசிற்று. என் குழந்தை புரண்டு புரண்டு புழுவாய்த் துடித்தாள்.

''அம்பீ! அம்பீ! தாங்க முடியல்லேடா! என் முதுகுத் தண்டே தீஞ்சு கருகிப்போச்சுடா! அம்பீ! அம்பீ!''

கடைசிவரையில் இதே அரற்றல்தான்.

''அம்பீ, என்னைவிட்டுப் போயிடாதே! என் கிட்டேயே உட்காந்துக்கோ. இந்தா, இந்தப் பழத்தை உன் கையால் உறிச்சுக் கொடேன். ஐயோ, என்னை ஒரு இடத்துலே இருக்க விடலையே! இந்த ஈஸிச்சேரில் எடுத்து வையேன்!''

எப்படி அவள் அப்படி லேசாய் போனாள், குழந்தை மாதிரி!

என் மௌனமான வியப்பைப் புரிந்துகொண்டு புன்னகை புரிவாள்.

''பார்த்தையா! அன்னிக்கே சொன்னேனே ஒருநாள், ஞாபகமிருக்கா?''

''என்ன லக்ஷ்மி?''

''ஒண்ணுமில்லை'' நினைவு மறுபடியும் எங்கோ சுற்ற ஆரம்பித்துவிடும்.

''இல்லேடா அம்பீ! சௌகரியமாயில்லே! என்னை மறுபடியும் படுக்கையில் போட்டுவிடு. அம்பீ! உன்னை அப்பான்னு கூப்பிடறேனே! அம்பீ, எனக்காக நீ கண் முழிச்சுண்டா யிருக்கே? அம்பீ தூங்குடா, தூங்கு. உனக்கு உடம்புக்காகாது. எனக்கு இப்படித்தானிருக்கும். இன்னும் கொஞ்சநாள்தான் கொஞ்சநாள்தான்...''

ஜுரம் வந்து முப்பத்திரண்டாம் நாள்—அன்று வெள்ளிக்கிழமை விடியற்காலை. லட்சுமி தூங்கிக்கொண் டிருந்தாள் அல்லது கண்கள் மூடியிருந்தன. உடம்பை அம்மா தொட்டுப் பார்த்தாள். அவள் முகம் மலர்ந்தது.

''அம்பீ! ஜுரம் விட்டுடுத்து!''

லட்சுமி கண்களைத் திறவாமல் புன்னகை புரிந்து கொண்டு எதையோ தேடுவதுபோல் கைகளை நீட்டினாள்.

''அம்ம்ழீ! அம்ம்ழீ!!''

லட்சுமிக்கு நாக்கு இழுத்துவிட்டது. ஒரே ஒரு தடவை மங்கிக்கொண்டிருக்கும் முழுச் சக்தியுடன் கண்களை விழித்து என்னைப் பார்த்து என் கழுத்தைக் கட்டித் தன் பக்கமாய் இழுத்துக்கொண்டாள். அவ்வளவுதான் அப்புறம் நினைவு தப்பிவிட்டது. நெஞ்சு கடைய ஆரம்

பித்துவிட்டது. அடுத்த தெருவில் சிவாலயத்தில் காலைச் சந்திமணி அடிக்க ஆரம்பித்தது. லக்ஷ்மிக்கும் மூச்சு அடங்கிற்று. அவள் தூக்கத்தில் ப்ரமிக்கத்தக்க அழகுடன் பொலிந்தாள்.

லக்ஷ்மிக்கு நான்தான் கொள்ளியிட்டேன். அவளிஷ்டம் அப்படித்தானிருந்திருக்கும். அடுத்த நாள் அவள் அஸ்தியைச் சேர்த்த பானையைத் தோளில் தாங்கிக் கொண்டு நான் சமுத்திரத்துக்குச் செல்கையில் பானையில் எங்கோ கசிவு ஏற்பட்டு என் மார்பிலும் தோளிலும் அஸ்தி ஜலமும் பாலும் வழிய ஆரம்பித்தன. அந்த சமயத்தில் லக்ஷ்மிதான் அப்படி அகங்குளிர்ந்து என்னுள் இறங்குகிறாள் என்று நான் நினைத்துக் கொள்கையில் அதுதான் நிஜமாய் இருந்தது.

அவளுடைய கடைசி மூச்சிலும் என்னை ஸ்மரிக்கும் இந்த அற்புதமான அன்பிற்கு நான் லாயக்கா? ஒரு நாளல்ல, இருநாளில்லை. இந்தப் பூஜை விளக்கண்டை உட்கார்ந்துகொண்டு நான் சிந்திப்பதுண்டு.

மாஞ்சி, இந்த விளக்கை என் தாய் தன்னோடு கொண்டு வந்தாள் அதற்குமுன் இரு தலைமுறைகள் அவள் வீட்டில் இருந்தது. இப்படியே நின்றுகொண்டு எத்தனைக்கோ சாக்ஷியாய் இருந்திருக்கிறது. நான் ஒன்றிருமுறை கடுநோயாய் பாயில் விழுந்திருக்கையில், நான் சொஸ்தமாக வேண்டுமென்று ஏற்றி வைத்து லக்ஷ்மி இதை வணங்குகையில், அவள் சொன்னதைக் கேட்டிருக்கிறது. ஆனால் அவள் விஷயத்தில் ஏன் ஏமாற்றிவிட்டது?

''ஆண்டவனே, நீயென்று தனியாயிருந்தால், நீ எதைத் தேடிக் கொண்டிருக்கிறாய்? இதோ இரவு வருகிறது.........''

அவன் குரலில் அற்புதமான கவிதை மிளிர்ந்தது. மாஞ்சி சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் உட்கார்ந் திருந்த இடத்திலிருந்து முற்றத்தில் கவிந்த இரவு தனியாய் ஆகாயத்திலிருந்து ஒரு கம்பளியை இழுத்துப் போர்த்துக் கொண்டு அப்போதுதான் எழுந்து வந்தாற்போலிருந்தது.

அவன் தன் வசமிலாது பேசினான்:

''பார், பார், மேலே பார் சின்னதும் பெரிதுமாய் விளக்குகள் ஏற்றிக்கொள்கின்றன. இத்தனை விளக்கு களையும் போட்டுக்கொண்டு என்னத்தை அவன் தேடிக் கொண்டிருக்கிறான்? பகல் வருகிறது. பகலே, உலகிற்கே ஒரே விளக்கான ஜோதியில் வருகிறது. முகம் கொடுத்துப் பார்க்கக்கூட முடியாத அந்த ராக்ஷஸ விளக்கைப் போட்டுக்கொண்டு இரவும் பகலுமாய் இன்னமும் எதைத் தேடுகின்றான்? இத்தனையும் போதாது என்று அவரவர் நெஞ்சில் ஒரு விளக்கை ஏற்றிவைத்து, இத்தனை விளக்கு களும் இன்னும் வெளிச்சம் போதாமல் இன்னமும் ஒன்றை யொன்று தேடிக்கொண்டிருக்கின்றன. ஆண்டவனே, நீ என்னத்தைக் கீழே சிந்திவிட்டாய்? காலமும் யுகமு மாய் நீ தேடும் பொருள் உனக்கே அகப்படாதோ...?''

மாஞ்சி திகிலடைந்தவளாய் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினாள்.

''இந்தாங்கோ, என்னைப் பாருங்கோ—என்னைப் பாருங்கோளேன்!''

அவன் திடுக்கிட்டு விழித்தவன்போல், தலையை உதறிக்கொண்டு அவளை நோக்கினான்.

மாஞ்சி பேச்சை மாற்றுவதற்காக, ''நீங்கள் இது மாதிரி விளக்கண்டை உட்கார்ந்திருக்கையில் ஒருநாள் நான் உங்கள் வீட்டுக்குச் சாப்பிட வந்தேன்'' என்றாள்.

"ஆமாம், நீ என் வாழ்க்கையுள் வந்தது எனக்கு மறந்துவிடுமா?" திடீரென மெதுவிட்ட அவன் கண்களில் பனி ஈரம் பளபளத்தது. அவள் கன்னத்தை விரல் நுனிகளால் தொட்டான். "மாதத்திற்கொரு முறை, பிறகு வருடத்திற்கு ஒரு தினம், லக்ஷ்மி இறந்த தினம், அம்மா ஒரு கன்னிப் பெண்ணுக்குச் சாதமிட்டு வந்தாள்."

"அவர்களில் ஒருத்தியாய், நான் வந்தேனே பழமையின் நினைவின் அகிற்புகை புகுந்து படருகையில், அந்த இன்பப் போதையில், அவள் வார்த்தைகள் சற்று மழலையாய்க் குழறின. "நான் சாப்பிட்டப்பறம், உங்கள் அம்மா என்னை மணையில் ஒக்காரவெச்சு என் காலுக்குப் பச்சையிட்டு, கைக்கு வளையலிட்டு, கூந்தலைக் கோதி முடிஞ்சு அதில் ஒரு பூவையும் சொருகின சமயத்தில் அப்போத்தான் நீங்கள் இதோ இதே குத்துவிளக்கின் பாதத்தில் ரெண்டு கையினாலும், பூவைச் சொரிந்து தலை நிமிர்ந்தீர்கள். அப்போ உங்கள் பார்வை என்மேல் சாஞ்ச போது. என் நெஞ்சிலே நெருப்பை வெச்சாப்போல இருந்தது, அப்பா! இப்பொ நினைச்சாக்கூட உடல் சிலிர்க்கிறது...!"

அவன் நாட்டம் விளக்கின்மேல் நிலைத்திருந்தது. அதன் சுடரிலிருந்து அவனுக்கு மட்டும் தெரிந்து பொறி விட்டு புறப்படும் எழுத்துக்களை வாய்விட்டுக் குரல் நக நகக்கப் படித்துக்கொண்டிருந்தான்

"கன்னிப் பெண்ணாய் முதன் முதலாய் இந்த விளக்கின் சாக்ஷியாக இந்த வீட்டுள் கால் வைத்தாய். பிறகு இதன் சாக்ஷியாய் என் வாழ்க்கையுள் நுழைந்து இங்கேயே தங்கிப் போனாய். இவ்விளக்கெதிரில்தான் மீனாவையும் நீனாவையும் வளர விட்டாய். இதைத்தான் அவர்கள் முதன் முதலாய்ப் பார்த்தார்கள். இதுதான் அவர்களை வளர்த்து வருகிறது."

''பாச்சு?'' பழைய துக்கத்தின் புதிய வேகத்தில் மாஞ்சி உதட்டை இரத்தம் வரக் கடித்துக்கொண்டாள். கன்னங்களில் கண்ணீர் புலு புலுத்தது.

''பாச்சு?—'' அவன் மோவாய் அவன் கையில் ஊன்றியது. ''ஆம்; அவனும் இவ்விளக்கில் சேர்ந்தவன் தான். சுடரிலிருந்து ஒரு பொறி. இப்பொழுது தன்னில் ஒரு பொறி பெரிதாகிக்கொண்டு வருகிறது—பார்!!—''

அவன் கண்கள் ஜ்வலித்தன. அவன் சுட்டிக் காண்பித்துக்கொண்டிருக்கையிலேயே விளக்கிலிருந்து ஒரு சிறு நெருப்புப் பந்து குதித்துக் கீழேயிறங்கிற்று. அந்தத் திரி கீழே விழுந்து எரிவதை மாஞ்சி பார்க்கையில், அவளையு மறியாது அவள் கை அவன் முழங்கையைத் தொட்டது. அவளுள் திடீரென்று ஏதோ பற்றிக் கொண்டாற் போலிருந்தது.

* * *

''விளக்கண்டை உட்கார்ந்திருப்பதைத் தவிர வேறு வேலையில்லையா உங்களுக்கு? உங்கள் பிள்ளை தொட்டிலில் கொக்கரிக்கிறான் பாருங்களேன் பாருங்கோ —அச்சு கண்ணாட்டி!''

மாஞ்சிக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. குழந்தையின் விளையாட்டைக் கண்டு, அவள் குழந்தை மாதிரி கைகொட்டி நகைக்கிறாள். ஜமதக்னி முகம் திரும்பினான். மாஞ்சி இந்தத் தடவை ரொம்பவும் வாங்கிப் போய்விட்டாள். இந்தப் பிரசவம் ஏனோ தெரியவில்லை. ரொம்பவும் சிரமப்படுத்திவிட்டது. குழந்தை பிறந்து ஆறு மாதங்களாகிவிட்டன. அவள் இன்னமும் சரியாய்த் தேறினபாடில்லை. அவளை அப்படிக் காண்கையில், அவனறியாததோர் தாய்மை அவனுள் அலைமோதி எழும்பிற்று. அவளை ஏன் இப்போது ஆணின் கண்களுடன் பார்க்க முடியவில்லை?

மாஞ்சி குழந்தையைத் தொட்டிலிலிருந்து வாரிக் கொண்டு பின் பக்கமாய் வந்து, அவன் மடியில் பலவந்த மாய்க் கிடத்தினாள்.

"இப்பவாவது உங்கள் பிள்ளையைப் பார்க்கறேளா பார்க்கறேன்!"

அவன் அதன் கன்னத்தை நிமிண்டினான். அது அவன் மூக்கை எட்டிப் பிடிக்க முயன்றது. மாஞ்சி அவன் பக்கத் தில் உட்கார்ந்து கைகளை மடியில் ஊன்றிக்கொண்டாள்.

"பாருங்கோ பாருங்கோ, நீங்கள் புடிச்சுத் தள்ளி னாலும் அவன் உங்களை விடமாட்டான்."

"நான் அவனைப் பிடித்துத் தள்ளவில்லை. நான் யாரையுமே பிடித்துத் தள்ளவில்லை. ஆனால் உன் மாதிரி கெட்டியாய் அமுக்கிப் பிடித்துக்கொள்ளவும் விரும்ப வில்லை."

காரணம் புரியாமல், மாஞ்சிக்குப் 'புர்' ரென்று மூக்கைப் பொத்துக்கொண்டு கோபம் வந்துவிட்டது. அவன் மடியிலிருந்து குழந்தையை எடுக்க முயன்றாள். அவன் மெதுவாய்த் தடுத்தான்.

"ஏன்? என்ன அவசரம் இப்போ?"

"நீங்கள் எப்பவும் எதுக்கெடுத்தாலும் என்னைக் கேலி பண்ணிண்டிருக்கேள். அப்படி என்னவாம் நான் உலகத்துத் தாய்மார்களைவிட வேறே மாதிரியா இருக் கேனாம்?"

"ஓஹ்—ஹோ!"

"ஆமாம், நீங்கள்தான் உலகத்து ஆம்படையான் மாதிரி என்னிடமில்லை. ஏன், ஏன், ஏன் இப்படி என் விஷயத்திலே இருக்கேள்?" அவளுக்கு அழுகை வந்து விட்டது.

"எப்படி இருக்கிறேன்?"

அவள் கைகள் ஆடித் தவித்தன.

"ஆமாம், அதுதான் சரி. திருப்பி என்னையே கேட்டுடுங்கோ!"

"உனக்கு என்ன வேண்டும், உனக்கில்லாமல் நான் என்னத்தைத் தனியாய் வைத்துக்கொண்டிருக்கிறேன்?"

இரு கைகளாலும் அவன் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள்.

"நீங்களே சொல்லுங்கோ. நீங்கள் பழையமாதிரி என்கிட்டே இருக்கேளோ? அதுவும் வரவர இந்தக் குத்து விளக்கண்டை உட்காந்துண்டு இந்தப் படத்தையும் இந்தச் சுடரையும் பார்த்துண்டு இருக்கறதைத் தவிர வேறென்ன பண்ணிண்டிருக்கேள்? நான்தான் கேக்கறேன், அப்படியென்ன அதில் நாங்கள் எல்லாம் காணாததைக் காணறேள்?"

அவன் தலை மெதுவாய்க் குனிந்தது.

பெருமூச்செறிந்த வண்ணம் மறுபடியும் தலை நிமிர்ந்தான். அவன் பார்வை சுடரைத் துளைக்க முயன்றது.

"என்னத்தைக் காண்கிறேன்? நான் இந்தச் சுடரைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். கொஞ்ச நாழிகைக்குப் பிறகு இதைத்தவிர, இதன் பின்னாலும் முன்னாலும், பக்கத்திலும் எல்லாமும் இருண்டுவிடுகின்றன. இச்சுடர் நாக்கு மாத்திரம் தனியாய் வயிற்றுப்பக்கம் சற்று அகன்று நீலவிளிம்பு கட்டிக்கொண்டு நிற்கிறது. அது நிற்பதற்கே ஆதாரமாயிருக்கும் திரி முதல் திருஷ்டிக்கு மறைந்து விடுகிறது. பிறகு இந்தச் சுடர் ஒன்றுதான், ஒன்றே தான்—"

"பிறகு, இச்சுடரின் வயிறு கொஞ்சங் கொஞ்சமாய் அகன்று, மடல் மடலாய் எண்ணற்ற இதழ்கள் குவிந்து

அற்புதமான ஹ்ருதய புஷ்பமாய் மாறிவிடுகிறது'' அவன் முகத்தில் அவன் வர்ணிக்கும் புஷ்பத்தின் செந்திட்டு படபடத்தது.

''பிறகு இவ்வளவு வேலைப்பாடுகள் நிறைந்த இப் பூ மலர்ந்து மெதுவாய் வாய் திறக்க, அதன் கிண்ணத்திலிருந்து விதவிதமான பழைய உருவங்களும், புது உருவங்களும் புறப்படுகின்றன. நான் அடையாளம் கண்டு கொள்ளும் உருவங்கள், கண்டுகொள்ளாத உருவங்கள், நேற்றைய உருவங்கள், இன்றைய உருவங்கள், இனி மேலாய உருவங்கள்—ஆனால் உள்ளுணர்வில் எனக்குத் தெரிந்த என் உருவங்கள்...''

''புரியல்லே, புரியல்லே!— எனக்கு வேண்டாம்! வேண்டாம்!'' மாஞ்சி செவிகளைப் பொத்திக்கொண்டாள்.

''நீ கேட்டாய். நான் சொன்னேன்— அல்லது சொல்லப் பார்க்கிறேன். நான் இவைகளைப் பார்த்தேன் என்றால் இந்தக் கண்களால் பார்த்தேன் என்று அர்த்தமல்ல. இந்தக் கண்ணையும் மீறிய பார்வையில் பார்த்தேன்.''

' என்ன சொல்றேள்?''

அவள் முகத்தின் திகைப்பு வேதனையை விளைவித்து. அவன் அவளைத் தன் பக்கமாய் இழுத்து, முகத்தில் முத்தமிட்டான்.

மாஞ்சி குழந்தைதான். அவள் கவனம் சட்டென மாறிவிட்டது. அவன் மடியில் கிடக்கும் குழந்தையின் முகத்தெதிரில் கையை விளையாட்டுக் காண்பித்துக் கொண்டு விரலைச் சொடுக்கினாள்.

''நம்ம பையனுக்கு என்ன பேர் வைப்போம்? பிச்சைன்னு வைப்போமா?''

அவன் புருவங்கள் சுளித்தன.

"நான் ஒருவனையும் பிச்சை கேட்கமாட்டேன். ஆம். ஆண்டவனைக் கூடத்தான்—முக்கியமாய் ஆண்டவனைத் தான்."

திகில் மாஞ்சியின் அடிவயிற்றில் திடீரென்று ஜ்வாலை விட்டது. அவளையுமறியாது, அவன் மடியிலிருந்து குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு, தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

"ஏன், ஏன் இப்படித் தெய்வ குத்தம் பேசறேள்? இந்த மாதிரி நீங்கள் பேசினால்கூட எனக்கு 'பக் பக்' என்கிறது."

"நீ புரிந்துகொள்ளவில்லை."

"நான் ஒண்ணும் புரிஞ்சுக்க வேண்டாம்."

அவனை அவள் முகங்கொடுத்துக்கூடப் பார்க்கவில்லை. குழந்தையைத் தோள்மேல் போட்டுக்கொண்ட அதன் கழுத்து வளைவில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தாள். அவன் அவளைச் சற்று நேரம் உற்றுக் கவனித்துவிட்டு, வெளியே சென்றுவிட்டான். மாஞ்சி ஜன்னலண்டை போய் அவன் உருவம் மறையும்வரை, மறைந்த பின்னும், அவன் சென்ற திக்கை வெகு நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

* * *

பெருமூச்சுடன் மாஞ்சி ஜன்னலிலிருந்து திரும்பினாள். அவளையறியாமலே இமைகள் நனைந்திருந்தன. இன்று ஏனோ இருப்புக் கொள்ளவில்லை. புரியாத ஒரு மனோ வேதனை.

வருடங்களுக்கு அவள்மேல் ஏன் தனி வைரம்? கூந்தல் ஒரு முடிச்சுக்குக்கூட வரவில்லை. இருக்கும் மயிரும்

பாதிக்குமேல் அசிங்கமான நரை. உடல் சரிந்துவிட்டது. இத்தனைக்கும் அந்தப் பிள்ளைக்குப்பின் வேறு பேறுகூட இல்லை.

அவள் கணவனை ஓரக்கண்ணால் கவனித்தாள்—ஜமதக்னி குத்து விளக்கண்டை உட்கார்ந்து ஏதோ புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தான். அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. இவர் மாத்திரம் ஏன் கொஞ்சங் கூட மாறவில்லை? இந்த எண்ணம் இன்றுதான் புதிது போல் ஸ்பஷ்டமாய் மனதில் எழுகையில், அவளுக்கு அவள் கணவன்மேல் அசூயை தட்டிற்று. இருவரும் சேர்ந்து எங்கேயாவது வெளியில் போக நேர்ந்தால் அவளுக்கு வெட்கமாயிருந்தது. அவருடைய யௌவனத்தின் ரகசியந்தான் என்ன, முத்தளவில் நின்றெரியும் சுடர்போல்? எந்த எண்ணெய் அவரை மாத்திரம் அப்படிக் காப்பாற்றுகிறது?

ஒருநாள் தலைவலியென்று அவர் படுத்த ஞாபகம் அவளுக்கு இல்லை. ஆசையுடன் நெற்றிக்குத் தாய்ப்பா லிட்டு, ஜுரமடங்கப் பக்கத்தில் உட்கார்ந்து விசிறி விட்டு, நோய்க்குப் பணிவிடை செய்த நினைவு அவளுக்கில்லை; மருந்துக்குக்கூட.

அவள் கவனம் குத்துவிளக்கின்மேல் சென்றது. மங்கா விளக்கென சங்கற்பமா யில்லாவிட்டாலும் அது எரியாத வேளை அதிகமில்லை. அதை வாரத்திற்கு ஒருமுறை தேய்க்கும் நேரம் தவிர எப்படியோ அதை மாத்திரம் ஜமதக்னிதான் ஏற்றிக்கொண்டிருந்தான். அப்படித்தான் நேர்ந்தது. என்றேனும் அதைத் தான் ஏற்ற வேண்டும் என்கிற ஞாபகத்துடன் அவள் அவசரமாய்க் கூடத்திற்கு வந்தால், அது முன்னாலேயே எரிந்துகொண்டு நிற்கும்! லக்ஷ்மி படத்திலிருந்து அவளைப் பார்த்துச் சிரிப்பாள். பல சமயங்களில் ஏமாற்றமாயிருக்கும். இந்த வீட்டில் இந்த விளக்கின் அதிகாரம்தானா?

''நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லையே!''

ஆனால் அவன்தான் ஏற்றிக்கொண்டிருந்தான்.

அவள் வருவது கண்டு புன்னகை பூத்தான்.

''என்ன ஒரு மாதிரியா யிருக்கிறாய்?''

''என்னமோ மாதிரியாயிருக்கு, ஏதேதோ பழசெல்லாம் நினைப்பெடுத்தது'' என்று சொல்லிக்கொண்டே மாஞ்சி அசதியுடன் அருகே உட்கார்ந்தாள்.

''வீடே இன்னிக்கு ஒரே வெறிச்சுன்னு இருக்கு. வீட்டில் ஒருத்தருமேயில்லை பாருங்கோ. நீங்களும் வெளியிலே போயிட்டேள்னா, அப்புறம் நானும், இந்தக் கூடத்துச் செவுர்களுந்தான் பாக்கி. சே! ஒரோரு சமயத்திலே எதுக்காக இந்த உடம்போடு உசிர் ஒட்டிண்டிருக்குன்னுகூட அலுப்பாயிருக்கு!''

''உடம்போடு உயிர் ஓட்டிக்கொண்டிருக்கவில்லை. உயிரோடுதான் உடம்பு ஒட்டிக்கொண்டிருக்கிறது. உடம்பைவிட உயிர் ரொம்ப ரொம்பப் பெரிது.''

''சரி, அப்படித்தான் இருக்கட்டுமே. எனக்கு இப்போ தர்க்கம் பண்ணச் சக்தியில்லை.''

''ஏதாவது ஒரு விஷயம் சொன்னால், யார் சொன்னாலும் சரி, அது 'கரெக்ட் டாயிருக்கணும்'' என்றான் சிரித்துக்கொண்டே.

''அது சரி, எல்லாம் ஒங்க 'கர்ரெக்டை'ப் பத்திக்கூட நினைப்பு வந்தது.''

''என்னது?''

கைப் புத்தகத்தைச் சட்டெனப் 'பட்'டென மூடினான்.

அவ்வளவுதான் மாஞ்சிக்குத் துக்கம் உடைத்துக் கொண்டது. பெருங் குரல் எடுத்து விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

ஜமதக்னி கைகளை மடிமேல் கோர்த்துக்கொண்டு, அமைதியால், விளக்கைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தான்.

அவள் அழுகை மெதுவாய் அலை அடங்கியது. முன்றானையால் கண்களை இழுத்துத் துடைத்து மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

''இன்னிக்கு என்னவோ, எனக்கு இப்படி இருக்கு—''

''மாஞ்சி, எப்படியும் ஒன்று நான் சொல்கிறேன். இதை நிஜம் என்று வைத்துக்கொள். நீ எதை நினைத்துக் கொண்டு அழுதாலும் சரி, ஒவ்வொன்றின் நியதி இந்த இந்த மாதிரி என்று எனக்குச் சில நிச்சயமான தீர்மானங்கள் உண்டு.''

''யார் இல்லேன்னா?''

''அப்படி வெறும் வாய் வார்த்தையால் சொன்னால் மாத்திரம் போதாது; காரியத்திலும் இருக்க வேண்டும். காரியத்தைக் குறிக்காத வெறும் வார்த்தைகள் என்ன பிரயோசனம்? அதைவிட அவ் வார்த்தைகள் குறிக்கும் எண்ணங்கள் எழாமல் இருந்தாலே நல்லது.''

''ஆமாம், சுலபமாய்ச் சொல்லிப்பிடறேள். நல்லதோ பொல்லாதோ எண்ணங்கள் மனசுலே வரத்தையும் போவதையும் நீங்கள் தடுக்க முடியாது. எங்கே, ஒரு எண்ணங்கூட எண்ணாமல், நீங்கள் ஒரு நிமிஷம் ஒரு வினாடி இருந்துடுங்களேன், பார்க்கலாம்!—''

அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

கொஞ்ச நேரம் இருவரும் பேசவில்லை. மாஞ்சி அவன் மடிமேல் மெதுவாய்க் கைவைத்தாள்.

"இப்போது என்னத்தைப்பத்தி யோசனை பண்ண றேள்? உங்கள் பாஷையில் இந்த விளக்கில் என்னத்தைப் பார்க்கறேள்?"

அவன் சிரிக்காமல், தவமேறிய முகத்துடன் சுடரைப் பார்த்துக்கொண்டு, "நீ எதற்காக அழுதாய் என்பதைப் பார்க்கப் பார்க்கிறேன்" என்றான்.

என்ன பார்க்கிறேள்?

மாலையிருள் பந்துபந்தாய்த் திரள ஆரம்பித்து விட்டது. விளக்குச் சுடர் மூச்சு விட்டுக்கொண்டு பெரிதானாற் போலிருந்தது. மற்ற விளக்குகளை ஏற்ற எழுந்திருக்க மாஞ்சிக்கு அச்சமயம் மனமில்லை. குத்து விளக்கின் சுடர் ஒளி அவனைக் கவ்விற்று. அவன் குரல் கனம் கூடத்தில் தழைந்து நிறைந்தது.

"என் எதிரில் இப்பொழுது ஒரு கலியாணம் நடந்து கொண்டிருக்கிறது."

"யாருடைய கல்யாணம்?"

"யாருடையது உனக்கு வேண்டும்?"

"நீனாவா?"

"சரி. இதோ நீனா வருகிறாள், கொசுவம் வைத்துக் கட்டிக்கொண்டிருப்பது உண்மையில் அவளுக்கு ரொம்பவும் பாந்தமாயிருக்கிறது. கோவில் அம்பாளுக்கு அலங்காரம் பண்ணினாற் போலேயே இருக்கிறது. மாப்பிள்ளைக்குப் பஞ்சக்கச்சம் அவ்வளவு ஏர்வையாயில்லை. இருவரும் வந்து உன்னிடம் தேங்காயைக் கொடுத்து நமஸ்காரம் பண்ணுகிறார்கள்—"

மாஞ்சி பெருமூச் செறிந்தாள். "குழந்தை எங்கே இருக்கிறாளோ, என்ன பண்றாளோ, இருக்காளோ, இல்லையோ? வளர்த்து தத்தம்னா தத்தமே பண்ணிப் பிட்டோம்!"

"ஏன் அப்படியெல்லாம் நெனைச்சுக்கறே? இருக்க வேண்டிய இடத்தில இருந்துகொண்டு நன்றாய், சௌக்கியமாய் இருக்கிறாள் என்று நினைத்துக்கொள்ளேன்."

"எப்படி நினைச்சுக்கறது? தண்ணிதாண்டி எங்கேயோ அவள் ஆம்படையான் ஆப்பிரிக்காவுக்குப் போறான்னு கூடச் சேர்த்து அனுப்பிச்சாச்சு. நான் செத்தாலும் அவள் வரமுடியாது. அவளுக்குத் தலை வலிச்சாலும் நாம் போக முடியாது. எழுதிப் போட்ட வரி போறத்துக்கோ வரத்துக்கோ வேளைக்கு வாரம் பிடிக்கும், குழந்தையை நான் நிறுத்தி வெச்சிண்டிருப்பேன். நான் சொன்னத்தை அவள் கேட்டிருப்பாள். நீங்கதான் குறுக்கே நின்னு அவள் மனசைக் கலைச்சு, காடோ மலையோ கண்காணாத இடத்துக்கு அனுப்பிச்சுட்டேள். ஊரில் இருக்கிறவா அத்தனைபேருக்கும் உள்ளூர் சம்பந்தம் அகப்படல்லையா? உங்களுக்கு மாத்திரம் இப்படித்தான் கிட்டணுமா?"

"சம்பந்தம் பண்ணுகையில் அவன் ஆப்பிரிக்கா போவதா யிருந்ததா? அப்புறம் அவனுக்கு வெளிச் சீமைக்குப் போனால் உத்தியோகம் உயரும் என்றிருந்தால் அது என் குற்றமா? அல்லது உன் சௌகரியத்திற்காக, அவன் இங்கேயே தங்கிவிட வேண்டுமா? ஏன் பெண்ணைப் பெற்றுவிட்ட தாய்மார்கள் நியாயமே தனி நியாயமா யிருக்கிறது? தங்கள் பெண்கள் எல்லாம் அல்லிகளாய்த் தானிருக்க வேண்டும் என்று ஏன் ஆசைப்படுகிறார்கள்!"

"நீங்கள் என்ன வேணுமானாலும் சொல்லுங்கோ. என்னைப் பொறுத்தவரையில், நீனா நமக்கு உசிரோடு செத்துப்போயாச்சு. அவள் திரும்பிவர அன்னிக்கு, நானும் உசிரோடிருந்தால், நான் புது நீனாவைப் பெத்து எடுத்ததாகவே நினைச்சுக்க வேண்டியதுதான்."

"ததாஸ்து! அப்படி நேர்ந்தால், உன் சந்தோஷம் இரட்டிப்பு மடங்கு ஆகாதா?"

"சந்தோஷத்தைச் சொல்லுங்கோ. நீங்களும் அந்த நீனாவுக்கு அப்பா என்கிறதை உங்களுக்கு நான் ஞாபகப் படுத்தறேன்."

"அவர்கள் இருவருக்குமிடையில் குறுக்கே நிற்க நீ யார், நான் யார்?"

"அதான் நீங்கள் தவறே பண்ணமாட்டேளே!" என்று மாஞ்சி ஏளனம் பண்ணினாள்.

ஜமதக்னி விளக்குச் சுடரையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான். அவன் புருவங்கள், தீர்க்கமான மனோலயத்தில் நெற்றி நடுவில் சந்தித்தன.

"என்னெதிரில் இப்பொழுது இன்னொரு காட்சியைப் பார்க்கிறேன். ஒரு சின்னப்பயல், எட்டு வயசுப் பயல், துடிப்பயல், நான் எதிரில் இல்லாத வேளையில் பெற்றவள் இல்லாத செல்லமெல்லாம், சொல்லச்சொல்லக் கொடுத்துக் கெடுத்த பயல் எதற்கோ தன்னைக் கண்டித்த தாயைக் கன்னத்தில் ஓங்கி அறைகிறான்—"

மாஞ்சி அந்த நிமிஷந் தான் அடிபட்டாற்போல் கன்னங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். அவன் குரலின் சொடுக்கு 'சுரீல்' என்றது. ஒரு குரலுக்கு இவ்வளவு மகிமையா என்ன! இத்தனை வருஷங்கள் கழித்தும், எப்படி அந்தக் காட்சியை உள் கண்ணெதிரில் இவரால் அந்தத் தீர்க்கத்துடன் கொண்டுவர முடிகிறது?

"நான் நல்ல வேளையாக அகஸ்மாத்தாய் அந்த இடத்தில் வந்தேனோ, கண்கூடாய்ப் பார்க்க முடிந்தது. இல்லாவிடில் நீ அவனுக்காக மறைத்த எத்தனையோ குற்றங்களுடன் இதையும் மறைத்திருப்பாயல்லவா? நானும் வந்தேன், அவனும் பிழைத்தான்."

"போறுமே இப்போ நினைச்சுண்டாக்கூட வயிறு கொதிக்கறது, அவனை வெடுக்குனு என்கிட்டேருந்து

பிடுங்கிண்டு, உங்கள் இடுப்பு பெல்டை அவிழ்த்து அதை தொங்கத் தொங்கப் புடிச்சுண்டு, இன்னொரு கையாலே அவனை முன்னாலே தள்ளிண்டு நீங்கள் மாடிக்கு ஏறின காட்சி என் கண் முன்னாலே இப்போ நிக்கறது. அது ஏன் கோபம் வந்தால் வாய் திறக்க மாட்டேன்கிறேள்? கண் கொதிச்சுண்டு மூஞ்சி மாத்திரம் ஒரு மாதிரியா ஆயிடறது. மாடிலேருந்து அடிக்கு அடி அவன் கதறலும், துடிச்ச துடிப்பும் ஐயோ...!" மாஞ்சி தலையை உதறிக்கொண்டு செவிகளைப் பொத்திக்கொண்டாள்.

"நான் அவனையா அடித்தேன்?"

"உங்கள் நெஞ்சு உரத்தை நான் என்னென்று சொல்லுவேன்?" ஆவேசம் வந்தவளாய் மாஞ்சி கத்தினாள். "குழந்தை உடம்பை ரத்தக் கிளறி ஆக்கி விட்டு, அன்னிக்கு ராத்திரி அவனுக்குச் சோறும் போடக் கூடாதுன்னு உங்களுக்குத்தான் அதிகாரம் இருக்குன்னு ஆக்கினை பண்ணிவிட்டு, கொடியடுப்புலே குண்டு சொம்பில் குழந்தைக்கு கொதிக்கிற சாதத்தை அப்படியே காலாலே உதைச்சுக் கொட்டிவிட்டு—அதுவும் அடுப்பை, சீதேவியைக் காலால் உதைச்சுட்டுப் போயிட்டு, இத்தனை யும் பண்ணிவிட்டு, என்கிட்டேயே வந்து அவனையா அடிச்சேன்னு கேக்கறேள்! ஹூம், நாளாயிடுத்துன்னா மறந்துபோயிடுமா?

அவன் அவளை இழுத்து மார்புடன் மூச்சுத் திணற இறுக்கிக் கொண்டான்.

"மாஞ்சி மாஞ்சி, உனக்கு என்மேல் ஆசை யில்லையா?"

அவன் கண்களில் அவன் கண்ணுள் தன் பிம்பம் காண்கையில் மாஞ்சி குழப்பமடைந்தாள். நினைவு தடுக் கிற்று. அக் கேள்வியின் மிருக வேதனையில் அவளுக்கு அழுகை வந்தது.

''ஏன், அப்படிக் கேட்கிறேள்?''

''ஆம் அப்படித்தான் கேட்பேன். உனக்கு என் மேலிருக்கும் ஆசை உண்மையானால் இதை நீ நிச்சயம் நம்புவாய். நான் அவனை அடித்தது உண்மை. ஆனால், வலியெல்லாம் என்னுடையதுதான். வலியின் அடையாளங்கள் அவன்மேல்தான், ஆனால் வலியின் வலி எனக்குத்தான். சத்தியமாய் அப்படித்தான்.''

''நீங்கள் என்ன சொல்றேள்?''

மௌனமாய்ச் சிந்தித்துவிட்டு, அவளைத் திடீரெனத் தன் ஆலிங்கனத்தினின்று விடுவித்தான். அவன் பெருமூச்செறிந்த அவன் கஷ்டம் என்னென்று அவளுக்கும் புரியவில்லை.

'நான் அதற்குச் சொல்ல வரவில்லை' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். ஆனால் அவன் கவனிக்கவில்லை. தான் எழுப்பும் பழைய நினைவுகளுள் புகுந்துகொண்டிருந்தான்.

''இப்போது பார்க்கிறேன், மீனாவின் கல்யாணத்தை.''

''அது இன்னொரு வயிற்றெரிச்சல்! கலியாணத்தின் போதே சம்பந்திப் பேர்களோடு தீராத மனஸ்தாபமா நேர்ந்தாச்சு. அபசகுனம்மாதிரி நம்பெண் மணப்பாயில் நின்னுண்டிருக்கிறத்திலேயே குத்துவிளக்கில் முன்றானையைப் பற்ற வெச்சுண்டுட்டா. ஒரே கூக்குரலாய்ப் போயிடுத்து. கலியாண வீட்டிலே அடிச்சு விழறான்னு பேச்சுக்குச் சொல்லுவா, கண்கூடா ஆயிடுத்து. எப்போ கூரைப்புடவை பத்திண்டதோ, எனக்கு அப்பவே தெரிஞ்சிடுத்து, நம் மீனா வாழ்க்கை உருப்பட்ட மாதிரி தானனு. நினைச்சமாதிரியே ஆயிடுத்து.''

மாஞ்சி தன்னிரக்கத்தில் சூள் கொட்டினாள்.

“விளக்கண்டை நிற்காதே என்று படித்துப் படித்துச் சொன்னேன். கேட்டால்தானே! சிரித்துக்கொண்டே எங்கோ பார்த்து நின்றால், விளக்கு விளையாடுகிறது.”

“அது சரி ஏதோ எல்லாத்துக்கும் ஒரு சமாதானம் உங்கள்கிட்ட இருக்கே! நீங்கள் பதில் சொல்ல முடியாத கேள்விகளே உலகத்தில் கிடையாது இல்லையா? உங்கள் காரியங்களுக்கும் அப்பீல் கிடையாது இல்லையா?”

“நீ எந்தக் காரியத்தைச் சொல்கிறாய் என்று எனக்குத் தெரியும் ”

“பேஷ்!” என்றாள் மாஞ்சி. “நிஜமாவே நீங்கள் எனக்குப் புரியவில்லை. உங்களைப்போல், அப்படியே உங்களையே பாதியா வெட்டிக் கொடுத்துடறாப் போல, பிரியமாயிருக்கிறவாளையும் நான் பார்த்ததில்லை. அதே சமயத்தில், சில வேளைகளில், சாதாரண இரக்கம்கூட இல்லாத கொடுமை படைச்சவரையும் நான் கண்ட தில்லை. இல்லாட்டா அன்னிக்குக் குழந்தை வந்து வாசலில் கண்ணீரும் கம்பலையுமா நிக்கறா; அவள் மூஞ்சியிலேயே கதவைச் சாத்தி வாசற்படி ஏறாதேன்னு உங்களைத் தவிர எந்தத் தகப்பன் சொல்லுவான்?”

“அவள் சாதாரணமாய் எல்லாப் பெண்களும் பிறந்தகத்துக்கு வர மாதிரி வரவில்லையே!”

“ஆமாம் இருக்கட்டுமே; புக்ககத்தில் கோவிச்சுண்டு வந்தூட்டான்னுதான் வெச்சுக்கோங்களேன். உள்ளே அவளைக் கூப்பிட்டு ‘என்னடிம்மா சொன்னான்னு கேட்டு, ஒருநாளாவது வெச்சுண்டிருந்து, அடுத்த நாள்— நீங்கள் போனால் உங்கள் கெளரவம் குறைஞ்சு போயி டறதாயிருந்தால்—நான் கொண்டுபோய் விட்டமாட் டேனா? அவளை அவாதான் என்ன சொன்னாளோ, என்னத்தைப் பண்ணினாளோ?”

''ஏன் பெண்ணைப் பெற்ற எந்தத் தாயாரின் நியாயமும் தனி நியாயமாயிருக்கிறது? மீனா என் பெண் என்று நினைக்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது.''

''உள்ளே விடமாட்டேன்னு நெருப்பா நின்னேளே, நம் பெண் அப்படியே இங்கேயும் அடைக்கலத்துக்கு ஒத்தருமில்லேன்னு எங்கேயாவாது குளத்திலே குட்டையிலே விழுந்திருந்தால் என்ன செய்யறது?''

''என்ன செய்வது? என் பெண் போய்விட்டாளே இவ்வளவு அசட்டுத்தனத்துடன் என்று அழுவேன். ஆனால் நம் மானம்— அவளுடையதும்தான்—அவள் சாவோடு பிழைத்ததே என்று சந்தோஷப்படுவேன். ஆனால், நல்ல வேளையாய் மீனா அவ்வளவு பெரிய அசடு இல்லை. இங்கே அவளுக்கு செவிசாய்ப்பார் யாருமில்லை யென்று கண்டுகொண்டாள். மரியாதையாய்த் தன்னிடத்துக்கே போய்ச் சேர்ந்துவிட்டாள். அதுதான் சரி. நல்ல வேளையாக அவள் வீட்டார் அவளை ஏற்றுக் கொண்டார்களே அதைச் சொல்லு! மீனாவுக்கு சாக நிஜமாவே எண்ணமிருந்தால் அவள் வீட்டுப் புழக்கடையிலேயே பெரிய கிணறு இருக்கிறது. இது வரையில் அவள் அதில் மிதப்பதாய்த் தகவல் இல்லை. வீட்டுக்கு உள்ளேயே தான் சந்தோஷமாய் வளைய வருகிறாள் என்று கேள்வி. கையில் வேறு ஒன்று ஏந்திக்கொண்டிருக்கிறாள்—''

''நான் இன்னும் என் பேரனைக் கண்ணால்கூடக் காணவில்லை—'' மாஞ்சி மூக்கை உறிஞ்சினாள்.

அவன் மறுபடியும் மெதுவாக அவளைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டான்.

''நான் இப்போது காட்சியை மாற்றப்போகிறேன். இது உனக்குப் பிடித்த காக்ஷி.''

''எது?''

‘‘நாம் இருவரும் ஒரு பெரிய கூட்டத்தில் உட்கார்ந்திருக்கிறோம். வரிசை வரிசையாக முன்னாலும் பின்னாலும் வாத்தியார்களும் மாணவர்களும். எல்லோரும் மேடைமீது ஒருமுகமான கண்ணாயிருக்கிறோம். ஒரு வாலிபன், தூய வெள்ளையுடுத்து; அம்புபோல், நிமிர்ந்த உருவில் மேடையில் ஏறுகிறான். பலத்த கரகோஷம். தலைவர் எழுந்து நின்று அவன் தோளில் ஒரு கைவைத்து, அவனைக் கைகுலுக்குகிறார். தங்கப்பதக்கத்தை அவன் மார்பில் சொருகுகிறார். எல்லோரும் எழுந்து நின்று மேஜையை ஓங்கித் தட்டி குதூகலத்துடன் ஒரே ஆரவாரம். தலைவர் ஏதோ பேசப் பார்க்கிறார். வாய் அசைவது தெரிகிறதே தவிர, பேச்சு இப்பெருங் கோஷத்தில் மூழ்கிவிடுகிறது. அவர் பேச்சைத் தொடர முடியாது சிரித்துக்கொண்டு பின்னால் கையைக் கட்டிக்கொண்டு நின்றுவிடுகிறார். அவர் நிலை கண்டதும் கூட்டத்தின் ஆர்ப்பாட்டம் இரட்டிப்பாய்ப் பெருகிவிட்டது. உன்னைப் பார்க்கிறேன். உன் கன்னத்தில் தாரைகள் ஓடுவது தெரியாமல் நீ விக்கி விக்கி சிரிக்கிறாய், அழுகிறாய், சிரிக்கிறாய்.’’

‘‘நீங்கள் மாத்திரம் என்னவாம்? உங்கள் முகத்தில் குழம்பியிருந்த குங்குமத்தை வழித்தெடுத்தால், ஆறு மாதம் இட்டுக்கொள்ளலாம்.’’

அவன் பார்வை விளக்கின் சுடரில் ஊன்றியது.

‘‘நம் மகன். என் மகன்’’ என்றான்.

‘‘ஆமாம் அவன் காலேஜ் முடிந்து வந்ததும் அவசரமாய் மூட்டை கட்டி வெளியூருக்கு அனுப்பிவிட்டேளே! அதுவும் கொஞ்ச நஞ்ச தூரமா? இன்னிக்கு ராத்ரி வண்டியேறினால், முழுசா நாலு ராத்ரி, மூணு பகல் பிரயாணம், அதில் வண்டி ரெண்டு மாற்றல்...’’

‘‘என் மகன் உருப்பட வேண்டாமா, உருவாக வேண்டாமா?’’

"அதென்ன மேல்படிப்போ? உங்களுக்குத்தான் ப்ரீதி."

"ஏன் இப்படி அலுத்துக்கொள்கிறாய் மாஞ்சி? எல்லோருக்கும் அவரவர் நிறைவு பெறக்கூடிய துறையில் வேண்டிய சந்தர்ப்பங்களும் சௌகரியங்களும் கிடைக்கின்றனவோ? கிடைக்கும்போது பயனடையாவிடில் பிறகு பிறவியால் என்னதான் பயன்? உன் பிள்ளை இன்னும் புகழுடன் திரும்பி வருகையில் உனக்கு வேண்டியிருக்காதா?"

"என் பிள்ளை எனக்கு என்றைக்கும் ஒண்ணுதான். அன்றைக்குக் கல்சட்டியில் தயிரையும் பழையதையும் ஓட ஓடப் பிசைந்து, 'அடிக்குழம்பு ஆனை போலே' என்று சொல்லிப் போட்ட நாளிலிருந்து, இன்னிக்குக் கோட்டையும் சூட்டையும் அவசரமாய் மாட்டிண்டு, கீழே உட்கார முடியாமல், மேஜையிலே என்னிக்காவது சாப்பிட நேர்ந்தால்—நீங்கள் கரிச்சாலும் சரி அந்த நாளும் ஒண்ணுதான். என் மகன் என்றும் ஒண்ணுதான் எனக்குத் தெரியும். எனக்கு வேறேதும் தெரியவும் வேண்டாம்."

"ஓ!"

"அத்தோடு நீங்கள் சொல்ற நாளுக்கு இன்னும் எத்தனை நாள் இருக்கோ? இன்னிக் கதையைச் சொல்லுங்கோ. வீடெல்லாம் எவ்வளவு வெறிச்சுனிருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா? வீட்டின் வெறிச்சை மாற்ற எந்தக் குழந்தை ஓடி விளையாடிண்டிருக்கு?"

"ஏன், பெற்றுப் பெற்று பெற்ற வயிறு இன்னும் அலுக்கவில்லையா?"

"நீங்கள் அவரவர்க்கு அவரவர் நிறைவு என்று சொல்கிறீர்களே, எங்களுக்கு எங்கள் தாய்மையில்தான் நிறைவு. ஒரொரு சமயத்தில் பானுவின் நினைப்பு வந்துவிட்டால், அவன் நின்ன இடத்தையும், சுவத்திலே சாய்ஞ்ச இடத்-

தையும் தொட்டுத் தொட்டுத் தடவி, கன்னத்தை அந்த இடத்தில் வெச்சு கண்ணீர் விடுகிறேன். என் வேதனையை நீங்கள் அறிய முடியுமோ?''

''நாம் பெற்றதால் மாத்திரம் நம் மகன் நமக்குச் சொந்தமாகிவிடமாட்டான். ஒரு வயதுக்குமேல், அவரவர் அவரவர்க்கே சொந்தமில்லை.''

''மறுபடியும் ஆரம்பிச்சுட்டேளோன்னோ உங்கள் பாஷையை? ஆ, அதென்ன சப்தம்?''

''ரீ... ங்... ங்... ங்!''

தந்தியின் நாதம்போல் ஒரு ஓசை எங்கிருந்தோ மெல்லியதாய்க் கிளம்பி பெரிதாய் வீங்கிக்கொண்டே நெருங்கிற்று.

''ரீ ...ங் ...ங் ...ங்!''

அந்த ஓசையின் கதியில் இருவர் கண்களும் வசியமாகி, அதைப் பின்பற்றிச் சுழன்றன.

ஒரு சுட்டு விரலளவுக்கு நீளமாய், பருமனாய் வண்டு முங்கி முங்கி, எழுந்து கூடத்தை வட்டமிட்டது. அதன் நிழல் கூடத்துச் சுவர்களில், வண்டைவிட வேகமாய்ச் சுழன்று பாய்ந்தது. திடீரென தளம்வரை ஒரே வேகத்தில் செங்குத்தாய் எழும்பிக் கூரையில் மோதுண்டு நேரே விளக்குச் சுடரில் வீழ்ந்தது. விளக்கு குப்பென்று அணைந்தது. எண்ணெயின் பொசுங்கல் நாற்றம் கிளம்பிற்று. கூடம் கும்மிருட்டில் மூழ்கியது.

கரும்பலகையில் இரும்பாணியால் கோடு கிழித்தாற் போல் ஒரு அமானுஷ்யமான கீறல் சப்தம் மாஞ்சியிட மிருந்து கிளம்பிற்று.

''தந்தி ஸார்...!''

அதற்கப்புறம்தான் வாசற்கதவை அவசரமாய்த் தட்டும் சப்தமே கேட்டது. விளக்கைப் போட்டுக்கொண்டு ஜமதக்னி வாசலுக்கு ஓடினான். ஆனால் அதற்குள் மாஞ்சி ஸ்மரணை யிழந்துவிட்டாள்.

* * *

மாஞ்சி வரண்ட கண்களுடன் மேற்கூரையைப் பார்த்தவண்ணம் கூடத்தில் கட்டிலில் படுத்திருந்தாள். அவள் பார்வை நிலைகுத்தி வெளிச்சமற்று இருந்தது. இரண்டு வாரங்களாக அப்படித்தானிருந்தாள். ஆகாரத்தை வாயில் ஊட்டினால்தான் செல்லும். மூச்சு உண்டு, மற்றபடி பேச்சில்லை; உணர்வில்லை.

ஜமதக்னி கையில் ஒரு கடிதத்தைப் பிரித்தபடி வந்து பக்கத்தில் உட்கார்ந்தான்: ''மாஞ்சி பார் என்னைப் பார்—''

அவள் முகத்தை மெதுவாய்த் தன் பக்கம் திருப்பினான். அவன் கை அசைத்தபடி முகம் அசைந்தது, அவ்வளவுதான்,

''மாஞ்சி, பார்— என்னையே பார்! என்னையே பார்த்துக்கொண்டிரு. ஆ! அப்படித்தான்—'' தொண்டையில் எழுந்த தழு தழுப்பை அடக்க முயன்றான்.

' உனக்கு இந்தக் கடிதத்தைப் படிக்கப் போகிறேன். இது வந்து மூன்று நாட்களாகின்றன. இதை அவசியமாய் நீ கேட்க வேண்டும். இது நம் பானுவைப் பற்றியது.''

அவள் விழிகள் தம்முள் அர்த்தத்தையும் அடையாளங்களையும் கூட்டத் தவித்தன. அதைக் கவனித்தபடி அவன் மேலும் சொல்லிக்கொண்டே போனான்.

''இது நம் பானுவின் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தது. பிரின்ஸிபால் எழுதுகிறார்:

'தங்கள் பதில் தந்தி கிடைத்தது. தங்கள் தீர்மானத்தின் விவேகத்தை நான் பாராட்டுகிறேன். ஆம், தற்சமயம் தாங்கள் இங்கு வருவதில் பயன் ஒன்றுமில்லை. ஸ்ரீ பானுமூர்த்தியின் அஸ்திகூடச் சரியாய்க் கிடைக்கவில்லை. அவரைச் சுற்றி மாத்திரம் தனி உக்கிரத்துடன் வலைமாதிரி நெருப்பு சூழ்ந்துவிட்டது.

ஸ்ரீ பானுமூர்த்தியின் மரணத்தை விஸ்தரிக்க இஷ்டமில்லாவிடினும் அவசியமான சில விவரங்களை மாத்திரம் கொடுக்கக் கடமைப் பட்டவனாயிருக்கிறேன்.

மாலை வேளையில் அவர் தன் சஹாககளுடன காலேஜுக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கையில் திடீரென்று எல்லோரும் ஒரு வீட்டு மாடி ஜன்னலிலிருந்து ஒரு பெரும் ஜ்வாலை கொடிமாதிரி வேகமாய் ஆடுவதைக் கண்டனர். காற்றுவாக்கில், கண்ணிமைக்கு முன், வீடு முழுதும் எரிய ஆரம்பித்துவிட்டது. பானுமூர்த்தி வீட்டுக்குள் ஓடினார். கீழ்க்கட்டுக் குடித்தனங்கள் வெளியே ஓடி வந்துவிட்டன. மாடியில் ஒரு குடித்தனம் தம்பதிகளும் நான்கு குழந்தைகளும் கதவைத் திறக்க முடியாமல் உள்ளே தவிக்கின்றனர். நெருப்பின் கர்ஜ்ஜனையுடன் அவர்களின் கூக்குரல்களும் கேட்கின்றன. பானு, தைரியமாய், எல்லோரும் தடுக்க, உதறிவிட்டு, புகைக்கும் நெருப்புக்குமிடையே படியேறி கதவை மோதியுடைத்து உள்ளே ஓடினார். உள்ளிருந்த பெரியவர்களிருவரையும், குழந்தைகளையும் அவர்தான் வெளிப்படுத்தினார். குழந்தைகளை ஒவ்வொன்றாய்த் தூக்கிக் கீழே எறிய, கீழிருப்பவர் தாங்கிக்கொண்டனர். அதற்குள் அந்த அம்மா "ஐயோ கைக்குழந்தை!" என்று அலறினாள். உள்ளே தொட்டிலைத் தேடிக்கொண்டு மறுபடியும் ஓடினார், அவ்வளவுதான். உள்ளே இனி யாரும் வராதே எனத் தடுக்கிறமாதிரி மேலிருந்து இரு பெருந் தூலங்கள்

குறுக்கும் நெடுக்குமாய் விழுந்து நெருப்பு பற்றிக் கொண்டு, உள்ளே மாட்டிக்கொண்டவர்களுக்கு முத்திரை வைத்துவிட்டன.

ஒருவருமே ஒன்றும் செய்வதற்கில்லை. நெருப் புணைக்கும் வண்டி வந்த வேளைக்கு வீடு சாம்பல். வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரும் வைக்கோற் போர் வேறே.

உங்கள் கஷ்டத்தில் எங்கள் எல்லோருடைய பணி வான அனுதாபத்தைத் தயவுசெய்து ஏற்றுக்கொள் ளுங்கள். உங்களிருவருக்கும் தேறுதல் சொல்லும் துயர மில்லை இது.

ஆனால் உங்கள் மகன் எங்கோ தெரியாத இடத்தில் அனாதையாய் மரணம் அடைந்தான் என்று நீங்கள் எண்ணலாகாது. பானு என்றுமே ஒரு தேஜஸ்வி; தன் மறைவின் ஜோதியில் எங்கள் எல்லோர் மனதிலும் மறவாத இடம் பெற்றுவிட்டார்.

நாங்கள் அனைவரும் இரவு முழுதும் எரிந்த இடத்தி லேயே காத்துக் கிடந்தோம். அங்கு நனையாத கண் களில்லை. மறுநாள் உங்கள் மகன் நினைவில் காலேஜ் மூடியது. இவ்விவரங்கள் உங்களுக்கு ஆறுதல் அளிக்க முடியாது. ஆனால் உங்கள் மகன்மேல் எங்கள் மதிப்பு உங்களுக்குத் தெரிந்தால் அதில் எங்களுக்கு ஒரு ஆறுதல்.

ஸ்ரீ பானுமூர்த்தியின் அறையைப் பூட்டி இத்துடன் சாவியை அனுப்பியிருக்கிறேன். அவருடைய உடைமை கள் அவர் கடைசியாக விட்ட நிலை கலையாமல் அங்கு இருக்கின்றன. அவைகளை எடுத்துச்செல்ல, என்று உங் களுக்கு மனம் வரமுடிகின்றதோ அன்று உங்களைச் சந்திக்க ஆவலாயிருக்கிறோம். பானுவின் தந்தையைத் தெரிந்த பெருமையை அடைந்தவர்களாவோம்.

ஜமதக்னி மெதுவாய்த் தலை நிமிர்ந்தான். மாஞ்சியின் கண்கள் மாடிக் கூரையிலிருந்து இறங்கி அவன்மேல் பதிந்திருந்தன. அவைகளில் கண்ணீர் வழிந்தோடி இருந்தது.

''மாஞ்சி.''

''என் குழந்தை எப்படித் துடிச்சானோ? அந்தக் கடைசித் தருணத்தில் என்ன நினைச்சானோ? ஐயோ! இதையெல்லாம் நினைக்க எனக்கு இன்னும் நினைவு இருக்கே! எனக்குப் பைத்தியம் ஏன் பிடிக்கமாட்டேன் என்கிறது?''

அவள் குரல் அமைதியாய்த் தானிருந்தது. அதுவே தான் அதன் பயங்கரமாயிருந்தது.

அவன் கையைப் பற்றி இழுத்துத் தன் வயிற்றில் வைத்துக்கொண்டாள். நெருப்பாய்க் கொதித்தது.

''இந்த வயிறு இதுவரை அஞ்சு தடவை திறந்தது. திறந்ததுதான் மிச்சம். என் குழந்தைகளால் நான் என்ன சுகத்தைக் கண்டேன்? நமக்கே ஏதோ சாபம் தொடர்கிறதா?''

அவள் தன் முகத்தில் அறைந்தாற்போல், கன்னத்தைத் தொட்டுக்கொண்டான். அவன் இப்போது பேசுகையில் அவளோடு பேசவில்லை. தனக்குள் உரக்கச் சிந்தனையில் ஆழ்ந்தாற் போலானான்.

''சின்னப் பொழுதில், நானும் என் வயதுப் பையன்களும் என்னவோ கொல்லைப்புறத்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். பள்ளந் தோண்டிப் பச்சை வேர்க் கடலையை வைக்கோல் போட்டு சுட்டுக்கொண்டிருந்தோம், அப்போது சப்பாத்திக் காட்டிலிருந்து 'புஸ்' ஸென்று சப்தம் கிளம்பிற்று. எல்லோரும் பயந்து ஓடி விட்டார்கள். நான் மாத்திரம் நின்றேன். என்னெதிரே நல்ல பாம்பு படமெடுத்து என்னைப் பார்த்துக்கொண்

டிருந்தது. எனக்கு வாயைக் கட்டிவிட்டது. ஆனால் பயம் என்று பெரிதாய் ஏற்படவில்லை. எனக்கு எப்படி அந்த எண்ணமும், அந்தத் துணிச்சலும் வந்ததோ தெரிய வில்லை. என் வயதுக்கு அது இயற்கைகூட இல்லை. சட்டென அதைத் தொண்டையைப் பிடித்து நெருப்புக் குழியில் போட்டுவிட்டேன். அது துடித்துத் துடித்து உடலைப் பின்னிப் பின்னி உயிரோடு சாவதை நாங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களுக்கு அதுவே ஒரு விளையாட்டாயிருந்தது

நாளடைவில் மறைந்துவிட்டது அந்த சம்பவம். இன்று, இப்பொழுதுதான் நினைவு வருகிறது.''

மாஞ்சி வெடிப்பாய்ச் சிரித்தாள்.

''என் பிள்ளை சாவதற்கு நீங்கள்தான் காரணம். நீங்கள்தான் எமன். உங்கள் எண்ணத்தில் நீங்கள்தான் தெய்வம் இல்லையா? உங்கள் குழந்தைகள் உங்கள் இஷ்டப்படி நீங்கள் பிசைந்து பிடித்துவைக்கும் மண் இல்லையா? நெருப்பாய் நின்று நெருப்புக்கே கொடுத் தாச்சு...''

''இல்லை... இல்லை... இல்லை!!!''

ஜமதக்னி துடித்தான். அவளைப் பிச்சை கேட்பது போல், அவன் இரு கைகளும் ஏந்தின.

''என்ன இல்லை?'

''மாஞ்சி!''

இரத்தம் மண்டையில் வேகமாய்ப் பாய்ந்தது. தலை சுழன்று அப்படியே கீழே சாய்ந்துவிட்டான்.

விழிப்பு வந்தபோது அந்தியிருள் கூடத்தில் கவிந்திருந்தது. மாஞ்சி ஏதோ காரியமாய் கூடத்தில் நடமாடுவது தெரிந்தது. திடீரென்று குளுமையான ஒளியில் கூடம் அகன்று விரிந்தது.

தன் நினைவைக் கூட்டி ஊன்ற முயன்றான்.

மாஞ்சி குத்துவிளக்கை ஏற்றிக்கொண்டிருந்தாள். திரியைத் தூண்டி விளக்கை ஏற்றிவிட்டு அவனண்டை வந்து உட்கார்ந்து, தலையைத் தூக்கித் தன் மடிமீது வைத்துக்கொண்டாள்.

அப்பா! அவன் கண்ணீர் மடையுடைந்தது.

# பூ ர ணி

வெளியே தென்னை அசைந்தாடிற்று. சலசலக்கும் மட்டைகளினிடையே பதுங்கிய இளநீர் முடிச்சை நோக்கிக்கொண்டிருந்த பூரணி ஒரு முடிவுக்கு வந்தவள் போலும் பெருமூச்செறிந்து, அப்பொழுதுதான் அறை வாசல் வழி சென்ற தன் பேரனைக் கையைச் சொடுக்கி அழைத்தாள்.

''என்ன ஆத்தே:'' என்று இழுத்துக்கொண்டே பையன் உள்ளே வந்தான். அவனுக்குக் கன அவசரம். பம்பரத்தில் கயிற்றைச் சுற்றிக்கொண்டிருந்தான். பூரணி மெளனமாய்ச் சற்றுநேரம் சிந்தித்துவிட்டு, ''உன் அப்பனை நான் வரச்சொன்னேன்னு சொல்லிட்டுப் போ. உன் அம்மாவை உன் மூக்கைக் கழுவி எண்ணெய் தடவச் சொன்னேன்னு சொல்லு, சளி ஒழுவி மூக்கு வெந்து போவுதே!''

''ஆவட்டும், ஆவட்டும்.''

பையன் பொறுமையில்லாது தலையை ஆட்டிக் கொண்டு மூக்கை உறிஞ்சினபடி கீழே விழுந்தடித்து ஓடினான்.

சற்றுநேரந்திறகெலாம் அவள் மூத்தபிள்ளை மாடி யேறி உள்ளே வந்தான்?

''என்னாம்மா?—''

"ஏன் சவுக்கத்தை அக்குள்ளே இடிக்கிட்டிருக்கே—"

"ஊத்துக்காட்டுக்குப் போறேன்."

"ஏன்?"

"ஏம்மா மறந்துட்டியா? நேத்திக்கு அங்கே அறுப்பு இல்லே? அறுத்ததை இன்னிக்கி அடிச்சுக் கட்ட வேணாம்? இப்பவே நேரம் போச்சு."

"இன்னிக்குப் போவேணாம்—"

அவன் முகம் சுளித்தது.

"என்ன கிளம்பற வேளைக்குத் தடுத்தா?"

"இல்லே, இன்னிக்குப் போவாதே, உன் அண்ணன் கிட்டே சொல்லு, போட்டோக்காரனைக் கூட்டியாந்துடலாம்னு."

"என்ன?"

அவன் கண்கள் அகல விரிந்தன. கீழே சவுக்கம் விழுந்தது.

"ஏம்மா?"

"ஆமா, அப்படித்தான்."

அவள் நாட்டம் தூரமாகி, தென்னையின் மட்டைகளினிடையில் பதுங்கிய இளநீர் முடிச்சைக் கவ்விக் கொண்டது.

"அய்யர் வீட்டுப் புள்ளைக்கும் சும்பிவிடச் சொல்லு, பூரணி ஆத்தா கூப்பிடுதுன்னு."

அவள் பிள்ளை பயத்துடன் கீழே யிறங்க வாசற்பக்கம் திரும்பினான்.

"துரை!"

அவசரமாய் ஓடிவந்தான்.

"நீ பாஞ்சாலியை சும்மா மொத்தாதே அது நல்ல பொண்ணு. எனக்கப்பறம் அவதான், தெரியுமல்ல?"

''இப்போ யார் இல்லேன்னாங்க?''

''நீ...''

''என்னையா?'' எனும் வினாவில் அவன் கை மாரைத் தொட்டுக்கொண்டது.

''நீ இனிமே சும்மா சந்தைலிருந்து புடிச்சு ஓடிவந்த மாடாட்டம் வீட்ட விட்டு ஓடி ஓடிப்போவாதே; திரும்பி வரச்சே திருண்ணாமலைக்குப் போனேன், திருத்தணிக்குப் போனேன்னு விபூதி குங்குமம் கொண்ணாந்தாலும் நாங்க அதைத் தரிச்சாலும், சும்மா கோச்சிட்டு கோச்சிட்டுப் போவறத்துலே மதிப்புக் கொறைஞ்சு போவுது.''

''அப்புறம் குப்பனை நீ சும்மா கோவம் பண்ணாதே. இப்போ வயசுலே துள்ளுறான். அப்புறம் வயசுலே படிஞ்சு போவான்.''

' சரிம்மா—''

''ஆனால் காபாலி விசயமா— அவன் அவ்வளவு வெள்ளைன்னு சொல்லமாட்டேன். நீ அவன்கிட்டே எப்பவும் முளிப்பாயிருக்கணும். எல்லாம் உன் அண்ணன் இருக்கற வரைக்கும் சரியாயிருக்கும்; அப்புறம் அவன் பாகம் பிரிச்சுடுன்னா பாகம் கொடுத்துடு, உன்னுதே உனக்கு அப்போத்தான் மிஞ்சும்.''

அவள் மகன், மாலை வேளையில் மாரி கோவிலில் பலி பீடத்தண்டை தான் நிற்பதுபோல் கையைக் கூப்பிக் கொண்டு, ஆமோதனையில் தலையை ஆட்டினான்.

பூரணி தன் வயிற்றின்மேல் கோத்த கைகளைப் பார்த்துக்கொண்டாள்.

''காபாலியும் நான் பெத்த மவன்தான், ஆனால் இந்தப் பூமியிலே நாலுந்தான் விளையுது. நான் நட்ட

விளையின் பக்கத்துலே விளைஞ்ச களையே நான் களைய லாம். ஆனால் அவன் நட்டதைக் கிள்ள நான் யாரு?''

''என்னம்மா சொல்லுது?''

''ஒண்ணுமில்லே...'' பூரணி அசதியுடன் கண் மூடி னாள். ''அண்ணன்கிட்டே நான் சொன்னதைச் சொல்லு. நேரம் போவுது.

''ஆமாம்; நேரம் போவுது. எப்படிப் போவுது! துள்ளுது, ஆவுது, நீளுது, நிக்குது நிக்கிறத்துலேயே ஓடுது; ஓடறத்துலேயே நிக்குது. ஆனால் அள்ளுது.

''நேரத்துக்கு உருவம்னு இருந்தா, அது ஓர் ஆளா மாறி ரெண்டு பக்கத்துலேயும் றக்கை முளைச்சு, நாம் மழை பேஞ்ச நாளிலே சேத்துலே கால் படாமே நாலஞ்சு கல்லை நடைபாதையிலே போட்டு அது மேலே முழங் காலுக்கு மேலே சேலையைத் தூக்கிப் புடிச்சுக்கிட்டுக் கல்லுக்குக் கல்லு தாவி போவல்லே, அதுமாதிரி தத்தி வந்து எதிரே நிக்குது. நின்னு கேக்குது.''

''வந்துட்டேன் பூரணி ஆத்தா!''

''தெரியுது ''

''ஓ...ஹோ? தெரியுதா?''

''தெரியாம என்ன? போட்டோக்கு ஆளை அனுப்பச் சொல்லிட்டேனே...''

''ஆமா, என்ன சொல்றே? குண்டுகட்டா கட்டித் தோளிலே போட்டுக்கிட்டு நடக்கவா? கையைப் பிடிச்சுக் கிட்டு என்னோடே குணமா வாரியா? நீ ஒண்ணும் வெக்கம் வெச்சுக்காதே ஆத்தா, நான் உன் மவன்மாதிரி.''

பூரணி கண்ணிற்குள் சிரித்துக்கொண்டாள்.

''அப்டீன்னா உன் தம்பி என்ன செய்யறான்?''

அஞ்சாம் வருசம் என் வவுத்துப் புள்ளை குளிக்கப் போன இடத்துல ஆத்தோடே, சோறு தெரியாமே சவத்தோடே கொண்டுபோயிட்டியே, அவன்?

"ஓ, அவனா? ஆத்தா, கவலைப்படாதே. சவிக்கமா யிருக்கான். நல்ல இடத்துலேதான் தூங்கிட்டே வளர் றான். எல்லாம் உனக்குப் புடிச்ச இடம்தான். ஆத்தா உனக்கு நான் கஷ்டம் வெக்கமாட்டேன். உனக்குப் புடிச்ச வவுத்துலே வளந்திட்டிருக்கான். இன்னும் நாலு மாசத்துலே தூக்கம் கலைஞ்சு வீல்னு கத்திட்டு வெளியே வந்துடுவான், பாரு."

"நான் எங்கே பாக்கப்போறேன்? நான்தான் போறேனே!"

"எங்கே ஆத்தா போவப்போறே?" அந்த ஆள் பொறுமையின்றிக் கையை உதறினான். 'வரவங்க எல்லாரும் இந்தப் போறேன் போறேன் பாட்டுத்தான் பாடறாங்க. என்னத்துக்கோ, எல்லாங் கண்டவங்க மாதிரி! எங்கே யாத்தா போவறது? இடம் சொல்லேன், நானும் வந்துடறேன். நீ தாய் வீட்டுக்குத் தலைச்சன் பெக்கப்போனியே, அப்படியே தங்கிட்டியா? புருசன் நினைப்பெடுத்ததும் கந்தையிலே பையனைச் சுருட்டிக் கிட்டு ஓடியாந்துடல்லே?"

"அப்புறம் நான் போவவே இல்லியே, சாவு வாழ்வு ரெண்டுக்கும்! இத்தனைக்கும் என் தாய் வீடு தெருக் கோடிலே எதிர்சாரிதான்."

"அட, அதுன்னா அதுவா? வாத்தியார் அய்யர் வூட்டுப் புழக்கடையிலே உங்க வீட்டு வைக்கப்போர் போட்டிருக்கீங்க, அதுலே நீ வைக்கல் பிடுங்கப் போறேன்னு வைச்சுக்க."

''ஆமாம்—'' பெருமூச்செறிந்தாள்—''தினம் தினம் போவேன். அவங்க வீட்டுப்புள்ளையெ எடுத்துக் கொஞ்சுவேன். அப்பா, என்ன செவப்பு தெரியுமா? தொட்டா கையோடே வளிஞ்சு வந்தூடற மாதிரி. அந்த நாளெல்லாம் போச்சு. அந்த அம்மாவும் அய்யரும் ஊர்மாத்திப் போனாங்க, எங்களுக்கும் ஒரு கை ஒடிஞ்சது. நல்லது பொல்லாது சொல்லிக்கிறத்துக்கும் கேட்டுக்கிறத்துக்கும் எங்களுக்கு அப்புறம் யாரு? அவங்களுக்கும் இங்கே விட்டுப் போனப்பறம் விளங்கல்லே. அய்யர் போன விடத்துலே திடீர்னு பூட்டாரு...''

''அது இல்லே விசயம் இந்த இடத்துலே; அப்படி நீ வைக்கல் பிடுங்கவோ கொளந்தையைக் கொஞ்சவோ போன இடத்தில் நின்னுட்டியா? நீ அப்படியே நின்னுட்டா அய்யர் வீட்டு அம்மா நடையிலே உன்னைக் குந்தவெச்சு இலையிலே சோறு வெக்கமாட்டாங்களா என்ன, அவங்க எல்லாம் சாப்பிட்ட அப்புறமாவது?''

''ஏன் துரோகம் பேசணும்? எத்தனையோ நாளைக்கு அவங்க வூட்டு சோறு நாங்க எல்லோரும் தின்னிருக்கோம். எங்களுக்கு பெசலா புளுங்கரிசி வடிச்சே போடுவாங்க.''

''சரிதான் ஆத்தா, எப்போ சொல்லு?''

''எல்லாம் தட்டினால் முட்டினால், வீட்டுலே விசேடம் வந்தால், வேளாவேளையிலேதான்...நான் பேசப் போனவிடத்துலே தங்கிட்டேன்னா இவுரு சாப்பாட்டை ஆக்கறது யாரு?''

''ஆ, வந்தியா வழிக்கு! ஏன் உன் மருமவமாரு ரெண்டுபேரு இப்போ இருக்காங்களே, அந்த நாளுலெ மாமியார் இருந்தாங்க—

''இருந்தூட்டா வீட்டைக்கட்டி மேக்கறது யாரு?''

அவன் உள்நாக்குத் தெரிய வாய்விட்டு உரக்கச் சிரித்தான்.

"மாலையிலே மாந்தோப்பிலே ஞானமணிசாமி சமாதிக்கு விளக்கு வைக்கப்போனால், போன இடத்துலே அப்படியே திரும்பி வராமே கலந்துட்டியா. இல்லையே? அடுப்பிலே குளம்பு தளைக்குதுன்னு குடுகுடுன்னு ஓடியே வந்துடல்லே? காலையிலே மேச்சலுக்குப் போற உங்க பசு வீட்டுக்குத் திரும்பாமலே, தன்னை மறந்துட்டுப் புல்லை மேஞ்சுகிட்டு நின்னுடுதா? நின்னா நீதான் சும்மா விட்டுடுவையா?"

"ஐயோ ஏண்டாப்பா ஆசை?"

அதைப் பவுண்டுலே அடைச்சாலும், உன் மூக்குத் திருவாணியை வெச்சாவது மீட்டு வந்துடமாட்டே?"

"கண்டிப்பா, யாரைக் கேட்டு!"

"அதனாலே போறது என்கறது ஏது? என்னா ஆத்தா, எல்லாந் தெரிஞ்ச நீயே இப்படிச் சொல்லிட்டா எல்லாம் நீங்க பதியம் போடறமாதிரி, நாத்து நடறமாதிரி தான். எல்லாம் சுத்திச் சுத்தி இங்கேதான்."

"நான் என்னத்தைத் தெரிஞ்சவ?"

"அப்படிச் சொல்லாதே, ஆத்தா; தெரியாதவங்களுக்குத் தெரிஞ்ச அளவு, தெரிஞ்சவங்களுக்குத் தெரியாது. ஒண்ணு வச்சுக்க... இந்தப் பூமிலே..." அவன் குனிந்து தரையைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டான். "இந்தப் பூமிலே இருக்கிறதுதான் உண்டு, போவறதே கிடையாது. மானத்துலே பறந்தாலும் பாதம் இங்கேதான் பதிஞ்சாவணும். நான் இங்கேயேதான் இருக்கறேன். நீ கல்லாட்டம் வீட்டைக் கட்டிக்கிட்டு அதைச் சுத்தி பூவும் காயும் மரமுமா தோட்டத்தையும்

போட்டுக்கிட்டுப் போவறத்தைப் பத்திப் பேசினா நீ எனக்குத் தாய் மாதிரி ஆனாலும் நிசமா எரிச்சலாய்த் தான் வருது...''

''நீ என்ன, என்னன்னமோ பேசுறியே இல்லாத்தையும் பொல்லாத்தையும்?''

பூரணிக்குப் புரியாத திகில் பிடித்துக்கொண்டது.

''எங்க வீடு மண்வீடுதான். தோட்டம் எங்கே நட்டு இருக்குது?''

அவன் திடீரென்று கம்பீரத்துடன் நிமிர்ந்து நின்றான். முகத்தில் ஒளி மிதந்தது.

''நான் சொல்றது இந்த வீடு இல்லை...''

''பின்னே எந்த வீடாம்?''

''நீயே காணப்போறே. நான் உன்னை அங்கேதானே அழைச்சுக்கிட்டுப் போவப்போறேன்!''

''தம்பி! நான் உன்னோடே வந்துடறேன். இடக்குப் பண்ணல்லே. ஆனால்...''

''என்ன இழுக்கறே? நீ என்ன சொல்லப்போறேன்னு எனக்குத் தெரியும்.''

''எனக்குச் சொல்லத் தெரியலியே!''

''நீ இருந்த இடம், பொறந்த இடம், வாழ்ந்த இடம் இந்தப் பூமியெல்லாம் ஒரு தடவை சுத்திப் பாக்கணுமில்லியா, நீ அந்த நாளுலே இருந்தமாதிரி, இல்லியா?—''

''ஆமாண்டா மவனே, நீ எப்படிக் கண்டே? எனக்கு என்ன வேணும்னுகூடச் சொல்லத் தெரியலே. நீ எப்படியோ என் வவுத்திலேருந்து பிடுங்கி சொல்றியே? அது முடியுமா இப்போ, அப்போ நடந்ததெல்லாம் நடந்த மாதிரியிப்போ...?''

''ஏன் முடியாது ஆத்தா? அதுவும் இந்த வேளையிலே தான் முடியும். அதுவும் இந்தப் பூமியிலே நடக்காத அதிசயமே கிடையாது. இது என்னா பிரமாதம்! எப்பவும் எல்லாருக்கும் இந்த வேளையிலே நடக்கறதுதானே இது! ஆனால் உன் போலேயே எல்லாருக்கும் இருக்காது அவங்க பாக்கற பழைய பாடம்.''

''ஏன்?''

வந்தவன் சிரித்தான்.

''ஆத்தா, உன் பேரு என்ன தெரியுமா?''

''பூரணி. என் வீட்டுலே பன்னெண்டாவதா பொறந்தேன். என் வீட்டுலே எனக்கு முன்னாலே என் தாய்க்கு வவுத்திலேயும் பூமியிலே விழுந்தும் வளர்ந்தும் சின்னதுமா செத்தது நாலு கணக்குலே சேர்க்கல்லே. எனக்குச் சம்பூர்ணம்னு பேர் வெச்சாங்களாம், அப்புறம் பொறக்கலை.''

''அது உனக்கு உன் வீட்டுலே வெச்ச பேர். ஆனால் தனித்தனியா உன்னை உன் வீட்டுலேயும் வெளிலேயும் உன்னை எப்படி எப்படி கூப்பிடறாங்க? அதுமாதிரி நாங்களும் உனக்கு ஒரு பேரு வெச்சிருப்போமில்ல?''

''நீ சொல்றது சரியா விளங்கல்லே.''

''இப்போ உன் எசமானர் உன்னை என்னன்னு கூப்பிடறாரு?''

''என்னை எங்கே அவரு பேர் சொல்லி அளைக்கறாரு? அவர் இதுவரைக்கும் என்னோடே பேசிட்டது என்ன தட்டுக் கெட்டுப் போயிட்டுது? நானும் இந்த வீடு வந்து பெத்து, இருந்து, இதோ பூடப்போறேன். ஏதாவது வேணும்னா கரடியாட்டம் ஒரு உறுமல். அவ்வளவுதான்; சமயம் பார்த்து அதுலேருந்து நான் கண்டுக்கணும். ''அடுக்குலே நீராகாரத்துலே உப்புக்கல்லைப் போட்டுக் கலக்கிக் கொண்டு வா'' ''கலத்தை எடுத்துவை'' ''குளிக்

கறத்துக்கு சுடுதண்ணி விளாவு'' ''கொட்டாயிலே கன்னுக்குட்டி தும்பையறுத்துக் கிட்டுது'' ''வாசல்லே சோத்துக்கு பண்டாரம் வந்து நிக்கிது...''

''நீ கண்டுக்காமே இல்லியே! இது என்ன, பேசினாத் தான் பேச்சா? அந்த உறுமல்தான் அவர் உன்னைக் கூப்பிடற பேரு. பேச்சுப் பேச்சுன்னு பேச்செல்லாம் வெறும் சத்தந்தானே ஆத்தா! எண்ணந்தான் பெரிசு... இரு இதோ வந்துட்டேன்...'' அவன் இறக்கைகளை அகல விரித்து எழும்பிச் சென்றான்.

—உறுமல் சப்தம் கேட்டு பூரணி கண் விழித்துக் கொண்டாள். முதலியார் அவள்மேல் குனிந்துகொண் டிருந்தார்.

மூச்சு வாங்கிற்று. பெரிய சரீரம். கையில் கையளவு அகலத்திற்கு ஒரு சிறிய புத்தகத்துள் அடையாளமாய் ஒரு விரல்.

மறுபடியும் ஓர் உறுமல்.

''அந்த முக்காலியை இழுத்துப்போட்டு குந்து...?''

முதலியார் அப்படியே உட்கார்ந்தார். உடம்பை முக்காலித் தட்டில் இறக்குகையில் மூச்சு வாங்கிற்று.

''நான் இன்னி சாயங்காலத்துக்குள்ளே போயிடு வேன்...''

முதலியார் ஒன்றும் பேசவில்லை. இரைக்கும் மூச்சு ஒருமுறை தட்டி மறுபடியும் பாய்ந்தது.

''ஆனால் போவறதுன்னு இல்லியாமே! இந்தப் போறது வரது இதெல்லாம் வெறும் பேச்சுத்தானாமே! பேச்செல்லாம் வெறும் சத்தம்தானாமே!''

முதலியார் சுவாரஸ்யத்துடன் அவளை நோக்கினார்.

''இப்போதுதான் கண்ணை மூடிக்கிட்டிருக்கறத்துலே ஓர் ஆளோடே பேசிக்கிட்டு இருந்தேன். அவன் சொன்னான். ரெண்டு பக்கத்துலேயும் றக்கை முளைச்சிருக்குது. நல்லாயிருந்தான். நமக்கு மவனாயிருக்கலாம்.''

முதலியாரின் மௌனங்களுக்கெதிரில், ஒரு படையின் ஆரவாரம்கூட அர்த்தமற்றுப் போய்விடும்.

பூரணி புன்னகை புரிந்தாள்.

''அவன் இன்னொண்ணு சொன்னான். அது இப்போதான் புரியறாப்போல இருக்குது. ஓர் ஆளுக்கு ஒரு பேரு வெச்சா அந்த ஒரு பேரோடே நிக்கல்லே, ஒவ்வொருத்தர் அந்த ஆளுக்கு ஒவ்வொரு பேரு வெச்சுக்கறாங்க...'' அவள் கொஞ்சம் தயங்கினாள். ஆனால் அவள் எசமானர் பதில் பேசுபவர் இல்லை. வீட்டில் வருடந்தோறும் திருமூல நட்சத்திரத்தில் நடக்கும் ஆராதனையில் பருப்புக் குழம்புக்கு அடுப்பின்மேல் வைத்த பெரிய அண்டாவைப் போல், மௌனம் அவள் பேசும் பேச்சுக்கள் அத்தனையையும் அவள் பேசப் பேசத் தன்னுள் வாங்கிக் கொண்டிருந்தது.

''என் ஆத்தா, என்னைச் 'சம்பூர்ணம் சம்பூர்ணம்'னு அழைக்கும். அப்புறம் அதுவே அதுக்கு நீளமாப் போச்சு. 'பூரணம், பூரணம்' பூரணியா மாறிப்போச்சு. என் ஆயா என்னைக் 'கொயக்கட்டே'ன்னு கூப்பிடுவாங்க. நான் பளையதும் கூழும் குடிச்சுட்டு குண்டாயிருப்பேன். கூழு குடிச்சவன் குண்டு; சோறு தின்னவன் சொத்தை.''

முதலியார் முகத்தில் ஒரு முறுவலின் நிழலடித்துப் பயந்து மறைந்தது.

''எங்க அண்ணன் என்னைக் 'கல்பகம்'னு கூப்பிடும். அவர் ஒரு பசு வெச்சிருந்தாரு. அதுக்குக் கல்பகம்னு பேரு.

வெள்ளைப்பசு. கண் மைக்கண். அதே மாதிரி எனக்கும் கண்ணுக்கு அடிப்புறத்துலே பொறப்பிலேயே மைக் கோடு...''

அவளுடைய பழைய நினைவுகளை வாசிக்கையில், பூரணி தான் சொல்ல வந்ததை மறந்துவிட்டாள்.

''அண்ணனுக்கு மாட்டுப் பைத்தியம். கால்வாய்க்கு ஓட்டிக்கிட்டுப் போய்த் தன் கையாலேயே தேய்ச்சுக் குளிப்பாட்டும். எனக்கு நல்லா நினைப்பு வருது; ஒருநாள் இடையன் கறக்கறத்துலே அது வாலாலே கண்ணுலே அடிச்சுட்டுதுன்னு, முழங்கையாலே அதை வவுத்திலே இடிச்சான். அவ்வளவுதான்; அண்ணன் அதன் கழுத்தை சொரிஞ்சுட்டிருந்தது, அவனை அப்படியே இளுத்துப் போட்டு, முதுவுலே குத்திக் கீழே தள்ளி, மேலே காலைப் போட்டு மெறிச்சிருக்குது பாரு, எங்களுக்கெல்லாம் ஒடம்பு வெலவெலத்துப் போச்சு. என் ஆத்தா, அண்ணாத்தைமார் ரெண்டுபேர் கட்டியணைச்சும் மாளல்லே. சோடுத்தவலை பாலும் கீழே கொட்டிப் போச்சு...

''ஹூத்து பட்டிமவனே. இந்த வாசல்லே இனி தலை காட்டாதே. பலி போட்டுடுவேன்'னு அண்ணன் கூச்சல் போட்டுது. பெத்தேன் புளைச்சேன்னு ஓடியே பூட்டான். எங்களுக்குச் சிரிப்பா வந்தது.''

மூதலியார் முகத்தில் நகையரும்பு கட்டிற்று.

''ஓரோருநாள் பவுர்ணமி இரவுலே, முழுநிலா தெருவுலே, தட்டோடுக் கூரைமேலே, ஓலைக் குடிசை மேலே, நடு வாசல்லே பால் ஒழுவற வேளையிலே, நடு நேரத்திலே, அண்ணன் வாசல் திண்ணைலேருந்து எளுந்திருக்கும், மேல்துண்டை உதறி மேலே போட்டுக் கிட்டு, கொட்டாயிலே போய் மாட்டை அவுத்துக்கிட்டுப் புழக்கடைக் கதவைத் திறந்து வயல்காட்டுக்குப் போயிடும். அப்புறம் நிலா சாயற வேளைக்குத்தான்

திரும்பும். அவங்க ரெண்டுக்குமிடையில் ஏதோ ஒரு வகையிலே பேச்சுக்கூட இருக்கும்னு எனக்கு நினைப்பு. அவர் ஏதானும் ஊமைச்சிரிப்பு சிரிச்சுக்கிட்டே வருவாரு. அதுக்குக் கண் பளபளன்னும், நம்ம மனுச சாதியைப் பத்தி ரெண்டுபேரும் வம்பு வளர்த்தியிருப்பாங்கன்னு இப்போ எண்ணறேன்.

''மாடு கல்சட்டியாட்டம் குள்ளமா குறுக்குலே வளர்த்தி. கால்கூட, அதைக் கட்டற முளையாட்டமே குட்டையாயிருக்கும். முதாறு ஆவ ஆவ பாலு கள்ளிச் சொட்டாட்டம் விளுந்த இடத்தை விட்டு நவராமே, கல் கண்டு கட்டியாட்டம் தித்திச்ச நாக்குல தேனொழுவும்.''

பூரணி உள் நோக்கிய பார்வையுடன் தன்னுள் சிரித்துக்கொண்டாள். முதலியார் தன் சமுத்திர மௌனத்துள் காத்திருந்தார்.

ஒருநாள் நாங்க சின்ன பசங்க மண்ணுலே இட்டிலி, புட்டு சுட்டு தோட்டத்துலே விளையாடிட்டிருந்தோம். சடால்னு கப்பு, கீளே தலையைப் போட்டு காலை முறிச் சிட்டு மிரள மிரள முளிச்சிட்டு புஸ் புஸ்ஸுனு மூச்சு விட ஆரம்பிச்சுட்டுது. நான் அப்பொ இம்மாத்தம்...'' கையைத் தாழ்த்திக் காண்பித்து— ''நான் அப்போ இம் மாத்தம் இருப்பேன். அண்ணன் பாத்துட்டு, ஆத்தாவை அவசர அவசரமா அடுப்புலே சுடுதண்ணி வெக்கச்சொல்லி எங்களை வீட்டுள்ளே துரத்தினாரு. நான் மாத்திரம் ஏன் அவசரம்னு மயங்கி மயங்கி நின்னேன். நான் சுருக்க அடங்கமாட்டேன். அண்ணன் என்னைச் சப்பையிலே உதை கொடுத்து வண்டையா திட்டி உள்ளே விரட்டிச்சு. மத்தவங்கள்ளாம் அண்ணன் என்னைப் போட்ட இரைச் சல்லே பயந்து தெருவுக்கு ஓடிட்டாங்க. எனக்கு ரொம்ப ஆத்திரம். சமயல் வூட்டுலே நுளைஞ்சு அடுப்புமேல் ஏறி,

அங்கே கொல்லைப்புறமா ஒரு ஜன்னல். எட்டிப் பிடிச்சுக் கிட்டுப் பார்த்தேன். ஆனால் சரியா விளங்கல்லே, நடுவுலே முருங்கை மரம் மரமாட்டம் நிக்குது.

"ஆத்தா கப்புவை மூணுமுறை சுத்திவந்து கீழே விழுந்து கும்பிட்டாங்க. அண்ணன் கீழே குந்தி கப்புவை முதுகைத் தடவிக்கிட்டிருந்தது. கப்பு கழுத்தை முறிச்சு அண்ணனையே பாக்குது. ஆளு என்ன நடக்குதுன்னு தெரியல்லே. நான் மெறிக்கிற மெறிலே அடுப்பு இடிஞ்சு நான் தொபகடீர்னு விழுந்து எழுந்து வாரியடிச்கிக்கிட்டு ஓடினேன். மத்தியானம் சோத்துக்குத்தான் திரும்பி வந்தேன். ஆத்தாகிட்டே சக்கையா உதை தின்னேன். நல்ல வேளையா அண்ணன்வரைக்கும் போவல்லே. அண்ணனுக்கு நேரமில்லே. அண்ணன் கப்புவையும் கன்னுக்குட்டியையும்தான் சுத்திக்கிட்டிருந்தாரு."

ஆகாயத்தில் தங்க இலைகளைத் தூவினாற்போல் தென்னையின் பின்னிலிருந்து வெளிப்பட்டு ஒரு பக்ஷிக் கூட்டம் பளபளத்துக்கொண்டு பறந்து சென்றது.

முதலியார் கழுத்தைக் குனிந்து அதைப் பார்த்தார். அவருக்கு அங்கேதான் நினைவோ, அல்லது வேறெங்கோ? புத்தகத்தில் அடையாளம் வைத்தபடியே கைகள் தொப்பைமேல் கூம்பின.

இந்தத் தென்னைமரம் இருக்குதே—இதுக்குன்னு இந்தப் பூமிலே விதையா தெளிச்ச எந்த மரமா செடியா இருந்தா என்ன?—எல்லாமே அது அதுங்களுக்கு ஏத்தபடி கையையும் காலையும் ஆட்டறாப்பிலே இலையும் மட்டையும் கிளையுமா விரிச்சு போட்டுக்கிட்டு என்னத்தையோ எட்டிப் பிடிக்கிறாப்போலே உயரமா வளருதுங்களே, என்னாத்தை, அப்படி எட்டிப் பாக்குதுங்க? கிளங்கு, வேர்க்கடலை முள்ளங்கி வகையாயிருந்தா கீழுக்கா

துருவிக்கிட்டுப் போவுதுங்க. கொடியாயிருந்தா நெடுக்கப் படருதுங்க, வரிந்து இதுங்க எல்லாம் சேர்ந்து உயர, தாழ, நெடுக்க, குறுக்க இந்தப் பூமியை அளவெடுக்கு துங்களா தையல்காரன் மாதிரி? முடியுமா? முடியுதோ இல்லியோ, சும்மாமாத்திரம் இருக்கிறதில்லே பூமிலே விதையா தெளிச்ச எதுவும்...

"ஆனா கப்புவை தாயும் கன்னுமா, தானே, தான் உதை குடுத்த இடையன் கிட்டவே ஓட்டிக் கொடுக்கிற நாள் வந்துட்டுது. எல்லாருக்கும் ஒரே நாளாயிருக்குதா இந்த உலகத்துலே? எத்தனையோ மனக்கஷ்டம், பணக் கஷ்டம் எல்லாம் திடீர்னு வீட்டுலே வந்துட்டுது. அப்போ எனக்கென்ன விவரம் தெரியற வயசா? ஆத்தா, கட்டபறையாட்டம் போட்டிருந்த காசுமாலை, கச்சட்டிகை, கண்டசரம், கல்லைக்கட்டி விட்டாப்போலெ காதுமடலை இளுக்கும் சேப்புக்கல்லுத் தோடு எல்லாம் எங்கேயோ ஒண்ணொண்ணா அண்ணன் கயட்டிக்கிட்டுப் போயிட்டுது. போனது திரும்பியே வல்லே. ஒரொரு நாளும் வூட்டுலே பழிசண்டை. ஆத்தா பூனையாட்டம் இருக்கும். இதுக்கு எங்கே வந்தது இத்தினி வாய்? எங்களுக்கே ஆச்சரியமாயிருக்கும். தொட்டத்துக்கெல் லாம் சொட்டிக்கிட்டேயிருக்கும் அண்ணனுக்குக் கொடுக்கு எங்கே போச்சு?

"அப்புறம் ஒரு நாள் சாயந்திரம் இடையன் படியேறி வந்தான். அண்ணன் கைக்கு நோட்டு ஒண்ணு ரெண்டு மாறிச்சு. மாட்டையும் கன்னையும் ஓட்டிக்கிட்டுப் பூட்டான். கப்பு தும்பைத் திமிறித் திமிறி, திரும்பித் திரும்பிப் பார்த்துக்கிட்டே, கத்திக்கிட்டே போவுது. அண்ணன் வாசல்லே, கண்மேலே சவுக்கத்தைப் போட்டு நிக்குது. கப்புவையும் கன்னையும் ஊர் தாண்டின பேரத்துக்கு ஓட்டிக்கிட்டே போயிட்டான். அந்த நாள் மறக்க முடியாது.

"அண்ணன் அன்னி ராவுலே சாப்பாட்டுக்குக் குந்தறப்போ, என்னைப் பக்கத்துலே கையாலே தனக்குத் துணையாட்டம் அணைச்சுக்கிட்டு சொல்லிச்சு: "நான் இன்னிக்கு கொண்டைசேவல் கூவுற வேளைக்கு ஒரு கனவு கண்டேன். கப்பு வாசலுக்குக் குறுக்கே படுத்துக்கிட்டு குளம்பாலே என்னைத் தட்டித் தட்டி, போவமாட்டேன்னு தலையை ஆட்டுது. சனியன் கனவுலேகூட வந்து கஸ்டத்தைக் கொடுக்குது!—"

முதலியார் பெரிதாய் இரண்டு பெருமூச்சுக்கள் விட்டார். சேர்ந்தாற்போல் ஒரே நிலையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பதுகூட அவர் பருமனுக்கு சிரமந்தான்.

ஆனால் தேகந்தான் பருமனேயொழிய மூளை மாத்திரம் சிட்டுக் குருவி.

பாம்பு மிட்டாய் பம்பாய் மிட்டாய்
தேனு மிட்டாய் பாலு மிட்டாய்
கூடை மிட்டாய் குண்டு மிட்டாய்
தம்பிடிக்கு ஒண்ணுதான் வாயிலே
போட்டா தண்ணிதான்......

என்று பாடிக்கொண்டு போகும் மிட்டாய்க்காரனைப் போல், எதிராளி பேசிக்கொண்டிருக்கையிலேயே, ஒரொரு வார்த்தையிலும், சில சமயங்களில் ஓசைகளி லிருந்துகூட சூக்ஷ்மமான பாகுகளை இழுத்து விசித்திர மான வேலைப்பாடுகள் உடைய சிந்தனைக் கோலங்களை யும், கூடுகளையும் அவர் எண்ணம் முடைந்துவிடும்.

இந்த உலகத்துலே ஆதாரமில்லாதது எது? கனவு களையும் கூட்டித்தான், சம்பந்தமில்லாமலா கனவு வரும்? கனவெல்லாம் கனவா? சிலந்தி தன் உடம்பிலே சரசரன்னு இழையைக் கறந்துகிட்டே கீழிறங்கி அந்தரத்துலே தொங்குது. ஓணானாட்டம் உயர ஏறுது. அசப்பிலே நூல்

கண்ணுக்குப் படுதோ? அப்படித்தான் கனவையும் பிடிச்சுக்கிட்டு நாம் தொங்கறோம். நம்மிலிருந்துதான் கனவு உண்டாவுது, கனவுக் கூட்டைக் கட்டி நடுவுலே சூந்தி வாழ்ந்து அகப்பட்ட இரையைத் தின்னு, அறுந்த இடத்தை முடிஞ்சா சரிப்படுத்தி, முடியாட்டா அழிச்சுட்டு, இன்னொண்ணு இன்னொரு இடத்துலே, கட்டி, ஓயாமெ ஒழியாமே...

முதலியார் பெருமூச்செறிந்து புத்தகத்தைப் பிரித்தார்.

''ஆமாம்—'' பூரணி அலுப்புடன் தலையைத் தலையணையில் முன்னும் பின்னுமாய் ஆட்டினாள்.

''போவற வேளைக்குப் புண்ணியத்துக்குப் படிக்க திருவாசகம் கொண்டு வந்தியாக்கும்!—''

முதலியார் புத்தகத்தை மூடினார். சம்புடம் போல அவர் கைக்குள்ளேயே மறையும் அவ்வளவு சிறிது.

''நான் எந்தத் திருவாசகத்தைக் கண்டேன்? எந்தத் தலத்தைத் தரிசனம் பண்ணினேன், நீயாவது என்னென்னமோ சாஸ்திரம் படிச்சிருக்கே, பாடங் கேட்டிருக்கே, எங்கெங்கோ போனே, மனம் போனபடியெல்லாம் போய் மனம் திரும்பினப்போ திரும்பி வந்தே—

இந்த வூட்டிலே நான் நுளைஞ்சதிலிருந்து எந்தத் தேரு திருநாளுன்னு என்னைக் கூட்டிப் போயிருக்கே? எனக்கு அதனாலே அலுப்பில்லே; ஆனா நினைப்பில்லியா? ஆனா, வேலை அதிகமாயிருந்தா அதுவுமில்லை.

தேர்!

அடுக்கடுக்காய் மேலேருந்து அடிவரை குலுங்கி அசைஞ்சாடி அசைஞ்சாடி இத்தனைபேர் சேர்ந்து ஒரு பக்கம் இளுத்தா ஒருபக்கம் திரும்பி 'டிச்'சிலே விளுந்து எளுந்து, ஆடி அசைஞ்சு எந்தத் திருப்பத்திலோ ஒரு

பலியாவது வாங்கிக்கிட்டு நிலைதிரும்பற நாளு நிலை யில்லே. இது இப்படியிருந்தால், இந்தப் பூமிக்கு எப்படி யிருக்கும்? இதுவும் ஒரு தேர் தானே!

"மாலையிலே போய் மாரியம்மன் கோவிலுக்கு விளக்கு வெப்பேன். மாடு கன்னு போட்டால் எல்லம்ம னுக்கு பொங்கலிடுவேன். எனக்குத் தெரிஞ்சது அதுதான், எனக்கு நல்லா நினைப்பு இருக்குது. நான் கண்ணாலம் ஆகி இந்த வீட்டுள்ளே நுளைஞ்சு என் மாமியாரைக் காலுலே விளுந்து கும்பிட்டப்போ என்னா சொன்னாங்க தெரியுமா?

"சின்னப் பொண்ணே!" பூரணி சிரித்துக்கொண் டாள். "அவங்க என்னைச் சின்னப் பொண்ணுன்னுதான் கூப்பிடுவாங்க. 'சின்னப் பொண்ணே இந்த வீட்டுலே மூணு மறக்காதே.

"எந்த ஊர் கொள்ளை போனாலும் உன் கையாலேயே வெள்ளி முளைக்கிற வேளைக்குத் தெருவாசல்லே சாணி தெளி. தண்ணி தெளிக்கறதை யாரும் பார்க்கக்கூடாது. அப்புறம் உலைக்குக் கொட்டறத்துக்கு முன்னே பானை யைச் சுத்தி அடுப்புலே நாலு மணி அரிசி எறிஞ்சிட்டு உலையில கொட்டு. மாலையில தெருமாடத்துல சாணி தெளி. தண்ணி தெளிக்கறதை யாரும் பார்க்கக்கூடாது. அப்புறம் உலைக்குக் கொட்டறத்துக்கு முன்னே பானை யைச் சுத்தி அடுப்புலே நாலு மணி அரிசி எறிஞ்சிட்டு உலையிலே கொட்டு. மாலையிலே தெருமாடத்துலே சாணி மேலே அகல் விளக்கு வைக்க மறவாதே."

அவ்வளவுதான் என் மாமியார் எனக்குச் சொன்னாங்க. நான் இன்னிவரைக்கும் செய்து வரேன், இன்னிக்கு உனக்கு சொல்லிவிட்டேன்.

"அப்புறம் களுத்துலே மாலையோடே கையிலே கொண்டைக்கிளியோடே, என்னைக் கையைப் பிடிச்சு

சமையல் வூட்டுள்ளே கூட்டிக்கிட்டுப் போனாங்க. அங்கே இருட்டோரத்துலே ஒரு பானையைத் திறந்து என்னை அது உள்ளே கையை விட்டுப்பார்க்கச் சொன்னாங்க; உள்ளே புடவையிருந்திச்சு.

"சின்னப் பொண்ணே, பூவாடையைத் தொட்டுக் கண்ணுலே ஒத்திக்கோ. இதுலே ரெண்டுபேர் இருக்காங்க. ஒண்ணு பெரிய பொண்ணு, உனக்கு மூத்தாரு. இன்னொண்ணு எனக்கு ஒரு மவள் இருந்தது. கண்ணாலம் ஆவறத்துக்கு முன்னாலே பூட்டாள். அதுனாலே கன்னித் தெய்வம் ஒண்ணும் கல்லாட்டம் தாலி கட்டின தெய்வம் ஒண்ணும், சேர்ந்து இந்த வூட்டைக் காக்கறாங்க. வருஷத்துக்கும் மறவாமே இவங்களை கும்பிட்டு வந்தா இந்த வூட்டுக்கு ஒரு குறைவுமில்லே. இவங்க ரெண்டுபேரும் இறந்துபோறப்போ, போற வயசில்லே. அதுனாலே இவங்க இறந்துட்ட மாதிரியே நான் நினைக்கல்லே. இங்கேயே இருந்துட்டுதான் இந்தக் குடும்பத்தைக் காத்து வராங்க. இவங்களை நீ மறக்காதே. பாரு நான் சொல்லுறேன், கவுளியடிக்குது."

முதலியார் தன் மூத்த மனைவியை ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொண்டார். இத்தனை வருடங்கள் கழித்து அவள் உருவத்தை வருவித்துக் கொள்வதே சிரமமாய் இருந்தது. அவளைவிட மனதில் அழுத்தமாய்ப் பதிந்தது அந்தக் கலியாணத்தின் வீமரிசைதான். தெருவை யடைச்ச பந்தலும், அடுக்கடுக்காய் நவர்ந்த பச்சை ராந்தல் விளக்கும், வண்டி வண்டியாய் உடைஞ்ச கலர் கோலி, சோடா புட்டியும், ஊர்வலத்துக்காக 'பெஸலா' உழக்குவாக்கத்திலேருந்து ஆள் வந்து ஜோடனை பண்ணின பூப்பல்லக்கும்......

எல்லாம் என்னத்துக்கு? யாருக்கு ஆச்சு?

சாந்திகூட கழியல்லே. கலியாணம் ஆகி ரெண்டு மாதத்தில் மூணுநாள் காயலில் இறந்தூட்டா.

ஏதோ அவள் இறந்து போனதுக்கு புது மருமவப் புள்ளைதான் காரணம்போல், அந்த வூட்டு மனஸ்தாபமும், வீட்டுக்கு முதல் புள்ளேன்னு ஆசைமேல் அப்பன் செலவு செஞ்சு வைச்சுப்போன கடனும்தான் மிச்சம். இந்தக் கடனெல்லாம் அடைச்சு காலை ஊணித் தலை நிமிர்ந்து, இன்னொரு வூட்டுக்குப் போய் இன்னொரு பொண்ணைக் கேக்கறதுக்குள்ளே நாலு வருசம் ஓடிப் போச்சு. அப்படியே பண்ணினாலும் இந்தக் கண்ணாலம் அந்தக் கண்ணாலம் மாதிரி செய்ய முடிஞ்சுதா? பாத்தியா கண் மூடிக் கண் திறக்கறத்துக்குள்ளே, மூச்சுவிட்டு மூச்சு கூட்டுதுக்கு முன்னே, எத்தனை நாள், என்னென்னெல்லாம்! ஓடுது, ஓடுது, அது பாட்டுக்கு ஓடுது.

யாரோ மாடிப் படியேறி வாராங்க. மேல் மூச்சு வாங்குது.

யாரு? மூத்த மருமவதான் நிறை வயத்தைத் தூக்கிட்டு வரா, தூக்கமாட்டாமே. வந்து மாமியார் கையை எடுத்துத் தன் கண்ணுலே புதைச்சுக்கிட்டு விக்கி விக்கி அழுவறா!

"பாஞ்சாலி இதென்னாது?"

"அம்மா! அம்மா!" என்று கதறுவது தவிர பாஞ்சாலிக்கு வேறு வார்த்தைகள் எங்கே?

"என்ன அம்மே இது? சமாளி... ஆவாது."

"அம்மா! அம்மா!"

ஆமா, பாஞ்சாலிக்கு அவதான் மாமியாரு, அவதான் ஆத்தாகூட. அப்பன் ஆத்தா ரெண்டு பேருமே பாஞ்சாலிக்கு இல்லை. எங்கேயோ மாமன் வூட்டே வளர்ந்து வந்தா. மாமன் தருமத்துக்கு வளத்தேன்னு கூடவே காட்டி வந்தான். அது அத்தைக்கு ஆவல்லே புள்ளைக்குக் கட்டி, பொண்ணு ஆளாவறத்துக்குள்ளே அத்தை, வூட்டுக்குக் கூட்டி வந்தூட்டா.

பாஞ்சாலி இங்கே வந்துதான் வேலையெல்லாம் கத்துக்கிட்டா. இங்கேதான் ஆளானாள். இங்கேதான் தன் குட்டிங்களைப் பெத்தாள். தான் போனப்பறம் தன்னிடத்துலே பாஞ்சாலி இங்கேதான் இருக்கணும். இருக்கப்போறா. என்னைப்போலேயே தனக்கு வேளை வந்ததும் பாஞ்சாலி இங்கேதான் போவப்போறா. பாஞ் சாலி இந்த வூட்டுக்கு மருமவ. பாஞ்சாலி இந்த வூட்டுக்குப் பொண்ணு. பாஞ்சாலி நல்ல பொண்ணு...

"அழுவாதே பொண்ணே. குழந்தைக்கு ஆவாது. நான் சொல்லுறேன் கேளு இங்கே வா."

பாஞ்சாலி குழந்தை மாதிரி அருகே வந்தாள். பூரணி, பாஞ்சாலியின் மேலாக்கின் கீழ் அடிவயிற்றில் கை வைத்தாள். கையடியில் உயிர்ப்பிண்டம் புரண்டது. ஸ்பரிசத்தின் அதிர்ச்சி, திடீரென அவளுடைய வெளி நினைவை மூர்ச்சையில் கொண்டுபோய் விட்டது. அவள் எங்கோ படிப்படியாய் அலை அலையாய்த் தாண்டிப் போய்க்கொண்டிருந்தாள். விழுந்தடித்து ஓடும் மாட்டின் வாலைப் பிடித்துக்கொண்டு தொங்குவதுபோல், உள் நினைவைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அவள் மூர்ச்சை வழி இழுபட்டுச் செல்கையில் போகும் வழியெல் லாம் அவள் மேல்தோல் சட்டைகள் ஒவ்வொன்றாய் உரிவதுபோல், வருடங்கள் வயதுகள் கழன்று விழுந்து கொண்டு இளையவளாய் ஆகிக்கொண்டிருந்தாள். திடீரென அவளை இழுத்துச் செல்லும் மாட்டின் எதிரே யாரோ பூமியிலிருந்து முளைத்துத் தோன்றி அதன் இரு கொம்புகளையும் கையால் பிடித்து இழுத்து அதன் வேகத்தை நிறுத்தி அதைச் சட்டென அப்பால் பிடித்துத் தள்ளியது போன்றிருந்தது. பூரணி பிடி தளர்ந்து கீழே வீழ்ந்தாள். அவள் கைகள் இரு பாதங்களின்மேல் வீழ்ந்து இறுகப் பற்றின. கண்கள் அவள் கணவன் முகத்தில் விழித்தன.

ஆனா அவரு இப்போ இருக்கற மாதிரியில்லே. இப்போத்தான் ரெண்டுபேருமே, கோயில் உற்சவத்துலே முன்னாலே ஆடிக்கிட்டுப் போற பூதம்மாதிரி பெருத்துட்டோமே! அதுவும் அவரு, ஆனாலும் கைலாச வாகனம் மாதிரி குறுக்கே ஒரேயடியா அகண்டுட்டாரு. இப்போ ஆள் ஒக்கார ஒருநாழி. எழுந்திருக்க என்பாடு உன்பாடு. ஆனால், புடுங்கியெடுத்த மாதிரி மூஞ்சிலே ஒரு முரட்டுத் தனம் இன்னமும் இருக்குது. இந்தக் கண்ணாலே இப்படிப் பார்த்தாலும், இப்போ இந்த உள்பார்வையிலே இந்த வூட்டுள்ளே நான் நுளைஞ்சப்போ எப்படி இருந்தோமோ அப்படியேதான் இருக்கோம். இது ஒரு ஆச்சரியமில்லே?''

அவளைத் தூக்கி எதிரே அவள் புருசன் நிறுத்தினார். கண்ணை நிமிர்ந்து பார்க்கத் திகிலாயிருக்குது. அங்கே கோவம்னு இல்லே; ஆசைன்னு இல்லை. ஆனா ஒரு நெருப்பு. அதுக்கு உடம்பு பயங்கண்டு கூசினாலும் உள் நினைவு தைரியமா எதிர்முழிப்பு முழிக்குது பிடுங்கின வேராட்டம், முண்டும், முடிச்சுமாய், நரம்பு புடைச்ச மாரில் சுருட்டை சுருட்டையா மயிர். என்னை அவர் புடிச்சு இறுக்கறப்போ, அவர் தோளிலே நான் மாவாய் குழைஞ்சு பூட்டாப்போல் இருந்தது.

அந்த உடம்பிலே, அந்த முவத்திலே அழகில்லே, மெதுவில்லே, வெறும் பலந்தான். அதனாலே அதுக்குக் குறைவில்லே. எத்தனையோ நாள் ராவுலே, இருட்டுலே, ஆசை மூச்சிறைப்பில், அந்த உடம்பைத் தேடி உணர்றப்போ, அதில் ஒடத்தில் ஒடுங்கறமாதிரி ஒரு பத்திரம், தெம்பு, தைரியம், எல்லாம் இருக்குது. அதன்மேல் எனக்கு ஒரு அதிகாரம்கூட......தோணுது.

''ஆனால் இந்த பகல் வேளையிலே அவங்கவங்க வேலையிலே அவங்கவங்க முனையறப்போ, ஆளே மாறிப்பூடறாங்க. சில நேரங்களிலே வேத்தாள் மாதிரி,

அடையாளங்கூடக் கண்டுக்காத வெத்துப் பார்வையை நினைக்கறப்போ—அட, இந்த உடம்பையா ராவுலே நான் இப்படி எனக்குச் சொந்தம் மாதிரித் தடவி இதுமேலே விளுந்தேன். இல்லே, இன்னிக்கு இனிமேலே இன்னிலிருந்து தொடக்கூடக் கூடாதுன்னு மனசை திடம் பண்ணிக்கிட்டு ராவுலே திரும்பிப் படுத்தாலும், செவுத்திலே பாம்பு வளிஞ்சு இறங்கற மாதிரி இருட்டிலே அந்தக் கை நீளமா தேடி வந்து, மேலே விழுந்து புடிச்சுத் தன்பக்கமா இளுக்கையிலே வைராக்கியம் எல்லாம் எங்கே பறந்தோடிப் போவுது?

''அந்த ஆளுடைய சுபாவமே அப்படின்னு நாளாவ ஆவ, கண்டுக்கறோம். ஆனால் கண்டுக்கற வரைக்கும் சொல்லு. ஆனா இந்தப் பூமிலே எல்லாமே நமக்குப் புரியுதா? ஆனா புரிஞ்சுதான் என்ன ஆவணும்? நமக்கு என்ன வேணும்? நம்மைத் தொட்டுத் தாலி கட்டின புருஷன் என் மானம் அவன் கையிலே, அவன் சுகம் என் கையிலே. மாலையிலே வந்தா அண்டாவிலே வென்னீரை விளாவி பகல் எல்லாம் உழைச்ச நோவு தீர உடம்புக்கு விட்டு, முதுவு தேச்சு, நடுவாசலில் கிண்ணியை வைச்சு ஆவி பறக்க முளிமுளியா சோறுவட்டி, அதுலே புளி மட்டா, காரம் மட்டா காச்சி ரஜம் விட்டு கடிச்சுக்க கிச்சலித் துண்டைக் கிள்ளிப் போட்டு விசிறிக்கிட்டு நிக்கறத்தைவிட, நமக்கு வேறு என்னா தெரிஞ்சாவணும்? இந்த நினைப்பெல்லாம்கூட இப்போதான். அப்போ அதுக்குக்கூட பொழுது ஏது?

''அப்பறம் ஒருநாள் வவுத்துலே வித்தை வாங்கிக் கிட்டோம்னு நிச்சயம் ஆன அப்புறம் அது நம்ம வவுத்துக் குள்ளேயே நமக்குப் புரியாமலே முளைச்சு முளுசு ஆகி வேளை வந்ததும் ஒருநாள் நம்மை விட்டுக் கயண்டு தானும் தனியா, ஒண்ணா, வீல்னு கத்திக்கிட்டு விளுந்தப்

புறம் தொப்புள் கொடியையும் துண்டு போட்டப்பறம் கூட நம்ப என்னத்தைப் புரிஞ்சுக்கிட்டோம், என்ன புரியல்லே?

''கொளந்தையை மாரண்டை கொண்டு போவறத்துலேயே, பால் காம்புலே முத்திட்டு நிக்குது அவன் காம்புலே வாயை வெச்சுக் கடிச்சு இளுக்கறப்போ, இந்த உடம்புலே இரத்தம்தான் ஏன் ஓடுது? எனக்கு என்னாத்துக்கு இம்மாத்தம் ரத்தம், எல்லாமே பாலா மாறி, எல்லாத்தையும் இவனுக்குக் கொடுத்தூட மாட்டேனான்னு அவா உடல்லே துளும்பித் துடிக்குது.

''ஒரோரு கொளந்தையும் பொறக்கறப்போ எல்லாம் இதே அவஸ்திதான். சந்தோஷம் தாங்க முடியாத ஒரு கஸ்டம். அப்பறம் ரெட்டைக் கொளந்தைங்க பிறந்திருச்சே, அப்பொத்தான் இந்த வேதனை சொல்லிக்க முடியல்லே. ரெண்டு முலையிலும் பாலை உறிஞ்சிட்டு ரெண்டும் தொங்கும். அதுங்களைப் பன்னிக்குட்டியாட்டம் அப்படியே ரெண்டு கையிலும் தாங்கிட்டே நாலு கையா வேலையை செஞ்சி வளைய வரணும். அதுங்க குடிச்சமாதிரி மத்ததுங்க குடிக்கல்லே. ஆனா தக்கல்லே; தவுள்ற வயஸு வந்ததும் வாசல்லே போய் மண்ணைத் துன்னுடுங்க. என்ன பண்ணாலும் தடுக்க முடியல்லே. ரெண்டுக்கும் வவுத்துலே புத்து வைச்சுட்டுது; ரெண்டும் ஒரே நாளுலே பூட்டுது. மூணு நாளைக்கு மூலையிலே சுருண்டு படுத்து முந்தானையை மூஞ்சிலே போட்டுக்கிட்டு அளுது அளுது முளி வீங்கிப் போனாலும் மாரிலே பாலு கட்டி படுத்தின பாடு தாள முடியல்லே. கல்லாட்டம் கனத்துகிட்டு மார் வீங்கியே போச்சு. நல்ல வேளையா அன்னிக்கு எதிரிலே வாத்தியார் அய்யர் வீட்டு அம்மாவை முகமாத்தியாக் காணப் போனேனோ, புளைச்சேன். இதுவரைக்கும் எதிர்வீட்டுக்கு நான் போனதில்லே. அவங்க அப்போத்தான் வேறு ஊர்லேருந்து

மாத்திவந்து பத்து நாளோ என்னவோ ஆவுது. ராவோடு ராவா அந்த அய்யர் வண்டியும் சாமானும் குடும்பமுமா இறங்கி யாரையோ சிபாரிசு கூட்டிக்கிட்டு நம் வீட்டுக் கதவையிடிச்சாரு.

''முதலியாரே, நான் இங்கே வாத்தியாரா வந்திருக்கேன். எதிர்வீடு உங்க வீடு காலின்னு கேள்விப்பட்டேன். தங்கறத்துக்கு இடங் கொடுக்கணும்''னு கேட்டாரு. வூட்டுக்கு விளக்கேத்தி வெக்க வந்தவங்களை வேணாம்னு. தள்ள எந்த நாக்கு எளும்பும் அது என்ன நாக்கு?

'''இன்னியாட்டம் அய்யரு தாயார் தாழ்வாரத்துலே குந்திகிட்டு மருமவளை என்னவோ பேசிட்டிருந்தாங்க. மருமவள் தூணிலே சாஞ்சிட்டு கண்ணுலே தண்ணி விட்டிட்டிருந்தது.

''எல்லாத்துக்கும் பூர்வ ஜன்ம புண்ணியம் வேணு ஆனால் நீயிருக்கிற மாதிரி இருக்கையே அதுக்கு எவ்வளவோ பாபம் பண்ணித்தான் இப்படி நேர்ந் திருக்கு'' என்கிறாங்க அந்த அம்மா மருமவளை.

''ஏன் இந்த அம்மா இப்படிப் பேசறாங்கன்னு ஆத்திரமா வந்திருச்சு. இருந்தாலும் நம்ம சமயத்துலே வரல்லே. நளுவப் பார்த்தேன். ஆனா, என் தலையைக் கண்டூட்டாங்க. 'இங்கே வாடி பொண்ணே'ன்னு என்னைச் சாச்சிக்கு இளுத்துட்டாங்க.

''நீயா, யாரு, வீட்டுக்காரிதானே? வா, ஒக்காரு அங்கே பாத்திரத்து மேலே பட்டுக்காதே''

''என்னம்மா, சின்னம்மா கண்ணாலே சிந்திக்கிட்டு நிக்குது?''

''ஆமா''— 'பெரியம்மா சலிச்சுக்கிட்டாங்க.

"இவாள் எல்லாம் ஏன் கொழந்தை குட்டிக்கு ஆசைப் பட்றாளோ தெரியல்லே!"

அப்படி அவங்க சொன்னதுதான் எனக்கு என்னன்னு தெரியல்லே. ஒரு அழுகை வந்திருச்சு பாரு... விக்கி, விக்கி உடம்பு அடக்க முடியல்லே, அப்படிக் குலுங்குது.

பெரியம்மாவுக்குத் திக்கினு ஆயிடுச்சு. ஆனால் சின்னம்மா என்ன கண்டுகிட்டாங்களோ தெரியல்லே, சரசரன்னு உள்ளே போய் ஒரு துணி மூட்டையை எடுத்து வந்து, என் மடியிலே வெச்சாங்க. அதிலே, ஒரு பிள்ளைப் புழு வாயை 'ஆவ், ஆவ்'ணு திறந்திட்டு நெளியுது.

அதை அப்படியே வாரி மாரோடு அணைச்சுட்டேன், பாலு கொட்டுது. கொளந்தை வாயை வெச்சுக் கவ்விக் குடிக்கற சொகத்துலே நான் என்ன செய்தேன்னு எனக்கே தெரியாது. மார்த்துணி கயண்டு கீழே நளுவிட்டது நெனைக்கிறேன். ரவிக்கை முடிச்சை அவுத்துட்டேன், கட்டின பாலு கயண்டு ஓடுது அம்மாடி! அப்பாடி! சொகத்துலே எனக்குக் கண்ணு சொருவிப்போச்சு. செவுத்துலே அப்படியே சாஞ்சிட்டேன். என் கண்ணுலே தண்ணி சில்லுன்னு ஓடிக்கிட்டே யிருக்குது. நான் வெக்கங் கெட்டுப் பூட்டேன். என் அலங்கோலத்தைச் சின்னம்மா பாத்து அவசர அவசரமா ஓடிப்போய் வாசக்கதவைச் சாததித் தாப்பாள் போட்டாங்க.

பையனுக்கு மழைத் தப்பளையாட்டம் வவுறு விடாய்ச்சிக்கிட்டாலும் புடி விடல்லே. குடிக்கிறான் அட்டையாட்டம் ஒட்டிகிட்டு. குடிக்கட்டும், குடிக் கட்டும், நல்லா குடிக்கட்டும், நான் பெத்தாத்தான் மவனா? நான் பெத்ததுங்கதான் குழியிலே ஒண்ணை யொண்ணு கட்டிகிட்டு உறங்குதே. எங்க பாலை இதுக்குக் கொடுன்னுதான் அப்படி உறங்குதோ

என்னவோ. யார் பெத்தா, யார் வெச்சா என்ன? இதோ எதிரே காயா காச்சுத் தொங்குதே இந்த முருங்கை மரத்தை நானா வெச்சேன்? இல்லாட்டி என்னைக் கேட்டுத்தான் மொளைச்சுதா? ஆனால் அதன் காயை அறுத்துப் பொரியலும் குளம்புமா மாத்தி மாத்தி ஆக்கித் துன்னல்ல?

கொஞ்ச நேரமானப்புறம் அந்தப் பெரியம்மா கேட்டாங்க. எப்பவுமே கொஞ்சம் அதிகாரம்தான்.

''என்னடி உன் பேரு?''

''பூரணி.''

''அன்னபூரணியா?''

''இல்லேம்மா, சம்பூரணம்:''

அன்னி ராவுலே ஒரு கனா வந்தது. எங்கே பார்த்தாலும் சோத்தை வடிச்சு மலைமலையாக் குவிச்சிருக்குது. அதன் பால் வெள்ளை கண்ணைப் பறிக்குது! இம்மாத்தம் அரிசியை அவ்வளவு சுத்தமா குத்தி நோம்ப எத்தனை பேர் வேண்டியிருக்கும்! நான் அந்தச் சோத்துமலை ஒண்ணு மேலே முளங்காலாழத்துலே நின்னுகிட்டு, யார் யாரோ வராங்க ஆண் புள்ளையும் பொம்புள்ளையுமா தெரிஞ்சவங்க தெரியாதவங்க எல்லாம். அவங்களுக்கு ரெண்டு கையாலேயும் அள்ளி அள்ளிப் போடறேன். மடியிலும் கையிலுமா ஏந்திட்டுப் போறாங்க. ஆனால் நான் மூணு நாள் பட்டினியிலே இருக்கேன். என் வவுத்திலே ஒரு பருக்கையில்லே, எனக்குத் தெரியுது. ஆனா எனக்குப் பசியேயில்லை. இவங்க வவுறு நிறையுது என்கிற எண்ணத்துலேயே என் பசியாறிப் போயிட்டுது.

சாரி சாரியா வாங்கிட்டுப் போறாங்க. அப்படியும் ஒண்ணும் ஏழை பாழையில்லே. ஆனா என்கிட்டே வாங்கிட்டுப் போவணுன்ற எண்ணத்துலேயே வாங்கிட்டுப் போறாங்க.

அப்போ சட்டுனு அவங்களுலே ஒரு ஆள் ஒதுங்கி நிக்கறான். நான் கையிலே சோத்தை ஏந்திட்டு நிக்கறேன். ஆனா அந்த ஆள் கை நீட்டி வாங்கல்லே. என்னையே கண் கொட்டாமல் பாத்துட்டு நிக்கறான், அவன் மொவத்தைப் பார்த்ததும் எனக்கு...''

''அம்மா! அம்மா!!''

காதண்டை பாஞ்சாலி கூப்பிட்டதும் பூரணி விழித்துக்கொண்டாள்.

''ஓ! நான் தூங்கிட்டேன் திடீர்னு—''

''அம்மா போட்டோக்காரு வந்திருக்காங்க.''

''வேணாம்னு சொல்லி அனுப்பிச்சிடு,''

''ஏம்மா! நீ சொல்லித்தானே வந்தாங்க—''

''ஆமா, அப்போ அப்படி நெனைச்சேன். இப்போ வேணாம்னு இருக்குது.''

''எங்க நினைப்புக்கு அம்மா ஒரு போட்டோ—''

''என்னைப் போட்டோ இருந்தாத்தான் நினைப்பீங்களா...அதுவும் போட்டோலே இருந்திச்சப் பிரகாரம் தான் நினைக்கணும். இப்படி என்னை ஒரு நாக்காலிலே சாத்தி வைச்சு சீக்காளியா சிங்காரிச்சு...! நான் நல்ல படியா உலாத்திட்டிருந்தபடி நெனைப்பிலே நினையுங்க போதும். எனக்குப் போட்டோ வேணாம். வந்தவங்களைப் போவச் சொல்லிடு.''

பாஞ்சாலி பெருமூச்சு விட்டுக்கொண்டு மெதுவாய்க் கீழே அடிமேல் அடிவைத்து இறங்கிச் சென்றாள்.

முதலியார் குன்றுமாதிரி அசைவற்று உட்கார்ந்தார். அவர்மேல் கொடிகூடக் கட்டிப் பறக்கவிடலாம்.

''அந்த ஆளை எங்க பார்த்திருக்கோம்?'' பூரணி கண்ணை மூடிக்கொண்டு, மங்கிக்கொண்டிருக்கும் நினைவைக் கூட்ட முயன்றாள்.

''ஆ...இப்போ நெனப்பு வருது.

''அன்னிக்குக் காவாய் தாண்டி,.காத்தடிச்சு ஒரு மரம் விளுந்திச்சுன்னு, அதுலே கப்பும் கிளையுமா அடுப்புக்கு எல்லாரும் ஓடிச்சிட்டுப் போனாங்களேன்னு நானும் போனேனே. ஆனா, நாம் போன வேளைக்கு எல்லாரும் மரத்தை மொட்டையடிச்சுட்டாங்க. கிளங்காட்டம் அடி மரம்தான் மிச்சம். கோடாலி போட்டுத்தான் வெட்டணும்.

''அந்த மரத்துமேலே, கீளே காத்தடிச்சா விளுந்துடற மாதிரி, தட்டுக்கேடா குந்திட்டு பொய்ஸ்தவத்தை மொவத்துக்கு நெருக்கமா புடிச்சிட்டு இந்த ஆளு தன் நெனைப்பு மறந்து படிச்சுட்டிருந்தான்.

''வெளியூராளு. இந்த ஊர் மொவம் இல்லே. நம்ம ஜாதிகூட இல்லே. வெய்யில்லே மூஞ்சித் தோல் வயளும் போல, ரத்தம் அப்படி நெத்தியிலும் கன்னத்துலேயும் கன்னிப்போச்சு. மயிர் செம்மண்ணாட்டம் ஜெவப்பா ஜொலிக்குது. அவன் வார்தையே வாயிலே மென்னு ருசிகூட்டி முளுங்கறது ரொம்ப ரொம்ப வேடிக்கையா இருந்திச்சு. என்னையறியாமே வாய்விட்டு சிரிச்சுட்டேன்.

''சிரிச்சா என்ன? நான் நாணங்கெட்டுப் பூட்டேன்னு சொல்ல என்னைவிடப் பெரிய ஆம்புள்ளையா? நிச்சயமா எனக்கு ஏளு எட்டு வருசம் பிந்தித்தான் பொறந்திருப் பான். நான் மூணு பெத்தப்புறமும் இன்னும் சமைஞ்ச பொண்ணாட்டம் நடுவூட்டுலே குந்திட்டிருக்க முடியுமா? வூட்டு வேலை ஆவறது எப்படி?

''இல்லே, முன்னுது பின்னுதெல்லாம் ரோசன்னை பண்ணுட்டுதான் சிரிப்பு வருதா? என்னமோ வந்தது சிரிப்பு! சிரிச்சேன். அட போயேன்!......

"அவன் நிமிந்து பாத்தான். எளுந்திருச்சு நின்னான். அவன் மொவம் ஒரு மாதிரியா மாறிப்போச்சு. காத்தடிச்சா செவுத்து வெளக்குச் சுடரை கை மறைச்சா உள் விரல்லே 'டால்' அடிக்கல்லே. அதுமாதிரி அந்த மொவம் சாயம் தொஞ்சிப் போச்சி. அப்புறம் கடைசீ வரைக்கும் அந்த முவம் அப்படியேதான் இருந்திச்சுன்னு என்னெண்ணம்.

"எனக்கு வெக்கமாப் போச்சு. அந்த இடத்தை விட்டு நவந்து, காவா தாண்டி நாலடி வந்துட்டேன். நடுவழி யிலேயே தான் அவனை மறந்துகூடப் போயாச்சு வூட்டுலே கழுத்து நிமிர நிக்குற ஒரு வண்டி வேலை மேலே நெனப்பு பூட்டுது.

"வெள்ளி மூளைக்கிற முன்னாலே வண்டிநெல் புளுக் கியாவணும். வேகமா நடையைக் கட்டினேன்.

"பின்னாலே ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பினா அந்த ஆளைப் பார்த்தேன். நான் நின்னா அவனும் நின்னான். நான் நவந்தா அவனும் நவந்தான். எனக்குத் திகிலா யிட்டுது. ஓட்டமா வூட்டுக்கு வந்தூட்டேன்;

"ஆனா அன்னிக்கு நடுராவுலே அடுப்புலே அண்டா வுலே கட்டையாலே நெல்லை நான் கிளர்றச்சே திடீர்னு ஆவிலேருந்து பிரிந்து ஜெவஜெவன்னு அந்த முகம் எளுந்திருச்சதும் எனக்குத் திக்குனு ஆயிட்டுது. செவுத்துலே அறைஞ்சு சாணியாட்டம் அப்படியே நின்னுட்டேன். நெல்லு புழுங்கின நாத்தம் திடீர்னு சாம்பிராணிப் புகையாட்டம் வாசனை தூக்குது. எனக்கு என்னான்னே புரியல்லே. இந்த நெனப்பு எங்கே இப்படி திடீர்னு வந்தது? அந்த நினைப்புக்கு ஒரு வாசனைகூட எப்படி வந்திச்சு? சட்டுனு அந்த உருவம் மறைஞ்சுட்டுது. மேல்காரியம் ஓடல்லே. எப்படியோ முடிச்சுட்டுது. வாசலுக்குச் சாணியைத் தெளிச்சுட்டு, தலைப்பை விரிச்சுத் தரையிலே விளுந்தேன்.

''ராவெல்லாம் தூக்கம் முளிச்சு கண்ணு திகுதிகுன்னு நெருப்பு கக்குது. ஒடம்பு பூட்டுக்குப் பூட்டு விட்டுப் போவுது. இன்னும் வேலை தலைக்குமேலே கிடக்குது.

''புளுக்கின நெல்லைக் களத்து மேட்டுமேலே காயப் போட வண்டியைக் கட்டிக்கிட்டு ஆளு வந்திடுவான். சோறாக்கியாவணும். பெரிய பையனுக்கு மாரியாத்தா வந்து இறங்கியிருந்தாள். மத்தியானம் அண்டா நிறைய கூழு காச்சி, ஏளைங்களுக்கு ஊத்தியாவணும். நம்ம பின் தங்கிட்டோமுன்னு அதை ஓடிப்போய்ப் புடிக்கிற வரைக்கும் எந்தக் காரியம் நமக்காகக் காத்துட்டு நிக்குது?

''எல்லாத்துக்கும் ஓடற தண்ணிலே அமுந்து குளிச்சாதான் உடம்பு ஒரு நிதானத்துக்கு வரும்னு காவாய்க்குக் கிளம்பினேன்.

''தண்ணிலே இறங்கினேன். வானத்துலே கிஷ்டான்னு கருடன் கத்திச்சு. கன்னத்துல போட்டுக்கிட்டே மொவம் நிமிந்தா, கரைமேட்டுப் பின்னாலே கையைக் கட்டிக்கிட்டு, அந்த ஆளு என்னை முறைச்சபடி நின்னுட்டிருந்தான். அவனுக்குக் கண் இமைகூடக் கொட்டல்லே. ராவெல்லாம் இவன் எங்கேயிருந்தான்? என் மாதிரியே தூக்கம் முளிச்சுக்கிட்டாயிருந்தான்?

''எனக்கு ஆத்திரத்துலே தைரியம்கூட வந்துட்டுது. 'பொம்புள்ளங்க குளிக்கற எடத்துலே ஆம்புள்ளேங்களுக்கு என்ன வேலை? அவங்களுக்குத் துறை தனியாயிருந்தாலும் இங்கேதான் கண்ணா என்ன'ன்னு பொதுவுலே கத்தினேன்.

''அவனுக்கு மெதுவா தலையிறங்கிட்டுது. கண்ணுலே யிருந்து ரெண்டு சொட்டு கன்னத்துலே வளிஞ்சு இறங்கிக் கீளே விளுந்தது. அதைப் பார்த்ததும் எனக்குத்

தொண்டையிலே துக்கம் பிரண்டுது. பூட்டான் அவன். நான் தண்ணிலேயே குந்திட்டிருந்தேன். இப்போ என்ன இப்படி எனக்கு ஏன் இருக்குது? நெனைப்பு இருப்புக் கொள்ளமாட்டேங்குதே!

வீட்டுக்கு வந்தேன். விரல் நுனியிலே குங்குமத்தை ஏந்திட்டு சமையல் வீட்டிலே செவுத்துலே பதிச்ச கண்ணாடிலே மொவத்தை நீட்டினேன். எனக்கு ஆச்சரியமா இருந்தது. என் மூஞ்சியும் அவன் மூஞ்சியும் ஒரேவெட்டா என்ன? அவன் செவப்பு. நான் கறுப்பு. அது தவிர, நெத்தி சரிவு, மூக்கெடுப்பு எல்லாம் ஒரு அச்சா இருந்தது. இது என்ன நெசமா வெறும் நெனப்பா?

**சோ**று உண்டையா தொண்டையிலே சிக்குது. கலத்தோடே எடுத்துப் போய்க் கழுநீர்த் தொட்டிலே கொட்டிட்டேன். (நெனைப்பு விண்விண்ணுன்னு புண்ணாட்டம் தெறிக்குது.) ஏணையிலே தூங்கிட்டிருந்த கொளந்தையை எடுத்து மடியிலே விட்டுக்கிட்டேன். என்ன செய்யறது, செய்யுதென்னன்னு புரியதில்லே.

''ராச் சோறும் தொண்டை வரைக்கும் கசந்தது. கையிலே இலையை ஏந்திட்டு நாயைக் கூப்பிட வாசலுக்குப் போனேன். பக்கத்து சந்து இருட்டிலேருந்து அந்த ஆளு பிரிஞ்சு வந்து இரண்டு கையையும் நீட்டினான். எனக்கு உடம்பு பரபரன்னுது.

''ஐயா இது எச்சில், உள்ளே வந்து குந்து, இலை போட்டு சாப்பாடு வெக்கறேன்.

அவன் ஒண்ணும் பதில் பேசல்லே. புன்சிரிப்போடு என் கையிலேருந்து எலையை இழுத்தாப்போலே பிடுங்கிட்டு, சாமி கும்பிடறாப்போலே எனக்குத் தலை வணங்கிட்டுப் போனான். கைகூடக் கழுவாமே நான் நடைத் திண்ணைலே கொஞ்ச நேரம் குந்தியிருந்தேன்.

அன்னி ராவுலே அவன் கனவுலே வந்தான். நான் காவா மேட்டுலே மரத்தடிலே நிக்கற மாதிரியிருக்குது. அவன் எதிர்க் கரைபிலே நிக்கறான், பால் மறக்கடிச்ச குளந்தையாட்டம் மொவத்துலே சொல்ல முடியாத வெஜனம் தேங்கி நிக்குது.

'பூரணி'—தண்ணி ரொப்பி வெச்சத் தவலையைத் தட்டினாற்போல அவன் குரல் அளுகையோடு என்மேலே பாஞ்சுது.

''பூரணி, ஏன் எச்சில் என்கிறே? நீ சோறு துண்ணச்சே உன் கொளந்தைங்க ஆடி அசைஞ்சு நடந்து வந்து கைய நீட்டினால், நீ உன் கலத்துலேருந்து உண்டை சோறு உருட்டி அவங்க கையிலே சிரிச்சுட்டே கொடுக்கல்லே? நான் உன் எச்சிலைத் தின்னா அது ஒரு அடையாளமாத் துன்னேன். அன்னிக்கு உன்னை நான் கண்டபோது இன்னிக்குத்தான் உன்னைக் கண்டாலும் மூவாயிரம் வருசங்களாகத் தெரியும் ஒண்ணு நெஞ்சிலே உறைசுப் போச்சு. பூரணி, உன் எச்சிலை நான் தின்னல்லே. இந்த மூவாயிரம் வருசமா உனக்கும் எனக்குமா விதவிதமா வந்த உறவைத்தான் ருசி பார்த்தேன். இத்தனை வருசங்களிலே இந்தப் பூமியிலே எத்தனை பிறப்பு நீயும் நானும் எடுத் திருப்போம்? ஒண்ணுலே நீ எனக்குத் தாயாயிருந்திருப்பே. உனக்கு நான் புள்ளையாய்ப் பொறந்து உன் மடிலே கொஞ்சியிருப்பேன். இன்னொண்ணுலே உடன்பிறப்பா யிருந்திருப்போம். என் தங்கையாயிருந்தா உன்னை நான் தோளிலே தூக்கி வெச்சிட்டு ஊரெல்லாம் சுத்தி யிருப்பேன். எனக்கு அக்காவா இன்னொணுலே நீ வாச்சிருந்தா என்னைத் தூக்கிட்டு நீ சுத்தியிருப்பே. எனக்குப் பாட்டியா யிருந்திருப்பே. உனக்கு நான் பேரனாயிருந்திருப்பேன். ஒரு புறப்புலே சும்மா வேண்டியவங்களா யிருந்திருப்போம். இன்னொன்ணுலே வேண்டாதவங்களாவே யிருந்திருப்போம். நடுவுலே

பிறப்புக்குப் பிறப்புப் பிரிஞ்சு இருந்திருப்போம். மறுபடி யும் கூடியிருப்போம். எப்படியும் நம்ம ஒத்தருக்கொத்தரு தெரிஞ்சவங்கதான். அதுலே சந்தேகமேயில்லே. ஒருசமயம் உனக்குப் புருசனாய் இருந்திருப்பேன். நீ எனக்குப் பெண்சாதியா—'

''ஐயா—இந்தப் பேச்ச என் புருசன் காதுலே விளுந்தா உன் எலும்பைப் பொறுக்கிடுவான். அவன் பூன்னு ஊதினா நீ நிக்கமாட்டே—''

''அவன் மொவத்துலே பயம் தெரியல்லே.

''பூரணீ நீ இந்த ஜன்மத்தை மாத்திரம் நினைக்கிறே. இந்த ஜன்மத்துல உனக்குப் புருசன் போன ஜன்மத்துலே என்னவோ அப்படித்தான் அவன். என் எலும்பைப் பொறுக்கட்டுமே. முழுவிப்போயிடுமா? அதனாலே இந்த மூவாயிரம் வருசத்தையும் இனிமே வரப்போற ஆறாயிரம் வருசத்தையும் அவனோ, நானோ, நீயோ, யாரோ அளிச்சு எளுத முடியுமா?''

''ஐயா ஒரு சமயம் நீ பேசறத்தைக் கேட்டா எனக்குச் சிரிப்புக்கூட வருது. நான் மூணு நாலு பெத்தாச்சு. இப்பவே நான் உனக்கு மூத்தவ. நான் கிளவீ. பளகிப் போனவ, பழசாப் போனவ. காலையிலே பூத்து மாலை யிலே கட்டி, மாலைவரைக்கும் கொண்டையிலே வெச்சு, ஒவ்வொரு இதழா நாரிலேருந்து உதிந்து போறவ. இப்பொத்தான் கிள்ளின பூவாட்டம் நான் இன்னும் வாசனையடிக்க முடியுமா?'

''அவன் கண்ணுலே தண்ணி மாலை மாலையா ஒழுவுது பேச்சுத் தொண்டையை அடைக்குது. என்னை அணைக்கிறமாதிரி ரெண்டு கையை நீட்டிக்கிட்டு அந்தண் டைக் கரையிலே நிக்கறான்.

''பூரணி! உன் மணம் உனக்குத் தெரியல்லே. மூவா யிரம் வருசந் தாண்டி இப்பவும் என்னைத் தொடுதே.

தெருவுலே போற மத்தவங்களைப் பாத்து இந்த எண்ணம் எனக்கு ஏற்படறதுதானே? இல்லியே! எல்லாருக்கும் இந்த விசேஷம் இருக்காது. சில பேர்தான்... அவங்க மொத மொதல் பொறந்த காரணத்தின் அடையாளத்தைக் கூடவே தாங்கிட்டு வராங்க. பூவும் அவங்கதான். நாறும் அவங்கதான். இரண்டுலேயும் வீசற வாசனையும் அவங்களே. பூவுலே பிறந்த வாசனையாயிருந்து அப்புறம் வாசனையிலே பூத்த பூவாயிடறாங்க. அம்மாதிரியிலே நீ ஒருத்தி. பூரணி! பூரணி, என்னை வீட்டுடாதே! நீ யில்லாமே நான் இருக்க முடியாது... கரை தாண்டி இந்தப் பக்கம் வந்தூடேன்... வந்தூடு— உன்னை நான் ஒண்ணுஞ் செய்யல்லே. ஒண்ணுங் கேக்கல்லே. உன் மடிலே தலை வெச்சு ஒரு தடவை படுக்கணும். அவ்வளவுதான், பூரணி பூரணி!;...''

''நான் காதைப் பொத்திட்டு ஓடினேன். அவன் தொண்டையைக் கிளிச்சுட்டு கத்தினது என் மாரைக் கிளிக்குது.''

''பூரணி! பூரணி!!...''

''நான் முளிச்சிட்டேன். என் எசமானர் என்னண்டை நின்னுகிட்டு என்னையே பாத்துட்டிருந்தார். எனக்கு வேர்வையாக் கொட்டிப்போச்சு. நான் அவர் காலைக் கட்டிட்டு அளுதேன். அவர் ஏன்னு கேக்கல்லே. அந்த மனுசன்கிட்ட அதான் தொந்தரவு. எதுக்குமே ஏன்னு கேக்கமாட்டான். எல்லாந் தெரிஞ்சவன் மாதிரி!

''நானும் சொல்லிக்கல்லே. என்னாத்தை என்னான்னு சொல்றது?

''மறுநாள் காலையிலே குளிக்கப்போன இடத்துலே அந்த ஆள் மறுபடியும் பின்னாலே கையைக் கட்டிக்கிட்டு, பூமியின் துயரம் அத்தனையும் மொவத்துலே தூக்கிக்கிட்டு நிக்கறான். எனக்குப் பயமாப் போச்சு. இதென்ன வளக்கமாப் போச்சு. வாயைத் திறவாமலே, கையைப்

பிடிக்காமலே மொவத்துலே விஜனத்தைக் காட்டியே அவன் என்னைத் தன் பக்கம் இளுக்கறப்போ எனக்குப் பயம் பொறந்து வெடவெடன்னு முட்டிக் கால் உதறிச்சு. நான் தடால்னு குப்புற விளுந்து பூமியைக் கெட்டியாப் பிடிச்சுக்கிட்டேன்.

"நீ போ... நீ போ... மரியாதையா போயிடு. இங்கே நிக்காதே... ஓடியே பூடு..."

"அவன் என்னைப் பார்த்தபடியே மெதுவாகத் திரும்பினான். மெதுவாக நடந்து அப்புறம் விர்ர்ருனு வேகமா நடந்து போயே போயிட்டான். என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கிட்டு, விளுந்த இடத்துலேருந்து மெதுவா எளுந்தேன்.

அன்னி சாயந்திரம் தெருவுலே ஒரு சமாசாரம் பொறி கிளம்பி சீறிக்கிட்டு ஊரெல்லாம் பத்திக்கிச்சு.

காவா மேட்டு மரத்துலே ஒரு பிணம் தொங்குது. ஊரு பிரண்டுது; பார்த்தது தேரு திருவிழாவாட்டம். ஆனால் நான் போவல்லே.

'அந்த ஆள் எனக்காகத்தான் உயிர் விட்டான்னு நெனக்கிறப்போ என்னுள்ளே என்னவோ ஒண்ணு புண்டு விளுந்தது. நின்ன இடத்துலே நின்னுட்டு சோறு கொதி தெரியாமே மூணு நாளைக்கு யோசனை பண்ணிட்டிருந்தேன். புரியாத துக்கம் அடைச்சு அடைச்சுத் தொண்டை வெடிக்குது. அவன் யாரு, நான் யாரு? இது மாதிரிகூட உண்டா? இப்படி என்னாத்துக்கு நடக்கணும்? அவன் கனவிலே வந்தது மெய்தானா? அவன் சொன்னதெல்லாம் மெய்தானா? அதுவே கனவுதானா? இந்தக் கேள்விக்கெல்லாம் யாரைப் போய்ப் பதில் கேக்கறது? பதிலே உண்டா? இந்தக் கேள்விங்களை எனக்கு வெச்சுட்டு இவன் ஏன் பூட்டான்?

''ஒத்தருக்காக ஒத்தரு செத்துப் போறதுன்னு இருந்தா, செத்தவன் பாடு சொகம். யாருக்குச் செத் தானோ, அவங்க தலையிலே அவன் சுமை. அப்புறம் அப்படி மிஞ்சிப் போனவங்க பாடுதான் கொடுமை.

''ரொம்ப நாளைக்கு நான் கஷ்டப்பட்டேன். ஒரு மாதம் நோவாக்கூடப் படுத்துட்டேன். காவா மேட்டுக் கரையிலே போய் புரியாமே நின்னுட்டு நின்னுட்டு திரும்புவேன். மாரியம்மன் கோயிலுக்குப் போய் வணங் கறப்போ அவனுக்கும் சேர்த்து வணங்குவேன்.

''ஆத்தா அவன் எனக்காகக் கொடுஞ்சாவு செத் துட்டான். அப்படிச் செத்தவங்கள்ளாம் இங்கேயே நிம்மதியில்லாமே சுத்துவாங்களாமே. அவனுக்கு நிம்மதி யைக் கொடு...''

கிணத்தடிக்குப் போனா, ஜகடையிலே தோண்டி யைப் போட்டுட்டு இளுக்க மறந்துட்டு அப்படியே நிப் பேன். இதென்ன நானும் பால் மறந்த கொளந்தை ஆயிட்டேனா? எனக்கு எந்தப் பால் மறந்துபோச்சு? இல்லாட்டி நெனைப்பு வந்திருச்சி?

''பூரணிக்கு என்னமோ புடிச்சுடுத்து''ன்னு ஊரெல் லாம் பேச்சாப் போச்சு, மந்திரக்காரனைக்கூட வரவளைச் சாங்க. அவன் ஏதாவது மந்திரத்துலே மனசைக் கண்டுட்டா என்ன செய்யறதுன்னு திகிலாப் போச்சு. ஆனா, அவன் ஒண்ணும் காணாமலே வேப்பெலையடிச் சுட்டுப் போயிட்டான். இதுக்குன்னு அவருதான் எத்தையும் கண்டுக்கல்லே. என் புருசன், இரும்புத் தலையன், வான்னு சொல்லமாட்டான். போன்னு சொல்லமாட்டான், ஏன்னு கேக்கமாட்டான்.

''ஆனா, நாளாவாவ, எதுதான் நிக்குது? நல்லவேளை அதுதான் இந்தப் பூமியிலே தெம்பு. எப்பவும் வேலை.

மீளாத வேலை. கொளந்தையும் குட்டியும் சம்சாரமும் பெருத்துட்டா, எப்போப் படுக்கறோம், எப்போ நிக்க றோம், என்ன செய்யறோம், அது, இது, எது எல்லாமே கொளம்பி ஒரே சுத்துத்தான் பம்பரமாட்டம்.

ஆனால் சில சமயம் நினைப்பேன்: அன்னிக்கு நான் கீளே நாலு கால் உயிராட்டம் விளுந்து கையையும் காலையும் மண்ணுலே புதைச்சுட்டு, பூமியைக் கெட்டியா கவ்வாமே இருந்தா என்பாடு என்னவாயிருக்கும்? இப்பொத்தான் தெரியுது, இந்த மண்ணும் நம்மை உயிரோடுதான் தாங்குது. குளிருக்குக் கொளந்தையை அணைக்கறாப்பிலே, சமயத்துலே கெட்டியாப் புடிச் சுக்குது.

அன்னிக்கு ஒருநாள் வாளி நிறையா தண்ணி யேந்தி வரப்போ கல்லு தடுக்கிக் கால்லே போட்டுக்கிட் டேன். கட்டை விரல்லேருந்து இரத்தம் பீச்சியடிக்குது. அதைத் தரை மண்ணு ஜிவ்வுன்னு உறிஞ்சிக் குடிக்குது. அதைப் பார்த்துட்டு என் வலிகூட மறந்து நின்னேன். ஆமா, இதுக்குக் கண்டிப்பாய் உயிரிருக்குது. என் ரத்தம் உயிர்தானே! அதை எப்படி இது குடிக்குது பாரு இப்படித் தான் அதுக்கு உயிர் இருக்குது...

"ஆனா இந்த யோசனையெல்லாம் எனக்கென்னாத் துக்கு......"

பூரணி விழித்துக்கொண்டாள். ஜன்னலுக்கு வெளியே இருள் கவிந்துகொண்டிருந்தது.

'ஏன், ஒத்தரும் ஞானமணி சாமி கோவிலுக்குப் போய் விளக்கு வெக்கல்லே...?"

பழக்கங் காரணமாகவே அக்கேள்வி அவளிட மிருந்து வெளிப்பட்டது.

"வேலையைக் கவனிங்க! துரை நீ போ..."

ஞானமணி சாமியார் இந்தக் குடும்பத்துலே மொளைச்சது இன்னிக்கும் இப்பவாட்டம் இருக்குது.

மனுங்க . மொட்டையடிச்சு, நெட்டியாட்டம், நெட்டையா. தலைகாணி யுறையாட்டம் காஸாயத் துணி போர்த்து மனுசன் ராசநடை போட்டு அன்னி ராவுலே தெருவளியா வரவனை வாசக் கொறட்டிலிருந்தே பார்த்து, இவரு மேல்துண்டை எடுத்து இடுப்புலெ வரிஞ்சு கட்டி, எதிர்போய் அளைச்சு வந்து, நாங்க ரெண்டுபேரும் அவர் காலிலே விளுந்து சேவிச்சது மறந்து போவுமா?

இதருக்கே சாமியார், சாஸ்திரம் படிச்சவங்க பிரசங்கம் பண்றவங்க இவங்களைக் கண்டா தனியா விசை முடுக்கிக்கும், அவங்க வாயிலேருந்து எந்த முத்து விளுதுன்னு வாயைப் பிளந்துட்டு கைகட்டி கேட்டுட்டே இருப்பாரு. வந்தா, வந்தவங்க தானாவோ, நான் விரட்டியடிச்சோ கிளம்பினாத்தான் உண்டு. மாதக் கணக்கிலே குந்தியிருந்தாலும் மனுசனுக்குத் தெரியாது.

''ஆனா, இந்தச் சாமியார், சோத்துச் சாமியாரில்லே. வந்து மூணு நாள்தான் நம்ம வீட்டுலேயே தங்கி இருந்தது. பேச்சுக்கூட ரொம்ப இல்லே. பேசறது ஒண்ணு ரெண்டு ஆனாலும் எல்லாம் தூக்கிவாரிப் போடற பேச்சுத்தான். கங்காளம் தயிரையும் கடைஞ்சு உள்ளங்கையிலேயே உண்டையா வெண்ணெயை ஏந்திட்டாப் போலே, இந்த உலகமே தனக்குச் சொந்தமாக்கிட்ட தனி யானை நடை; களுத்தை வெட்டி வெட்டி மொறைப்பா பார்வை. அப்பா! ஆம்பளைகூடத் தைரியமா தலைநிமிந்து பாக்கமாட்டான். மூவத்துலே அப்படி ஒரு தகதகப்பு. நடுக்காட்டுலே, நடு இடத்துலே தீவட்டி ரெண்டு சொருவி வெச்சாப்போலே நமக்கே

இல்லாமே தனக்கு மாத்திரம் தனியா பத்திட்டு எரியும் கண் எதிரே. வந்தவங்க நெஞ்சு மாம்பழத்தெப் பிழிஞ்சாப் போலே சக்கையும் சாறுமா ஆயிடும்.

''மொத நாளுலேயே மனுசனை கண்டுகிட்டேன் இது மத்தப் பண்டாரங்க மாதிரியில்லேன்னு. இவரும் அவரும் சேர்ந்து குந்திட்டு சாப்பிடறாங்க. வூட்டுலே விருந்தாளின்னு கூட நாலு பதார்த்தம் ஆக்கியிருந்தேன். உருளைக்கிழங்கு புட்டு செய்து, கீரையைக் கடைஞ்சு, பூசணிக்காயும் காராமணியும் கூட்டிக் காச்சியிருந்தேன். கத்தரிக்கா சாம்பாரு, ரசம், மோருகூட.

இலையிலே பதார்த்தத்தை ரெண்டுதரம் வெச்சிட்டு மறுபடியும் விருந்தாளி வெக்கத்துலே தன் வவுத்துக்கு வஞ்சகம் செய்யக்கூடாதுன்னு 'இன்னும் என்னா வேணும்'னு கேட்டேன்.

அதுக்கு என்னை நெருப்பாட்டம் முளிச்சுப் பாத்து, ''என்ன வேணும்னு கேக்கறயே அம்மா! நான் கேக்கறதை யெல்லாம் நீ கொடுத்துட முடியுமா? நீ கொடுக்கறதெல்லாம் நான் கேக்க முடியுமா?'' என்று கேட்டாரு. எனக்கு என்னவோ மூஞ்சிலே அடிச்சாப் போலே ஆயிடுச்சு. பயமாப்போச்சு. அப்புறம் சாப்பாட்டு வேளைவிட்டு மத்த வேளை அவர் எதிரேகூட வரதில்லை.

நடைத் திண்ணைலே, காலை முறுக்கி சப்பளங் கொட்டி மணிக்கணக்குலே நெட்டா இமைகொட்டாமே குந்தியிருப்பார். இவரு அவருக்குக் காவலா மாரிலே கை கட்டி வாசல்லே நின்னுட்டு இருப்பாரு, இவங்க ரெண்டு பேரும் இப்படி யிருக்கறத்தைப் பார்த்து என்னவோ பயமெடுத்துப் போச்சு.

இதே மாதிரி ரெண்டு நாளாச்சு. மூணாம் நாள் வந்தது இன்னிக்கு நான் பட்டினத்தாள் போனவழி தான் போவப்போறேன். ஆனா, போன இடத்திலும் அன்னிக்கு நான் மறக்கமாட்டேன்.

அன்னிக்கு வெள்ளிக்கிழமை காலையிலே பத்து வீடு தாண்டி பட்டணத்தாள் இறந்துட்டா. அவ புருசன் மூணு நாளைக்கு முன்னாலேயே, தேங்காய் ஒடைச்சு கற்பூரத்தைக் கொளுத்திட்டான். ஆனால், நெஞ்சுலே உசிரைப் புடிச்சுகிட்டு, நல்ல நாளைக்கு நல்ல வேளைக்குக் காத்திட்டு இருந்தா.

காலையிலிருந்தே பல்லக்கு ஜோடனை ஆவுது. எல்லாரும் அவங்க வீட்டுலே பூந்து பூந்து புறப்படறாங்க. பட்டினத்தாள் பச்சைப் பொண்ணு; எப்பவும் சிரிச்சு மொவம். கஷ்டமே கண்டுக்க மாட்டா. கொடுத்துவெச்ச மனுசி. குளிகுளிச்சு, சுல்லாட்டம் புள்ளையெ பெத்து புருசன் கையிலே கொடுத்துட்டு தான் வந்த வழிக்குப் போறா.

சாயங்காலம் ஆய்ப்போச்சு. பல்லாக்கு சாமியாட்டம் புறப்படுது, பாண்டும் தாரையும் தப்பட்டை விளக்குமா.

பட்டினத்தாள் புதுசு உடுத்தி பூமெத்தை மேலே சிரிச்ச மொவத்திலே பத்தின மஞ்சளோடே வாயிலே அடைச்ச வெத்தலை உதட்டுலே ஒழுவ. தூங்கிவரா. முன்னாலே அவ புருசன் துட்டை வாரியிறைச்சுட்டே போறான். பின்னாலே அவள் அம்மா கதறிக்கிட்டே பசு வாட்டம் துரத்திக்கிட்டே வரா. அவளை நாலு ஆம்புள்ளே கட்டிப்பிடிச்சும் மாளல்லே. பெத்த வயிறு இல்லியா? அந்தந்த வூட்டுத் திண்ணைலே பேச்சுப் பராக்கிலே குந்தியிருந்தவங்க எல்லாம் அவசர அவசரமா எளுந்து நிக்கிறாங்க.

ஆனா இந்தச் சாமியார் நம் வூட்டுத் திண்ணையிலே கால்மேலே காலைப் போட்டு ஒக்காந்திருக்கிற அதிகாரத்துலே கடுவுகூட கலையல்லே.

''ஐயோ என் கப்பல் கவுந்துபோச்சே! ஐயோ என் கப்பல் கவுந்துபோச்சே''ன்னு பெத்தவ கத்தீட்டே வரா.

அப்போ திடீர்னு சாமியாரு வெடிப்பா ஒரு சிரிப்பு சிரிச்சாரு பாரு! நான் என்னாத்தைச் சொல்ல? தெரு முளுக்க அது கேட்டுது. என்னவோ தெருக் கூத்திலே 'டார்ரா' திரையைக் கிளிச்ச மாதிரி, அந்தச் சத்தம். கொளந்தையை அமுக்கினமாதிரி செத்தவ ஆத்தாளுக்கு அளுகை அடங்கிப்போச்சு. எல்லாருக்குமே என்னவோ ஒரு மாதிரி கிலி, சாமியார் எளுந்து உள்ளே போயிட்டாரு.

மறுநாள் சாணி தெளிக்கற வேளைக்கு ஆளைக் காணோம். ஆனா அவர் போனால் எனக்கென்ன? போன வரைக்கும் சேமந்தானே? ஆனா, கூடவே என் புருசனையும் காணோம்.

திடீரென பூரணிமேல், இருள்கள் இழைந்து குழைந்து திரிந்து செறிந்து சரிந்து படர்ந்து நிறைந்து கவிந்தன.

இருளோன்னு இருளு! கொஞ்சங் கொஞ்சமா கலக்கம் தெளியுது. அது மத்தியிலே அவலச்சணமா, மொத்தையா ஒரு உருவம் எழும்புது. அட, இது என்ன. நம்ப நடு வூட்டுக்கு குதிருன்னா?

''என்ன பூரணி உனக்கு விந்தையாயிருக்குதா? வேடிக்கையாயிருக்குதா? பயமாயிருக்குதா? நான்கூட உன்னோட பேச வந்தூட்டேன்னு? ஏன், நான் வரக் கூடாதா? என்னைப் பார்த்தா உனக்கு ஆளா, கணக்கா யில்லியா? பூரணி, ஒன்னுவெச்சுக்க. இந்த உலகத்துலே உயிரில்லாததேயில்லே. எப்பவுமே என்னினைப்ப உனக்கு இல்லாட்டியும் உன் நெனைப்பு எனக்கு உண்டு. ஏன் என்னிடத்திலே நீ கொட்டிவெச்ச பச்சை நெல்லை நான் பளய நெல்லா ஆக்கித்தரல்லியா? நாளு கிளமை சின்னப் பொங்கல் பெரிய பொங்கலுக்கு எனக்கு நீ மஞ்சா பூசி சிவப்பு இட்டுக் கொண்டாடல்லியா? ஊம்... ஊம் அப்புறம்...அப்புறம்...?''

''அப்புறம் என்ன? ஏது அப்படி மூச்சு வாங்குது உனக்கு?''

''உடம்பு பெரிசு பாரு. என்ன சொல்ல வந்தேன்னா என்னை நம்பி உன் கஷ்டத்தைக்கூட என்னண்டை நீ சொல்லிக்கல்லியா?''

''உன்கிட்டே என்னாத்தை நான் சொல்லிக்கிட்டேன்?''

''இதென்ன, போசினாத்தான் நீ சொன்னாப் போலேயா? நீ சொன்னதைக் கேட்டுக்கிட்டிருந்தால் நீ சொன்னாப்போல இல்லியா? முதுவைத் திருப்பி உனக்குக் காட்டறேன்னு கோவம் பண்ணாதே, 'தோ பார், பாத்தியா?''

பூரணி பார்த்தாள். கைக்கெட்டிய வரை அடுக்கடுக்காய் அதன்மேல் அடிவரை, சாணிப் பொட்டுக்கள் நின்று கொண்டிருந்தன.

ஞாபகம் வந்துவிட்டது. அவளுக்குக் கண்களில் ஜலம் துளும்பியது. அவள் கணவன் வீட்டை விட்டு ஞானமணி சாமியாரைத் தொடர்ந்து போன நாட்களை. அவள் அப்படித்தான் நாளுக்கு நாள் எண்ணியிருந்தாள்.

இத்தனை நாளுலே எப்பவுமே என் வீட்டுக்காரரை ஒரே மாதிரி எண்ணியிருப்பேனோ? எப்படி சொல்றது? மஞ்சாவும் குங்குமமுமிட்டு இன்னும் வவுத்திலே அரிசியை வெச்சிருக்கும் நடுவூட்டுக் குதிரை எதிரே வெச்சுக்கிட்டு...

ஒரு ஒரு நாளைக்கு ஒரு ஒரு நினைப்பு. இல்லாட்டி ஒரெ நினைப்பு. ஆனா ஒவ்வொரு நாளுக்கும் மறவாமே ஒரு பொட்டு.

என்னிக்கு வருவாரு? என்னிக்கு வருவாருன்னு பொட்டு, பொட்டு, பொட்டு...

எப்போ நீ வருவே? எப்போ நீ வருவே? பொட்டு பொட்டு பொட்டு.

மாரியாத்தா! எப்படியானும் அவரைக் கொண்டு வந்து வீட்டோடு சேத்தூடு!

வூட்டுக்கு வூட்டுக்குப் படியேறி மடிலே பிச்சை வாங்கி, அந்தப் பிச்சரிசியைக் கஞ்சி காச்சி ஆயிரம் பேருக்குக் கரைச்சு ஊத்தறேன். ஆனா நீ மாத்திரம் என்னாண்டை அவரைக் கொணாந்து சேர்த்தூடு.

வீட்டை விட்டுப் போயிட்டியே. நான் என்னாத்தை உனக்கு அப்படி மனம் வெறுக்கும்படி சேஞ்சுட்டேன்? உன் சாப்பாட்டை ஒருகொட்டைப்புளி தூக்கலா ஒரு உப்புக்கல் கொறைவா, ஒரு மணியரிசி வேவாமே ஆக்கிப் போட்டேனா? உனக்கில்லாமே எனக்கு ஏதாச்சும் மறைச்சு வெச்சுக்கிட்டேனா? என்னா துரோகத்தை என்னிடத்துலே கண்டுட்டு நீ ஓடிப்போயிட்டே? என் கனவுலி யாவது வந்து சொல்லு. ஆமா, நமக்குப் பொறந்த மக்கள் தலைமேலே கையை வெச்ச ஆணையா நீ கனவுலி யாவது வந்து சொல்லித்தான் ஆவணும்.

அந்த மொட்டைப் பண்டாரம் வந்தான், கண்ணை உருட்டிக்கிட்டு. மெறிகட்டையை என்னிக்கு என் வாசல்லே மெறிச்சானோ அன்னிக்கே என் குடும்பத்தையும் மெறிச்சூட்டான்.

பாவி! நஞ்சானுங் குஞ்சானுமா நடுவூட்டுலே விட்டுட்டுப் போயிட்டியே, எப்படி உனக்கு மனசு துணிஞ்சுது? சாமியைத் தேடிக்கிட்டு, சாமியார் பின்னாலே பூட்டான். நீ லாழ்வியாடா நீ? மனுசனா நீ?

இனிமே உன்னைப்பத்தி நான் நெனைக்கப் போற தில்லே. நீ வரவே தேவையில்லே...என் பாவத்தைக் கட்டிக்கிட்டு போ, போ, போ...!

அம்மாடி தாங்க முடியல்லியே!

நடுவூட்டுத் தெய்வங்களா, பூவாடைத் தெய்வங்களா, எங்கே போயிட்டீங்க நீங்க...? அத்தை! நீ என்னைக் கோவம் பண்ணாதே. இனி எனக்குத் தாங்கல்லே. இந்த ஒண்ணரை வருசம் பொறுத்தது போதும். ஊரெல்லாம் கேக்குது. பத்தாமே என் கொளந்தைங்க கேக்க ஆரம்பிச்சுட்டுது. என் வூட்டுக்குப் படியேறி வந்து நீ பொண்ணு கேட்டு என்னைக் கூட்டி வந்தே. நீ செத் தூட்டா அத்தோடே உன் பொறுப்பு போச்சுன்னு எண்ணாதே. இந்தக் குடும்பத்துக்கு என்ன வந்தாலும் அது உன் வினைதான். அதனாலே உன்கிட்டே சொல்ல றேன். இன்னிக்கு வெள்ளிக்கிழமை. கொளந்தைங்க தூங்குறாங்க; நடுராவுலே எளுந்திருச்சு சுரைக் குடுக்கை விருந்து திருநீறைத் தரிச்சுக்கிட்டு, நடுவூட்டுலே கல் பூரத்தை ஏத்திவைச்சி வெறும் வவுத்தோடு தலைப்பை இடுப்புலே சொருவிகிட்டு இந்த வார்த்தையைச் சொல்லு றேன். இன்னி எட்டா நாளைக்குள்ளே எனக்கு ஏதாச்சும் விடியாட்டி—சரி, அப்பறம் அவ்வளவுதான். என்னை ஒண்ணும் குத்தம் சொல்லாதே, வூட்டுக்குக் கெட்டபேரை வெச்சுட்டுப் பூட்டான்னு. ஆமா சொல்லிட்டேன். இன்னிக்கு குறியைக் குங்குமத்துலே வெக்கறேன், ஆமா.

எட்டா நாள் வெள்ளிக்கிளமை விடிஞ்சத்தை இப்போ நெனச்சா—மனசு என்னவோ தோச்சு உலர்த்தி அளுக்கு விட்டு துல்லியமா காத்துலே ஆடி அசையற சல்லாத் துணியாட்டமா—அவ்வளவு லேசா, நினைப்புல கஷ்டம்

இஸ்டம் ரெண்டும் இல்லாமே எனக்குச் சொல்லத் தெரியல்லே. மனசுக்குத்தான் அந்த நிலவரம் தெரியுது. நேரம் ஆவ ஆவ அன்னிக் காரியம் எல்லாமே எனக்கு அப்படித்தான் இருந்திச்சு. நான் ஒண்ணுமே நடத்தல்லே. தானே எல்லாம் நடந்துட்டுப் போவுது. ஒரு சாமான் வீட்டிலே குறைவில்லே. அதெப்படித்தான் அப்படியோ? அரிசி பானை நிறைய நிக்குது. கிள்ளிப்போடற கொத்தமல்லிக்குகூட கூடைக்காரியைக் கூப்பிடத் தேவையில்லே. கறிகாய்த்தட்டு பொங்கிவெளியுது.

எல்லாச் சாமானும் நல்லா அமுக்கி மூடி வெச்சாச்சு. சோத்துப் பானையிலே தண்ணி ஊத்தியாச்சு. மத்தியானமே, பெட்டியிலே புடவைத் துணியெல்லாம் ஒளுங்கா அடுக்கிட்டேன். கொடியிலே ஈரத்தைச் சுருக்கம் இல்லாம தட்டி உலத்திட்டேன். நாளைக்கு என்னை ஒத்தரு ஒரு குத்தம் சொல்லக்கூடாது. கண்ட சாமானைக் கண்ட இடத்துலே போட்டுட்டு பூட்டான்னு. என் கொளந்தைங்க பாயிலே உறங்குதுங்க. அதுங்களை முத்தமிட்டு மேலே போர்த்திட்டேன். பாசம் புடிச்சு இளுக்கும் என்கறாங்களே, ஆனா துணிஞ்ச கட்டைக்குத் துக்கமேதுன்னு என் விசயத்துலே எவ்வளவு மெய்யாப் போச்சுன்னு நெனைச்சா என் தொண்டைக்குள்ளே கள்ளச்சிரிப்பு எனக்கு காது கேக்குது! எல்லாத்துக் கிட்டேயும் என் மனசிலே செலவு பெத்தாச்சு. ஆமா நீ சொல்றது வாஸ்த்தவமாத்தான் போச்சு. எல்லாத்துக்குந்தான் உசிருக்குது. பாலைப் பிறை குத்திப் பானையை வெச்சேனே, அந்த உறிகூட இப்போ தனி உசிரோடுதான் ஆடுது. அடுப்பு, குத்து விளக்கு,. விளக்குமாறு, உரல் உலக்கை, நான் இன்னி வரைக்கும் எடுத்து ஆண்ட சட்டிப்பானை மொதக்கொண்டு எல்லாத்துக்கும் போயிட்டு வாரேன் இந்த வீட்டை இனி நீங்கதான் பாத்துக்கணும். இனிமே கொல்லைப்புறம் போய் மாட்டுக் கொட்டாயிலே மாட்டின் பின்புறத்தைத் தொட்டுக் கண்ணுலே ஒத்திக்கிட்டு அப்புறம்.

''சிவோ ஹம்!—''

வாசல்லே சத்தம், ராப்பிச்சை இல்லேன்னு சொல்லு வானே! போறது போறேன் போட்டுட்டுதான் போறேனே!

சோத்தைப் பிளிஞ்சு ரெண்டு கையிலும் ஏந்தி கிட்டு வாசலுக்கு வந்தேன். தாடியும் மீசையும் கந்தலும் அளுக்குமா ஆளு நிக்குது, வவுறு முதுவுலே குளிஞ்சு. என்னைக் கண்டதுதான், என்னாத்தையோ சொல்ல உதடு துடிக்குது. ஆனா பேச்சு பிரளல்லே. தொண்டை யிலே கை போய் போய் தவிக்குது. நான் குனிஞ்சு மூவத்தைக் கவனிச்சேன். கைசோறு கீளே சிதறிப்போச்சு. தோச்சு உலத்தினாப்போலே லேசாயிருந்த மனசு ஒரே யடியா ஒரே வெள்ளத்துலே அடிச்சூட்டு போயே பூட்டுது. அதுக்குள்ளேயும் அதுக்குத் தலையாடிப் போச்சு. நான் என் கொளந்தையை அப்படியே வாரியணைச்சு தூக்கினாப்போலே உள்ளே கொண்டு போயிட்டேன்.

இப்பவுந்தான் எண்ணுறேன். நாம் எந்தக் கோவி லுக்குத் தனியாப் போவணும்? எந்தக் கடவுளைத் தனியாத் தேடணும்? எந்தப் பூசையைத் தனியா செய் யணும்? ரோசனை பண்ணு. நான் இத்தனை நாளா இட்ட பொட்டெல்லாம் புஷ்பமில்லியா? திட்டின திட்டும் வேண்டி வேண்டி உருகினதெல்லாம் தோத்திரமில்லியா? தெய்வமா பெரிசு? தேடறதுதானே முக்கியம்? எனக்கு ஏன் இப்படித் தோணுதோ தெரியல்லே. இப்படி ஆனா இதை நெனைக்கற கர்வம் எனக்கு இருந்தால், இருந்துட்டுப் போவட்டும். அது இந்தப்பூமிலே பொறப்பாப் பொறந்த கர்வம்தான். மத்தபடி கெட்டது ஒண்ணுமில்லே, அதுவும் தெரியுது.

இதோ பெரிய அடுப்புலே சுடுதண்ணி வெக்கறேன். வெச்சு என் புருசனுக்கு என் கையாலேயே தலைக்கு விட்டு

மூதுவை சுரண்டித் தேச்சுக் குளிப்பாட்டறேன், கோவில்லே சாமிக்கு அபிசேகம் செய்யறத்துக்குக் குறைஞ்சுபோச்சா? மண்டையிலே ஈரம் உராயாமே, அவசரமா நெருப்புலே சாம்பிராணியைக் கொட்டி அது மேலே கூடையைக் கவுத்து மூடி அதுமேலே என் புருசன் தலையைப் பிடிக்கறேன். புகை சமாளிச்சுக்கிட்டு என் மனசு வரைக்கும் புகுந்து மணக்குது. இது கோவில்லே தூபம் காட்டற மாரிதியில்லியா? கேக்கறேன். இதோ சமயலுக்கு அடுப்பு பத்தவெக்கறேன். இது ஓமம் வளத்த மாரிதியில்லே? சுருக்கா சோறு கொதிக்குது. கொடியிலே, ரஜம் காயுது. இது நிவேதனம் இல்லியா? தெய்வத்துக்குப் படைச்சாத்தான் படைப்பா? பிசைஞ்சு இவர் கையிலே உண்டை உண்டையா கொடுத்து உள்ளே செலுத்த றேனே இது நிவேதனம் இல்லியா? கோவில்லேயிருக்கற சாமியுந்தான் பேசல்லே! இவரும்தான் பேசல்லே. இவருக்குக் கை கழுவ சொம்புலே தண்ணி கொடுத்திட்டு கொல்லைப்புறம் கிணத்தைச் சுத்திவந்து விழுந்து கும்பிட்டேன். இதுவுந்தான் என்னைக் காப்பாத்திச்சு. இது என்ன தோண்டின பூமிதானே? இந்த நிமிசம் எனக்கு யாருமேலேயும் கோவமில்லே. எனக்கு எல்லாரும் நல்ல வங்கதான்.

அதுக்கப்புறம் நல்லது பொல்லாது எல்லாம் ஆயிரம் நடந்தது. எத்தனையோ வருசமாச்சு. நாங்க ரெண்டு பேருமே உருவே மாறிட்டோம். பசங்க பெரிசாப் போயி பொண்ணு கட்டி என் குளந்தைகளுக்கு குளந்தைங்க பெருகுது. ஒண்ணொண்ணு ஒரு ஒரு மாதிரியா தலை பெருக்குது. ஒரு பையன் குளிக்கப்போன இடத்திலே தண்ணியோடேயே பூட்டான். அடையாளத்துக்கு உடல் கூட கிடைக்கல்லே. அது சாக்கா நான் சீக்காவும் படுத்தாச்சி. அதெல்லாம் விவரமா நினைக்க இப்பா நேரமுமில்லே. நெனக்கறத்துக்கு ஒண்ணுமில்லேன்னும் வெச்சுக்கோ. ஆனா இந்த நிமிசத்தை நினை! அன்னிக்கு

என் புருசன் அசந்து படுத்து வாயை லேசாத் திறந்துட்டு தூங்கறப்போ, அந்த முவத்தை நானா விளக்கைப் புடிச்சு பாக்கறப்போ, மனசு நிறைஞ்சு நிக்கி.

மெய்யா சொல்றேன். நீ நாளை காலைல எளுந் திருச்சா, நீ எங்கே போனே எங்கேயிருந்தே, என்ன பண்ணே ஒண்ணு கேக்கமாட்டேன். நீயும் நீயா சொல்ல மாட்டே. எனக்குத் தெரியும், உன் நெஞ்சுக்கனம். ஆனால், நான் கேக்கமாட்டேன்; எனக்கு கேக்கத் தேவை யில்லே. என் புருசன் எனக்குக் கொளந்தையானப்பறம் அவன் எங்கே போனான்னு எனக்கு கேட்டு அறியத் தேவையில்லே. எனக்குத் தெரிஞ்சு போச்சு, உனக்குத் தெரியாட்டியும் நீ, எங்கேயும் போவல்லேன்னு. உன் மாதிரி நான் அறியணும்னு ஆசைப்படல்லே. ஆனா எனக்குத் தெரிஞ்சது ஓனக்குத் தெரியாது. நீயும் எங்கேயும் போவல்லே. உன் குரு ஞானமணி சாமியும் எங்கேயும் போவல்லே. அதானோ என்னவோ அஞ்சு வருசம் களிச்சு அவரு இங்கேயே வந்து சமாதியானாரு. எனக்குத் தெரியும்னு அவருக்குத் தெரிஞ்சு போச்சோ என்னவோ? எது எப்படியிருந்தா என்ன? அந்த நிமிசத்தைச் சொல்லு. தராசுகட்டி மனம் முள்ளு முனையிலே நின்னுபோச்சு. இப்போ எனக்கு ஒத்தருமே தேவையில்லே. என் புருசன் கூடத் தேவையில்ல. நானே எனக்குத் தேவையில்லே. இது ஒரு ஆச்சரியமாத்தான் இருக்குது. எல்லாமே நிறைஞ்சு எனக்கு ஒண்ணுந் தேவையில்லாமே...''

அவள் கை மெதுவாய் அவள் புருஷனைத் தேடி நகர்ந்து விழுந்தது. முதலியார் எழுந்து அவள் மார்மேல் மற்றக் கையுடன் சேர்த்து வைத்தார். மாடியேறி அவசர அவசரமாய் யாரோ வந்தார்.

அப்பா அப்பா, பாஞ்சாலிக்கு இடுப்பு நோவு. நடு வீட்டிலே.''... வந்தவன் கட்டிலில் கிடந்த பூரணியைக்

கண்டு, "அம்மா அம்மா, போயிட்டியா" என ஓலமிட ஆரம்பித்தான். முதலியார் அவன் அழுகையை அடக்கிக் கையமர்த்தினார்.

கீழிருந்து 'வீல்' என்று ஒரு புதுக் குரல் தொண்டையைக் கிழித்துக்கொண்டு எழும்பிற்று.

பேரப்பையன் குடுகுடுவென ஏறி உள்ளே ஓடி வந்தான். "ஆயா—ஆயா—" அவனுக்கு மூச்சு இறைத்தது. "எனக்குத் தங்கச்சி பொறந்திடுச்சி..."

முதலியார் முகத்தில் ரகசிய ஒளி வீசிற்று. அவர் மாடிச்சுவர்மேல் தாங்கியபடி சாவதானமாய், படிப்படியாய் கீழே இறங்கிச் சென்றார்.

# காயத்ரீ

திடீரெனப் புதுவிதமாய் எனக்குக் கண்கள் திறந்தாற்போலிருந்தது. விழிமேல் படர்ந்த மெல்லிய சதையைப் பிய்த்தெறிந்தாற்போல். இமையோரங்கள் உட்புறம் அவ்வளவு வலித்தன. தலையை உதறிக்கொண்டேன். ‘விர்’ரென மாலைக் காற்று விழியோரங்களின் உள்பாய்ந்து கண்கள் திடீரெனச் சில்லிட்டன.

கதிர்கள் காற்றில் அலைந்தன. தென்றலின் ஒவ்வொரு மோதலிலும் அவை நீண்ட பெருமூச்செறிந்தன. அவை ஏதோ எனக்கோ தமக்கோ சொல்ல முயன்றன. புரியாதவொரு இன்பக்கிலேசம் என் மார்புள் அமிழ ஆரம்பித்தது. பெருமூச்சுடன் புத்தகத்தைக் கீழே வைத்தேன். ஏடுகள் படபடவென அடித்துக்கொண்டன. அவையும் ஏதோ சொல்ல முயன்றன.

அதே வயல்கள்தாம். அதே பச்சைக் கதிர்கள்தாம். அதோ தூரத்தில் ஏற்றத்தை இறக்கிக் கட்டிய உறை கிணறுதான் இப்பவும். ஒருவரும் அதைத் தூக்கிக்கொண்டு போய்விடவில்லை. ஆனால் எல்லாமே ஏதோ முறையில் மாறியிருந்தன. திடீரென ஏதோ ஒரு மந்திரக்கோல் பட்டு, உயிர்பெற்று மூச்சுவிட ஆரம்பித்துவிட்டன.

இருந்தாற்போல் இருந்து கதிர்களின் பச்சைகளினிடையில் வெள்ளை அசைவுகள் ஒருமித்து ஒன்றே ஆகி

அவ்வுயிரின் உரு தன்னிரு பக்கங்களிலும் இரு வளைவு களைக் கற்பித்து விரித்துக்கொண்டு கிளம்புகையில், ஒரு பட்சியின் வடிவமாய் அந்தரத்தில் பிதுங்கியது. கீழே உதைத்துக்கொண்டு அது அப்படிக் கிளம்பிய வேகமும் அழகும் என்னுடல் புல்லரித்தது. அதை எதிர்த்துக் கொண்டு என் நெஞ்சம் நெஞ்சுக்குழிவரை எழும்பித் "தடால்" எனத் தன்னிடத்தில் வீழ்ந்தது.

ஏதோ இவ்வுலகத்தையே, கோளத்தையே கழற்றி எறிவதுபோல் ஒரே வளைவில் அது எழும்பிய வேகத்தில், நீல மெத்தையில் வைர நகை உருண்டாற்போல், அதன் வெண்மை வானில் ஜ்வலித்தது. நான் பரவசமானேன். என் கைகள் என்னையறியாமல் வானை ஆலிங்கனம் செய்ய விரிந்தன.

என்ன செய்யப் பாக்கறேள்?"

நக்ஷத்ரங்கள் சொரிந்தாற் போன்ற சிரிப்பு. திரும்பினேன். இரு தோள்களிலும் இரண்டு பின்னல் களைத் தொங்கவிட்டுக் கொண்டு யோக வேஷ்டிமாதிரி ஒரு பையை மாட்டிக்கொண்டு ஒரு பெண் நின்றுகொண் டிருந்தாள். அவள் சிரிப்பில் அவள் மூக்குத்தண்டு புருவ மத்தியில் சுருங்கிற்று. அவளை யாரென்று நான் அறியேன். என் உடலின் பரபரப்பில் எனக்கு அப்பறவையின் லாகவம் தவிர வேறெதும் புரியவில்லை.

"பார் பார், அதோ பார், வானத்தில் வைரப்பிடி போட்ட கத்தி மின்னுகிறது பார்!"

ஒரு கையைப் புருவங்களுக்குமேல் நிழலுக்கு வைத்துக் கொண்டு அவள் அண்ணாந்து நோக்கினாள். மொக்கவிழ்ந்தாற்போல் அவள் வாய் சற்றுத் திறந்தது.

ஆனால், நாங்கள் அதைக்கண்டு அதிசயித்து கொண்டிருக்கையிலேயே திடீரென அது கதிகலைந்து நிலை தவறியது. அதன் இறக்கைகள் செயலிழந்தன.

சட்டெனப் பூட்டு விட்டுத் தளர்ந்தன. அப்படியே கர்ணம் அடித்துக்கொண்டே வெகு வேகமாய்க் கீழிறங்கி மொத்தாகாரமாய்ப் 'பொத்'தென என் மடியில் வீழ்ந்தது.

நான் "ஓ" வென அலறினேன். என் கைகள் வெட வெடத்தன. என் விரல்கள் தற்செயலாய் அதன் மார்பில் சற்று அழுந்தின. அவ்விதயத்தின் கடைசித் துடிப்பு அப்பொழுதான் அந்த உடலை விட்டுப் பிரிந்துகொண்டிருந்தது பிராணனின் கடைசிப் பிரயத்தனத்தில் அதன் பார்வை என்மேல் நிலைக்க முயன்றது. அக்கண்களில் தவித்த ஆச்சரியத்தையும், சோகத்தையும் வலியையும் நான் மறக்கவே முடியாது. அதன் உடல் ஒரு குலுங்கு குலுங்கிப் புரண்டது. உடனே கட்டையாகிவிட்டது. உடையும் தேங்காயில் திடீரென உதயமாகும் அவ்வளவு தூய வெண்மை. அதன் துடிப்பிழந்து அந்த வெண்மையை வெறிச்சென்று என் மடியில் நான் உணர்ந்ததும் ஒரு பெருங்கேவல், பட்டையை உரிப்பதுபோல், என்னை ஊடுருவிற்று. அந்த உடலை அப்படியே என் மார்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டேன். அதன் உடல் மெத்தென என் மார்பில் அழுந்திற்று.

அவள் என் தோளைத் தொட்டாள்.

"அம்—ம்—மா" என் துக்கம் உடைந்தது.

இருள் மடிகள் வயல்களிலும் வைக்கோல் போர்களிலும் என் மேலும் விழுந்தன.

அப்புறம் எனக்கு என் நினைவு இல்லை.

* * *

எனக்குப் படுக்கையில் இருப்புக் கொள்ளவில்லை.

நான் எழுந்து நடமாடலாம் என்று இரண்டு நாட்களுக்கு முன்னரே டாக்டர் அனுமதித்துவிட்டார்.

ஆனால், அம்மாவுக்கு மனம் வரவில்லை. எனக்கும் உடல் பலஹீனமாய்த்தான் இருந்தது. ஆனால், இருப்புக் கொள்ளவில்லை. துப்பட்டியைத் தள்ளிக்கொண்டு உட்கார்ந்தேன்.

என் நிலையே எனக்கு இன்னமும் சரியாய் விளங்க வில்லை. தூரத்து மேகம்போல் மறதிப்புழுதி படர்ந்து கொண்டே அழிந்துகொண்டிருக்கும் சில கோடுகளோடு ஞாபகங்கள் நினைவுத் திட்டில் எழும்ப முயன்றன.

பட்சி என் மடியில் வீழ்ந்து செத்து ஒரு மாதமாகி இருக்கும். அன்றிரவிலிருந்து எனக்குக் கடுஞ்சுரம். அப்பா தான் என்னை வயல் புறத்திலிருந்து வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்ததாக அம்மா சொன்னாள். அன்றிலிருந்து கண்ணுந் திறவா கடுஞ்சுரம். இப்போத்தான் ஒரு வார மாய்ச் சற்றுக் குணம்.

எனக்கு ஜுரம் வருவானேன்? புரியவில்லை. சற்று யோசனை செய்தாலும் யோசனையே அசதியாயிருந்தது. கண்களை மூடிக்கொண்டேன். இரு தோள்களிலும் பின்னல் வழிய, சற்றே தளையவிழ்ந்த மொக்குப் போன்று சற்றுத் திறந்த வாயுடன் ஒரு முகம் தோன்றிற்று. இப்பொழுதுதான் கவனித்தேன். அவள் மூக்கு எவ்வளவு கூர்மையாயிருந்தது!

"வால்மீகி, யாருடா அந்தப் பெண்? அதுதாண்டா வந்து சொல்லித்து, நீ வயல் மேட்டுலே மூர்ச்சையாய்க் கிடக்கேன்னு. இதுவரை மூணுதடவை உன் உடம்பை விசாரிக்க வந்தாள். மூணுதடவையும் நினைப்பில்லாமல் கிடந்தே, இல்லை தூங்கிண்டிருந்தே. அவள் எப்படிடா அப்படித் தினம் ஒரு தினுசா உடுத்திண்டு வராள்? அவாத்திலே அவ்வளவு துணிமணியிருக்குமா என்ன? ஆனால் எப்படி உடுத்துண்டாலும் அவளுக்குப் பாந்தமா இருக்கு, சிலபேர் உடல் வாகு அப்படி."

ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தேன். அந்தி வர்ணங்கள் தோட்டத்தில் தோய்ந்துகொண்டிருந்தன. கிணற்றடியில் சின்னான் கழுத்துக்குக் கீழ் குளித்துவிட்டு உடம்பைத் துடைத்துக்கொண்டிருந்தான். என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஜன்னலண்டை வந்தான்.

''என்னா சாமி ஒடம்பு எப்படி? எங்க வவுத்தே நல்லா ஒரு கலக்கு கலக்கிட்டையே! உன்னைக் கட்டையாட்டமான்னா தூக்கிட்டு வந்தோம்! நான் அப்பவே சொன்னேனே! 'இந்தமாதிரியெல்லாம் சின்ன அய்யாவை இந்தமாரிதி வேளையிலே தனியா உலாத்தவிட்டா இந்த மாரிதிதான் முடியும்னு நீங்கள்ளாம் நொம்ப நொம்ப படிச்சவங்களாயிருந்தாலும் இந்தமாதிரி விசயங்களுலே நாங்க சொல்றதே மிஞ்சக்கூடாது சாமீ' இது ஒரு காத்து சம்மந்தம். இப்படித்தான் என்னப்பனை ராவெல்லாம் தேடிட்டு வெள்ளி வேளைக்கு ஒரு வயலுலே, அறுத்த முளைமேலே, குப்புற விளுந்திருச்சிக் கிடந்தாரு. வாயாலும் மூக்காலும் ரத்தத்தைக் கக்கிட்டு; நெஞ்சிலே மூச்சு முரடுது; மேல்மூச்சு வாங்கிட்டு அப்போ சொன்னாரு: 'சின்னான் டேய்! கருப்பஞ் சோலைக்கு வடவண்டை களத்துமேட்டுலே கையெழுத்து கலையற வேளையிலே தனியாப் போவாதேன்னு''.

ஏதோ எனக்கு மாத்திரம் பக்கத்துச் சுவருக்குக்கூடத் தெரியாதபடி சொல்லும் முறையில் இன்னும் சற்று நெருங்கி வந்தான்.

''இதோபாரு சாமி, பாத்தியா என் களுத்துலே இந்த கல்லுக் கட்டியிருக்கே இது ஒருத்தருக்கும் அகப்படாது: இதைக் கட்டிட்டு நீ வெளியிலே கிளம்பிட்டா, எந்தக் காத்து, மோகினிகூட உன்கிட்டே ஒண்ணும் ஆட்டிக்க முடியாது.

அவன் 'மோகினி' யென்றதுமே கறுப்புடுத்தி ஒரு உருவம் என் கண்முன் எழுந்தது. கறுப்புப் புடவை யோரத்தில் வெள்ளி ஜரிகை.

சட்டெனச் சின்னான் பேச்சில் எனக்கு அலுப்புத் தட்டிற்று. அவனைப் 'போ' என்றுகூடச் சொல்லாமல், தலையணையில் சாய்ந்தேன். குழந்தை மூச்சுப் போன்று மெலிந்த காற்று இமையோரங்களுள் புகுந்து விழிகள் குளிர்ந்தன.

அப்போது குழந்தையடிகளில் கொஞ்சும் சதங்கை போல், தந்தி நாதங்கள் திருட்டுத்தனமாய் அடிமேல் அடிவைத்து ஒன்றன்பின் ஒன்றாய் நயத்துடன் துளித்துக் கொண்டே செவி வழி புகுந்து என் உள்மார்பில் பாகாய் வழிந்தன. நான் கட்டிலிலிருந்து இறங்கினேன். நாதங்கள் அழைத்த வழியே பின்தொடர்ந்து சென்றேன்.

அறையில் அம்மா விளக்கைக்கூடப் போட்டுக் கொள்ளவில்லை. மங்கி மறையும் அந்தி வெளிச்சத்தில் அவள் உருவக் கோடுகள் மாத்திரம், மாலைக் காற்று தன்னில் தானே ஸன்னமாய் எழுதிக்கொண்ட சித்திரம் மாதிரித் தெரிந்தன. குனிந்த தலையுடன் தன் வாசிப்பில் லயித்திருந்தாள்.

அவள் வாசிப்பில் கீர்த்தனையின் அடையாளமோ, தீர்மானமாய் ராக ரூபமோ தெரியவில்லை. அவள் சிந்தனையின் அருவிதான் புறப்பட்டுக் கொண்டிருந்தது. ஸ்திரமற்று வளைந்து வளைந்து, தங்கித் தயங்கித் தளர்ந்து வளர்ந்து கொண்டிருந்தது. சிறு அரவத்திலும் காற்றிலே கரைந்துவிடுவாள் போன்று அம்மா உருவம், அந்த நிலையில் அவ்வளவு நளினமாயிருந்தது.

அம்மா என்னைப் பார்த்தாள். என்னைப் பார்த்ததும் அவள் முகத்தின் மலர்ச்சியை இருட்டில் நான் காணமுடியவில்லை. ஆயினும் அவள் உள்ளுவகையின் மணம் என்மேல் அலை மோதிற்று.

உள்ளே வந்து உட்கார்ந்தேன். அம்மா பெருமூச் செறிந்தாள். மன நிறைவின் அசதியோ? ஏனோ தெரிய வில்லை, வீணையைக் கீழே இறக்கினாள். ஆனால், அந்த வேளையின் சுருதி கலையவில்லை. அதைக் கலையாமல் காப்பதற்குத்தானோ, அவள் விரல்கள் மாத்திரம் தந்தி களைச் சுண்டிக் கொண்டிருந்தன. நாதலாகிரி எங்களைச் சூழ்ந்தது.

''அம்மா...''

''அம்மா, சப்தங்கள் மகரந்தப் பொடிகள், காற்றிலே மிதந்து வந்து என்னை இங்கே இழுத்தன'' என்றேன்.

அவள் கண்கள் கீழே விழாத கண்ணீரில் பளபளத் தாற்போல் எனக்குத் தோன்றிற்று. இடக்கையால் என் னைத் தன்பக்கம் இழுத்து அணைத்துக்கொண்டாள். வலக்கை தந்தியை மீட்டியபடி இருந்தது. நான் ஒரே பிள்ளை. செல்லப்பிள்ளை. எப்பவும் அவள் குழந்தை.

''அம்மா நீ என்ன வாசிக்கிறாய்?''

''நான் என்னத்தைக் கண்டேன்?'' கையை விரித்தாள். ''வாசிக்கணும்போல் தோணித்து வாசிக்கிறேன். இன்னிக்குத்தான் கை ஒழிஞ்சுது.''

''அம்மா நீ வாசித்து ரொம்ப நாளாயிற்று.''

''அம்மா யோசனையாய், தந்திகளடியில் தங்கியிருப்ப தாய் நினைத்துக்கொண்ட புழுதியை ஊதினாள். அந்த வீணையை அம்மா தன் கலியாண வரிசைகளுடன் தன் பிறந்தகத்திலிருந்து கொண்டுவந்திருந்தாள். அவள் தகப்பனார் ஒரு சிறந்த வைணீகர். அந்தக் குடும்பமே சங்கீதப் பரம்பரை.

''அம்மா நீ என்ன வாசிக்கிறாய்?''

அம்மா மறுபடியும் வீணையைத் தன்மேல் தாங்கிக் கொண்டாள். ஸ்வரக் கட்டுகளைச் செல்லமாய் தடவி

னாள். கன்றைக் கண்டதுமே தாயின் முலைக்காம்பில் துளிக்கும் பால்போல் ஓசைத்துளிகள் முத்து முத்தாய் மெத்து மெத்தென எழுந்தன.

"நான் என்னத்தையோ நினைச்சுண்டேன்."

அவள் குரல் உள்ளடங்கிப் போயிற்று.

மாவிலைகள் சலசலத்தன.

"அம்மா நான் சிறந்த பாடகனாகப் போகிறேன்—"

மாமரத்தில் ஒரு பட்சி "கிள் கிள்" என்றது.

உள்வலியில் அவள் குரல் சுளித்தது.

"நீ பாடகனானால் எனக்கு ஒண்ணும் அதிசயமில்லே."

"ஏன்?"

"உனக்குக் குரல் இருக்கு, ஞானமும் இருக்கு. என் வழி வாசனையுமிருக்காதா? ஆனால், அப்பா உன்னை விடமாட்டார்."

"ஏன்?"

"அதில் பிழைப்பில்லை."

"இல்லாவிட்டால் போகிறது. இஷ்டம் இருக்கே!"

"இஷ்டம் இருந்தால் மாத்திரம் போதுமா?"

"இந்தமாதிரி விஷயங்களில் இஷ்டம்தான் பெரிசு."

"வால்மீகி, அப்பா சொல்றது சரிதான்."

"என்னது அம்மா?"

"வால்மீகி, அப்பா உன்னை விடமாட்டார்."

"ஏன்?"

"ஏன்னா, நீ என்னைக்கொண்டு பிறந்திருக்கே."

அவள் மனம் நிம்மதியிலாது அலைந்துகொண்டிருந்தது, அவள் வாசிப்பிலேயே தெரிந்தது. விரல்களினடியில் இருந்து ஸ்வரங்கள் துரிதமாய்ப் புறப்பட்டன. கூட்டுக்குள் கூட்டமாய் அடைபட்டு அலையும் சிட்டுக்குருவிகள்போல் அவை தவித்தன.

''அம்மா நீ என்னத்தை நினைத்துக் கொண்டிருக்கிறாய்?''

''ம்—ம்—ம்?—''

''அம்மா நான் கேட்கிறேன், நீ என்னத்தை நினைத்துக் கொண்டிருக்கிறாய்?''

''உன்னைத்தான்னு வெச்சுக்கோயேன்-''

என் கன்னத்தை விரல் நுனிகளால் தொட்டாள்.

''என்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்?''

''என்னடா கண்ணா இன்னிக்கு என்னை இப்படிப் படுத்தறே?''

''என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்று நான் தெரிந்துகொள்ளக் கூடாதா?''

''நீ எனக்கு உண்டானதை நினைச்சுண்டேன்—''

அவள் அப்படிச் சொல்லும்பொழுதே, ஜன்னலுக்கு வெளியே மாமரத்தை உதைத்துக்கொண்டே அடிவானத்தில் ஒரு நட்சத்திரம் உதயமாயிற்று. ஒரு பெரிய கற்கண்டு கட்டியளவுக்கிருக்கும். நான் அதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆகையால் அவள் வார்த்தைகளின் சப்தங்களை மாத்திரம் வாங்கிக்கொண்டேனேயொழிய அவளைச் சரியாய்ப் புரிந்துகொள்ளவில்லை.

''உ—ம்—ம், என்னம்மா சொன்னாய் நான் கவனிக்கவில்லை—''

''நீ உள்ளே வந்ததும் என்னவோ சொன்னயே என்னது?''

''எனக்கு நினைவில்லையே—''

''சப்தங்கள் என்னவோ மகரந்தப் பொடிகள்னு—அது நன்னாயிருந்தது, நீ சொன்ன தினுசு—''

எனக்கு வெட்கமாய், ஆனால், பெருமையாயிருந்தது. 'நான் வால்மீகியோன்னோ—''

''வால்மீகி நான் ஒரு அசடு—''

முன்பின் சம்பந்தமிலாது அம்மா அப்படித் தெரிவித்ததும் எனக்குக் 'கிளுக்'கென்று சிரிப்பு வந்துவிட்டது. ஆனால் அவள் சிரிக்கவில்லை.

''எந்த அசடு சொல்லித்து அம்மா அசடுன்னு?''

''நான்தான் சொல்றேனே, நான் அசடுன்னு'' அவள் குரல் நடுங்கிற்று. ஆனால் அதில் ஒரு தீவிரமான தெளிவு இருந்தது. அதைக் கேட்டதும் என் சிரிப்புப் பறந்தோடிப் போயிற்று.

''இல்லை அப்படியெல்லாம் சொல்லாதே அம்மா''—

''நான் அசடு அசடு அசடு அசடு அசடு''—

வெறி பிடித்தவள்போல் கத்தினாள். அவள் குரல் ஏறிக்கொண்டே போய் உச்ச ஸ்தாயியில் ஒன்பது சுக்கல்களாய் உடைந்தது. கோரமான அழுகையுடன் தடாலென்று வீணைமேல் விழுந்தாள். தந்திகள் வீறிட்டன.

''அம்மா அம்மா அம்மா...''

அவள் நெற்றிப் பொட்டு கொதித்தது. எனக்கு அவள் பதிலளிக்கவில்லை. வாத்தியத்தின்மேல் குப்புற விழுந்தபடியே விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள்.

நான் வயலில் கரும்புக் கன்றுகளுக்கிடையில் நின்று கொண்டிருந்தேன். தலைக்குமேல் கருப்பந்தழைகள் முன்னும் பின்னும் அடர்ந்து ஓங்கி மறைத்தன. அங்கு ஒளிந்து என் மனச் சஞ்சலத்தை மறக்க முயன்றேன்.

அப்பொழுது குழலின் ஓசை என்னை அழைத்தது. பட்டுப் பூச்சியின் இறக்கைகள்போல் ஒரு ஸ்வரம் அந்தரத்தில் படபடவென்று அடித்துக்கொண்டு என்னை அழைத்தது. கரும்புகளின் அடவியிலிருந்து வெளிவந்தேன்.

இன்று அவள் வானத்தின் நீலத்தையே உரித்து உடுத்தியிருந்தாள். நீல ரவிக்கை, நீலத்தாவணி, நீலப் பாவாடை. கையில் நீல வளையல்கள். நெற்றித்திலகம் கூட நீலம்.

"ஓ, வந்துவிட்டாயா? உடம்பு சௌக்கியமா?" அவள் பற்கள் பளீரென்றன. நான் அவளின் நீறக் கோலத்தில் லயித்து நின்றேன். ஆனால் அவள் ஒன்றும் லஜ்ஜைப்படவில்லை. அவள் மேலாக்கு மெல்லக் காற்றில் ஆடி அலைந்தது. அவள் கையில் பிடித்திருந்த புல்லாங் குழலின் நீலப்பட்டுக் குஞ்சம் குதித்தது.

"என்ன பேந்தப்பேந்த முழிக்கிறாய்?"

"உன்குழல் என்னை அழைத்தது".

"ஓ இதுவா, நான் இப்படி அழைத்தால் நீ இப்படி வருவாய் என எனக்குத் தெரியும்."

எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

"நான் இங்குத்தான் இருக்கிறேன் என உனக் கெப்படித் தெரியும்?"

அவள் பதில் பேசவில்லை, சிரித்தாள். அவள் கேலி பண்ணுகிறாளா, மெய்யாகவே அவன் சொல்வதை அவள் நம்புகிறாளா என்று புரியவில்லை.

நான் அவள் கைக் குழலைப் பார்த்துக்கொண்டே ''உனக்கு நன்றாக வாசிக்க வருமா?'' என்றேன்.

''எனக்கு எல்லா வாத்தியங்களும் வரும். எல்லாவற்றையும் வீட்டில் சொல்லி வைந்திருக்கிறார்கள். வாத்தியத்துக்கு ஒரு வாத்தியார் ''பீட்'', நான் ஒரு சகல கலாவல்லி—''

மறுபடியும் அந்தச் சிரிப்பு பனித்துளிகளை முகத்தில் வாரியிறைத்தாற்போல் குளுமையாய்ச் சொரிந்தது.

அவள் குழலை மெதுவாய் உதட்டில் வைத்துக்கொண்டாள். உள்ளிருந்து வெளிப்பட்ட காற்று கறும்பின் இனிமையை வில்லால் வளைத்தாற்போல் ஒலித்தது. நான் கையிலிருந்து குழலை வாங்கினேன். வழு வழுப்பான் அதன் மேற்புறத்தைத் தடவினேன். அவள் என் கண்களையே கவனித்துக்கொண்டிருந்தாள். அவள் கண்கள் சிறு ஏளனத்தில் சிரித்தபடி இருந்தன.

இம்மூங்கிலில் காற்றை அடைத்து மறுபடி இழுக்கும் முறையில் இழுத்தால் இது ஒரு வாத்தியம். மூச்சென்று ஒரு பேரைச் சொல்லி, இந்த உடம்பில் ஒரு காற்றை அடைத்து இழுத்தால் அது ஒரு பேச்சு, பிராணன், உயிர், உலகம், உழலல், நான் குழலை உதட்டின் கீழ் பிடித்துக்கொண்டேன். அவள் நாக்கின் ஈரம் இன்னும் காயவில்லை. நான் ஊத முயன்றேன்.

திடீரெனக் காற்று எங்களைச் சுற்றிச் சுழன்று எழுந்தது. முகத்திலும் வாயுள்ளும் மோதிற்று. அவள் ஆடைகள் உடலோடு ஒட்டிக்கொண்டு படபடவென அடித்துக்கொண்டன. அவளைத் தன் இஷ்ட உருவில் வழித்தெடுப்பது போல் அவளைத் தன்னில் ஸ்னானம் செய்வித்தது. அசரீரமான காற்றிலிருந்தே சரீரமாய் உதயமானதுபோல் அவள் உருவக்கோடுகளில் வளைவுகள் பிதுங்கின.

"என்ன இது? குழலை ஊதிப் புயலைக் கிளப்பி விட்டாய்?"

நான் புரியாத பரவசத்தில் ஆழ்ந்தேன்

மோஹினி.

*　　　　*　　　　*

நள்ளிரவில் நான் விழித்துக்கொண்டேன். மையிருட்டு மரத்தில் இலைகள் அசையவில்லை. அந்த சர்வ மௌனத்தாலேயே எனக்கு விழிப்பு வந்திருக்கும்.

எதிர் ஜன்னலிலிருந்து பேச்சின் அரவம் மிதந்து வந்தது. எழுந்து உட்கார்ந்தேன். வார்த்தைகள் சப்த சுத்தமாய் அர்த்த கனத்துடன் காற்றுவெளியில் கோலிகள் போல் உருண்டன.

"நான் இன்னிக்கு உங்களை விடப்போவதில்லை—உஷ்—விளக்கைப் போடாதேங்கோ—வால்மீகி முழிச்சுக்கப்போறான்—"

"Alright, விஷயம் என்ன?"

அம்மாவின் சிரிப்பு வேதனை பண்ணிற்று.

"அவ்வளவு சுருக்க என்னைத் தட்டிக் கழிச்சுடலாம்னு பார்க்கறேளா? இன்னிக்கு ரெண்டாலே ஒண்ணு தெரியணும்—"

"உஷ் பார்கீ, உனக்கு உடம்பு சரியில்லே"

"எனக்கு நன்னாத் தெரியும். அதனாலேதானே எனக்கு இவ்வளவு தைரியம்! நான் இந்தப் பூட்டிலே இருந்து பிழைக்கமாட்டேன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"அசட்டுப் பிசட்டுன்னு பேத்தாதே—"

"இல்லே, இப்போ பேத்தல்லே. காலையிலே பேத்தல் வந்தூடும். எனக்கே தெரியும். நான் பேச வேண்டிய தைப் பேசித் தீர்த்துக்கறவரைக்கும் ஜன்னியை எட்டப் பிடிச்சு வெச்சிருக்கேன்—"

. "பாகி, இதெல்லாம் என்ன?"

"நீங்கள் என்னை நம்பப்போறேளா இல்லையா?"

"எதற்கு?"

"நான் உங்களுக்குத் துரோகம் பண்ணல்லே. முகத் தைச் சுளிக்காதேங்கோ. உங்கள் முகம் எப்படிப் போற துன்னு இருட்டிலேகூடத் தெரியும். நான் உங்களுக்குத் துரோகம் பண்ணல்லே."

"ஆரம்பிச்சாச்சா? மறுபடியும்—"

"மறுபடியில்லை இனி மறுபடியே இல்லை. இந்த ஒரு தடவையுடன் ஒரே தடவைதான். அத்துடன் நானே சரி. விடியாத ஒரே இரவாய், இந்த இருவத்திமூணு வருஷங்களின் ஒவ்வொரு நாளின் இருப்பே போறும். எனக்கு நாளைக்கு விடிஞ்சுடும்."

"இந்த இருபத்தி மூணு வருஷங்களாய் நான் உன்னை ஏதாவது கேட்டிருக்கிறேனா?"

"நீங்கள் கேக்காமல் இருந்துதானே அந்த இரவை, இந்த இருபத்திமூணு வருஷங்களாய் நீட்டி. நீடிச்சு வெச்சிருக்கேள்! அந்தப் பெருமை உங்களுடையதுதான். ஆனால், அந்த நேஞ்சுக்கனம் எனக்கு வருமா? நான் உருகி உருகி உள்ளுக்கே உளுத்துப்போயாச்சு. ஏன்? ஏனென்று என்னை ஒரு வார்த்தை நீங்கள் கேட்காததால். நீங்கள் கேட்காமல் நான் என்னத்தை உங்களை நம்பச் செய்ய முடியும்?—"

அப்பா ஏதோ சொன்னார். ஆனால், அவர் சொன்னது காதில் விழவில்லை. ஓர் இலையின் அசைவில் அது கலந்துவிட்டது. அப்பா சாதாரணமாய்ப் பேசினால்

உதடுகள்கூட அதிகமாய் அசையா. பேச்சே மனமிலாது அவரிடமிருந்து பிடுங்கும் ஒரு அவசியம். அவரைச் சுற்றி எப்பவும் ஆழ்ந்த மௌனத்தின் விறுவிறுப்பு இயங்கியது.

அப்பா ஒற்றைநாடியாய் வளையாத முதுகுடன் பின்னால் கை கட்டிக் கொண்டு நிற்பார். எனக்கு மணிக் கூண்டின் நினைப்பு வரும். அப்பா ஆயிரம் புயலிடை யிலும் அணையா விளக்கு.

அப்பாவின் குரல் எப்பவுமே சற்றுத் தாழ்ந்து குமுறும் கனத்துடன் இனிப்பான அச்சம் நிரம்பியிருக்கும். அப்பா விடம் எனக்குப் புரியாத பயம் எப்பவும் இருந்து கொண்டேயிருந்தது. இத்தனைக்கும் அவர் எனக்கு எதுவும் மறுத்ததில்லை. என்னை எதற்கு, ஏன் எங்கே, எப்போ என்று கேட்டதில்லை. நான் என்னைப் பெற்றவர் களின் ஒரே பிள்ளை மாத்திரம் இல்லை. ஒரே பேறு.

இவர்கள் எந்த ஏடுகளைப் புரட்டுகிறார்கள்? இருபத்திமூன்று வருஷத்து ஏடுகளையல்லவா புரட்டு கிறார்கள்? இருபத்திமூன்று வருஷங்களுக்கு முன் ஓரிரவை, எதற்குப் புரட்டுகிறார்கள்? எனக்கு இப் பொழுது இருபத்துமூன்று வயதாகிறது. எனக்குப் புரிந்ததும் புரியாததுமாய் என்னைப் பற்றிய ஏடுகளையா புரட்டுகிறார்கள்?

இத்தனை நாளாயில்லாமல் இன்றைக்கேன் புரட்டு கிறார்கள்?

அம்மாவின் குரல் அப்பொழுது சற்று உரத்து எழுந்தது.

"இல்லை இல்லை. நானே உங்களிடம் சொல்லத்தான் பார்த்தேன். உங்களுக்கு நினைவிருக்கோ! அன்னி ஒரு நாள் நீங்கள் ஜன்னலண்டை பின்னால் கைகோத்துண்டு நின்னுண்டிருந்தேளா! அப்போ நீங்கள் என்னோடே

எட்டு மாஸமாய்ப் பேசல்லே தெரியுமா? நீங்கள் ஏன் என்று கேக்கல்லே. ஆனால் எட்டு மாஸமாய்ப் பேசல்லே—''

அம்மாவின் குரல் விம்மியபோது என் தொண்டையும் அடைத்தது.

—''அப்போ நானே வெக்கத்தை விட்டுட்டு, ஆனால் வாய்விட்டுப் பேச அஞ்சி, அந்தப் பத்து நாளைய பச்சைப் பிண்டத்தை அப்படியே ஏந்திண்டு வந்து உங்கள் காலடியிலே போட்டு உங்களை நமஸ்கரித்தேன். அப்பவாவது என்னை ஒருவார்த்தை நீங்கள் கேட்டிருக்கலாம்; என்னை நம்பியிருக்கலாம் குழந்தையைத் தூக்கியிருக்கலாம். நம் குழந்தைக்காகவாவது எனக்கு ஒரு மன்னிப்பு இல்லை. என்னைக் காலால் உதைச்சாவது இருக்கலாம். இல்லை. உங்களிடம் மன்னிப்பு இல்லை. மன்னிக்க இஷ்டமில்லை. நீங்கள் கேக்காத கேள்வியைப் பத்திரமாய் நீங்களே உங்களுள் பத்திரமாய்ப் பூட்டிவைச்சுண்டு அப்படியே திரும்பி வெளியிலே போயிட்—டே—ள்''—

அம்மா கதறிக் கதறி அழுதாள். காற்றில் அலையும் சருகுபோல் அவள் உடம்பு எப்படி அந்த உள் புயலில் குலுங்கியிருக்கும் எனக்குத் தெரியும். ஒரு சின்னக் கஷ்டம் கூட அம்மா காணச் சகியாள். எலி உபத்திரவம் பொறுக்காது எலிப்பொறி வைப்பாள். ஆனால் பொறியில் எலி விழுந்ததும், பொறியுள் கம்பிகளின் பின் எலியின் கண்களைக் கண்டதும் கண்ணீர் விட்டுவிடுவாள். அப்படிப்பட்டவள் எப்படி இவ்வளவு பெரிய, எந்தத் துக்கத்தைச் சகித்துக்கொண்டிருக்கிறாள்?

அப்பொழுது ஸன்னமாய்க் காற்று எழுந்து இலைகள் சலசலத்தன. அது கிளம்பும் தினுசிலேயே அது ஒரு புயலின் முன்னடியென்று தெரிந்தது. இதுவரை இலை கூட அசையாது முன் அமைதி. மேல் நோக்கினேன். கரு

மேகங்கள் அவசர அவசரமாய் வானை அடைத்துக்கொண்டிருந்தன. நான் காத்துக்கொண்டிருந்தேன். குரூரமாய்ப் பேரிடியொன்று உடைந்தது. சவுக்காலடித்தாற்போல் மரக்கிளைகளிடையில் ஊளையிட்டுக் கொண்டு புயல் புகுந்தது. அம்மாவின் கூக்குரலிட்ட சிரிப்பு புயலையும் ஊடுருவிற்று. நான் துள்ளியெழுந்தேன்.

''பாருங்கோ பாருங்கோ நான் பேசல்லே. என் சத்தியம் பேசறது. அன்னிக்கு எப்படியோ அதேதான் இன்னிக்கு இப்போ. நேரங்கூட இதேதான் இதேமாதிரி தான். முதலில் இலை ஆடாமல் இருந்தது. நீங்கள் உங்கள் அறையில் ராந்தல் வெளிச்சத்தில் ஏதோ ப்ளானைப் போட்டிண்டிருந்தேள். உங்களுக்கு என்னிக்கும் உங்கள் உத்தியோகம், ப்ளான்தான் முக்கியமாக இருந்ததில்லையா?''

''என் உத்தியோகம் என் வயிற்றுப் பிழைப்பு. அது மாத்திரமில்லை. என் குடும்பத்தின் வயிற்றுப் பிழைப்பு. அதாவது குடும்பம், ஈனம் மானம் என்கிற உணர்ச்சி உள்ளவர்களுக்குத்தான் என் வார்த்தை பொருந்தும்—''

''என்னை ஒண்ணும் சொல்லாதேங்கோ. அப்ப நான் ஒண்ணும் அறியாதவள்!''

''ஆ!''

''நீங்கள் என்னோடு பேசல்லே—'' அம்மாவின் குரல் அசல் பச்சைக் குழந்தையினுடையது மாதிரி ஆகிவிட்டது. அதில் ஒரு மழலை, திகைப்புக்கூட இருந்தது. ''நீங்கள் உங்கள் ப்ளானிலும் கணக்கிலும் முனைஞ்சூட்டா வாரக் கணக்கில் பேசமாட்டேள். எனக்கு ஒரு பொம்மனாட்டி துணையாவது இருந்தால் பொருள் படுத்தியிருக்க மாட்டேன். நாம் இருந்த இடம் நடுக்காடு. எதிரும் புதிரும் நீங்களும் நானும்தான். நீங்கள் ஊமையாகிவிட்ட பிறகு நான் என்ன பண்ணுவேன்?''

அம்மா பேசிக்கொண்டே போனாள். அவளுக்கு இனிக் கவனிக்க வேண்டியவர்கள் அவசியமேயில்லை.

''பகலாவது பரவாயில்லை. ராத்திரி ஏன் வரது? நான் நிஜமா கேக்கறேன். தூங்காதவர்களுக்கு ராத்திரி எதுக்கு? நடுராத்திரியில் திடுக்குனு முழிச்சுப்பேன். மரக் கிளைகளின் சந்திலே காறறு ஊளையிடும். உங்கள் அறையில் வெளிச்சம் தெரியும். ஆனால் எனக்குத் தைரிய முண்டோ? நான் சொல்றேன்; நீங்களுந்தான் என் தப்புக்குப் பொறுப்பு. ஒரு தடவையாவது நாற்காலியை நகத்திண்டு எழுந்து என்னண்டை வந்து என்னைத் தொட்டு ''பாகீ தூங்கிட்டையா, பாகீ பயமாயிருக் கான்னு, கேட்டிருக்கேளோ? ஒரு தடவையாவது கேட் டிருந்தால் நான் துணிஞ்சிருக்க மாட்டேன். நடுக்காட்டில் என்னைக் கண்ணைக் கட்டி விட்டாச்சு. எனக்குக் கண் கெட்டுப்போச்சு. தனியாக் குருட்டு யோசனை பண்ணிப் பண்ணி எனக்குப் பிறந்த வீட்டுச் சபலமும்தான் வந்துடுத்து. நான் பிறந்த வீட்டிலிருந்து வந்த புதிசு. நான் முன்பின் யோசிக்கல்லே. உங்களை விட்டுப் பிரியத் துணிஞ்சுட்டேன். நான் வெறி பிடிச்சவளாயிட்டேன்.

''என்னை என் வீட்டிலே விட்டுடுங்கோன்னு உங்களை நான் ஏன் நேரில் கேட்டிருக்கக் கூடாது? எனக்கே தெரியல்லே. எனக்கு உங்களை அப்படிக் கேட்கப் பயமா யிருந்ததோ? என் மூளையேதான் கோணலாய் வேலை செய்ததோ? நான் போகத் துணிஞ்சுட்டேன். அப்பறம் போறது ஒன்றுதான் எனக்குக் குறியாயிருந்தது. பாக்கி எல்லாம் மறந்தேபோச்சு. மானம்—ஈனம்—''

''உன் பெண்மை—''

அப்பாவின் வார்த்தை ஒரே வார்த்தை. அதன் அரவம் தணல்மாதிரி ஜ்வலித்துக்கொண்டு ஜன்னலின் வெளியே உதிர்ந்தது.

''ஆமாம்; என் பெண்மையுந்தான் மறந்தது. நான் வெளியேறத் துணிஞ்சுட்டேன். ஒத்தையடிப்பாதை ஒண்ணு ரயில் ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரம் போச்சுன்னு தெரியும். எந்தப் பாதைன்னு நிச்சயமாய்த் தெரியாது. என் ஊருக்கு ஒரு வண்டிதான் ஓடித்து. அதுவும் நடு ராத்ரி. நாலு நிமிஷந்தான் அந்த ஸ்டேஷனில் நிக்கறதுன்னு தெரியும்; அவ்வளவுதான்.

என் பெட்டியைத் திறந்தேன். கலியாணப் புடவை பளீரெனக் கண்ணைப் பறிச்சுண்டு மேலாகக் கிடந்தது. அதை ஒரு பையுள் அடைச்சுண்டேன். ஒரு வெள்ளி மைச் சிமிழ் இருந்தது. அதன்மேல் சபலந்தட்டித்து. அதையும் எடுத்துண்டேன். உங்கள் சட்டை ஆணியில் தொங்கித்து. அதிலிருந்து ர்யில் சார்ஜ் மாத்திரம் திருடினேன். ஒரு கால் ரூபாய் உருண்டு ஓடித்து. அதைக் குனிஞ்சு தேடிப் பொறுக்கி எடுத்துண்டேன். அதுகூட எனக்கு நினைவு இன்னம் மறக்கல்லே. அந்தச் சப்தம் உங்களைக் கலைச்சுடுமோ என்கிற திகில். எனக்கு நாய்மாதிரி இறைச்சுது.

அதோ உங்கள் அறையில் ஒரு ராந்தல் வெளிச்சத்தில் மேஜைமேல் ஒரு ப்ளானை விரிச்சுப் போட்டுண்டு எதையோ குறிச்சுண்டிருக்கேள். அந்தமாதிரி நிலையில் உங்களை நான் பார்த்தபோது, உங்கள்மேல் கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கைகூட நூல்மாதிரி பட்டென அறுந்துபோச்சு. நீங்கள் எப்பவும் அப்படித் தானிருப் பேள். நான் இங்கேயிருந்தாலும் உங்களுக்கு ஒண்ணு தான். அப்புறம் எனக்கு இங்கே என்ன வேலை? எனக்கு எப்படித்தான் அத்தத் தைரியம் வந்ததோ? சட்டென வாசல் கதவைச் சத்தம் போடாமல என் பின்னால் இழுத்து மூடிண்டு நாலடி முன்னாலே எடுத்தும் வெச் சுட்டேன்.

ஓரே கும்மிருட்டு. ஒத்தையடிப்பாதை எதிரே பத்தடிக்கு நாடாமாதிரி ஓடித்து. அப்புறம் அதுவும்

அடையாளம் தெரியல்லே. கோரைப்புல் ஒவ்வொண்ணும் காத்தில் ஆடிப் புஸ் புஸ்ஸுனு சீறித்து. வீட்டை விட்டுப் பத்தடி நடக்காவிட்டாலும் எனக்கு வழி தப்பிப் போயிடுத்துன்னு மனஸுலே ஒரு எண்ணம் பட்டுப் போச்சு. இந்த வழி மாத்திரமில்லே, இன்னும் எந்தெந்த வழியெல்லாமோ, ஊரிலே உலகத்திலே எனக்கிருக்கற வழியெல்லாமே தப்பிப்போச்சு—''

அம்மா புனையும் பழைய நினைவுகளின் கோர்வை, புலியின் கழுத்தில் அசைந்தாடும் பூமாலைபோல, சோக பயங்கரத்துடன் காவிய அழகுடன் மிளிர்ந்தது

''நீங்கள் எவ்வளவு கல்லாலடிச்ச மாதிரி யிருந்தாலும் நான் செஞ்ச காரியம் சரியில்லேன்னு பட்டுப் போச்சு. அவ்வளவுதான் அழுகை வந்துடுத்து.

'அப்போ பாருங்கோ—திடீர்னு ஒரு காத்து கிளம்பித்து—''

அம்மா அப்படிச் சொன்னதும் அவள் சொல்லுக்குக் காத்திருந்த மாதிரி காற்று எங்கிருந்தோ புயலாய்ச் சுழித்துக்கொண்டு கிளம்பிற்று—

அம்மாவின் குரல் உயர்ந்தது.

''ஆயிரங் கைகள் சேர்ந்தாற்போல் எழுந்து தடுக்கறாப்போலே என்னைப் பின்னுக்குத் தள்ளிண்டே போச்ச—''

அம்மாவின் வார்த்தைகள் எனக்குச் சரியாய்க் கேட்கவில்லை. நானே என் வசமில்லை. எழுந்து அவசர அவசரமாய் அப்பாவின் அறைப்பக்கம் ஓடினேன். ஜன்னலின் கதவுகள் காற்றில் படபடவென அடித்துக் கொண்டன.

அம்மாவின் வார்த்தைகள் இப்பொழுது தீவிரமாய் அறையிலிருந்து வெளிவந்தன. நான் வெளியில் நின்று கேட்டேன்.

உள்ளே போகவில்லை.

"—நீங்கள் நம்புவேளா? நீங்கள் நம்ப வேண்டாம். காற்றினுடைய ரூபத்தைக் கண்ணாலே நான் பார்த்தேன். அந்தப் புயலின் சுழிப்பிலிருந்து முதன் முதலில் எனக்கு ஒரு முழிதான் தெரிஞ்சுது பிரம்மாண்டமான ஒரே முழி. அதன் நடுவிலே வண்டிச் சக்கரம் மாதிரி ஒரு கறுப்பு முழி என்னையே பார்த்தது. நான் எந்தப் பக்கம் திரும்பினாலும் எங்கே ஓடப் பார்த்தாலும் என்னையே உறுத்துப் பார்த்துண்டிருந்தது. புருவ வளைவில் கோரைப்புதர்கள் காடாய் அடர்ந்து சிலிர்த்தது. கூர்வளைஞ்ச கத்தியை வரிசையாய் நட்டாற்போல் ரப்பை மயிர்கள்; அந்தக் கறுப்பு முழி என்னைப் பார்க்கப் பார்க்க அதனுள்ளே கோபக் கனல் குழம்பாய்க் கொதிச்சு நுரை கக்கறது. அதிலேருந்து ஒரு உருவம் உண்டாகிக் கிளம்பித்து.

அது யாருன்னு தெரியல்லே. நான் முன்பின் பார்த்ததில்லை. முகத்தைத் திரை போட்டு மறைச்சாப்போல் ஒண்ணும் தெரியல்லே. திறந்த கட்டுமஸ்தான உடம்பு, இடுப்பில் ஒரு முழம் தோல். ஆணா பெண்ணா என்றுகூட நிச்சயமாய்த் தெரியல்லே. அதன் கையில் ஒரு வில். அதை அது வளைச்சு அதில் இறக்கை கட்டின அம்பு ஒண்ணைத் தொடுத்து, அந்த உருவம் என்னைக் குறி பார்த்தது. நான் எந்தப் பக்கம் ஓடினாலும் அந்தப் பார்வையும் அந்த வில்லும் என்னையே நோக்கி வளைஞ்சது. அப்படி என்னைப் பார்க்கும் குறிபிலேயே என் மூச்சையே தனக்கு இழுத்துக்கற மாதிரி எனக்குத் திடீர்னு மூச்சுத் திணறி, என் உடம்புள்ளே காத்து இல்லாமல் எனக்கு மூஞ்சியும் முழியும் வெளியே பிதுங்கிடற மாதிரி ஆயிடுத்து. அந்தப் பார்வையில் கொடூரமில்லை. ஆனால் இரக்கமேயில்லை. அந்தக் குறியை நான் தப்ப முடியாதுன்னு எனக்குத் தெரிஞ்சுபோச்சு. அந்த எண்ணம் எனக்கு எப்போ பட்டதோ அந்த க்ஷணமே அம்பு வில்லை விட்டுப்

புறப்பட்டுடுத்து. அது அம்பு இல்லை. என்னிடமிருந்து கிரஹிச்சுண்ட என் மூச்சேதான் கூர்மையாகி, அம்பு போல ஒரு உருவமாகி அந்த முழியிலிருந்து கிளம்பி ஒரே சீறலாய் வந்து—ஐயோ!''

அம்பு அப்போத்தான் தைத்தாற்போல் அம்மா வாய்விட்டு 'க்றீச்'சென்று கத்தினாள். அலறிக்கொண்டு நான் உள்ளே ஓடினேன். உள்ளே இருட்டு, தடுக்கி விழுந்தேன்.

அறையில் சட்டென வெளிச்சம் உதயமாயிற்று. அப்பா உயரமாய் நின்றார். அவர் காலடியில் அடிவயிற்றை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு அம்மா துடித்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் முழுதும் வேர்வை ஸ்னானமாய்க் கொட்டியிருந்தது. மூச்சும் பேச்சும் திணறின. ஆனால் அவள் பேசிக்கொண்டேயிருந்தாள். அவளால் பேச்சை நிறுத்த முடியவில்லை.

''நான் கத்தினதுதான் எனக்குத் தெரியும். எனக்கு நினைப்பு வந்தபோது நான் கட்டிலில் படுத்துண்டிருந்தேன். நீங்கள் பின்னாலே கையைக் கட்டிண்டு நின்னுண்டு என்னையும் என் தலைமாட்டில் உக்காத்தி வெச்சிருந்த மூட்டையையும் மாத்திமாத்தி பாத்திண்டிருந்ததுதான் நினைவுஇருக்கு. உங்களுக்குப் புரியல்லே. வாஸ்தவந்தான்; நீங்கள் என்னைக் கேக்கல்லே. ஏன் என்று என்னை இன்னமும் நீங்கள் கேக்கல்லே; ஏன்? என் கத்தல் கேட்டு ஓடி வந்தேளா? என்னைக் காணோமேன்னு தேடிண்டு வந்தேளா? அல்லது வெளியிலே காற்று வாங்க வந்த இடத்தில் காலடியில் கையில் பைமூட்டையுடன் நான் விழுந்து கிடந்ததைக் கண்டேளா? கண்டதும் உங்கள் நெஞ்சில் என்னென்ன எண்ணம் ஓடித்தோ? சொல்லாமல் என்ன தவிப்பு தவிச்சேளோ? ஆனால் நீங்கள் வெளிக் காண்பிச்சுக்கல்லே. நீங்கள் வெளிக் காண்பிச்சுக்கமாட்டேள். நானும் என்னென்னவோ சொல்ல வந்தேன்.

ஆனால் நான் என்னென்னு சொல்ல முடியும்? நான் என்னத்தைச் சொல்லி என்ன, நீங்கள் இடங் கொடுக்காமல்!

''அன்னிக்கு என் வயித்தில் வெச்ச பூச்சிதானோ என்னவோ, வால்மீகி பத்து மாதம் பொறுத்துப் பிறந்தான். என்னை மன்னிக்காட்டாலும் என் பிள்ளைக் காகவாவது என்னை மன்னியுங்கள் என்னை மன்னிக் காட்டாலும் பரவாயில்லே. என்னை நம்புங்கள். வால்மீகி தலைமேல் கைவைச்சு ஆணையிட்டுச் சொல்றேன். நான் உங்களுக்குத் துரோகம் பண்ணல்லே. வால்மீகி! வால் மீகி—உங்கப்பா என்னை நம்பமாட்டேங்கறாடா! காற்றிலே மிதந்து வந்து என் கருவில் புகுந்தாய், நான் சொன்னால் யாருடா நம்பப்போறா?''

''வாழ்—மீகி—வாழ்மீகி...''

''அம்மா! அம்மா!!''

' வாழ்மீகீ—வாழ்மீகி!'' அவள் வாய் குழறிற்று. அவள் கைகள் காற்றைத் துழாவின.

என் குழந்தே, என் குழந்தே! எங்கேடா நீ?''

''அம்மா! அம்மா!!'' விக்கி விக்கி அழுதுகொண்டே அவள் கைகளைப் பிடித்து என் கழுத்தைச் சுற்றி வைத்துக் கொண்டேன். அம்மாவின் பார்வை என் பக்கமிருந்தது தவிர கண்களில் பார்வையில்லை.

''அம்மா! அம்மா!!. அப்பா, அப்பா, அம்மா ஏன் அப்பா இப்படி இருக்கா?''

அப்பா முகத்தில் இரத்தக் குழாய்கள் விம்மி வெடித்து விடும்போல், முகம் அவ்வளவு ''டால்' அடித்தது. என் தலைமேல் கையை வைத்தார். இறுகிய தாடைகளில் இரு எரி நீர்கள் வழிந்தன.

''அம்மா! அம்மா!'''

*  *  *

வயற்புறத்தில் ஓரமாய் ஒரு மரத்தடியில், அம்மாவின் சாம்பல் குவியல் எதிரே நின்று கொண்டிருந்தேன். அழுத கண்ணின் சிவப்புடன் அந்திவானம் கவிந்தது. நான் அழவேயில்லை.

நான் இன்னமும் அழவில்லை. அம்மாவை எரிக்கையில் நானும் என்னுள் எரிந்துபோனேன்

காற்று வாக்கில் சிதையில் என் புறமாய்ச் சாய்ந்த அனல் நாக்குகள் என்னையும் சேர்த்து நக்கிவிட்டன.

நானும் சேர்ந்து சுட்டெரிந்து நீறாய்ப்போன சாம்பலையே வெகுநேரம் முறைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

இன்று காலைதான் அம்மாவின் அஸ்தியை பானையில் ஊருக்கு அருகே ஓடும் வாய்க்காலின் நடுமணலில் முறைப்படி புதைத்துவிட்டேன். ஆனால் இன்று மாலையே, அவளைச் சுட்டெரித்த இடம் இழுத்தது. மரத்தடியில், அவள் தன் அந்திப் படுக்கையில் கிடந்த இடத்தை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த நிலைமையில் எவ்வளவு நேரம் கழிந்ததென அறியேன்.

குன்றி வரும் வெளிச்சத்தில், சாம்பலில் ஏதோ ''பளிச் பளிச்'' சென்றது. குனிந்து அந்த இடத்தைச் சாம்பலோடு அள்ளினேன்.

திடீரென ஒரு காற்று, சுழலாய்க் கிளம்பி என்மேல் மோதி, என் கைச் சாம்பலை ஊதித் தன் வழியோடு இறைத்துக்கொண்டு போயிற்று. அத்தோடு அம்மாவும் போகிறாள். பச்சைப்பட்டுப் புதுப் புடவையின் சலசலப்பு இனிப்புடன் ஒலித்தது. கை நிறைய அடுக்கிய வளையல்

கள் கிலுகிலுத்தன. மூக்கில் அணிந்த வைர மூக்குத்தி விட்டுவிட்டு மின்னிற்று. அவள் முகத்தின் இளமுறுவல், காற்றில் ஆடும் அகல் சுடர்போலும் என்னை விளித்தது.

''வா—ல்—மீ—கீ!—''

''அம்மா!'' அலறிக்கொண்டே இரு கைகளையும் விரித்துக்கொண்டு அந்தத் தோற்றத்தை நோக்கி ஓடினேன்.

''வால்மீகி!''—என்னெதிர் ஓர் உருவம் ஓடிவந்து தடுத்து அணைத்துக் கொண்டது.

''அம்மா—அம்மா!'' அதன் மார்பில் என் முகத்தைப் புதைத்துக் கொண்டேன். என் சிரத்தைத் தன் தோளில் தாங்கியபடி தாயைப்போல் என் தலையைக் கோதித் தடவினாள். அவள் கண்ணீர் என்முகத்தை நனைத்து என் கண்ணீருடன் கலந்தது

இன்று அவள் மருந்துக்குக்கூட ஒரு நகை அணியவில்லை தலையில் பூக்கூட இல்லை. கண்ணைக் கூசும் வெள்ளை ஆடையின் கரையோரங்கள் சிற்றலைகள்போல் காற்றில் அலைந்து துவண்டன. கைகளில் வளையல் கூட இல்லை. ஆனால், இந்த வெறிச்சான வெள்ளைக்கோலம் கூட எப்படியோ அவளுக்கு ஏர்வையாத் தானிருந்தது. இறுக வாரி, எடுப்பாய் இழுத்து இட்ட கொண்டையுடன், பாலபிக்ஷுணிபோல் அவள் துலங்கினாள். என் துயரம் தாளாது யாவும் துறந்துவிட்ட ராஜகுமாரி.

''எனக்கு அங்கு வரவே பயமாயிருந்தது. வால்மீகி—எனக்கு நினைவு தெரிஞ்சதே முதல் என் வீட்டில் இதுவரை சாவு நேர்ந்ததில்லை. அதனாலேயே எனக்கு அங்கே வரப் பயமாயிருந்தது. வால்மீகி! கஷ்டம்னா என்னென்னே தெரியாமல் நான் இதுவரை வளந்துட்டேன். உன்னோடு

என்னத்தைப் பேசறதுன்னுகூட எனக்குத் தெரியல்லே. ஆனால், நீ இப்போ சாம்பலைக் கையிலெடுத்துப் பார்த்தப்போ எனக்குப் புரியாமல் ஏதோ திகிலாயிடுத்து—''

அவள் என்னைக் குழந்தைபோல் சட்டெனக் கட்டிக்கொண்டாள். என் கைகளின் அணைப்புள் அவள் உடல் வெட வெடவென்று உதறிற்று.

''உன் பேர் என்ன?'' என்றேன்.

''காயத்ரீ''

ஆழ்ந்த துயரத்தின் எல்லைக் கரைகளின் தொலைவிலிருந்து இன்ப அசதிமூச்சு காற்றில் மிதந்து வந்தது. மாலையில் மலர்ந்த புஷ்பத்தின் மணம் எங்களைச் சுற்றிக் கமழ்ந்தது.

''ஏ—ஹோய்—ய்'—''!

யாரோ பண்ணையாள் இன்னொரு ஆளுக்கு ஏதோ சமிக்கையாய் கூவுகிறான். அந்தக் குரலின் வெண்கல நாதம் வீங்கி ஆகாய வெளியில் விறுவிறுத்துக்கொண்டே போய்ப் படிப்படியாய் ஓய்ந்தது.

மரங்களிலிருந்து இலைகளின் ஓசைகள் ஆசி அக்ஷதையைத் தூவினாற்போல் உதிர்ந்தன. தூரத்தில் வில்லிக் குடிசைகளிலிருந்து அவர்களின் கேளிக்கைக் கூத்தின் டமார ஒலி மிடுக்குடன் எழுந்தது. என் இதயத்துள் தந்திகள் மீட்டி முனகின.

என் கண்ணெதிரில் சூரியனின் ஏழு வர்ணங்களும் ஒன்றிலிருந்து ஒன்று நுரை கக்கிக்கொண்டு புறப்பட்டு ஒரே வர்ண வெள்ளத்தின் பல சாயங்கள் பல சாயல்களில் குழம்பின. ஈரத்தை உறிஞ்சும் துணிபோல், என் உடல், அதன் சல்லடைக் கண்கள் அத்தனைமூலம், இத்தனைக் காக்ஷியை அதன் அத்தனை பேதங்களுடன் உறிஞ்சி, விசுவ தரிசனத்தில் இழைவதுபோல் இருந்தது.

எல்லாம்,

'உன் பேர் காயத்ரீ

என்பேர் வால்மீகி'

எனும் உறவின் ஆதாரத்தில் கொக்கி மாட்டிக் கொண்டு ஊஞ்சலாடின.

''ஓ—ஹோ—ய்!''

இரவு நான் ஒரு கனவு கண்டேன்.

என்மேல் ஒரு ப்ரம்மாண்டமான பக்ஷி உட்கார்ந் திருந்தது. அதன் முகம் அவள் முகம். மூக்கு மாத்திரம் நீண்டு கூரியவாளாய் என் மார்பைக் குடைந்து தோண்டிக் கொண்டிருந்தது. அவளுடைய சந்தனக் கன்னங்களை வியந்த என் ஆசை, என் பிராணாவஸ்தையையும் மீறியது. என் இதயத்தைத் தோண்டுகையில் அது வெளியே விசிறும் குருதி என் கண்ணிலேயே தெறித்தது. ஆனால் அந்தப் பட்சி இன்னமும் தோண்டிக்கொண்டே யிருந்தது.

அந்தப் பள்ளத்திலிருந்து இனியதோர் குரல் கிளம் பிற்று. தட்டுத்தடுமாறியபடி ஒரு பொன்குருவி பள்ளத்தி லிருந்து வெளி ஏறிற்று. மார் முகட்டில் நின்று தன்னைச் சுற்றி ஒருமுறை நோக்கியது. அதன் தலைக் கொண்டை தகதகத்தது. பொன்னுடலில் அழகிய புள்ளிகள், பொற்கதிர்களைக் கொத்தாய்ப் பிடித்தாற்போல் நீண்ட வால். இத்தனை நாள் என் இதயத்துள் இது எங்கே பயிராகியிருந்தது? தன் தங்கச் சிறகுகளை விரித்து, மார்த் தட்டிலிருந்து எழும்பி, அறையைச் சுற்றிப் பறந்தது. அதன் பொன் கதியை, மங்கிக்கொண்டேயிருக்கும் என் கண்கள் பின்தொடர்ந்தன; செவிகளில் ரீங்காரம் நிரம்பிற்று இரண்டு வட்டங்களுக்கு மேல் அதற்குச் சக்தியில்லை. சிறகுகள் மடிந்தன. என் மார்மேல் காத்துக்

கொண்டிருந்த பெரிய பட்சி "க்றீச்" சென்று கத்திக் கொண்டு, அதைத் தன் அலகில் கவ்விற்று. அதன் அகன்ற சிறகுகளின் விரிப்பின் அந்தகாரத்தில் நான் மூழ்கிப்போனேன்.

"காயத்ரீ!—"

அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தேன்.

ஜன்னலுக்கு வெளியே புலர்ச்சியில் வான்முகடு பாளம்பாளமாய் வெடித்திருந்தது. கண்ணீரின் ஸ்படிகம் போன்று ஓரிரண்டு நட்சத்திரங்கள் உருத்தேய்ந்து கொண்டிருந்தன. காலைக் காற்று சில்லென்று புரியாத அறிகுறியில் மார்பைக் கவ்வியது. உள் குளிரில் என் உடல் நடுங்கிற்று. மார்பு இன்னும் புண்ணாய் வலித்தது.

"வால்மீகி!"

திடுக்கிட்டுத் திரும்பினேன்.

அப்பா பின்னால் கைகட்டியபடி நின்றார்.

"அவள் உனக்கு ஏற்றவள் அல்ல."

நான் எழுந்து உட்கார்ந்தேன்.

அப்பா எப்பவுமே ஒரு விதம். விஷயங்களை எப்படி, எவ்வளவு தூரம் அறிந்துகொண்டிருக்கிறார் என்று நான் கண்டுபிடிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் வீண்தாம். அப்பா பேசவே விருப்பமில்லாதவர். பேசினால் அவர் தொனியில் அதிகாரம் தெரியாவிட்டாலும். பேசும் விஷயத்தில் அதிகாரம் இருக்கும். அத்தோடு இல்லை. முன்பின் பீடிகையிலாது. நடுப்புற, எந்தக் கட்டத்திலிருந்து அவர் அந்த விஷயத்தைப் பற்றி அவர் பேசப்போகும் பேச்சுக்குச் சம்பந்தமும் முக்கியமும் உண்டோ, அங்கிருந்தே ஆரம்பித்துவிடுவார். அதில் இன்னொரு விந்தையென்னவென்றால் எதிராளிக்கும் எப்படியோ அவர் எதைப்பற்றிப் பேசுகிறார் என்று புரிந்துவிடும்.

ஆனால் நான் அசட்டுத்தனமாய் முன்பின் புரியா யாததுபோல் சமாளிக்கப் பார்த்தேன்.

''என்ன சொல்கிறீர்கள் அப்பா?''

நான் என்ன சொல்கிறேன் என்று உனக்குத் தெரியும். வீண் வார்த்தை வளர்த்த வேண்டாம். அவள் உனக்கு ஏற்றவள் அல்ல.

அப்பா ஜன்னலண்டை போய் நின்றார். அப்பா வுக்கு இப்போது ஐம்பது வயதாவது இருக்கும். ஆனால் ஐம்பது மதிக்க முடியாது. அவரிடம் மாறாத இளமை இயங்கிக்கொண்டிருந்தது. இத்தனைக்கும் வேகமும் விறு விறுப்பான பாவனைகள் அவரிடமில்லை. தலைமயிர் ஒன்றுகூட நரைக்கவில்லை. அவர் உடை எப்பவும் ஒரே மாதிரித்தான். தும்பை போன்று துல்லியமான வெள்ளை ஜிப்பா. பூமியில் புரளும் தூய வெள்ளை வேஷ்டி. வேஷ்டி விளிம்பில் ஒரு இம்மி அழுக்குக்கூட ஏறாது. அவர் நடக்கையில் பூமியில் பாதம் பதிவது தெரியாது. கழுத்து வளைவிலிருந்து விரியும் அகன்ற தோள்கள். அப்பாவும் நானும் சேர்ந்து போனால் பார்ப்பவர் அண்ணன் தம்பி யென்றே மதிப்பார்கள். ஆனால் அப்பாவும் நானும் இதுவரை சேர்ந்து போனதேயில்லை

இந்த சமயத்தில் சம்பந்தமேயிலாத சிறு விவரங்கள் ஏன் கவனத்துக்கு வெளிப்படுகின்றன. என்றுதான் புரியவில்லை.

''என்ன நான் சொல்வது காது கேட்கிறதா?'' அப்பா முகந் திரும்பாமலே ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு கேட்டார்.

அப்பாவிடம் இன்னொரு சுபாவம். யாரையும் நேர் முகம் பார்த்துப் பேசமாட்டார். சங்கோசத்தாலல்ல. அலட்சிய பாவமுமல்ல அது. காற்றையோ வெளியையோ

நோக்கியபடி அவர் வார்த்தைகள் புலப்படும். பிறன், தன் பார்வையின் தீக்ஷண்யத்தைத் தாங்க முடியாது எனும் எண்ணத்தினால்தான் அவர் அப்படி முகங் கொடுக்காமல் இருக்கிறாரோ என்னவோ? மொத்தத்தில் அப்பா பீதியைக் கொடுப்பவர்.

கால புருஷன்.

''வால்மீகி!''—

''அப்பா நான் மனதைப் பறிகொடுத்துவிட்டேன். விடுபட முடியாது போலிருக்கிறதே!''

''இப்பொழுது விடுபடாவிட்டால் அப்புறம் விடுபடவே முடியாது. அதனால்தான் இப்பவே சொல் கிறேன்—''

என் கன்னத்தை பீங்கான் போன்று வழுவழுத்த இன்னொரு கன்னம் அழுத்திற்று. பாம்புபோலும் இரு கைகள் என் கழுத்தைச் சுற்றிப் பின்னி, பஞ்சினும் மிருதுவான மார்மேல் அழுத்திக்கொண்டன. மல்லிகை யின் மணத்தில் என் மூளை கிறுகிறுத்தது.

''அப்பா நான் என் மனதைப் பறிகொடுத்து விட்டேன். அப்பா எனக்கு வரங் கொடுங்கள்.''

''வால்மீகி! அவள் நல்லவள் அல்ல.''

''அப்பா—''

''வால்மீகி! நான் உன் அப்பா—''

திடீரென என்னை மீறிய கோபாவேசம் அடிவயிற்றி லிருந்து எழுந்தது.

''அப்பா உங்களுக்குத் தெரியாததே ஒன்று மில்லையோ!—''

''வால்மீகி—''

என் கைகள் முஷ்டித்தன. என் உடலே என் ஆத்திரத்தில் கிடுகிடென ஆடிற்று.

"அப்பா நீங்கள் வாழச் சகிக்காதவர். உங்களுக்கு உங்கள் அதிகாரந்தான் முக்கியம். அம்மாவைக் கொன்றதே நீங்கள்தான். நீங்கள் அவளைக் கொல்லாமலிருந்தால் அம்மா இப்போ உயிரோடிருப்பாள் தெரியுமா?—"

அப்பா மெதுவாய் சிலை திரும்புவதுபோல் திரும்பினார். அவர் முகம் என் கண்ணைக் கூசிற்று. கையை ஓங்கினார்.

"நீங்கள் கொலைகர்ரர் கொலைகாரர் கொலைகாரர்!"—என் தொண்டை க்றீச்சிட்டது. நான் என் வசத்திலில்லை. வாயில் நுரை தளும்பிற்று. எனக்குக் களை போட்டுவிட்டது. படுக்கையில் அப்படியே சாய்ந்தேன்.

அப்பா ஒன்றுமே பேசவில்லை. ஓங்கிய கை மெதுவாய்க் கீழே இறங்கிற்று. ஏற இறங்க, உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை அவர் பார்வை என்மேல் ஓடிற்று. பார்வைக்குப் பார்வை நானும் ஈடு கொடுத்தேன். எங்கிருந்து எனக்கு இவ்வளவு அசட்டு, முரட்டு தைரியம் வந்தது?

ஜன்னலுக்கு வெளியே மாமரத்திலிருந்து ஒரு கொக்கு எழும்பிப் பறந்து சென்றது. காலையின் பொன் வெயிலில் அதன் வெள்ளைக் கழுத்தும் கால்களும் ப்ரகாசித்தன. அப்படியே திரும்பி அப்பா அறையை விட்டுச் சென்றார்.

நான் ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தேன். அப்பா வீட்டைவிட்டு வெளியே போய்க் கொண்டிருந்தார்.

"அப்பா! அப்பா!!—" துக்கம் தொண்டையை அடைத்தது.

அப்பா திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. முற்றிய மூங்கில்போல் வளையாது பனி வெள்ளை போர்த்த அவர் நெட்டை உருவம் தோட்டத்தின் எல்லையைக் கடந்து கொண்டிருந்தது.

நான் ஏன் இப்படி ஆகிவிட்டேன்?

அம்மா இறந்து இன்றுதான் மூன்றாம் நாள்.

* * *

நான் புத்தகத்தில் கவனத்தை ஊன்ற முயன்றேன். ஆனால் அறையில் காயத்ரியும் இருக்கையில் அது சாத்திய மான காரியமல்ல. நான் அவளைத்தான் ஓரப்பார்வையில் கவனித்துக் கொண்டிருந்தேன். ஜன்னல் கட்டைமேல் உட்கார்ந்துகொண்டு அங்கு தலையை ஆட்டிக்கொண் டிருந்த பூங்கொடியைச் சீண்டிக் கொண்டிருந்தாள்.

என்னைத் தன்னிடம் வரும்படி ஒற்றை விரலால் விளித்தாள். நான் போகவில்லை. நான் என்னைப் பரீக்ஷை பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவுநேரம் என்னைத் தடுத்துக்கொள்ள முடியும்? ஒரு கணம்கூட என்னால் அவளைப் பிரிந்திருக்க முடியவில்லை. காலையில் கண் விழித்ததும் எழும் முதல் எண்ணமாய்த் துவங்கி இரவு கண் மூடுகையில் என்னோடு என் கனவுகளுக்கு அழைத்துச் செல்லும் கடைசி எண்ணமாய் என்னுள் என்னை வியாபித்தாள். நாளாக ஆக இந்த ஆட்சியின் மும்முரம் அதிகரித்ததே யொழிய தணிந்தபாடில்லை. எனக்கு உணவுகூடச் சில சமயங்களில் உட்செல்லவில்லை. இந்த நிலைமை புரியவில்லை. எப்பவும் இன்பமாயுமில்லை. கத்தி கூர்மையில் தடவிய நெய்யை நக்குவதுபோல் பயங்கரமாய் இருந்தது.

அவள் என்னோடுதானிருந்தாள். ஆனால் எவ்வளவு இருந்தாலும் எனக்குப் போதவில்லை. இது எந்த நியாயத் திலும் சேரவில்லை. ஆனால் இதிலிருந்து மீளவும் முடிய

வில்லை இதுதான் என் தவிப்பு. இது மோகமுமல்ல. ஆசையுமல்ல. உள்ளத்திலே புழுத்த புழு, அவள்மேல் ஆசை, பாசம், மோகம் எல்லாம் ஒருருவாய் என் வயிற்றுள் பாம்புபோல் சுருண்டு உட்கார்ந்து என் தெம்பு, என் வலிமை, என் நினைவு, என்னையே தனக்கு ஆகாரமாய் உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தது. இந்த ஸ்மரிப்பி லிருந்து, எவ்வளவு முயன்றும் என்னால் உதறிக்கொள்ள முடியவில்லை. இறக்கைகளில் கல்லைக் கட்டிக்கொண்டு ஆகாயத்தில் பறக்கப் பார்ப்பதுபோல் என் ப்ரயத்தனங் கள் பயனற்றனவாய், அவலக்ஷணமாய், அவமானத்தில் முடிந்தன.

தாயின் மார்பில் கட்டிவிட்ட பால்போல், என் நெஞ்சில் கனமாய் அழுத்திக் கொண்டிருக்கும் பாசத்தைத் தணித்துக்கொள்ள செய்கைகளும் பேச்சுக்களும் மனதில் எழுந்தன. பிறர்க்கு ஒருவேளை அவை விரஸமாயுமிருக்க லாம். எனக்கு அவை சர்வ இயற்கையாயும் தவிர்க்க முடியாதனவாய்க்கூட இருந்தன. என் நெஞ்சின் நிலையில் எனக்கு அப்படி இருந்தாலும் அவளுக்கும் அப்படியிருக்க வேண்டாமா? அந்தப் பயத்தில், வெட்கத்தில், என்னை நான் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தேன். இது ஸகித்துக் கொள்ளும் கஷ்டமாயில்லை.

காயத்ரீ—

ஓம்பூ: ஓம் புவ: ஓம்ஸுவ:—

என் மூச்சு.

அவள் எங்குச் சென்றாலும் என்ன செய்தாலும் என் பார்வை அவளையே பின்தொடர்ந்தது. இது என்னையே அறியாது படிந்துவிட்ட பழக்கமாயும் போய்விட்டது. ஒரு சமயம் அறையின் ஒரு மூலையில் குனிந்தபடி ஏதோ காரியமாயிருந்தவள் சட்டெனத் திரும்பி, நேரே என்னை நோக்கி வந்தாள். அவள் கன்னங்களில் சிவப்பு திட்டாய்ப் பூத்திருந்தது.

"வால்மீகி—Don't do that—"

"நான் என்ன செய்துவிட்டேன்?" நிஜமாய் எனக்கே தெரியவில்லை. அவள் மனம் புண்படும்படி என்னை அறியாமல்கூட நான் ஏதோ செய்துவிட்டேனோ எனும் எண்ணத்தைத் தாங்கக்கூட எனக்குச் சக்தியில்லை. பயமாயிருந்தது.

"என்னையே அப்படிக் கவனிக்காதே."

"ஓ! நான் என்ன செய்வேன்? என்னால் உன்னைப் பார்த்துக்கொண்டு இராமல் முடியவில்லையே!"

"இல்லை, எனக்கு ஒரு சமயம்போல் இல்லை; இம்சையாயிருக்கு, பயமாயிருக்கு, என்னவோ CID மாதிரி—"

"காயத்ரீ என்னை மன்னித்துவிடு." என் தொண்டை கம்மிற்று.

சட்டென அவள் முகம் மாறிற்று. சிரித்துவிட்டாள். என் மடிமேல் செல்லமாய் உட்கார்ந்து என்மேல் சாய்ந்தாள்.

"வால்மீகி, உனக்கு என்மேல் ரொம்ப ஆசையா?"—

"கதவு திறந்திருக்கிறது, யாராவது வரப்போகிறார்கள்—"

"வந்தால் வரட்டும். எனக்கு ஒண்ணும் வெட்கமில்லை—" கையை அலட்சியமாய் உதறினாள். அந்தச் சைகையில் குழந்தை போலும் கவர்ச்சியாயிருந்தாள்.

"உனக்கு என்மேல் ரொம்ப ரொம்ப ரொ-ம்-ம்-ப ஆசையா?"

"ஆம்; உன்மேல் ஏதாவது வாசனை பூசிக் கொண்டிருக்கிறாயா?"

"இல்லையே ஸென்டே எனக்குப் பிடிக்காது."

''பின் உன்மேல் எப்பவும் ஒரு பரிமளம் வீசிக் கொண்டே இருக்கிறதே?''

''என் வயசின் வாசனையாயிருக்கும். அல்லது என் மேல் உன் ஆசையின் வாசனையா இருக்கும். உனக்கு என் மேல் எவ்வளவு ஆசையிருக்கும்?''

''எவ்வளவோ?'' திடீரென்று என் கண்கள் மங்கின. நெற்றிப் பொட்டுள் சாவி முடுக்கிவிட்டாற்போல் சக்கரங்கள் சுழன்றன:

''ஓம்பு: ஓம்புவ: ஓம்ஸுவ: ஓம்தப!''

மூச்சுத் திணறிற்று. என் மடியில் மூன்று காயத்ரீகள் உட்கார்ந்திருப்பதுபோல் பார்வை நிலை தடுமாறிற்று.

''என்ன ஒரு பசுங்காளைக் கன்றுக் குட்டியளவு உயரம் இருக்குமா?'' தன் கையால் அந்தக் கன்றுக்குட்டி யின் உயரத்தைத் திட்டம் பிடித்துக் காண்பித்தாள்.

''வால்மீகி, நான் வந்ததே முதல் நீ ரொம்பவும் இளைத்துவிட்டாய். நான்தான் குண்டாயிருக்கிறேன்.''

''நீ நன்றாயிருக்கிறாய்.''

''அதாவது குண்டாயிருக்கிறேன் என்று சொல்லு.''

''சொல்லமாட்டேன்.''

''சொல்லமாட்டாய். ஆனால் அப்படித்தானே!''

''.........''

''சொல்லு. அப்படித்தானே!''

''காயத்ரீ, தர்க்கம் பண்ணாதே.''

''சண்டைக்கிழுக்கிறேன் என்கிறாய் அல்லவா?''

''நான் ஒன்றுமே சொல்லவில்லையே!''

"என்ன சொல்லல்லையாம்?" சின்னக் குழந்தைமாதிரி கோபத்தில் உதடுகள் பிதுங்கின. "நான்தான் குண்டு காயத்ரீ வாயாடி காயத்ரீ."

எனக்கு அசதிமேலிட்டது. இதயத்தில் ஏதோ நெருப்பு குழம்பாய் உருகி வழிந்தது. ஜூரம் கண்டால்போல் உடம்பு கணகணவென்றது.

"ஹூம்—" பெருமூச்செறிந்தாள்.

"காயத்ரீ, கோபம் பண்ணாதே. நீ கோபித்தால் எனக்குத் தாங்கவில்லை—"

தன்னிரக்கத்தில் "த்ஸோ" கொட்டிக்கொண்டு எழுந்தாள். என்னைவிட்டு ஒதுங்கின மாதிரியில்லை எனக்கு. என்னைவிட்டுப் பிரிந்த மாதிரியே இருந்தது. இந்த வேதனைகூட என்னால் பொறுக்க முடியவில்லை.

ஒரு காரியமுமில்லாமல் தங்கித்தங்கி அறையைச் சுற்றி நடந்தாள். சுவரோரமாய் உறை போட்டு சாத்தியிருந்த வீணைமேல் அவள் கண்கள் விழுந்தன. உடனே அதை எடுக்க ஆரம்பித்தாள்.

"வேண்டாம்—" என்று கூவினேன்.

ஒரு வெட்டு வெட்டி அவள் முகம் என்பக்கம் திரும்பிற்று. கோபம் கலந்த வியப்பில் புருவங்கள் நெறிந்தன.

"காயத்ரீ—"

நான் எழுந்து மெதுவாய் அவளை நோக்கிச் சென்றேன். என்னைவிட்டு எவ்வளவு தூரம் நடந்து விட்டாள்! என் செவிகளில் "ஙொய்ய்..." என்று வண்டுகள் கூவின. அவள் கைகளைப் பிடித்துக் கொண்டேன். அவள் என் பிடியிலிருந்து தன் கைகளை மெதுவாய் விடுவித்துக்கொண்டாள்.

''காயத்ரீ! இது அம்மாவின் வீணை. அவள் இறந்து போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் இந்த வீணையை வாசித்தாள். அவள் கைரேகைகள் இதன்மேல் படிந்திருக்கின்றன. அவை கலையாமல் நான் காப்பாற்றி வருகிறேன்.

''ஓ!—''

இரு கைகளையும் பிசைந்துகொண்டு நின்றாள். அற்புதமான அழகு பொருந்திய முத்திரைகளில் எப்படி அவளால் நிற்க முடிகிறது? அவள் அங்கங்களிலும் அங்கங்களின் நிலைகளிலும் சொல்லிய அழகுகளுடன் சொல்லாத அழகுகளும் எப்படி கற்பனை ஸ்வரங்கள்போல வெளிப்படுகின்றன?

அவள் விழி ஓரங்கள் திடீரென சிவந்தன. மளமள வென கண்ணீர் உதிர்ந்தது. பீங்கான்போல் வழுவழுத்த கன்னங்களில் வழிந்துகொண்டேயிருந்தது. என் நெஞ்சையடைத்தது. என் தாயின் நினைவுக்கா கண்ணீர் விடுகிறாள்?

சட்டென மனதைத் திடப்படுத்திக் கொண்டவள் போல் வீணைமேல் போர்த்திய உறையைக் கழற்றி எறிந்தாள். கீழே உட்கார்ந்து வாத்தியத்தைத் தன்மேல் சார்த்திக் கொண்டாள். ஸ்வரஸ்தானங்களிலிருந்து கோர்வையற்று ஸ்ருதிகலைந்த சப்தங்கள் எழுந்தன; அவள் கண்கள் என் கண்களைச் சந்தித்தன. அவைகளில் சிரிப்பு இல்லை; எனக்கு அவள்மேல் இருக்கும் அதிகாரத்தை ஆழம் சோதிக்கும் இரக்கமற்ற கபடுதான் இருந்தது.

எனக்கு என்ன அதிகாரம் இருந்தது? ஒரு வருஷமாய் நான் காப்பாற்றி வந்த அடையாளங்களை ஒரே நொடியில் இதோ அழித்துக் கொண்டேயிருக்கிறாள். இவளை நான் என்ன செய்ய முடிகிறது? அதுவும் என்ன,

எனக்கு இந்த அடையாளங்கள் அருமை என்றதற்காகவே அவைகளை அழித்துக்கொண்டிருக்கிறாள். இவளை நான் என்ன பண்ண முடிகிறது? இவள்மேல் எனக்கு இருக்கும் ஆசை ஆரோக்கியமானதில்லை. எனக்கே நன்றாய்த் தெரிகிறது; எல்லாவற்றையும் நாஸ்தியாக்கும் ஒரு விபரீத வெறி.

அவளுக்கு வாசிக்கவும் தெரியவில்லை. தனக்கு வாசிக்கத் தெரியவில்லை என்பது அவளுக்குத் தெரியவில்லை, அல்லது தெரிந்துதானிருந்ததோ? என்னவோ கண்ணால் கண்டேன். கண்டதைக் கையிலெடுத்தேன்—கையிலெடுத்துக் கலைத்தேன் என்கிறரீதி—

"அதோ பார்!" அவள் கவனம் மாறிவிட்டது. வீணையைப் பொத்தெனக் கீழே வைத்துவிட்டு ஜன்னலண்டை ஓடினாள்.

நான் வீணைமேல் உறையையிட்டு மூடினேன். குழந்தைகளைக் கோபித்துக்கொள்ள முடியுமோ? என்று என்னையே சமாதானம் பண்ணிக்கொண்டேன். அவளிடம் ஒரு விபரீதமான குழந்தைத்தனமிருந்தது. விளையாட்டாகவே வீட்டுக்கு நெருப்புவைக்கும் விபரீதக் குழந்தைத்தனம். அந்தக் குழந்தைத்தனத்தால், தனக்கோ பிறர்க்கோ நேரக்கூடிய தீங்கை அவள் அறியாள். அவளுக்கு அதைப் பற்றி அக்கறையுமில்லை.

"இங்கே வான்னா!—"

வீணையை அதனிடத்தில் வைத்துவிட்டுப் பணிவாய்ப் போய் அவள்பின் நின்றேன்.

இரு காற்றாடிகள். ஒன்று சிவப்பு ஒன்று வெள்ளை. ஆகாயத்தில் ஒன்றையொன்று வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

"இவையிரண்டும் சண்டையிடப் போகிறது—" என்றாள்.

''இதில் உனக்கென்ன சிரத்தை? இது ஆண்கள் விளையாட்டு'' என்றேன்.

''விளையாட்டில் ஆண் வியைாட்டு பெண் விளையாட்டாவது? எனக்கு நன்றாய்க் காற்றாடி விடத் தெரியும். நான் சொல்றேன் பார். இந்த சிவப்புக் காற்றாடிதான் ஜெயிக்கப்போகிறது.''

எட்டிப் பார்த்தேன். ''சிவப்புக்காற்றாடி சின்னதாயிருக்கிறதே!''

''பெரிது சின்னது கணக்கில்லை. காற்றாடி விடுபவனைப் பொறுத்திருக்கிறது. வேணுமானால் அஞ்சுரூபா பந்தயம். சிவப்புக் காற்றாடிதான் ஜெயிக்கப் போகிறது.''—அவள் கவனம் முழுதும் காற்றடிமேல்தான் இருந்தது.

திடீரென என் அடிவயிற்றில் ஏதோ புரண்டாற்போலிருந்தது. நான் பூமியிலில்லை. ஒரு கயிற்றின் நுனியில் ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தேன். பூமியில் காயத்ரீ நின்றுகொண்டு கயிற்றைப்பிடித்தபடி ஆகாயத்தில் என் கதியை அடக்கி ஆண்டுகொண்டிருந்தாள். காற்றைக் கிழித்துக்கொண்டு வெள்ளைக் காற்றாடியை நோக்கி விரைந்தேன். காற்றின் கூர்மை கத்திபோல் என் உடலை நார்நாறாய் உள்ளே அறுத்தது. என் சதைக்கடியில் என் உடல் இரத்தவிளாறாயிற்று.

''அப்பா நீங்கள் கொலைகாரர் கொலைகாரர் கொலைகாரர்!''

தலை சுற்றிற்று. நெற்றியைக் கெட்டியாய் இரு கைகளிலும் பிடித்துக்கொண்டேன். உள்ளே சக்கரங்கள் சுழன்றன. காதண்டை கலகலவென நகைப்பு.

''நான் என்ன சொன்னேன் பார்த்தையா? எடு பந்தயப் பணத்தை!''—

நான் அசதியுடன் எட்டிப் பார்த்தேன். வெள்ளைக் காற்றாடி நிலையறுந்து பூமியை நோக்கி அந்தரடித்துக் கொண்டிருந்தது.

கண்ணெதிரில் மங்கலாய் ஒரு வெள்ளையுருவம் எழுந்தது. தோட்டத்தின் எல்லைகளை வேகமாய்க் கடந்துகொண்டிருந்தது.

''வால்மீகி! What is the matter?'' அவள் கண்கள் பய வெறியில் சுழன்றன. சட்டென என்னைத் தாங்கிக் கொண்டாள்.

''வால்மீகீ, ஏன் அழுகிறாய்?''

''அழறேனா என்ன?'' எனக்கே ஆச்சரியமாயிருந்தது. என் இமைகளைத் தொட்டபோது அவைகள் நனைந்திருந்தன.

''வால்மீகி, நீ அவசியம் டாக்டரைப் பார்க்க வேண்டும்.''

''Oh, it is nothing. காயத்ரீ—''

''என்ன?' மெய்யெனவே அவள் குரல் பரிவில் குழைந்தது.

''ஒன்றுமில்லை,''

இப்படித்தான், ஒன்றுமில்லை ஒன்றுமில்லை யென்று சொல்லவும் முடியாமல் சொல்லவும் தெரியாது. என்னது தான் என அறியவும் முடியாமல், ஆனால் அவஸ்தை மாத்திரம் பாட்டுக்கொண்டே ஒருநாள் பின் ஒருநாள்.

காற்றேயில்லாமல் மூச்சுத்திணறி, வேர்வை ஸ்னானமாய்க் கொட்டும் புழுக்க நாட்கள்.

நெஞ்சைச் சில்லெனக் கவ்வும் குளிர் காற்று வீசும் குளிர் நாட்கள்.

அல்லது காற்றிலே கனலைக் கக்கும் வெப்பநாட்கள்.

அல்லது பாலைவனத்தில் ஊற்றுப்போலும், நீண்ட வரண்ட இடைவெளிகளுக்கிடையே, நிழல் காற்று வீசும் இன்ப வேளைகள்.

மிச்ச நாட்கள் கானலை மெய்யென நினைத்துத் தேடியலைந்து இளைத்துத் தேயும் கானல் நீர் நாட்கள்.

ஆனால் எப்பொழுதும் காயத்ரியை மூச்சாய் விடும் மூச்சு வேலைகள்.

* * *

இப்பொழுது அவள் என்னை விளித்தபோது உடனே போகாது நான் என்னையே பார்த்துக்கொள்ளும் பரீட்சை—வீண் பரீட்சை என்று எனக்கே தெரியும்.

சட்டென அவள் விரலை உதறினாள். அவள் முகம் வலியில் சுளித்தது. அவசரமாய் அவளிடம் ஓடினேன். விரல் நுனியில் இரத்தம் துளித்து நின்றது. அவள் விரலை வாயில் வைத்து உறிஞ்சினேன். அதில் ஒரு இன்பம். அல்லது ஆறுதல். அல்லது நம்பிக்கை. இப்படியாவது அவள் நானாவோ, நான் அவளாவோ ஆகிவிட முடியாதா?

''நம் தோட்டக்காரன் உபயோகமில்லை'' என்றாள் கோபத்துடன்.

''நீதானே செடியைச் சீண்டிக் கொண்டிருந்தாய்! நீ முள்ளைக் குத்திக் கொண்டால், அது தோட்டக்காரன் பாவமா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. அப்பா, எப்படிக் கடுக்கிறது! நாளைக்கு இந்தச் செடி என் ஜன்னலண்டை வேண்டாம். தோட்டம் தோட்டமாவா இருக்கிறது! காடான்னா இருக்கு!

''சின்னான் தோட்டத்தை இப்படியா வைத்திருந்தான்? இதென்ன இலைகூட அசையவில்லையே! அடேயப்பா, எப்படி புழுங்கறது! நான் குளிக்கப் போறேன்—''

ஒரு மெட்டை சீட்டியடித்துக்கொண்டு வெளியே சென்றாள்.

நான் ஜன்னலண்டை நின்று கொண்டிருந்தேன். நேரம் போவது தெரியவில்லை.

சின்னான் இறந்து நாலைந்து மாதங்களாகிவிட்டன. அவன் முடிவும் அவன் மனைவியின் முடிவும் என் கண் முன் நின்றது. சின்னானுக்கும் பொன்னிக்கும் மணமாகி ஒரு வருடமாகவில்லை. பொன்னி நிறைகர்ப்பிணி, அடுப்புக்குச் சுத்தை பெருக்கப்போனவள், ஒரு பாழுங் கிணறில் தவறி விழுந்துவிட்டாள். கிணற்றில் ஜலங்கூட அவ்வளவு இல்லை.

அவளுடைய அபயக்குரல் கேட்டுத்தானோ, அல்லது அந்த விபரீதத்தின் உணர்ச்சி கன வேகத்தில் காற்று வழி பறந்து வந்து வயிற்றில் சுறீலென வைக்கும் நெருப்பின் பொறிதானோ— இன்னமும் நிச்சயப்படவில்லை. தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவன் அப்படியே செம்மட்டியைப் போட்டுவிட்டு ''பொன்னீ பொன்னீ'' என்று கத்திக்கொண்டு ஓடினான். பார்த்தவர்களும் கேட்டவர்களும் சொன்னது இதுதான்.

இரண்டு பிணங்களையும் கிணற்றிலிருந்து ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் எடுக்க முடிந்தது. கிணற்றில் ஜலத்தின் ஆழம்கூட அதிகமில்லை. விஷக்காற்று இருவரையும் அமுக்கிவிட்டது.

இரு உடல்களையும் பிரிக்க முடியவில்லை. ஒன்றோடு ஒன்று பிணைய தழுவலில் விறைத்துவிட்டன. ஒரே தடுக்கில் இரண்டையும் மயானத்துக்கு எடுத்துச் சென்றார்களாம். வழி பூரா வீதி பிதுங்கும் கூட்டமாம். பல நாட்களுக்கு இதே பேச்சு.

பத்து நாட்கள் கழித்து, கின்னானின் தாயார் தன் பிள்ளைக்குச் சேர வேண்டிய சம்பளத்தை வாங்க வீட்டு வாசலில் நின்றாள். வயது ரொம்பவும் ஆகாவிட்டாலும், சருகாய் வற்றிச் சுருங்கிக் குன்றிப்போன உடல். அவளைப் பார்க்க ஸஹிக்கவில்லை. எழுந்து வந்து கட்டிக் கொண்டேன்.

''இந்தக் கட்டையைத் தீண்டாதே சாமீ—'' அவள் குரலில் துக்கம்கூடத் தெரியவில்லை. ஜன்ம அந்தியின் அசதிதான் வெளிப்பட்டது. 'கண்ணால் பார்த்தால் கூட விடியாது. எனக்கு மாத்திரம் இன்னமும் வேளை வராமல் காத்துக்கிட்டு நிக்கிறேன். காயும் பூவும் கொத்துமா அவங்க போய் சேர்ந்துட்டாங்க. பொன்னி நல்ல பொண்ணு சாமி. என்னை நல்லா கவனிச்சிட்டிருந்தா. என் மவன் வேறு அவள் வேறுன்னு சொல்லல்லே. பொன்னி நல்ல பொண்ணு சாமீ. அவங்க நினைப்பிலே நீ எனக்கு ஒரு உபகாரம் பண்ணனும். அந்தக் கிணத்தைப் பொறுப்பா, நீ செலவு பண்ணி மூடியாவணும். இந்தப் பலியோடு அதன் வவத்துப் பசியாறட்டும். வேறே பலி வாங்க வேணாம்—''

ஒரு ஆண் ஒரு பெண், அவர்களின் முழு வித்து, மூன்றும் யாருக்குப் பலி? திடீரென ஒன்றுமே புரியாத ஒரு பயங்கரமான ஏக்கம் என்னைக் கவ்வியது: என்னைச் சுற்றி யாவும், தோட்டம், வீடு, சுவர்கள் அறையிலிருக்கும் சாமான்கள் எல்லாமே சர்வநாசப் புயலில் விண்டு, இடிந்து பொடிந்து என்னையும் தம்முடன் இழுத்துச் செல்வது போலிருந்தது.

''காயத்ரீ! காயத்ரீ!'' என்று கூவிக்கொண்டே ஸ்னான அறைக்கு ஓடினேன். கதவைப் படபடவென்று தட்டினேன்.

''யாரது?''

''நான் தான், கதவைத் திற.''

''நான் இன்னும் குளித்து முடியல்லையே, என்ன அவசரம்?''

''பரவாயில்லை திறவேன்—''

கதவுத் தாழ்ப்பாள் விலகிற்று. கதவு மெதுவாய்த் திறந்தது.

''என்ன வால்மீகி?''

அவள் அவசரமாய்த் தன் மேல் ஆடையை சுற்றிக் கொண்டிருந்தாள். கூந்தல் சிங்கத்தின் பிடரிபோல் கனத்து, முரண்டு, விசிறிக்கொண்டு பின்னோக்கி எழுந்தது. தோள்களில் நீர்த்துளிகள் ஸ்படிகம் போல் நின்றன. சந்தன சோப்பின் மணம் கம்மென அவளிட மிருந்து எழுந்தது.

''காயத்ரீ!'' அவளைத் தழுவிக்கொள்ள முயன்றேன்.

''என்னைவிடு—விட்டுடு—விடுன்னு'' தன்னை விடு வித்துக்கொள்ள முயன்றாள். ஆயினும் அவள் இடையைச் சுற்றி என் கை இறுகிற்று. அவள் கண்கள் கடுங்கோபத் தில் சிவந்தன. தப்ப வழியின்றி மடக்கப்பட்ட மிருகம் போல் கோபாவேசமாகி விட்டாள். ஒரு நெட்டு நெட்டி என்னைத் தள்ளினாள். நான் பின்னுக்கு விழுந்து கொண்டே போய், என் மண்டையின் பின்புறம் 'மடே'ரென மோதிற்று. கால்கள் முழங்காலுக்குக் கீழ் ஆடிப்போயின, நான் குப்புற விழுந்திருப்பேன்.

''வால்மீகி!''

அலறிக்கொண்டே அவள் என்னை நோக்கி வருவது தான் தெரிந்தது. அப்புறம் நினைவு இல்லை.

எனக்குப் பிரக்ஞை தெளிந்தபோது, கட்டிலில் கிடந்தேன். அவள் முகம் கவலையோடு என்மேல் கவிந்தது. என் கண் திறந்ததும் என்மேல் விழுந்து என்னைக் கட்டிக்கொண்டாள்.

''ஆ!'' வலியில் முனகினேன். மண்டையின் பின்புறம் 'விண் விண்'ணெனத் தெறித்தது.

''நீ செத்துப் போயிட்டையோன்னு பயந்துட்டேன்'' அவள் கண்ணீரும் எச்சிலும் கன்னத்தை நினைத்தன.

நான் எழுந்திருக்க முயன்றேன். ''உஷ்—'' அவள் என்னை மெதுவாய் மறுபடியும் படுக்கையில் தள்ளினாள்.

''காப்பி சுடச் சுடக் கொண்டு வந்திருக்கிறேன், ஒரு வாய் குடி. சும்மா படுத்துக்கோ; இப்போ எழுந்திருக்க வேண்டாம்.''

படபடவென மும்முரமாய் மழைச்சாரல் இறங்கிக் கொண்டிருந்தது. கோடை மழை. ஜன்னல் கதவுகள் படபடவென புத்தகத்தின் ஏடுகள்போல் அடித்துக் கொண்டன.

''ஒரு நிமிஷம் இதோ வந்துட்டேன்.''

எல்லா ஜன்னல்களையும் இழுத்து மூடிக் கொக்கி களைப் போட்டாள். அறையில் இருள் சூழ்ந்தது. நான் அவளைச் சரியாய்ப் பார்க்க முடியவில்லை. மெதுவாய் என் முகத்தைத் தொட்டாள்.

''என்மேல் கோவமா?'' பூவினாற் அடித்தாற்போல் அவள் குரல் என்மேல் மெத்தென இறங்கிற்று.

''No my dear......'' நிஜமாகவே எனக்கு ஏன் கோபம் வரவில்லை?

''விண்—விண்'' மண்டையுள் யாரோ சுத்தியால் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

''வால்மீகி, நீ ஏன் சில சமயங்களில் புரியாதபடி நடந்துகொள்கிறாய்?''

எனக்கும்தான் தெரியவில்லை.

''காயத்ரீ!''

"—ம்—ம்?"

"உனக்கு என்னைப் பிடிக்கிறதோ?"

இருளில் அவள் புன்னகை புரிகிறாள். என்னால் பார்க்க முடியவில்லை. ஆனால் எனக்குத் தெரியும்

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"எனக்குத் தெரியணும்."

"பிடிக்காமல் என்ன?"

"உண்டோ என்றால் இல்லாமல் என்ன என்பது பதில் அல்ல."

"பின் என்னவாம் பதில்?"

"ஒன்று உண்டு அல்லது இல்லை என்பதுதான் பதில்?"

"..........."

"என்ன சும்மாயிருக்கிறாய்?"

"பிடிக்கிறது—" என்று இழுத்தாள்.

"இல்லை."

"இருக்கிறது என்றால் இல்லை என்கிறாய், நான் என்ன சொல்ல?" அவள் திகைப்பு பரிதாபமாயிருநதது.

"பிடிக்கிறது என்றால் போதாது"— என் நெஞ்சில் கிலேசம் புகுந்தது.

"நீ அதானே கேட்டாய்?"

"ஆமாம். ஆனால் பிடிக்கிறது என்கிறதே போதாத வார்த்தை. நான் வேண்டுவதைத் தெரிவிக்க வேகம் போதாத வார்த்தை. பிச்சைக்கார வார்த்தை. புஷ்டி யில்லாத தரித்திர வார்த்தை" அந்த வார்த்தைமேல் எனக்குக் கோபம் முறுக்கேறிக்கொண்டே போயிற்று.

அவள் ஏதோ முனகினாள். சரியாய்க் காதில் விழ வில்லை. ''நீ சொல்வது உனக்குத்தான் புரியும்'' என்கிற தினுசில் ஒரு முனகல்.

வெளியில் அடைமழையாய்ப் பெய்துகொண்டிருந்தது.

''காயத்ரீ. உன்னைப் பிரிந்து ஒரு க்ஷணம்கூட என்னால் இருக்க முடிவதில்லை. நீ என்னை விட்டுப் போனதும் எனக்கு ஒரு திகில் பிடித்துக்கொண்டது. அதனால்தான் அப்படி உன்னிடம் ஆவலுடன் ஓடி வந்தேன்.''

' ஓ! அதுமாதிரியா? இப்போ கொஞ்சம் புரிகிறது—'' மறுபடியும் அவள் விரல்கள் என் முகத்தைத் தொட்டன. ''உன் முகத்துக்கு உன் மூக்குக் கொஞ்சம் பெரிதுதான்—''

அவள் கையை என் முகத்திலிருந்து தள்ளினேன் இப்போ புரிந்துகொண்டேன் என்றாயே!''

பெருமூச்செறிந்தாள். ''நிஜம்மா சொல்லித்தான் ஆகணுமா?''

''ஆம்'' என் தொண்டை ஏன் இப்படி வரள்கிறதோ?

''சொல்லித்தான் ஆகணுமோ?''

''ஆம் ஆம் ஆம்'' நான் பொறுமையிழக்க ஆரம்பித்து விட்டேன்.

''வால்மீகி''— அவள் வார்த்தைகள் தயங்கித் தயங்கிப் புறப்பட்டன. நான் அவளிடம் வேண்டுவதை அவளும் சேர்ந்து தேடுவதேபோல், ''வால்மீகி நான் தீர ஆலோசனை பண்ணி என் மனசை நன்றாய் அலசி அலசிப் பார்த்துச் சொல்லப்போனால்— சொல்லப் போனால்—''—நான் காத்துக்கொண்டிருந்தேன்.

''சொல்லப்போனால்—''

''டாண், டாண், டாண்!!!—''

கடிகாரத்தின் மணி அடித்தது. அதன் சப்தம் என் மார்பில் ஓங்கி அறைந்தது. திடுக்கென மௌனம் சூழ்ந்தது. நான் களைப்புடன் படுக்கையில் சாய்ந்தேன். ஊ—ஹ்ூம். இனி நான் தேடுவதற்கு உண்மையான பதில் கிடைக்காது. நானும் அவளும் லயித்துக்கொண்டிருந்த அந்த நுட்பமான சுருதி கலைந்துவிட்டது. மறுபடியும் அந்த சுருதி கிட்டாது. அந்தரத்தில் வடிவமாகி, அந்தரத்திற்குச் செல்லும் நூலேணியில் பாதி ஏறியும் விட்டபின், அந்தச் சதிகாரச் சப்தம் வாள்போல் ஏணியையே அறுத்தாகிவிட்டது. அந்தக் கடிகாரத்திற்கு எப்பவுமே ஏளனம் தான். மணி ஒன்றென்றால் பன்னிரண்டு அடிக்கும். பன்னிரெண்டானால் மூன்று அடிக்கும்.

''காயத்ரீ.''

''என்ன?''

''நான் விரும்பிய அளவில் கிஞ்சித்தேனும் இருக்கும் அல்லவா? இன்றைக்கில்லாவிட்டாலும் என்றேனும்.''

''இதென்ன இந்தப்பேச்சு? எனக்கு அலுத்துப்போச்சு வால்மீகி. என்னவோ பூனை தன் வாலையே தான் சுற்றிச் சுற்றி வருகிறாப்போல—''

வாஸ்தவந்தான். நான் ஏன் இவளைப் பிச்சை கேட்கிறேன்?

கிளுக்கென்று சிரிப்பு அவள் திக்கிலிருந்து ஒலித்தது.

''இல்லை எனக்கு ஒன்று நினைப்பு வந்தது. உன்னை நான் 'வாங்கோ போங்கோ'ன்னு மரியாதை வைத்துப் பேசவில்லையேன்னு உனக்கு வருத்தம் உண்டா?''

''எனக்கு உன் மரியாதை வேண்டாம்.''

எனக்குச் சற்றுக் கோபம்தான் வந்தது. அவள் என்னைக் கேலி செய்வது போலும் தோன்றிற்று.

"வால்மீகி"

"..............."

"வால்மீகி!!"

"............"

"தூச்கமா?"

"இல்லை. என்ன?"

"நான் கர்ப்பமாயிருக்கிறேன்."

அவள் குரல் நிதானமாய்ப் பூரண வடிவுடன் இருளி லிருந்து பிரிந்து வந்தது.

கடிகாரத்தின் வினாடிகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தம்மைச் சொடுக்கிக்கொண்டு சுவரிலிருந்து புறப்பட்டு இருளோடு கலந்தன.

"வால்மீகி நீ ஏதாவது சொன்னாயா?"

"இல்லை. ஆனால் நீ சொல்லியது நல்ல விஷயம்" என்றேன்.

"எனக்குப் பிடிக்கல்லே" என்று சிணுங்கினாள்.

"எல்லோருக்கும் இப்போ அப்படித்தான் இருக்குமோ என்னவோ?" என்றேன்.

"அப்படியில்லை. எனக்கு நிஜமாவே, எப்பவுமே பிடிக்கல்லே. பார் இன்னும் கொஞ்சநாளில் வயிறு அசிங்கமாய் வீங்கிவிடும்—பார்க்க சகிக்காது."

"இப்படிப் பேசிக்கொண்டு போனால் அதற்கு எல்லையே இல்லை. உலகத்தில் எந்த உயிர் பிறந்தாலும் இந்த நிலைமைகளையும் கட்டங்களையும் அடைந்த பின் தான் வெளிப்பட்டுத்தான் தனியாகிறது. என் தாயும் அப்படித்தானிருந்திருப்பாள். நீ பிறக்கு முன் உன் தாயும் அப்படித்தானிருந்திருப்பாள். நானாவது என்

வீட்டுக்கு ஒரே பயிர். உன் வீட்டிலோ உனக்கு இரண்டு வளர்ந்த தங்கைகள், இரண்டு தம்பிகள் இருக்கிறார்கள். இத்தோடு உன் தாய் கையில் ஒரு குழந்தையை ஏந்திக் கொண்டிருக்கிறாள்.''

''நீ என் தாயாரைக் கேலி பண்ணவேண்டாம்—'' என்றாள், சீற்றத்துடன்.

''நான் ஒருவரையுமே கேலி பண்ணவில்லை. நீ தாய்மையையே வெறுக்கும்போது, நீ வளர்ந்திருக்கும் கோளாறை நினைத்துத்தான் வருந்துகிறேன்.''

கொஞ்சநாழி இருவரும் மௌனமாயிருந்தோம். அவரவர் அவரவர் யோசனையில் ஆழ்ந்திருந்தோம்.

காயத்ரியின் தாயரைப்பற்றி மனமில்லாமல் நான் நினைத்துக்கொண்டிருந்தேன். மாதத்தில் இரண்டு மூன்று முறை பெண்ணைப் பார்க்க வருவாள். அதனால் மாத்திரம் ஒன்றும் மோசமாகிவிடாது. ஆனால் வரும் போதெல்லாம் அவள் பேசும் மாதிரியும் நடந்துகொள்ளும் ரீதியையும் பார்த்தால் அவள் பெண்ணை நான் உயிரோடு வைத்திருக்கிறேனா அல்லது கொன்றுவிட்டேனா என்று அவ்வப்போது உளவு கண்டுபோக வருவதுபோல் தோன்றும்.

தாயாரும் பெண்ணும் எப்போதும் ரகசியம் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்குள் அவ்வளவு பொத்திவைக்கும் விஷயங்கள் என்ன இருக்குமோ? என்னைக் கண்டதும் பேச்சை நிறுத்திக்கொண்டு முகத்தைக்கூட சிரமப்பட்டு மாற்றிவைத்துக்கொள்வார்கள். முதல் இரண்டு மூன்றுமுறை எனக்கு வேடிக்கையாயிருந்தாலும், போகப் போக வெறுப்பைத்தான் விளைவித்தது. அவள் வந்தால் காயத்ரீகூட பச்சோந்தி மாதிரி நிறம்கூட மாறிவிடுவதுபோல் எனக்குத் தோன்றும்.

பல சமயங்களில் காயத்ரியின் தாயார் மெய்யாகவே காயத்ரிக்குத் தாயார்தானா, என்று நான் வியப்புறுவதுண்டு. குள்ளஜாதி மாடுபோல் பருத்துக் கட்டைகுட்டையான உடல். முகத்துச் சதையில் புதைந்து இடுங்கிப்போன கண்களில் ஒருதரமேனும் நான் கனிவு கண்டதில்லை. சுமுகத்தையே கொன்றுவிட்டு சூன்யக்காரி போல் கடுகடுவென்றிருப்பாள். ஒருவேளை அப்படியிருந்தால்தான் தோரணையென்று பாவித்தாளோ என்னவோ? கம்மிப்போய் எப்பவும் இரட்டைக் குரல் பேசும் தோரணையையும், நடந்துகொள்ளும் பாவனையையும் பார்த்தால், கடவுளிடம் உலகத்தையே விலைபேசி வாங்கி விட்டதாகத் தோன்றும். ஆனால் காயத்ரியின் தகப்பனார் கடனிலேயே மூழ்கிக் கொண்டிருப்பதாகக் கேள்வி. 'ஸீஸ'னுக்கு ஸீஸன் தவறாமல் குதிரைப் பந்தயத்தில் சுளை சுளையாய்ப் பணத்தைத் தோற்பதாகக் கேள்வி. அவர் செலவுகளும், சிரமப்பட்டு காப்பாற்ற முயலும் அந்தஸ்துமே கட்டுக்கடங்காத குதிரையாய் அவர்கள் குடும்பத்தைச் சரிவில் இழுத்துக்கொண்டு போயிருந்தன. ஆனால் அவரோ அவர் மனைவியோ அவர்களுடைய பொறுப்புக்களில் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. காற்றில் கட்டிய கோட்டை...திரிசங்கு சுவர்க்கம்...''

பிடிக்காதவர்களைப் பற்றி எண்ணினால் பிடிக்காதன தான் நினைவுக்கு வருகின்றன. என்னுடைய வெறுப்பான சிந்தனையை அவள் குரல் இடைமறித்து வெட்டியது.

''என்ன வேணுமானாலும் சொல்லு. எனக்குப் பிடிக்கவில்லை.''

''Alright. பிடிக்க வேண்டாம். என்ன செய்யப் போகிறாய்?''

என்னவோ முனகினாள்.

''ஏதாவது சொல்ல வேணுமென்றிருந்தால், பளிச்செனு வெளிச்சமாய்ச் சொல்லு. மொண மொணக்காதே'' கோபம் குறுகுறுவென்று என் நெஞ்சில் எங்கோ எலி பிராண்டிற்று. அதனால் நெஞ்சுகூட வலித்தது.

''ஆமாம், ஏற்கெனவே சொல்ல வேண்டாம். இங்கே வந்தது முதல் நான் எங்கே போயிருக்கிறேன்? என் வீட்டில் இப்படித்தான் இருப்பேனா? நானும் என் தங்கைகளும் ஊரைக் கொட்டை பரப்பியிருப்போமே! வாரம் ஒரு சினிமா தவறமாட்டோம். என்ன குஷியாய் பொழுது போகும் தெரியுமா? அக்கம்பக்கத்தில் இங்கே பேசக்கூட ஒருவருமில்லை. நீதான் என்னைத் தங்கச்சங்கிலிபோட்டுக் கட்டி வைத்திருக்கிறாயே! வால்மீகி, நான் என்னமோ நினைத்துக்கொண்டு வந்தேன். ஆனால் நிஜமா எனக்கு இங்கே bore அடிக்கிறது...''

எனக்கு அப்பொழுது திடீரென ஒரு விநோதமான எண்ணம் உதித்தது. ஓடிக் கொண்டிருக்கும் காற்றை நான் இழுத்துப்பிடித்து வைத்துக்கொண்டு, அத்துடன், ''நீ என் மூச்சு—நீ இல்லாமல் நான் இருக்க முடியாது. உனக்கும் என்மேல் அதேமாதிரி இருக்கிறதா? இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் உன்னுடைய அரூபத்தில் என்னுடைய வித்து ரூபமாயிருக்கிறது'' என்று என்னென்னவோ பேரம் பேசிக்கொண்டு, கண்ணும் காதும் நெஞ்சும் இலாது, உயிருக்கு உயிராய்த் தான் இயங்கினாலும் தனக்கென்று ஒரு உயிர்த்தன்மை இலாத காற்றோடு ஏதோ பிதற்றிக் கொண்டிருக்கிறேன். கண்ணுக்கும் புலனாயும் புலனாகாததுமாய் எண்ணிலா ஜீவராசிகளும் அணுக்கோசங்களும் சதாசர்வகாலம் காற்றில் நீந்தியபடி தான் இருக்கின்றன. ஆனால் காற்றுமாத்திரம் தனிமலடு.

ஓடும் காற்றை இழுத்துப் பிடித்துக்கொண்டால் அது விஷமாய்த்தான் மாறிவிடுகிறது. எனக்குக் குப்பென்று வேர்த்தது. மூச்சு திணறிற்று.

''காயத்ரீ, தயவுசெய்து ஜன்னல்களைத் திற.''

''மழையடிக்கிறது காது கேட்கிறதா?''

''பரவாயில்லை.''

''அறையில் தெப்பல் உத்ஸவம் கொண்டாட வேண்டியதுதான்.''

''பரவாயில்லை.''

அவள் ஒரு கதவைத் திறந்ததுமே சாரல் 'விர்'ரென்று வீசிக்கொண்டு என் முகத்தில் அறைந்தது.

''இப்போ திருப்தியாகி விட்டதா?''.

''இல்லை, எல்லாக் கதவுகளையும் திறந்துவிடு.''

காற்றும் மழையும் சீறிக்கொண்டு உள்ளே மோதின. என் நெஞ்சு...என் நெஞ்சு...சொக்காயை மார்ப்புறம் திறந்துகொண்டு கட்டிலில் கிடந்தேன்.

கீழுதடைத் திருகிக்கொண்டு ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

* * *

ஆஸ்பத்திரியின் கட்டிடம் உயர்ந்த மேட்டில் கம்பீரமாய் நிற்கிறது. ஆனால், அதன் தோற்றம் நெஞ்சில் தைரியத்தை ஊட்டுவதற்குப் பதிலாகச் சில்லிடத்தான் செய்கிறது.

காரின் பின் ஸீட்டில் காயத்ரி, மூடிய கண்களுடன் அவள் தாயின்மேல் சாய்ந்துகொண்டிருக்கிறாள். முகம் சுண்ணாம்பாய் வெளிறிட்டுவிட்டது. அவள் முகத்தின் பக்கத்தில், அவள் தாயின் முகம், திருஷ்டி கழிக்க வைத்த பொம்மைபோல் அருவருப்பாய் காட்சியளிக்கின்றது. பின்வரும் விபத்தின் முன் அறிகுறிபோல் அவள் முகபாவம் எப்பவும் என்னை அச்சுறுத்துகிறது.

"ஆ மிஸ்டர் வால்மீகி. வந்துவிட்டீர்களா? வாருங்கள் வாருங்கள்!—" டாக்டர் எங்களை வரவேற்கிறார். "நர்ஸ்! இந்த அம்மாவை உள்ளே கூட்டிக்கொண்டு போ! உட்காருங்கள் மிஸ்டர் வால்மீகி, என்ன நீங்கள் நாளுக்கு நாள் உள்ளுக்கு வாங்கிக்கொண்டு போகிறீர்கள்? உங்கள் முகம் நன்றாயில்லையே!"

"எல்லாம் கவலைதான்" என்கிறேன். அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "No, No, No!" டாக்டர் அடித்துப் பேசுகிறார்.

"இதென்ன எல்லோருக்கும் நேருகிறதுதானே! இதைப் பற்றி கவலைப்பட்டு சாத்தியப்படுமா? என்ன உங்கள் கண்களில் ரத்தமில்லை. நாடி பதட்டமாய் பேசுகிறது. ஜுரம் இருக்கிறதா? I must examine you"

"எனக்கென்ன அவசரம் டாக்டர்?" என்றேன் அலுப்புடன். "நான் அப்புறம் வந்து உடம்பைக் காண்பித்துக் கொள்கிறேன்." என் கவனம் கலைய ஆரம்பித்து விட்டது. உள்ளிருந்து அவள் முக்கல்களும் முனகல்களும் கேட்கையில் என் மனம் சஞ்சலிக்க ஆரம்பித்துவிட்டது.

"நீங்கள் மனசை வாட்டிப்பதில் பிரயோசனமில்லை. அது அது அதனதன் வேளையில்தான் வரும். இன்னும் நிஜவலிக்கு எவ்வளவோ நேரமிருக்கிறது. இதுதான் முதல் பிரசவம், சிரமமாய்த்தானிருக்கும்—"

காயத்ரீயின் தாயார் உள்ளிருந்து வந்தாள். அவள் முகம் கல்லாலடித்தாற்போல கடினமாய், உக்கிரமாயிருந்தது. குற்றம் சாட்டும் கண்களுடன் என்னைப் பார்த்தபடியே, "என் பெண் ரொம்பக் கஷ்டப்படுகிறாள்" என்றாள். கம்மிப்போய்க் கர்ண கடூரமாய் இரட்டைக் குரல் பேசும் கட்டை ஆண் குரல்.

''டாக்டர், என் பெண் ரொம்பவும் துடிக்கிறாள்.''

''துடிக்கட்டும்.''

அவள் பார்வை அவர்மேல் திரும்பிற்று. முகம் இறுகிற்று. கண்கள் ஊசிமுனைகளாய்ச் சிறுத்தன.

''துடிக்கட்டும்; துடித்தால் ஒன்றும் மோசமில்லை. மூன்று மாதங்களுக்கு முன்னால் நீங்கள் வந்தபோதே சொன்னேன் 'உங்கள் பெண் நன்றாய்க் குனிந்து நிமிர்ந்து வேலை செய்ய வேண்டும். உடம்பு வணங்கி தேகத்தை உழைக்க வேண்டும். அப்போதுதான் பிரசவ வேளைக்குச் சௌகரியமாயிருக்கும்' என்று. கேட்டேளோ?''

காயத்ரியின் தாயார் நிமிர்ந்து கம்பீரமாய் நின்றாள். உலகத்தை விலை பேசுகையில் கடவுள் முன்னிலையில் அப்படித்தான் நின்றிருப்பாள்.

''வீட்டில் சமையல்காரி இருக்கையில் என் பெண் ஏன் வேலை செய்யணும்?''

''Very good உங்கள் பெண்ணின் குழந்தையை உங்கள் சமையல்காரி பெறுவதற்கு நாங்கள் இன்னும் புது வழி கண்டுபிடிக்கவில்லை.''

அவள் தலையை ஒரு வெட்டு வெட்டிக்கொண்டு உள்ளே சென்றாள்.

டாக்டர் சிகரெட்டைப் புறங்கையில் தட்டிக் கொண்டார்.

''இவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நான் மந்திரவாதியா, டாக்டரா? மிஸ்டர் வால்மீகி, எனக்கு வரவர ஒன்றுமே பிடிக்க வில்லை. இந்தக் காலத்து சந்ததியே No good. இந்த சந்ததிக்குப் பொறுப்பு இல்லை. ஒத்துழைப்பு இல்லை. லக்ஷியங்களில்லை. மனமில்லை. நான் என்ன செய்ய முடியும்? இயற்கை அதன் வழியில் வேலை செய்ய,

அத்தோடு ஒத்து உதவியாயிருக்க வழி காண்பிக்கத்தான் முடியும். ஆனால் இவர்கள் என்ன நினைக்கிறார்கள்? இவர்களுக்கும் இவர்கள் பெற இருக்கும் குழந்தைகளுக்கும் சம்பந்தமேயில்லைபோல் பேசுகிறார்கள். அதெல்லாம் டாக்டர் வேலை என்கிறார்கள். இது வேடிக்கையா யில்லை?''

அவசரமாய்ப் புகையை இரண்டு இழுப்புக்கள் வெளியே விட்டார். அவர் என்னத்தையோ நினைத்துக் கொண்டு முறுக்கேறிக் கொண்டிருந்தார்.

''இதோ பாருங்கள், இவ்வுலகத்தில் ஒரு உயிரின் பிறப்பைவிட, அழகான, அற்புதமான ஆச்சரியம் எது இருக்கிறது? பூமியெனும் இவ்வளவு பெரிய கிரஹத்தை மூச்சென்ற பேரில், நூலிழையளவில் ஒரு ஸன்னக் காற்றுத் தானே ஏந்திக் கொண்டிருக்கிறது? இதைவிட உங்களுக்கு விந்தை என்ன வேண்டும்? இந்த ஸன்னமான காற்று இல்லாவிட்டால் உயிரேது? உயிரில்லாவிட்டால் உங்கள் உடலுக்கு யோக்யதை ஏது, உலகமே ஏது? உலகின் உடல்கள் அத்தனைகளிலும் இந்த உயிர் நூல் கோர்த்துக் கொண்டு இந்த உலகம் இயங்குகிறது. அதனால் ஒரு குழந்தைப்பேறு, சிருஷ்டியே, எவ்வளவு பெரிய பொறுப்பு? இந்தப் பிராண நூலைப் பின்னமாகாது காப்பாற்றுவது எவ்வளவு மகத்தான, லக்ஷியமான, பெருந்தன்மையான காரியம்? ஆனால் யார் இப்படி நினைக்கிறார்கள்? பெண்கள் பெரியவர்களாகிறார்கள். ஸ்திரீகளாகிறார்கள். ஆனால், புத்தியின் வளர்ச்சி மாத்திரம் முழங்கால் மட்டோடு நின்றுவிடுகிறது. சிட்டுக் குருவி மாதிரி படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு தத்தித் தத்தித் தரையோடு தவிப்பார்களே தவிர, காரிய பாகத்தில் ஒன்றுமில்லை. பெரிய குழந்தைக்குச் சின்னக் குழந்தை பிறக்கிறது. இந்த சந்ததி எப்படி சரியாயிருக்கும், சரியாயிருக்க நியாயமேது? No

இது ஒரு சபிக்கப்பட்ட சந்ததி. தாய்மைக்கு லாயக்கற்றவர்கள். தாயார்களாவது ஒரு சாபம். அவர்களுக்குக் குழந்தையைக் கொடுப்பவர்களும் குற்றவாளிகளே. சமூக சத்ருக்கள், That is it, a doomed generation.''

கைச் சிகரெட்டை நசுக்கிவிட்டு, இன்னொரு சிகரெட்டைப் பற்றவைத்தார். அவர் என்னோடு பேசவில்லை. வாய்விட்டுச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''வெறும் குளோரோபாரம், மாத்திரை, மருந்துப் புட்டிகள், ஊசி இவைகளால் மாத்திரமே எல்லாம் ஆகிவிடுமா? மனமும் வேண்டும். கர்ப்பந் தரித்தால் மட்டும் போதுமா? அந்தப் பிள்ளையைப் பெற்று எடுத்து, வளர்த்து, மனிதனாக்க மனம் வேண்டும். ஆசை வேண்டும். பொறுப்பு வேண்டும். தைரியம் வேண்டும். ஆத்ம பலம் வேண்டும். இந்த லக்ஷியங்களில்தான் இந்த உயிர் நூல் வளர்கிறது. என் டாக்டர் பட்டத்தால் அல்ல. பிள்ளையா, சாணியா? என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? இந்த விஷயத்தில் மனிதன் மிருகங்களிடம் பிச்சையெடுக்க வேண்டும், மிஸ்டர் வால்மீகி—''

அவர் கண்கள் கொதித்தன.

''என் தாயார் என்னைப் பெற்றபோது இந்தக் கத்தி கவடா எல்லாம் இருந்ததா என்ன? மிஸ்டர் வால்மீகி, இன்னும் நேரமிருக்கிறது. உங்களுக்கு நான் ஒரு சின்னக் கதை சொல்லப்போகிறேன், நான் பிறந்த கதை.

சிகரெட்டை எறிந்துவிட்டுக் கையைக் கோர்த்துக் கொண்டு அவர் நாற்காலியில் சாய்ந்தார்.

''நான் கிராமத்தில் பிறந்தேன். என் தகப்பனார்தான் வீட்டுக்கு மூத்தவர். கூடப்பிறந்த தம்பிகள் நாலைந்து பேர்கள். அவரவர்களுக்கு காலா காலத்தில கலியாணமாகி வேண்டிய குழந்தைகுட்டிகள் பிறந்தன. எல்லாம் ஒரே கூட்டுக் குடும்பம். பாட்டிதான் குடும்பத்துக்கு அதிகாரி.

''என் பெற்றோர்களுக்கு மாத்திரம் சந்ததி ஏற்படவேயில்லை. வேண்டிக்கொள்ளாத தெய்வம் இல்லை. செய்யாத பூஜை, தருமங்கள், செலுத்தாத பிரார்த்தனைகள் இல்லை. அந்தக் காலத்தில் கால்வயிற்றுக் கஞ்சிக்கு லாட்டரி அடித்தாலும் அதைப் பிடுங்கிக்கொள்ள ஒரு குழந்தையில்லாவிட்டால் அது ஒரு பெரிய ஈனம். நிறைய குழந்தை குட்டிகளோடு வாழும் நாலைந்து ஓரகத்தியர்களுக்கிடையில், கூட்டுக் குடும்பத்தில், வீட்டுக்கு மூத்த மருமகள் மலடாக வளைய வந்தால் இடி சொல்லுக்கும், மறைவான கேலிக்கும் கேட்கணுமா? ஆனால் என் அம்மா அதிகமாய்ப் பேசமாட்டாளாம். சில சுபாவங்கள் அப்படி; எல்லாவற்றிற்கும் மௌனமான புன்னகை. அவரவர்களுக்கு இஷ்டமான பதிலையும் அர்த்தங்களையும் அவரவர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம், மக்கு என்றும் நினைத்துக் கொள்ளலாம்.

''ஆனால் ஒருநாள் என் தாயும் கருத்தரித்தாள் என்று நிச்சயமாயிற்று. இதைப்பற்றி என் தாயாரைவிட வேறு யாரும் ஆனந்தப்பட்டிருக்க முடியாது. நிறை கர்ப்பத்தில் என் தாய் விளிம்புகட்டிய குடம்போல், சமாதியையொத்த பரவச நிலையில் வளைய வந்தாள் என்று சொல்லக் கேள்வி. யாருடனும் பேசாமல், முகத்தில் தேங்கிப் போன புன்னகையுடன், தனக்குள் தானே தன் உதய ராகத்தை மெதுவாய்ப் பாடிக்கொண்டு, தன் உள் கண்களால் தன் கர்ப்பத்திலிருப்பதைத் தான் தரிசித்துக் கொண்டு, தன்னில்தான் லயித்து.........

''பிரசவ வேளையும் வந்துவிட்டது. இடுப்பு வலியும் எடுத்துவிட்டது. அம்பட்டனின் தாயார் வந்துவிட்டாள். அவள்தானே ஊருக்கெல்லாம் மருத்துவச்சி! வேறு நேரங்களில் வாசற்படி தாண்டி உள்ளே வர அனுமதியில்லாவிட்டாலும், இப்போ அவள் இட்டதுதான் சட்டம். ரேழியறையை ஒழித்துக் கொடுத்தாகிவிட்டது. பிரசவக்

காரியையும் அவளையும் தவிர அறையில் ஒருவரும் இருக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்துவிட்டாள். பிரசவமும் ஆயிற்று. ஆனால் கடைசி சமயத்தில் எக்கச் சக்கமாய் ஏதோ நேர்ந்துவிட்டது. மருத்துவச்சி வெளியே வந்து ஒரு நிமிஷம் மிரள மிரள விழித்தாளாம். பிறகு உள்ளே போனாளாம். உடனே ஒரு பெரிய அலறல் கேட்டது. குழந்தை கத்திக்கொண்டு விழுந்துவிட்டது. ஆனால் அம்மா மூடிய கண் திறக்கவேயில்லை.

''அதனால் எது நிற்கிறது? நாட்களாயின. பத்து வருஷங்கள். என் தகப்பனார் மறு கலியாணம் பண்ணிக் கொண்டுவிட்டார். எனக்கு மாற்றாந் தம்பிகளும் தங்கை களும் பிறந்துகொண்டேயிருந்தனர்.

''நான் ஒருநாள் மாலை இடுப்புமுண்டைத் தலையில் கட்டிக்கொண்டு, கோவணமும் அரையுமாய், எங்கள் வீட்டுத் தெருக்கோடியில் ரோஷத்துடன் பம்பரம் விளையாடிக்கொண்டிருந்தேன். எதிர் வீட்டுத் திண்ணை யில் அம்பட்டனின் தாயார் உட்கார்ந்துகொண் டிருந்தாள். அவளுக்குக் கண் தெரியவில்லை. வயது மரங் களுக்கு ஆகிறமாதிரி ஆகிவிட்டது. முகம் பூரா, வருடங் களின் பாளங்கள்.

என் குரலைக் கேட்டதும் என்னைக் கூப்பிட்டாள்.

''யாரு என்னையா கூப்பிட்டே?''

''ஆமாம், நீ என்ன அரசமரத்து அய்யர் வீட்டுப் பிள்ளைதானே?''

''ஆமா!'' (எங்கள் வீட்டில் அரசமரம் ஒன்றும் காணோம். ஆனால் பேர் என்னவோ அப்படித்தான்.)

''இங்கே வா.''

''இப்படிக் குந்து; உங்கிட்டே ஒண்ணு சொல்லணும். உன் ஆத்தாள் குரலாட்டம் இருந்தது. அதனால்தான்

அடையாளம் கண்டுகிட்டேன். இன்னும் கிட்டே வா, அப்புறம் தலை முழுவிக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே, என் உடலை ஒரு முறை அடையாளம் கண்டு கொள்வதுபோல் தடவினாள். கொடி கொடியாய்ச் சுருங்கிப்போன அந்த விரல்கள் என்மேல் பட்டுத் தேடு கையில் எனக்கு வெறுப்பாய்க் குறுகுறுத்தது.

''உன் ஆத்தாளுக்கு நான்தான் பிரசவம் பண்ணி னேன். அவள் உடம்பிலிருந்து உன்னை நான்தான் எடுத்தேன்.''

''ஓ!'' ஏதோ புரிந்துவிட்டமாதிரி தலையை ஆட்டி னேன்.

''எனக்கு நொம்ப நொம்ப வயசாய்ப்போச்சு, இன்னிக்கோ நாளைக்கோ என்னிக்குன்னு தெரியாது. ஆனால் உங்கிட்டே நான் ஒண்ணு சொல்லிட்டுப் போவணும்.''

இவள் எனக்கு சொல்ல என்ன இருக்கிறது?

''உன் ஆத்தாளுக்குக் கடைசிலே கெடுபிடியாய்ப் போச்சு. நீ வர வழியா வரல்லே. மார்மேலே ஏற ஆரம் பிச்சுட்டே. வேதனை பட்டுக்கிட்டிருந்தாலும் என் நெஞ்சிலே இருக்கிற கவலையை எப்படியோ கண்டுட்டுது.

''என்னடி ஆண்டாளு?''ன்னு என் கை மேலே தன் கையை வெச்சுக் கேட்டது.

''ஒண்ணுமில்லே அம்மா''ன்னு ஏதோ மளுப்பினேன்.

''தைரியமா சொல்லு ஆண்டாளு எனக்குத் தெரிஞ்சுக்கணும்.''

''அம்மா உன் குளந்தை—உசிரோடே வெளிலே வராதுபோல் இருக்குது.''

''ஆ! என்ன?''... உன் ஆத்தா துடிச்சுப்பூட்டா.

"அம்மா, நீ வருத்தப்படறதுலே பிரயோசனமில்லே. ஆண்டவன் எப்போ ஒரு தடவை கொடுத்தானோ இன்னொண்ணு கொடுக்காம இருக்கமாட்டான்" என்னு தைரியம் சொன்னேன்.

"ஐயோ எனக்கு என் குழந்தை வேணுமே! எனக்கு என் குழந்தை வேணுமே!!"

"உன் ஆத்தாள் முகத்தை இப்போகூடப் பார்க்கறேன். உடனே என்னத்தையோ நினைச்சுக்கிட்டாப்போல அவசர அவசரமா கையிலிருக்கிற தங்க வளையலைக் கயட்டி, என் கையிலே வெச்சுப் பொத்தினாங்க.

"என்னாம்மா இது?" எனக்கு ஒண்ணும் புரியல்லே.

"ஆண்டாளு, என் குழந்தையை நீ உசிரோடு காப்பாத்திக் கொடுக்கணும். ஆண்டாளு இவனுக்கு நான் எப்படிக் காத்திருந்தேன் தெரியுமா? என் பேரைக் காப்பாத்தக் கடைசிலே வந்தூட்டான். அவனை நான் விடமாட்டேன்—"

"சின்ன உசிரு பெரிய உசிரு நான் பார்க்க வேணாமாம்மா?"

"என்னைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை" என்னாங்க உன் ஆத்தாள். "ஆண்டாளு, நீ என்னைப் பத்தி நினைக்காதே. என் குழந்தைக்கு உயிரைக் கொடு, ஆண்டாளு, உன்னை என் குலதெய்வமாக நினைப்பேன்" என்னு கையைக் கூப்பினாங்க. எனக்கு அழுகை வந்திருச்சு. "அதுமாதிரியெல்லாம் செய்யாதேம்மா"ன்னு கையைப் பிரிச்சுவிட்டேன்.

"பரவாயில்லே ஆண்டாளு"— உன் ஆத்தா கண்ணை மூடிக்கிட்டே சிரிச்சாங்க. கண்ணிலேருந்து மாலை மாலையாப் பெருகுது. "என் பிள்ளைய்ய எப்படியும் நான் என் உசிரோடு பார்க்கமாட்டேன். ஆனால்"—என் கையைக்

கெட்டியாய் பிடிச்சுக்கிட்டுது. "நீ என் குழந்தையை உசிரோடு எடுத்து என் வீட்டிலே கொடுத்தப்புறம், அவனும் உசிரோடு இருந்தால், அவன் உயிரோடிருப்பான்—அவனுக்கு புத்தி வரவரைக்கும் நீயும் உசிரோடிருந்தால், அது பத்து வருஷமானாலும் சரி, பதினஞ்சு வருஷமானாலும் சரி—நீ அவனைத் தனியாகக் கண்டு நிஜமமா நடந்ததைச் சொல்லணும். தெரிஞ்சுதா? அவன்மேல் நான் எவ்வளவு ஆசையாயிருந்தேன்னு நீ அவன்கிட்டே சொல்லணும். நான் அவன்கிட்டே போயிட்டு வரேன்னு சொல்லிட்டேன்னு சொல்லு. அவனை நான் சமத்தா இருக்கணும்னு சொன்னேன்னு சொல்லு—"

"அப்புறம் உன் ஆத்தா பேசவுமில்லே. கண் திறக்கவுமில்லே. ஆனால் உன் ஆத்தாளைத் தெய்வம்னுதான் சொல்லணும். இல்லாட்டி அது சொல்லச் சொன்னதை இத்தனை நாளாயும் உன்னிடம் சேர்த்தூடறவரைக்கும் நான் உசிரோடிருக்க முடியுமா?—"

"வெகுநேரம் நான் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையவில்லை. அன்று நான் புதிதாய்ப் பிறந்தேன். அன்று நான் ஒரு ப்ரதிக்ஞை பண்ணிக்கொண்டேன். "நான் சமத்தாயிருப்பேன். பெரியவனானால் டாக்டருக்குத்தான் படிப்பேன். எத்தனையோ தாய்மார்கள் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் என்னிடம் சிகிச்சைக்கு வருகையில், அவர்களிடம் என் தாயின் உயிரையும் பேரையும் திரும்பத் திரும்பக் காப்பாற்றுவேன்—"

"ஆனால் நான் காண்பது என்ன? ஒருவருக்கும் வாழ்க்கையில் மரியாதையில்லை. மறுப்புத் தானிருக்கிறது. பெற்று எறிந்துவிட்டால் மாத்திரம் ஆகிவிட்டதா?—"

"ஹா—ஹா—ஹா ஆஆஆஆ!" உள்ளிருந்து ஒரு பெறும் அலறல் கிளம்பிற்று. நான் துடித்து எழுந்தேன்.

"This is it—" என்று சொல்லிக்கொண்டே டாக்டர் உள்ளே சென்றார்.

நான் உட்கார்ந்துகொண்டேயிருந்தேன். கண்ணைக் கரித்தது. அரைத் தூக்கமா, மயக்கமா, மூர்ச்சையா, எதிலிருந்தேன் என்றே புரியவில்லை. ஏனோ திடீரென்று வீட்டில் என் அறையில் சுவரோரத்தில் சாத்தியிருக்கும் அம்மாவின் வீணைமேல் நினைவு போயிற்று. என்னுடைய ப்ரமையில் அதிலிருந்து தானே "டிங் டிங்" என்று சப்தங் கள் கிளம்பி ஒன்றுடன் ஒன்று கொக்கி மாட்டிக்கொண்டு மாலையாகி, காற்றில் ஆடி அலைந்து மிதந்து வந்தது. யார் கழுத்தில் விழப்போகிறது? என் கழுத்திலா?"— சட்டென விழித்துக்கொண்டேன். டாக்டர் மெதுவாய்த் தோளை ஆட்டிக்கொண்டிருந்தார். "என்ன?" அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தேன்.

"ஒன்றுமில்லை, உங்கள் குழந்தை இறந்துவிட்டது. சிரமமான கேஸ். உயிரோடுதான் வெளிவந்தது. ஆனால் பத்து நிமிஷங்கூடத் தக்கவில்லை."

"காயத்ரீ! காயத்ரீ?"— என்னை அறியாமலே வார்த் தைகள் புறப்பட்டன.

"தாயார் சௌக்யந்தான். வேணுமானால் நீங்கள் போய்ப் பார்க்கலாம்—"

குழந்தையைப் பற்றிய நினைவே எழவில்லை. அதைப் பற்றி டாக்டர் என்ன சொன்னார் என்பதுகூட மறந்து விட்டது. அடிமேல் அடிவைத்து உள்ளே சென்றேன்.

காயத்ரீ கண்ணை மூடியபடி படுத்திருந்தாள். பளீ ரெனும் வெண்மையுடன் சுத்தமான துப்பட்டிக் கழுத்து வரை போர்த்தியிருந்தது அவ்வளவு பலஹீனமாய் அவளை நான் காண்கையில் நெஞ்சை அடைத்தது.

"காயத்ரீ?"—

மெதுவாய்க் கூப்பிட்டேன்.

மூடிய கண்களை அவள் திறக்கவில்லை.

"I hate you!"

கடித்த பற்களிடையிலிருந்து வார்த்தைகள் சீறிக் கொண்டு வந்தன.

"என்னை மன்னித்துவிடு—"

எனக்குக் களை மேலிட்டது; தள்ளாடிக்கொண்டே வெளியே சென்றேன்.

நான் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கிறேன்.

ஜன்னலுக்கு வெளியே வேறு உலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

பல வர்ணங்கள் தோய்ந்த பட்டுப் படுதாப்போல் மாலை, தோட்டத்தில் இறங்குகிறது. நலுங்கும் திரையின் மடிகள் போலுமே காற்றில் அந்தி மிளிர்கிறது.

காயத்ரீ மெதுவாய் மாடிப்படிகளிலிறங்கி வருகிறாள். அவள் அப்படி வருகையில், மரத்திலிருந்து புஷ்பம் நேரே உதிர்வதை நினைவூட்டுகிறாள். அறையுள் மெதுவாய் வந்து கைகளைக் கோர்த்துக்கொண்டு சுவரில் சாய்ந்தபடி ஜன்னலுக்கு வெளியே காக்ஷியைச் சிந்தித்து நிற்கிறாள். மௌனம் அழகிய பூக்கிண்ணம்போல் எங்கள் இருவரையும் ஏந்திக்கொண்டு நிற்கிறது.

அவள் விழியோரங்களில் கண்ணீர் புறப்படுகிறது. துளிகள் கன்னங்களில் வழிகின்றன. நான் சும்மாயிருக்கிறேன். ஓடிவந்து என் காலடியில் மண்டியிட்டு வீழ்ந்து, என்மடியில் முகத்தைப் புதைத்துக்கொள்கிறாள். வழு வழுத்த அவள் கூந்தலில் என் விரல்கள் புதைகின்றன.

''என்னை மன்னிச்சூடு, வால்மீகி! உன்னை நான் ரொம்பவும் கடுமையாய்ப் பேசிவிட்டேன்!''

வான வீதியில் வெண் மேகங்களுக்கிடையில் ஒரு நீலப்பாதை பிளந்து முன்னேறுகிறது.

எனக்கென்னவோ இன்று ரொம்பவும் அசதியாயிருக்கிறது.

மூக்கை உறிஞ்சினாள். ஒதுங்கி எட்ட உட்கார்ந்தாள். எனக்கு அவளைத் தொட வேண்டுமென ஆசை.

சற்று நேரம் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

''எனக்கு ரொம்ப அலுப்பாயிருக்கிறது'' என்றாள்.

''எனக்குந்தான் அலுப்பாயிருக்கிறது.''

''நான் போய்விடப் போகிறேன்.''

இந்தக் கட்டம் ஒருநாள் வரும் எனும் திகிலில் குன்றிப் போய்க் கொண்டிருந்தேன். இந்த ரூபத்தில்தான் வரும் என்று தெரியாது. ஆனால் இதுதான் என் திகில்...ஆனால் வந்தும் விட்டபின், அவள் வார்த்தைகள் சரியாய் விளங்கவில்லை.

''நீ என்ன சொல்கிறாய்? புரியவில்லை.''

''நான் போய்விடப் போகிறேன்—''

''எங்கு?''

ஏன் என்று உடனே நான் ஏன் கேட்கவில்லை? என் நெஞ்சுக்குத்தான் தெரிகிறதே! எங்கு என்கிறேன். அதுவும் அர்த்தமற்ற கேள்விதான். எங்கு போவாள்? தாய் வீட்டுக்குத்தான்.

வெளியே மரங்கள் அசைந்தன. அவள் எனக்கு இன்னும் நேர்முகம் கொடுக்கவில்லை.

''காயத்ரீ நீ சொல்வதன் விபரீதம் உனக்கு விளங்குகிறதா?''

''விளங்காமல் என்ன?''

''காயத்ரீ, இங்கு உனக்கு என்ன பிடிக்கவில்லை?''

அவள் முகம் மரக்கட்டைபோல், உணர்ச்சிகளின் பொலிவு இலாமல், மாறிவிட்டது.

''நான் என்னவோ நினைத்துக்கொண்டு வந்தேன். ஆனால் நான் நினைத்தபடியில்லை.''

''நீ என்ன நினைத்துக்கொண்டு வந்தாய்? நீ நினைத்த படி என்ன இல்லை?''

''எனக்கு சொல்லத் தெரியவில்லை.'' விரல்களைச் சொடுக்கினாள். ''நீ என்னைக் கெட்டியாய் இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நான் எந்தக் கட்டுப்பாடு மின்றி எதேச்சையாய் வளர்ந்தவள். எந்தக் கட்டுக்கும் என்னால் கட்டுப்பட முடியவில்லை; என்னை மன்னித்து விடு.''

''நீதியே யிலாது நீ வளர்ந்துவிட்டபடியால், உன்மேல் உனக்குக் கட்டில்லாமல், உனக்கும் பிறர்க்கும் எவ்வளவு ஹானி நீ இழைக்கிறாய் என்று தெரியுமா?'' அவள் ஒன்றும் பேசவில்லை. சுவர்மேல் ஒரு முகத்தின் படம் தோன்றி அழிந்தது. முகத்துச் சதையில் சீயக்காய் விதைகள் புதைந்து, சுமுகத்தையே கொன்றுவிட்டு, கடு கடுத்துக்கொண்டு சூனியத்தைச் சிந்தும் கண்கள் அந்த உருவை மனத்திலிருந்து அழிக்கக் கண்களைக் கசக்கிக் கொண்டேன்:

''காயத்ரீ. ஏன் சும்மாயிருக்கிறாய்? ஏதாவது பதில் சொல்லேன்!—''

''பதில் சொல்ல என்ன இருக்கிறது?'' அலுத்துக் கொண்டாள். ''நம் இருவருக்கும் சரிப்படவில்லை. அவ்வளவுதான்!''

''அப்படி என்ன நேர்ந்துவிட்டது?''

''பிரித்துப் பிரித்துக் கேட்டால் நான் என்ன சொல்ல?'' அவள் திகைப்பு பரிதாபமாயிருந்தது. குழந்தைத்தனமாய், விபரீதமாயிருத்தாலும், உண்மையாயிருந்தது.

''காயத்ரீ, வாழ்க்கையில் உனக்கு என்னதான் வேண்டும்?''

''தெரியாது.''

''எதைத்தான் நீ தேடுகிறாய்?''

''தெரியாது.''

''இப்பிடிவாதம் எங்குதான் உன்னைக் கொண்டு போய் விடும்?''

''தெரியாது.''

''ஆனால் நீ போக வேண்டும் அல்லவா?''

''ஆமாம்.''

''அப்படியானால் போ போ—'' இத்தனை நாள் அடக்கிக் கொண்டிருந்த ஆத்திரம், சீற்றம், ஆசாபங்கம் எல்லாம் ஒருங்கே சேர்ந்து என்னைத் தாக்கின. நான் நாற்காலியிலிருந்து குதித்து எழுந்தேன். ''போ போய்விடு ஓடிப் போய்விடு—''

விலங்கு பதுங்குவதுபோல் ரத்னக்கம்பளத்தின்மேல் அவள் பதுங்கினாள். அப்பவும் அவள் சிற்பம்போல் அழகாய்த் தானிருந்தாள். அவள் முகபாவம் எதுவாயிருப்பினும் அது பயமில்லை. எனக்குக்கூட இவ்வளவு கோபம் வருமா எனும் வியப்புத்தான் தெரிந்தது.

''போய்விடு நிற்காதே. போனால் திரும்பி வராதே— உனக்காகவே இல்லாத மானம் வெட்கத்தை நான் எத்தனை நாள் காவல் காக்க முடியும்? உன் மானத்தை நீ விட்டபின், உன்னை எதுதான் தடுக்க முடியும்? Get out!''

வீட்டை விட்டுத் தலைகால் புரியாமல் ஓடினேன். சாலையோரத்தில் ஒரு மாந்தோப்பு. அங்கு போய் ஒரு மரத்தடியில் குப்புற விழுந்தேன். நேரம் சென்றது எனக்குத் தெரியாது. அப்படியே மூர்ச்சையாய்த்தான் ஆனேனோ, தூங்கிவிட்டேனோ? மண்டைக் கொதிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அடங்க ஆரம்பித்தது. மல்லாந்து புரண்டேன். குளிர்ந்த காற்று புருவங்களை ஒற்றியது

என் பக்கத்தில் ஒரு அணில், உலர்ந்த சருகுகளின்மேல் வாலைத் தூக்கிக்கொண்டு ஓடியது. இரு குருவிகள் ஜோடியாய் அருகே தத்திவந்து என்னை வியப்புடன் பார்த்தபடி வளவளவென்றன. புயலின் வேகம் தணிந்து எண்ணங்கள் தெளிய ஆரம்பித்தன.

காயத்ரீ என்ன கவலைப்படுகிறாளோ? சே, என்ன இப்படி மிஞ்சிக் கத்திவிட்டேன்! இரண்டுபேருமே அசட்டுத் தனமாய் நடந்துகொண்டு விட்டோம். அவளுக்கும் இப்போ அவசரம் தணிந்திருக்கும். ஒருவேளை அவளிடம் நியாயம் இருக்கிறதோ, என்னவோ? இருக்கிற இடத்திலேயே இருந்துகொண்டு பார்க்கிற முகத்தையே பார்த்துக்கொண்டிருப்பதும் அலுப்புத்தான். இடமாற்ற மாய் வெளிப்பிரயாணம் செய்து திரும்பினால் நிலைமை சரியாகிவிடும். குழந்தை உயிரோடு தங்கியிருந்தால் இவ்வளவு கசப்பு இருக்காதோ என்னவோ? ஆமாம், அதுதான். முடிந்தால் இன்றிரவே வண்டியேறுவோம். எங்கே? எங்கேயாவது போகிறது. எங்கே போனால் என்ன?

என்னைச் சுற்றி நன்றாய் இருட்டிவிட்டதை உணர்ந் தேன். அட, இவ்வளவு நேரம் ஆகிவிட்டதா என்ன? உடம்பைத் தட்டிக்கொண்டு அவசரமாய் எழுந்தேன்.

வீடு இருண்டு, ஒரு விளக்குகூடப் போடாமல், மொத்தாகாரமாய் என்முன் எழுந்தது.

''காயத்ரீ!''

என் குரல் எனக்கே வேற்றுமையாய், தனிமையாய் ஒலித்தது.

''காயத்ரீ! காயத்ரீ!!'' அறைக்கு ஓடினேன். அறைக்கு அறை.

''காயத்ரீ! காயத்ரீ!! காயத்ரீ ஈ ஈ!!!''

பாம்புப் படம்போல் என்குரல் மீண்டும் மீண்டும் தலைதூக்கி எழுந்து என்மேலேயே மோதிற்று. என்னுள் ஏதோ உடைந்தது. மூச்சுத் திணறிற்று. மூச்சுக்குத் தவித்துக்கொண்டு, கைகளை அகல விரித்தபடி, ஜன்னலண்டை ஓடினேன்.

வார்த்தைகள் என் அடிவயிற்றிலிருந்து புறப்பட்டன. அவைகளின் ஓசையும் அர்த்தமும் எனக்கே புதிதாயிருந்தன. முதலில் எண்ணங்களாக உருவெடுக்கும் இடைவெளியிலாது, நேரேவாக்காக மாறிவிட்ட உணர்ச்சிகளின் வேகம், என்னுள் சுருட்டிய எஃகுச் சுருள் விடுதலைக்கு முயல்வதுபோல் என்னை விசிறியடித்தது.

''காயத்ரீ—'' ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு கத்தினேன். என் கத்தல் வெளியே மையிருளில் நீந்திக் கொண்டிருக்கும் அணுக் கோசங்களுடன் கலந்தது.

''காயத்ரீ! உன்பேர் காயத்ரீ, சரஸ்வதி, சாம்பவி. ஹைமவதி, எதுவாயிருந்தாலும் சரி இப்பவே திரும்பிவிடு. காயத்ரீ, நீ இல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை. காயத்ரீ, திரும்பு உன்நெஞ்சு கல்லாயிருந்தாலும் சரி, உன் வயிறு கல்லில்லை. உன் வயிற்றில் என் வித்து முளைத்து மூச்சு விட்டு வளர்ந்து வெளிவந்திருக்கிறது. அதற்காக வேனும் திரும்பி வந்துவிடு. காயத்ரீ, நம் உள்ளம் உடல் அந்தரங்கங்களை ஒருவருக்கொருவர் அறிந்தபின், உனக்கு என்னை விட்டுப் பிரியவும் மனந் துணிந்ததா? என்னைக்

கொன்றுவிட்டாய். என்னோடு வாழும் இஷ்டத்தைவிட என்னைக் கொன்றுவிட்ட பெருமை உனக்குப் பெரிதாயிருந்தால் அதையே கொண்டாடிக் கொள். ஆனால் உன்னைக் கொன்றுகொண்டபின் என்னைக் கொன்றாய். ஆனால், இந்த நாளை நினைத்து ஒருநாள் நீ தவிப்பாய். ஒருநாள்—''

இருமல் என்னை முறித்தது. வாயிலிருந்து சிவப்பாய் ஒரு சொட்டு ஜன்னல் சட்டத்தின்மேல் விழுந்தது. என் பார்வை இருண்டது. தலை சுற்றி அப்படியே கீழே விழுந்து விட்டேன்.

வர வர நேரத்தின் வரைகளும் மாறுதல்களும் தெரிவதில்லை. இந்த நிமிஷம் இப்படியேதான் நின்றுவிடுமா? அல்லது அசைந்தாடி இன்னொன்றில் புகுந்துவிடுமா? படுக்கையில் படுத்தபடியே கிடக்கிறேன். என்ன யோசனை செய்கிறேன்? அறியேன். அதற்குள் காலை பகலாய் வளர்ந்துவிடுகிறது. எப்பொழுது வேளை இவ்வளவு முற்றிற்று எனத் திகைக்கையிலேயே பகல் மாலையில் சாய்கிறது. மாலை அந்தியில் மறைகிறது. அந்தி இரவில் கரைந்துவிடுகிறது.

இரவு ஒரு ப்ரம்மாண்டமான பக்ஷி. அதன் கால் நகங்கள் என் மார்பில் பதிகின்றன. விடிந்ததும் நகக் குறிகள் சிவப்பாய் மார்பில் தென்படுவது போலும் எனக்குத் தோன்றுகிறது. இரவு ஒரு ப்ரம்மாண்டமான பட்சியாய் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பகல் குறுக்கிட்டதும், இரவு தன் சிறகுகளை விரித்து மறைந்துவிடுகிறது. நாளுக்கு நாள் நான் லேசாகிக் கொண்டு வருகிறேன், வரவர என்னுடலில் சதை, தசை, ரத்தம் எதுவுமே இல்லைபோல் தோன்றுகிறது. நான் பட்சியாய் மாறிக்கொண்டிருக்கிறேன். பகல்கள் குறுகி

இரவு எப்பொழுது வரும்? இரவு என்னை பட்சியாக்கிக் கொண்டிருக்கிறது. பகலின் இடைமறிப்பிலாத இரவு ஒன்று என்று வருமோ அன்று நான் பரிபூரணமான பட்சியாகிவிடுவேன்.

''மிஸ்டர் வால்மீகி, உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்'' என்கிறாள் நர்ஸ். ''கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்கள்.''

''யார்?'' என்கிறேன். கண்ணைத் திறக்க எனக்கு சக்தியில்லை. இப்பொழுது விருப்பமும் இல்லை. என் குரலே எனக்கு எங்கிருந்தோ கேட்கிறது.

''நான்தான். வால்மீகி—''

''அப்பா!''

கண்ணைத் திறக்க முயல்கிறேன். ஆனால் இமைகளைத் தூக்கக்கூட எண்ணத்தில் வலிமையில்லை.

''அப்பா, எனக்கு ரொம்பக் களைப்பாயிருக்கிறது.''

''எனக்குத் தெரிகிறது.'' அப்பாவின் குரல்தான் கேட்கிறது. அவருடைய பிரசன்னத்தைத்தான் உணர முடிகிறது. அவரைப் பார்க்க முடியவில்லை.

அப்பா நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்காருகிறார்.

''அப்பா, உங்களிடம் பேச எவ்வளவோ இருக்கிறது; ஆனால் சக்தியில்லை. அவசியமுமில்லை. நேரமும்தான் இல்லை.''

''எனக்குத் தெரியும்.''

''அப்பா! இருமினால் ரத்தம் வருகிறது. ஆயிரம் ஊசிகள் குத்தினாற்போல் மார் வலிக்கிறது. ஜலங்கூட விழுங்க முடிவதில்லை. மூச்சு சிரமமாயிருக்கிறது.''

"எனக்குத் தெரியும். உன்னிடம் நான் ஒளிக்கப் போவதில்லை. உனக்கும் இங்கும் இனி அதிக சம்பந்த மில்லை. நீ சீக்கிரமே காற்றோடு காற்றாய்க் கலந்துவிடப் போகிறாய்."

"அப்பா, Thank you. இந்த சரீரம் எவ்வளவு பெரிய சிறை என்று எனக்குத் தெரிகிறது."

"வால்மீகி! உனக்கு ஏதாவது வேண்டுமா? இந்த சமயத்தில் நான் செய்யக்கூடியது ஏதாவது உண்டா? உன் விருப்பம் எதுவாயிருந்தாலும் தெரிவி"

"எனக்கு இனி என்ன வேண்டும்? ஒன்றும் தெரிய வில்லை. அப்பா, ஒன்று செய்வீர்களா?"

"என்ன?"

"உங்களுக்கப்புறம் சொத்துக்களை காயத்ரீக்கு வைத்துவிடுங்கள்" அவர் முகத்தை நான் பார்க்க முடிய வில்லை. சற்று நேரம் பொறுத்து "சரி" என்று அவர் பதில் வந்தது. "நான் நாளைக்கே மாற்றிவிடுகிறேன். நீயே போய்விடும்போது, எனக்குச் சொத்துக்களால் என்ன பயன்?"

"அம்மாவின் வீணையை மாத்திரம் அவளிடம் கொடுக்கவேண்டாம். அது உங்களோடேயே இருக்கட்டும். உங்களுக்குப்பின் கோவிலிலோ பஜனை மடத்திலோ சேர்த்துவிடுங்கள்."

"சரி."

"அப்பா, அவள் அப்புறம் ஒரு நாள் தவிப்பாளே என்பதை நினைக்கக்கூட எனக்குப் பயமாயிருக்கிறது. அவள் ஒன்றும் அறியாதவள்."

அப்பா ஒன்றும் சொல்லவில்லை.

"அப்பா அவள்மேல் நான் உயிரையே வைத்திருந் தேன்."

''அதனாலேயே நீ உன் உயிரை இழந்துவிட்டாய். நீ துப்பும் ஒவ்வொரு ரத்தச் சொட்டிலும் உன் பிராணன் உன்னிடம் குறைந்துகொண்டிருக்கிறது. வால்மீகி, உன் உயிர் உன்னுடையதுமில்லை; என்னுடையதுமில்லை; யாருடையதுமில்லை. ஆண்டவனுடையது. நீ பிறந்து இறக்கும்வரை நீ விடும் மூச்சுக்களைக்கூட எண்ணித்தான் உன்னிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறது. இப்பொழுது உனக்குத் தெரிந்திருக்கும். உனக்கு இறக்கத்தான் உரிமையுண்டு. உன்னிடம் ஒப்படைத்த உயிரை இழக்க உனக்கு உரிமையேயில்லை. யார் உயிரை யாருக்குக் கொடுக்க, நீ யார்? உன் உயிரை அவளுக்கு இழந்தபடியால், உன் வாழ்வை நீ வாழவில்லை.''

''நான் படுத்துவிட்டேன் என்று அவளுக்குத் தெரிவிக்கவில்லை. ஏற்கெனவே ஊசலாடிக்கொண்டிருக்கும் என் உயிரை இன்னும் ஆட்டிவிட்டுப் போவாள் எனும் பயத்தாலேயே அவளைப் பார்க்க எனக்குத் துணிவில்லை.''

''நீ இறந்தால் அவள் அழுவாள். உடைந்த பொம்மைக்குக் குழந்தை அழுவதுபோல்.''

''அப்பா, நான் மறுபடியும் என் வாழ்வை வாழ முடியுமா?''

''முடியும். மறுபடியும் பிறந்தால், மறுபடியும் உன் உயிரை இழக்காமல் இருந்தால், வாழ்வாய்.''

''அப்பா, மறுபடியும் நான் பிறக்க விரும்புகிறேன்.''

''நீ பிறப்பாய். பிறக்காமல் இருக்க முடியாது. மறுபடியும் பிறக்கத்தான் இறப்பு இருக்கிறது.''

''அப்பா, உங்களை நான் பார்க்க முடியவில்லை. உங்கள் கையைப் பிடித்துக்கொள்கிறேன். அப்பா, இந்த சமயத்தில் நீங்கள் வந்தது எனக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது தெரியுமா?''

''தெரியும்.''

''அப்பா என்னை விட்டுப் போகாதேயுங்கள்.''

''வால்மீகி, போகமாட்டேன். நீ இறக்கும்போது உன் பக்கத்தில் துணையாயிருக்கவே வந்திருக்கிறேன். உன் காரியம் ஆனதும் உன் விருப்பத்தை நிறைவேற்றி விட்டு நான் போய்விடுவேன். என் ஒரே பிள்ளை என்னை முந்திக்கொள்ளும் சோகத்திற்கு அழவே நான் வந்திருக்கிறேன். ஏனென்றால் ஆவியின் பிரிவிற்கு சிந்தும் கண்ணீர் ஆத்மாவின் வளர்ச்சிக்கு ஊற்றும் தண்ணீர்.''

என் இமைத்திரையில் திடீரென அம்மா தோன்றினாள். வீணையை தன்மேல் சார்த்திக்கொண்டிருந்தாள். அவள் மார்த்துணி கழன்று விழுந்திருந்தது.

''வால்மீகி!'' என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டே தந்தியை ஒரு தட்டு தட்டினாள். வீணையிலிருந்து ஒரு ஜோதிப் பந்து குதித்து ஜ்வலித்துக்கொண்டே என்னை நோக்கி வந்தது. அதில் நான் தாவியேறிக் கொண்டேன்.

அம்மாவின் ரவிக்கையவிழ்ந்தது. மார்பிலிருந்து பால் கடகடவெனச் சொரிந்து என்னைக் கடலாய்ச் சூழ்ந்தது. பாற்கடலில் மிதந்தபடி நான் அம்மாவை நோக்கி விரைந்துகொண்டிருந்தேன்.

# ஏகா

அன்றும் என்றும் போல்தான் பொழுது விடிந்தது. வழக்கமாய் ஏகாவுக்கு எப்படி விடியுமோ அப்படி.

''ஏகா, ஏகா, எழுந்திரேண்டி! ஏ ஏகா, ஏகா—ஐயோ திரும்பிப் படுத்துட்டாளே! ஏகா, கண்ணைத் திற வேண்டி—! ஐயோ, இவளை எழுப்பி எழுப்பி மானம் போறது, பிராணன் போமாட்டேன்கறதே! ஏ—கா!''

''கா—கா!'' காகங்கள் கேலி செய்தன.

ஏகாவை எழுப்புகிறேன் என்றால் அர்த்தமில்லை. ஒவ்வொரு சமயமும் சதைபோல் அவளை உறக்கத்திலிருந்து பிய்த்தாக வேண்டும்.

ஆனால், ஏகா எழுந்தபின் அவள் உறங்குவதோ, அவளை உறங்க வைப்பதோ, அவளை எழுப்புவதைவிடக் கடினம். புகைவண்டி வேகமெடுப்பதுபோல்தான். வேகமெடுக்கும் வரைதான் மெது. எடுத்தபின்...!

''ஏகா, இன்னும் என்ன பண்றேடி, ராத்திரியைப் பகலாக்கிண்டு? துணி தைக்க இதான் நேரமா?''

''உங்களுக்கென்னவாம், திரும்பிப் படுத்துக் கோங்கோ!''

''விளக்கு வெள்ளை முழியில் ஆயிரம் ஊசி குத்தறதேடி!''

''முகத்தை இழுத்து மூடிக்கோங்கோ!''

''ஏகா! ஏகா!!''

''நீ ஏண்டா, வீணா அலட்டிக்கறே, வேதா! அவாளே அசுரக் கூட்டம்தானே! ராக்ஷஸாள் ராத்திரி பலக் காராள்!''

அவனுக்கு ரோசம் பொத்துக் கொள்ளும். ஆனால் ஏகா கிணுங்காள்.

அம்மாவின் வார்த்தைகள் சூத்திரங்கள். ஒன்றில், சமயத்துக்கேற்ப ஒன்பது கருக்கள், அமைப்புகள், வெறும் வர்ண விசிறல்களிலேயே, புரியாவிடினும், தனக்குள் ஒன்றுபட்டதோர் இழைவுபோன்று, சம்பந்தா சம்பந்த மற்றவை போன்ற வார்த்தைகளில் வெவ்வேறு ஒலி யேற்றங்கள், அர்த்தக் கூடுகள். பாம்பின் கால் பாம்பறி யும். வேதா வேதனைப்படுவான். வாக்குப்பட நாக்கில் துடிக்கும் பதிலை நறநறவெனமென்று விழுங்கிவிடுவான். அது அவன் சுபாவம்:

அவன் வேதமூர்த்தி.

அவள் ஏகா.

''உங்கள் கழுத்தில் இதென்ன பூமாதிரி நீள மறு. பிறவியா?'' மணவறையில், சந்திப்பின் புதிதில், ஒன்றிய பரிவின் மழலையில், ஒருவரை யொருவர் ஆராயும் அதிசயிப்பில், மஞ்சத்தில் கொஞ்சலில், மச்சத்தைத் தொட்டு கேட்டாள்.

''ஓ இதுவா? இது, இதுவரை நான் விழுங்கி யிருக்கும் கசப்புகள் கண்டத்தில் தோய்ந்த கறுப்பு. இதென்ன நகம்போல் உன் நெற்றியில் வடு?''

''ஓ இதுவா? இது நான் சுருக்க எழல்லேன்னு அம்மா தோசைத் திருப்பியால் நெற்றியில் நெத்தின நெத்தல்.''

பழைய காயத்தின் புதிய நினைவேகம் மூச்சு தேம்பிற்று.

அவன் உதடுகள் வடுமேல் ஒற்றின. அவளுக்குப் புல்லரித்தது. அவனைத் தழுவிக்கொண்டாள். அவனுக்கு மூச்சுத் திணறிற்று. அவள் விழிகள் ஒளி வீசின.

''காஞ்சியில் மாவடி சேர்வை நீங்கள் கண்டதுண்டோ?''

இல்லையென்ற பாவனையில் தலையை ஆட்டினான்.

''காஞ்சி ஸ்தல ஐதீகமே அதுதான்!''

''எது?''

''இது—''

அவள் தழுவலில் அவன் எலும்புகள் கழன்றன.

விளக்கில் சுடர் முறுக்கியது.

மேஜைமீது தட்டில், ஆப்பிள் முகம் சிவந்தது.

திராக்ஷை கொத்தாய் விழி பிதுங்கிற்று.

தும்பியின் சிறகுபோல் அவர்களிடையே திரைமடுத்த வெட்கம் பிய்ந்து, ரேக்குகள் அவர்களைச் சூழ்ந்து, மிதந்து மிளிர்ந்தன.

''ஏகா, இதென்ன பேர்? ஆண்பிள்ளை மாதிரி!''

''நானே ஆண்பிள்ளை மாதிரிதானேயிருக்கேன்!''

ஏகா தன் தோள்களை வெற்றியுடன் பார்த்துக் கொண்டாள்.

"அம்மாவுக்கு என்னிடம் ஒரே பல்லவிதான்: 'ஏகா, நீ பொம்மனாட்டீடீ, தலைகுனி! தலைகுனி!'

எரிச்சலாய் வரும்.

சிரிப்புந்நான் வரும்.

—நம் கல்யாணத்தில் நீங்கள் கவனித்தேளோ இல்லையோ? தோழிப் பெண்போல் அம்மா என் பின்னாலேயே நின்றுகொண்டு, ஜடைபில்லையை சரிபண்ணுகிற மாதிரி என் தலையை அழுத்திண்டிருந்தாள். 'தலைகுனி! தலைகுனி!!"

—'பெண்ணாய்ப் பிறந்துட்டையேடி, நம் ஜன்மம் வாழ்நாள் முழுக்கத் தலைகுனிஞ்சாகணும்டி!'

'ஆமா, இந்த வீட்டில் பெண்ணைத் தவிர என்ன பிறக்கறது?'ன்னுட்டேன் ஒரு தடவை. பளார்! வாய்மேலேயே புறங்கையாலடி. ரத்தம் பீறிட்டிண்டது. அம்மாவுக்கும் எனக்கும் என்னிக்குமே 'லடாய்'தான். மாற்றாந்தாய் தோற்றாள். மனம் திறந்து சொல்றேன் எனக்கே மனசுலே வெச்சுக்கத் தெரியாது. அத்தோடு நான் சங்கல்பமே பண்ணிண்டிருக்கேன்— எனக்குக் கணவனாய் வருபவரிடம், தப்போ சரியோ எதையும் மறைப்பதில்லே. மனம் திறந்து சொல்றேன்: நீங்கள் எனக்கு வாய்ச்சது என் பூர்வ ஜன்ம புண்யம்—என்ன உதட்டைப் பிதுக்கறேள், கேலியா? இல்லை, சத்யமா—"

"உஷ்!" அவள் வாயைப் பொத்தினான். வானம் பசித்தாற் போன்று அதன் விளிம்பில் ஒரு இடி உருண்டது. அவனுக்கு அச்சமாயிருந்தது.

என்ன இந்தப் பெண் அனாயாசமாய்ச் சத்தியம் வைக்கிறது! அவன் உள்ளங்கைக்கீழ் அவள் உதடுகள் துடித்தன.

உதடுகள் அல்ல.

இதயம்தானோ?

"என்னையேற்க என்னிடம் என்ன கண்டேளோ அறியேன். ஆனால் கேட்கமாட்டேன்."

"ஏன்?"

"தெரிஞ்சுக்கப் பயம்."

"என்ன பயம்?"

"நான் சொல்லிக் கொடுத்து என் சந்தேகம் உங்களுக்கே வந்துவிட்டால்? அதனால் நீங்களே மாறிவிட்டால்?"

தூலத்தில் பல்லி "டக் டக்"கென்றது.

அவள் காட்டிய பயம் அவனைக் கவ்வுகையில், சுடர் காட்டும் நிழலில் அவன் கழுத்து மறு இன்னும் கறுத்தது. அவளை அணைத்துக் கொண்டான். கை நிறைந்திருக்கிறாள். இந் நிறைவே தான், கள்ளம் கபடமற்ற இந்த நெஞ்சு வெளிதான், என்னையு மறியாமல், இவளை வரிக்க என்னை இயக்கிற்றோ?

பெண் பார்க்கப் போனவிடத்தில் என்பிள்ளைக்கு ஏன் இப்படி வாயடைச்சுப் போச்சோ தெரியல்லியே! கொண்டு வந்து வெச்ச சொஜ்ஜி பஜ்ஜியிலேயே ஏதாவது வெச்சுட்டாளா? ஒரு பாட்டா, குரலா, படிப்பா, பிடிலா ஒண்ணு உண்டா? தோல் வழுக்கிட்டுதுன்னு சொல்லக்கூட வழியில்லையே, நம் வாசல் கூட்டி சின்னம்மாவே இன்னும்

நிறம். இல்லை, இவன் கண்ணிலே பழியா? என்னதான் வேளைமேல் பழி போட்டாலும் இப்படி ஒரு கண்கட்டு வித்தை—இதென்னடியம்மா எல்லாம் அசுர மாயையா இருக்கே? வருஷம் எட்டானாலும் (அட, எட்டும் ஆயிடுத்தே! ஆகட்டுமே!) மறக்கமாட்டேன். துரை யாட்டம் என் பிள்ளை, கோட்டையும் சூட்டையும் மாட்டிண்டு, மோட்டார் வண்டியில்லாமல் கோவிலி லிருந்து கால் நடையா நடந்து வந்த மாப்பிள்ளைக் கோலத்தை! காந்தவிளக்குக்குச் சொல்லித்தான் வெச்சேன் சம்பந்தியம்மா, ஆனால் விளக்குத் திரி ஊரிலேயே இல்லேயே!' ஏன், படுபாவி திரிக்காரன் பத்தியெரிஞ்சு போயிட்டானா? நடக்கிறது கலியாணம்னு தெரிய 'பீப்பீ'ன்னு வெச்சானே பிராம்மணன், அந்த மட்டுக்கும் திரியோடு அம்பட்டனும் காணாமல் போகாமல் இருந்தானே! ஏகா, ஒண்ணு நான் ஒப்புண்டுதான் ஆகணும். உங்கப்பாவின் கெட்டிக்காரக் கெட்டித் தனத்துக்கு அவர் ஒரு யுக புருஷன்தான்! உலகத்துக்கொரு மனுஷன். அவர் வெச்ச பேரும் அவர் மாதிரியே—ஏகாவாம் ஏகா!''

''ஏகா, இதென்ன பேர், ஆண்பிள்ளை மாதிரி!''

''ஓ அதுவா? அம்மா என்னை உண்டா யிருந்தப்போ அப்பாவுக்குக் காஞ்சிபுரத்துக்கு மாற்றலாகி இருந்தது. கழுதையானாலும் காஞ்சியில் பிறக்கணுமாமே? நான் காஞ்சியில் பிறந்தவள்—உங்களுக்குத் திரட்டுப்பால் பிடிக் காதா? அப்படியே வெச்சுட்டேளே, நான் தின்னூட்டமா?''

எடுத்துக்கோயேன் என்னைக் கேக்கணுமா?''
காஞ்சியில் பிறந்தாய்; பிறகு?''

''ஓ அதுவா?'' ஏகா வாய் நிறையத் திணித்துக் கொண்டு வார்த்தைகள் கமமின. ''அம்மா என்னை உண்டாயிருந்தப்போ, இந்தத் தடவை பிள்ளைதான்னு அப்பாவும் அம்மாவும் நிச்சயம் பண்ணிண்டுட்டா. 'ஏகாம்பரம்'னு பேரையும் தீர்மானம் பண்ணியாச்சு. அமாவாசைக்கு மூணு நாளில் நடுநிசி. குழந்தை விழுந்து வீறிட்டதும், கூரையிலிருந்து காரை உதிர்ந்ததாம் என் பாட்டி சொல் இது.

'என்னது? என்னது?'

அப்பா திண்ணையிலிருந்து ஓடி வந்தார்.

'ஏண்டா குடல் தெறிக்கறதே? லங்கிணி பெத்தது லங்கிணியேதான்' என்று பாட்டி என்னை ஏந்திவந்து காட்டினதும், அப்பா முகத்தைப் பாட்டி சொல்லிக் காட்டும் ஒவ்வொரு தரமும் அப்பா உள்பட, அம்மா தவிர, நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிப்போம்.

''ஆனால் அப்பா: 'நான் நினைத்தது நினைத்தபடி நடக்காவிட்டாலும் நான் சொன்னது சொன்னதுதான்; என் சொல் வீணாகக் கூடாது' என்று எனக்கு ஏகாம்பரி என்றே பேரை வெச்சுட்டார். ஆண் ஆண் என்று எண்ணி எண்ணி ஆண் போலவே வாளிப்பாய் தலை நிமிர்ந்து ஒரு பெண். அம்மா சொன்னால் தலை குனிந்துவிடுமா?

''நான் பெண்ணாய்ப் பிறந்ததை அம்மா வால் மன்னிக்க முடியவில்லை என்றே நினைக் கிறேன்... 'தலை குனி' 'தலை குனி' யென்று அவள் என் முகத்தைத்தான் மெறித்துக்கொண்டிருந்

தாள். ஆனால் என் நல்ல காலம், என் கழுத்தில் சரட்டைக் கட்டி உங்கள் சொத்தை இழுத்துக் கொண்டு வந்துவிட்டீர்கள்!''

சரடில் தொங்கிய தாலியைச் சட்டெனக் கையில் தாங்கி அவள் முத்தமிட்டுக்கொள்கையில், அவனுக்குத் தலை 'கிர்'ரிட்டது. பயமாய்க் கூட இருந்தது.

இதுவரை இவள் யாரோ நான் யாரோ?

என்னை ஏன் நெருப்பா யெரிக்கிறாள்?

இவள் இப்படி என்னை எரிக்கலாமோ?

இவள் இப்படி இருக்கலாமோ?

''என் குற்றங்கள் எத்தனையோ. ஆனால் இனி எனக்குக் கவலையில்லை அத்தனையும் இனி உங்களுடையதே!''

''அப்படியென்ன உன் குற்றங்கள்?''

அவனுள் பீதி சலசலத்தது. இவள் பேச்சே பூதமாயிருக்கிறதே!

''எவ்வளவோ, என்ன இல்லை?

அமரிக்கையில்லை.

தலைநிமிர்ந்து இருக்கிறேன்.

வாயாடி!

பெருங்குரல்!

விடிந்து வெய்யிலடிக்கும் வரை தூங்குகிறேன். தூங்கினால் கட்டைமாதிரி ஆகிவிடுகிறேன். புகுந்த வீட்டில் என் தூக்கம் எவ்வளவு பொல்லாது என்று எனக்கே தெரியும். அதனால் நான் உங்களைக் கோரும் முதல் வரம் நீங்கள் தான் தினம் என்னை எழுப்பணும்!''

''ஏகா, நீ வந்து வருஷம் எட்டாச்சு. நீ படி மிதிச்ச வேளைக்குக் குத்தமில்லாதபடி, இதுவரை ஆகிற செலவு எப்படியெப்படியோ இருந்தாலும் அரிசிப் பானையி லிருந்து அள்ளி எடுக்கும்படித்தான் இருக்கு. சுரண்டல்லே! அப்படி யிப்படி நீயும் அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை. உன் உடம்போடு பிறந்து, பேச்சில் ஒரு படபடப்புத் தவிர, நெஞ்சில் தோணினதையெல்லாம் கொட்டறதில்லை. பூட்டிவைக்க வேண்டியதுமிருக்குன்னு தெரியாமல் இருக் கையே. அதுதவிர, இதைப் பெரிசு பண்ணிக்கறவா பண்ணிப்பா; ஆனால் நான் பண்ணிக்கல்லே. பண்ணிண்டு என்ன பண்றது?, கோவிச்சுண்டு போறத் துக்கு இன்னொரு பிள்ளையிருக்கானா? குடும்ப சக்திக்கு மீறி, தர்ம சிந்தனையும் நெஞ்சிளக்கமும் உனக்கு இருக்கு. நான் கவளத்தை வாயில் போட்டுக்கு முன்னாலேயே, பிச்சைக்காரனுக்குப் படியளந்தாயிடறது. ஆசாரத்துக்கும் உனக்கும் துருவ தூரம். ஒருவேளை சோறு. அதை ஜாதி மாறாமல் சாப்பிட எவ்வளவோ பிரயத்னம் செய்யறேன். ஆனால் அந்த சாதத்தை வடிச்சு இறக்கறத்துக்குள் ஒரு தரமாவது பக்கத்து வீட்டு நாயுடுக் குழந்தையைக் கையில் வாங்கிக் கொஞ்சாவிட்டால் உனக்கு மண்டை வெடிச் சுடறது. இத்தனையும் போகட்டும், நான் கேள்வியாத் தான் கேட்கிறேன். குத்தமாக் கூறல்லே—ஆமா, உன் வயிறு ஏன் இப்படிக் கல்லாயிருக்கு?''

கல்லா? ஏகா தன் அடி வயிறைத் தடவிப் பார்த்துக் கொண்டாள் இலையிலே எழுதின தளிவடாம் மாதிரி முதுகோடு ஒட்டின்னா கிடக்கு! மாடுதீனி தின்கிறேன், எனக்கே தெரியறது. ஆனால் என் பாம்புக் குடலுக்கு என்ன பண்ணுவேன்?

''எனக்கு ஏதும் வேண்டாம். காலமிருக்கிற இருப் புக்கு, என் ஒற்றைப்பிள்ளை கைக் கொள்ளியை வாங்

கிண்டு, நான் மணத்தோடு போய்ச் சேர்ந்தால் போதாதா? என்னையே விட்டுவிடு, எனக்காக இல்லேடீ, உனக்காகவே கேட்கிறேன்—உன் வயிறு ஏன் இப்படிக் கல்லாயிருக்கு?''

ஏகா விழிப்பாள். ''என்ன அம்மா சொல்றேள்?''

பொங்க வழியற்று, தளைக்கும் கொதிப்பில் வேத மூர்த்தி சுண்டுவான் இந்த அம்மாவால் சும்மா இருக்கவே முடியாதா? தன் கள்ள எடையை மறைக்கத் தராசு முள்ளைச் சதா சுண்டிக்கொண்டிருக்கும் எடைக் கள்ளன் மாதிரி...!

ஏகாமேல் எரிச்சலாய் வரும். தலையில் அடித்துக் கொள்வான். காரணமில்லாமல் கரடியாய்க் கத்தறதே, இந்தச் சமயம் கோபமாய்க்கூடப் பதிலுக்கு ஒரு வார்த்தைக்கு வழியைக் காணோம்! முதலில் புரிந்தால்தானே! ''மக்கு! மக்கு!''

''மக்காயிருந்தால் இருந்துட்டுப் போறேன் போங்கோ!''

''உன்னைச் சொல்லிக் குற்றமில்லே. மக்குகள் பங்கில் தானே கடவுள் இருக்கிறான்.''

''அதுவும் நியாயந்தானே! மக்காயிருந்து எனக்கென்ன குறைஞ்சு போச்சாம்! நீங்கள் எனக்குக் கிடைச்சிருக்கேளே அது ஒண்ணு போதாதா?''

நீட்டிய அவள் கைக்கு எட்டாது வேதா உடலை நெளித்துக்கொள்வான்.

''நமக்குக் கலியாணம் நேற்று நடக்கவில்லை ஏகா, வருஷம் எட்டு! ஞாபகமிருக்கட்டும்.''

அவள் பழியாய்த் தன்னிடத்திலிருந்து எழுந்து வந்து அவனை அணைத்தாள்.

"எட்டென்ன, எண்பது ஆகட்டுமே! வேளைக்கும் காலத்துக்கும் ஏன் முடிச்சுப் போடறேள்? வேளை கலையாமல் இருந்தால், காலம் என்ன கடந்தும் என்ன செய்ய முடியும்?"

அவன் அவளை வியப்புடன் உற்று நோக்கினான். "ஏகா, ஏதேது! நீயா பேசறே?"

அவளுக்கு வார்த்தை தடைப்பட்டு ஊமையானாள்... முகம் மாறிற்று.

இது எது? நானா?

"எண்பதாம், ஆசையைப் பாரு! டேயப்பா! நான் எண்பது காணப்போறேனாக்கும்! இந்தக் குடும்பத்திலேயே ஆண்களுக்கு ஆயுசு கட்டை."

அவள் வாயைப் பொத்தினாள். பொலபொலவென அவன்மேல் மலர்த் தளிர்கள் உதிர்ந்தன.

"விடு, விடு! ஏகா, மூச்சடைக்கிறது!"

அவள் வெறி அவனுக்குப் பயமாயிருந்தது. அவன் சுபாவம் உணர்ச்சிக்கு இலக்காகக் கூசிற்று. இத்தனை நாளாகியுமா, இவள் இப்படி—? இவள்மேல் எனக்கு இன்னும் இந்த வேகமிருக்கிறதோ?

பார்த்த முகமே பார்த்து, கேட்ட குரலே கேட்டு, குரலானே குரலே!

[எதிர்வீட்டில் ஒண்ணு புதுசா வந்திருக்கே, அது என்ன இங்கேயே இருக்கப்போகிறதா?

படிக்கிறதா, உத்தியோகம் பண்ணுகிறதா? பத்து நாளாய்க் கவனிக்கிறேன். நான் கிளம்பும் வேளைக்குக் காத்திருந்து என்னோடு படி இறங்கி, நான் ஏறும் வண்டியிலேயே ஏறுகிறது! நான் பின்தங்கினால் தானும் பின் தங்கறது. எனக்கு முன் 'ஸ்டாப்'பில் இறங்கறது. வண்டு

வட்டம்மாதிரி விழி மருட்சி. ஒரு சமயம்போல் இல்லை. நான் தலையை அசைத்தால் போதும், புறா மடியில் விழுந்துவிடும்—]

"என்ன வாயடைச்சுப் போச்சு?"

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"என்ன முழிக்கிறேள்?"

அவன் முகம் வெளிறிட்டது. "ஒன்றுமில்லையே, என்ன செய்தேன்?"

அவன் காதைத் திருகினாள். "நீங்கள் என்ன செய் தாலும் என்னைத் தப்ப முடியாது."

முதுகுத்தண்டில் பாம்பு நெளிந்தது.

ஏகா உண்மையில் மக்கோ? எல்லாம் தெரிந்த பாஷை யில் இப்படிப் பேசுகிறாளே!

அல்ல, மண்டையோட்டினுள் மின்னலா?

எப்படியிருந்தாலென்ன? விடிந்ததுகூடத் தெரியாமல் இந்தக் கரடித் தூக்கம் தூங்கும்வரை ஏகா மக்கு மக்கு தான்.

நல்ல பெண்,

மக்குப் பெண்!

"ஏகா! எழுந்திரேண்டி!"

"ஏ—கா!"

"கா—கா"

காகங்கள் கேலி செய்தன.

அன்றும் என்றும்போல்தான் பொழுது விடிந்தது. வழக்கமாய் ஏகாவுக்கு எப்படி விடியுமோ அப்படி. இல்லை நேரம் கூடவே.

ஏகா முனகி யெழுந்து உட்கார்ந்து கண்ணைக் கசக்கினாள்.

"நான் தூங்கவேயில்லை."

"பேஷ்! சொன்னயே, இதுதான் சிகரம்!"

"நிஜம்மா! எனக்குத் தூங்கின மாதிரியேயில்லை. என் கண்ணைப் பாருங்கள்."

மிளகாயை வைத்து இழைத்தாற்போல் கண்கள் ஜெவ ஜெவென எரிந்தன.

"கன்னாபின்னான்னு என்னவோ கனா. எங்கேயோ கோவில் மணியோசை கேட்கிறாப்போல, கூடவே அழு குரலும் இழையறாப்போல, நீங்கள் ஏதேனும் தூக்கத்தில் அழுதேளா?"

"நானா? எதுக்கு, உன்னைக் கட்டிக்கொண்டதற்கா?"

"தெரியாது."

"அழுதால் விடுதலை தந்துவிடுவையா?"

[மாலை வேளை கடலோரம் விளக்குகள் ஏற்றிக் கொள்வதுபோல் என்ன விழி ஜாலக்! கழுத்தில் சரடு காணோம். கட்டவேயில்லையோ, கழற்றிவிட்டாளோ! ஒருநாள் ஒரே அலங்காரம்—பந்துப் பூ, கழுத்து நிறைய சரம் சரமா, கை நிறைய அடுக்கடுக்காய், அயனும் பகட்டும் தெரியாமல் தடபுடல். மறுநாள் நெற்றித் திலகம்கூட இல்லை. மொழு மொழுவென்று அந்த வெறிச்சில்கூட ஒரு பாணி, ஒரு கவர்ச்சி, ஒரு அழைப்பு இல்லை? ஏய், நேற்று நீ இறங்கிப்போகையில் உன் முதுகின் வாய்க்காலில் உன் ரவிக்கையின் பிடிப்பை நான் கண்டு கலங்கணும்னுதானே, முதுகைக் காட்டித் தோளில் தலைப்பை சரிய விட்டுக்கொண்டு போனே, எனக்குத் தெரியாதோ?]

"என்ன சொல்றேள்? புரியும்படித்தான் சொல்லுங்களேன்!"

"உன்னை எழுப்பி எழுப்பி இப்பத்தான் அழுகை வருகிறது."

ஏகா எழுந்து ஜன்னலண்டை போய் நின்றாள்.

"வானம் இருண்டிருக்கு "

"இந்தமட்டுக்கும் எழுந்தையோன்னா, அதான்!"?

"எனக்கு இரண்டு கண்ணும் துடிக்கிறது."

"பஞ்சாங்கத்தில் ஒரு சமயம் ஒரு sideக்குத்தான் பலன் போட்டிருக்கிறது இந்தக் கேஸில் நல்லதும் பொல்லாதும் ஒன்றுக்கொன்று ரத்து. Draw."

"இல்லை, இரண்டுமேவா?"

அவனுக்குத் திக்கென்றது; எழுந்து உட்கார்ந்தான். நல்லதுடன் சேர்ந்துகூடக் கெடுதலை ஏற்க அவன் தயாராயில்லை.

"என்ன சொல்கிறாய்?" அவன் குரல் சற்றுத் தடித்தே ஒலித்தது.

"எனக்கே தெரிந்தால்தானே?"

"மக்கு! மக்கு!!" திரும்பிப் படுத்துக்கொண்டான். ஏகா கீழே இறங்கினாள்.

அதிசயத்திலும் அதிசயம் அம்மா இன்னும் ஊஞ்சலில் காலை நீட்டி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். லேசாய்க் குறட்டைகூட.

கிணற்றடிக்குச் சென்று அவசரமாய்ப் பல் விளக்கினாள். நாக்கு வழிக்கையில் நாக்கில் தேன் தித்தித்தது. இவ்வளவு பித்தமா? இன்று எனக்கு உடம்பு வசத்தில்தான் இல்லை. நான் இதுவரை உடம்பு என்று படுத்தறியேன்.

படுத்தால் எப்படியிருக்குமோ? இன்றைக்கென்று வேலை தலைக்குமேல் நிற்கிறது. ஏதோ கல்யாணம் என்று வேலைக்காரி நேற்றே பாக்கு வெச்சுட்டா. அவர் அழுக்கு மண்டிக்கிடக்கு. வண்ணான்துறை திறந்தாகணும். ஆடி வெள்ளிக்கிழமை வேறே, மாவிளக்கோடு கொழுக் கட்டையாம். திகைப்பாயிருக்கு. இதுவரை காரியத்தைக் கணக்குப் பண்ணத் தோணியதேயில்லை. வலதுகண் அதிகமாய்ப் படபடக்கிறதோ? என்ன காத்திண்டிருக்கோ தெரியவில்லையே?

முகத்தை அலம்பியும் தூக்க மயக்கம் தெளியவில்லை. தூக்கம்கூட இல்லை. ஒரு தினுசான அழுத்தல்; அதே சமயத்தில் கால் பூமியில் பதியாதொரு மிதப்பு. குஞ்சு, தான் பொரியுந்தருணம் தன்மேல் உணரும் முட்டை ஓட்டின் நெருக்கம். சீட்டின் கலைப்பு. கிணற்றில் தாம்பில் தோண்டி தொங்கும் அந்தரம்.

எங்கு இருக்கிறோம், போகிறோம்?

உடல் தள்ளிற்று.

கும்மட்டியில் கறுப்புப் பூனைக்குட்டி படுத்திருக்கா? ''சூ—!'' சே, கரிக்கட்டிதான். நேற்றே போட்டு வெச்சது—போட்டு வெச்சேனா? போட்டு வெச்ச ஞாபகமில்லையே! என்னவோ—அதென்ன கரியின் கறுப்பு உயிரோடு மூச்சு விடறமாதிரி அப்படியிருக்கு?

(ஈரம் படாதிருக்க) தகர டப்பியிலிருந்து தீப் பெட்டியை

எடுத்து—

திறந்து

கிழிக்க—

ஓங்கி—

சுடர் சீறிக் குதித்தது.

கிழித்தேனோ?
இப்போது சீறினது
என் மண்டையா?
வத்தியின் மருந்துத் தலையா?

எப்படி நான் நெருப்பு வைக்காமலே கும்மட்டி பற்றிக் கொண்டது? சீ! இதென்ன பித்துக்கொள்ளித்தனம்? பற்ற வைக்காமலே பற்றிக்கொள்ளுமா? நான் என்ன, தூக்கத்திலேயே வேலை செய்கிறேனோ? அப்படி ஒரு கோளாறு இருக்காமே!''

—ஒவ்வொருநாளும் ஒவ்வொரு தடவையும் இவ்வளவு கணக்குப் பண்ணியா காரியங்கள் செய்கிறோம்? செய்தால் இவ்வளவு காரியங்களா கணக்காகின்றன? டேயம்மாடி? இப்படிக் கணக்கானால், இந்தக் கணக்கு எல்லை யுண்டோ? எல்லைப் படுத்தத்தானே கணக்கே ஏற் பட்டிருக்கிறது! எல்லையில்லாதுக்கும் எல்லை நாட்டும் கணக்கு.

ஒன்றின்மேல் ஒன்று
அடுக்கடுக்காய்
ஒன்பது
தொண்ணூறு
தொள்ளாயிரம்
90 ஆயிரம்
90,000000

000000000000000000000000000 ஏற்றிக் கோட்டை கட்டி அடுக்க அடுக்க, பாரம் ஏறி, கட்டிடம் தலையாட, அப்பவும் விடாது இன்னும் ஒன்று இன்னும் ஒன்று என்று பாரம் ஏற ஏற

மூச்சுப்பட்ட சாக்கில்—

இல்லை, மூச்சுக்கூடப் படாமலே

கட்டிடம் அடியோடு [அடிவயிற்றில் 'சில் சுறீல்'] கவிழ்ந்தமாதிரி—

கும்மட்டியுள் உற்று நோக்கினாள். கணகணப்பில் முகம் செந்திட்டிட்டது. கும்மட்டியிலிருந்து தீ நாக்குகள் எழுந்து நாய் நாக்குகள்போல் தாவித் தாவி அவள் முகத்தை நக்க முயன்றன. அவைகளுள் ஒரு கொழுந்து மற்றவையினும் சிற்றதாலோ, வேகமும் வெற்றியும் கொண்டதாலோ, குருவிபோல் தோளில் தொத்திக் கொண்டது.

அவள் போதை இன்னும் தெளியவில்லை. தன் தோள் மேல் குந்திய தழல்பந்தை வியப்புடன் நோக்கினாள். 'கிர்' ரென்று அவள் உச்சிக்கேறி, அங்கிருந்து பின் மண்டைக்குச் சறுகி, ப்ரபையாய்ச் சுழித்து விரிந்து மலர்ந்தது.

"வே—வே—வேதா!"

அம்மா போட்ட கத்தலில் கூடம் கிடுகிடுத்தது. காலடியில் பூமி அதிர்ந்தது. அந்த அதிர்ச்சிதான் அவளைச் சுயஉணர்விற்குத் தெளிவித்தது. திடீரென ஆயிரம் ஆலய மணிகள் செவியில் அலறின. கோபுரம் ஒன்று சினத்துச் சாய்ந்து உள் கேவி, அவள்மேல் சரிந்து, அதன் தங்கக் கலசம் மாத்திரம். உள்பெருக்கின் அலைச் சிகரம் உடைந்த நுரைச்சரிவில், மல்லாந்த பம்பரம் போன்று சுழன்று தலையாடித் திளைத்தது. மூடிய இமையில், வாயிலுள் வாயில் எண்ணற்ற வாயில்கள் திறந்துகொண்டே, உள் கடந்துகொண்டே சென்றன.

கும்மட்டிமேல் தடாலென முகம் குப்புற விழுந்து விட்டாள்.

"..........!"

என்னை என் அமைதியில் அழைத்தது யார்?

"........"

"ஏகா!"

அவள் இமைகள் திறவாது தவித்தன. அவன் கையுள் அவள் விரல்கள் மூழ்கும் பிடியில் கொக்கிபோல் வளைந்து விறைத்தன. கன்னங்களில் ரத்தம் புழுங்கிற்று.

"கண்ணைத் திற!"

"என்னால் முழிக்க முடியவில்லை..."

"இல்லை ஏகா, கண்ணைத் திற; முடியும். உன் கண் நெருப்புப் படவில்லை. ஏகா, நீ கும்மட்டியில் விழுந்தும், மருந்துக்குக்கூட சூடு இல்லை. அதிசயத்தை என்னென்று சொல்ல?"

"நான் என்னுள் என் நெருப்பில் எரிந்து கொண்டிருக்கிறேன்."

அவள் குரல மாறிற்று. த்வனியில் அதிகாரம்.

"கண்ணைத் திறவாமல், நீ என்னவோ பேசுவது எங்கிருந்தோ யாரோ பேசுவதுபோல் இருக்கிறது."

"ஆம், என்னையே எனக்கு அழித்துவிட்ட தூய இருளில் நான் இழைந்துபோனேன். நான் எனக்கே அற்றுப்போன இக்கலவையின் பன்மணத்தில் நானும் ஒரு மணம்."

சொல் அவள் வாயினின்று எழுகையிலேயே அவளிடமிருந்து 'கம்'மென்று சந்தனம் கமழ்ந்தது.

"என்னடா சொல்றா? என்னவோ மாதிரி பேசறாளேடா?"

''நான் பாஷையில் தோய்ந்துபோனேன். வாயின் வரம்பு தோற்ற மோனத்தில் தித்தித்த சொல்லில் தோய்ந்துபோனேன்.''

''ஏகா! ஏகா!!' அவனைப் பீதி பற்றிக்கொண்டது. அவள் தோளைப் பிடித்து உலுக்கினான்.

''கண் திறந்தால் ஒளி

மூடினால் இருள்

மூடியும் திறந்தும் உழன்றால் உயிர்

என நானே எனக்குப் பெயர் வைத்துக்கொண்டு செயல் வகுத்த நிலை முந்திய கர்ப்ப வெளியில் நானற்று நிறைந் திருக்கிறேன்.''

''ஏகா! '

''நான் ஏகம்.''

''My God!''

''நான் உன் தெய்வமல்ல. உன் தெய்வம், என் தெய்வம், நான், தான், எனக்கென்று அவரவர்க்கு அவ ரவர் தெய்வமாய், எத்தெய்வமும் அடியூன்றிய ஆகாச கோசம் நான்.''

''ஏகா, என்னென்னவோ பேசாதே. கண்ணைத் திற.''

''என்னை ஏகத்திலிருந்து பிரிக்க என் இமைகளைப் பிரி. என்னால் கண் திறக்க முடியவில்லை. நான் ஏகமான பின்பு, நானாய்த் தனிப்பட முடியவில்லை.''

அவனைப் பயங்கரம் சூழ்ந்தது. இவை இமைகள் அல்ல. இவை அடைத்த கதவுகள். உள்ளே ஏகா மாட்டிக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு என்ன நேர்ந்து கொண் டிருக்கிறதோ?

அடைத்த கதவையிடிப்பதுபோல், இமைகளைப் பல வந்தமாய்ப் பிரித்தான்.

அவை சுளுவாவே பிரிந்தன. வீணா பயமுறுத்தினாளே என்று அவள்மேல் கோபம்கூட வந்தது. இமைகள் முழுக்கத் திறந்ததும், வேதா அலறினான்.

கண்களில் வெள்ளை விழி வெறிச்சிட்டிருந்தது; கரு விழி காணோம்.

''விழிமேல் மெதுவாய் ஊது. புருவ நடுவை அமிழ்த்தி வருடு—ஆ, அப்படித்தான்!''

''அம்மாடி! ஏகா ஒரு நிமிஷத்தில் கெடுபிடி பண்ணி விட்டையே!''

அவள் கண்களில் ஆயிரம் அடையாளங்கள் தவித்தன. அவனுக்குத் திடீரென்று அர்த்தமற்ற விபரீதமான சந்தேகம், குளத்தில் காலைக் குத்தும் மீன்போல், நினைவைப் பிராண்டிற்று.

இது ஏகாதானா? எப்படியென்று தெரியாமலே, கணத்திற்கும் யுகத்திற்கும் இடைவேளையைக் கால் வாரி விட்டாற்போல்—இது யார்?

அவன் கண்கள் அவள் முகத்தாடும் நிழல்களைத் தொடர்ந்தன. அவள் பார்வை கும்மட்டியைச் சிந்தித்திருந்தது. கண்களைக் கசக்கிக்கொண்டான். இந்த அனல் நிறமே நெருப்பு மாதிரியில்லை. ஆனால் எப்படி மாறியிருந்தது என்று சொல்லத் தெரியவில்லை. இது என்னைச் சுடும், இவளைச் சுடாது! இதென்ன விந்தை? என்ன பிதற்றல்!

''இதை நான் பற்றவைக்கவில்லை'' என்றாள். ''இது தானே பறறிக்கொண்ட நெருப்பு. என் உடலிலிருந்து வந்த நெருப்பு.''

அவனுக்கு வாயடைத்து விட்டது.

''நான் எரிந்துகொண்டேயிருக்கிறேன்.''

அப்படிச் சொல்கையிலேயே, திடீரெனத் தகதகத்தாள். அவனுக்குக் கண்கள் கூசின. அவன்மேல் அனல் வீசிற்று.

''இதோ இது என் ப்ரளயம்!'' ஜன்னலுக்கு வெளியே சுட்டிய அவள் விரல் நுனிகளினின்று மின்னல்கள் நீலத்தில் திகுதிகுத்தன. அக்கணமே தாழ்வாரத்தில் மழை இறங்கிற்று. நிமிடத்தில் முற்றம் வழிந்து சொம்பும் தவலையும், முதலிரவு தேய்க்கப் போட்ட பற்றுப் பாத்திரங்களும் தெப்பலாடின.

''நான் என்னுள் புரண்டேன்.''

அவன் கீழ் பூமியதிர்ந்தது.

திடீரென்று அவள் எறிந்த பெருமூச்சினின்று எழுந்த காற்றின் வேகத்தில் ஜன்னல் கதவுகள் இறக்கை யடித்துக் கொண்டன. கொல்லையில் தென்னை முறிந்தது செவிக்கு எட்டிற்று.

''உன் புயல்'' என்றான்.

அவள் விழிகளில் கண்ட பயம் தன்னையும் தொற்றிக் கொண்டதும் மாடாய் மிரண்டான். அவள் கன்னத்தில் அவன் அறைந்த அறை, கூடம் அதிர்ந்தது.

''என்னடா?''

அவன் முகம் திரும்பிற்று. யாரோ, ஏதோ மறந்த முகத்தை அடையாளம் கூட்டுவது போன்ற திகைப்பில் கண் புழுங்கிற்று. அம்மா இங்கே இருக்கிறாளா என்ன? என் கட்டிடம் ஏன் இப்படிக் கிடுகிடுத்துப் போச்சு?

ஏகாவுக்கு உடல் ஆடிற்று. அவன் அவளைத் தாங்கி, அவள் தலையைத் தாழ்த்தி, மடியில் வைத்துக்கொண்டான். அவன் விழி பெருகிற்று.

''அம்மா, டாக்டரை அழைத்து வா!''

''ஏகா!''

செவி தூரத்தில் அவள் இப்போது இல்லை.

வெளிப்புலன் எதன் அருகிலும் அவள் இப்போது இல்லை.

தூரங்களை, தூரங்களின் எல்லைகளை அவள் இப்போது கடந்துகொண்டிருந்தாள்.

''——!''

''இப்போது அழைத்தது யார்?''

பேரிட்டு அழைக்கவில்லை. குரல்கூடக் கொடுக்கவில்லை.

எழுச்சி எண்ணமாகி, எண்ணம் வார்த்தைப் படும் இடைவேளையின் தடங்கள்கூட இலாது, தடங்கலின் சிதைவிலாது தோன்றியது தோன்றியபடி தோன்றிய தருணமே தனக்கும் தன்னையழைத்ததற்கு மிடையே பாய்ந்து முறுக்கிய தந்தியே பாஷையாய்—

—தன்னை இப்போது அழைத்தது யார்?

''யாரது?''

அந்த முறுக்கின் உச்சத்தில் அவள் அலறல் அவளுக்கே கேட்கவில்லை.

''யாரது?''

திகில்.

திகிலின் அலைகள் மதில் மதிலாய் எழுந்து அவள் மேல் சரிந்தன.

திகிலின் சுழிப்பு தன் மையத்துள் அவளை உறிஞ்சுகையில், தன் முழுப் பலத்துடன் திமிறினாள்

''ஐயனாரே, கமலசாஸ்தா! என் புகுந்த வீட்டுக் குல தெய்வங்களா!! என்னைக் காப்பாற்றுங்கோ, காப் பாற்—''

—!

''யாரது?''

நான்தான்.

''நான்தான்னா யார்?''

மணிநாக்கு ஒன்று எங்கோ ஓசையில் துடித்து வீழ்ந்தது. தட்டிலாது சுடர் ஒன்று அஞ்சலியில் அவளை வட்டமிட்டு அந்தரத்தில் நீந்திற்று. கம்மென்று அகில் மணம் புகையின்றிக் கமழ்ந்தது.

''நீ யார்?''

புரியவில்லையா?

''புரியவில்லை. எனக்குப் புரிய வேண்டாம். என்னை எங்கு அழைத்து வந்திருக்கிறாய்' என்னிடத்தில் கொண்டு போய் விட்டுவிடு.''

ஏகா, உன்னை நான் அபகரிக்கவில்லை. நீ உன் னிடத்தில்தான் இருக்கிறாய். நான்தான் உன்னிடம் தேடி வந்திருக்கிறேன்.

''இல்லை, என்னை என்னிடத்தில் கொண்டுபோய் விட்டுவிடு.

ஏகா, முட்டையுடைந்து குஞ்சு பொரிந்தபின் உடைந்த முட்டையை என்னால் மறுபடி ஒட்ட வைக்க முடியாது.

ஏகா, நீ இருக்குமிடத்தில் இருந்து கொண்டே அந்தரம் புகுந்துவிட்டாய்.

''பாபி, உன் எண்ணத்துக்கு நான் மசியமாட்டேன்.''

ஏகா, மசிந்தவன் நானே.

"உன் எண்ணத்தில் நீ அழிஞ்சுபோயிடுவே. அழிஞ்சே போயிடுவே, ஆமா, சொல்லிட்டேன்."

ஏகா, நான் அழியும் பாக்கியம் எனக்கில்லையே!

அவ்வார்த்தையில் தோய்ந்த ஏக்கம், அதன் பிம்பம் எல்லையற்ற துக்கம் அவள் நெஞ்சு கேவிற்று.

"ஏன் அழியமாட்டாய்? நீ கடவுளா?"

கும்மட்டியில் ஜ்வாலைகள் சீறி எழுந்தன.

ஒன்றுடன் ஒன்று நெய்து ஒன்றிக் குவிந்தன.

"ஏன் வாயடைச்சுப் போச்சு? நீ கடவுளா?"

மனிதன் என்னைக் கடவுள் என்றதால் நான் கடந்தவனாகி விடமாட்டேன்.

"பின் நீ யார்?"

என்னைப்பற்றி என்னென்று சொல்ல?

நான் எண்ணங்களின் அஸ்து.

மனிதன் பிறக்கவும், பிறந்தபின் இறக்கவும் பயந்து, தனக்குத் துணை நிற்க, தன் எண்ணத்தை ஜபித்து, ஜபத்தில் எனக்கு உருவேற்றித்தான் அண்ணாந்த அந்தரத்தில் என்னை ஏற்றிவிட்டான். தன் மரண பயத்தில் எனக்கு நித்தியத்தைத் தந்தான். தன் பத்திரத்திற்கு அவன் நியமித்தபடி, எங்கும் நிறைந்து எல்லையற்று, அப்படியும் அவன் தப்ப முடியா அவன் குறைவின் வடிப்பாய், எங்கும் நிறைந்தும், எல்லை கடந்தும் என் தனிமையில், எனக்கென்று உரிய என் தன்மையில், உயிர்ப்பிண்டமாய் எப்பவும் துடித்தபடி இயங்குகிறேன். உன்னையடைந்ததில் என் விதியின் நிவர்த்தியை உணர்கிறேன்.

"என்ன உளறுகிறாய்? உன்னை நான் கண்ணால் கூடக் கண்டது இல்லை. இப்பக்கூட பயங்கொள்ளியாய்

என்னோடு ஒளிந்துதான் பேசுகிறாய். உன் மறைவிலிருந்து வர உனக்குத் தைரியமில்லை. பேச்சென்ன உனக்கு?''

நான் பேசவில்லை. விளங்குகிறேன். மனிதன் என்னை அரூபமாய்ப் படைத்து அதுவே என் தன்மையாகவும் ஆக்கிவிட்டான். ஏகா, நான் உன் ரூப அடைக்கலத்துள் வந்துவிட்டேன். ஏகா, உன்னில் என் அரூபம் அதன் சாபம் களைகிறது. ஏகா என்னைக் காப்பாற்று, என்னை உதறாதே, நீ தந்த இடத்தைப் பிடுங்கிக் கொள்ளாதே! ஏகா நீயே என் கதி ஏகத, ஏகா—!

அவள் நெஞ்சத் தந்திகள் அழுதன. இது அழுதால் நான் ஏன் அழறேன்? புரியாமல் அழுதுகொண்டே, ''என்மீது ஏன் வீணா அபவாதம் சுமத்துகிறாய்? உனக்கு எப்போ நான் இடம் தந்தேன்?'' என்றாள்.

உங்கள் பாஷையில் நேற்றிரவு.

''உன் பாஷையில் எப்படி நான் தந்த இடம் நேர்ந்தது?''

நேற்று இரவு, ஒரு பிச்சைக்காரன் உன் வாசலில் வந்து நின்றான். ஞாபகம் வந்ததா? அவன் மூணு நாள் பசியில் அவன் கண்ணுக்கு வந்துவிட்ட உசிரில் நான் இருந்தேன். நான் எங்கும் நிறைந்தவன். அப்போத்தான் நீ பானையில் இருந்ததை இலையில் கவிழ்த்துக்கொண்டு—சாதம் குறைஞ்சுபோச்சு. உனக்கே போதாது, நல்ல உடம்பின் நல்ல பசி—உட்கார்ந்தாய். பிச்சைக் குரல் கேட்டதும் அப்படியே இலையோடு ஏந்திவந்து அவன் மடியில் போட்டுவிட்டாய். உன் மாமியார்கூட உன்னை வைதாள்.

''இல்லேம்மா அவன் பசிக்க எனக்கு இரங்காது. அதனால் இது அவன் சோறுதான்; பாருங்கோ அவன் சாப்பிட்டால் என் பசியாறும்'' என்றாய்.

ஏகா நீ எனக்கு தரிசனம் ஆனாய். உன் தரிசனம் உனக்குத் தெரியாது. ஆனால் என் கண்கள் எண்ணற்றவை. என் பார்வை எல்லை கடந்தது. ஏகா, அவன் பசி உன் பசியாய் எப்போ நீ உன்னை மறந்தாயோ, உன்னை இழந்தாய். உன்னை இழந்ததும் உன் தகுதியில் எல்லையற்றுப் பெருகிப்போனாய். அதனாலேயே, உன் விதியாகவே என்னையேந்தப் பாத்திரமானாய். ஏகா, கோபுரத்தைப் பொம்மைதான் தாங்குகிறது.

ஏகா சரணம்
    சரணம் சரணம்
ஏகா சரணம்......
    நீயும் நானும் சேர்ந்தே ஏகம்
நீயிலாது நானில்லை
    நானில்லை...நானில்லை......நானில்லை......

**"ஏ**ன்னம்மா நானில்லே நானில்லே? எந்தத் தப்பை மறைக்கிறீங்க? மாமியாருக்குத் தெரியாமல் பால் ஏடை வழிச்சு முழுங்கிட்டீங்களா?—கொஞ்சம் திரும்பறீங்களா? முதுகைத் தட்டிப் பார்க்கலாம்!"

டாக்டர் குஷிப் பேர்வழி...சின்ன வயதுதான். ஆனால் குடும்ப டாக்டர்; தமாஷ் பண்ண அவருக்கு உரிமையுண்டு.

"என்னம்மா முளிக்கிறீங்க? உண்மையைச் சொல்லிட்டேனா?"

"டாக்டர், எனக்கு வைத்யம் பண்ண வந்திருக்கேளா?"

"அப்படித்தான் சொல்லிக்கிறாங்க. இல்லை, முதலில் உடம்பில் கோளாறு கண்டுபிடிக்க வந்திருக்கிறேன். அப்புறம் கண்டு பிடிச்ச நோய்க்கு வைத்யம். நீங்க ஒண்ணும் பயப்படாதீங்க, பத்தியம் வைக்கமாட்டேன். என் சிகிச்சையில் பழையது கட்டித்தயிரோடு சாப்பிடலாம்—"

"டாக்டர், என் நோய் உங்கள் சிகிச்சைக்கு மீறினது—"

"அட, உங்கள் சமையல் அவ்வளவு மோசமா என்ன? நான் உங்களுக்கு மாமியாரில்லை. நான் ஒப்ப மாட்டேன். அன்னி ஒருநாள் தித்திப்புச் சேவை தந்தீங்களே, நினைச்சா இன்னும் நாக்கிலே தண்ணி ஊறுது.'

"டாக்டர், முதலில் உங்களை சொஸ்தப்படுத்திக் கொள்ளுங்கள்."

ஏது, மாமிகிட்ட விஷயம் ரொம்ப இருக்கும்போல இருக்குதே!—நாக்கை நீட்டுங்க—"

"டாக்டர், உங்கள் மனைவி நிரபராதி!"

டாக்டர் உடல் குலுங்கிற்று. விழி தெறித்துவிடும் போல் பிதுங்கிற்று.

"டாக்டர், நான் சொல்கிறேன் கேளுங்கள். உங்கள் மனைவி நிரபராதி. அவளை அழைத்துவந்து குடித்தனம் நடத்துங்கள். அவள் வெள்ளை."

"நான்—நான—"

"நீங்கள் சொல்ல வருவது எனக்குத் தெரியும். யாருக்குமே தெரியாது. நீங்கள் பூட்டி வைத்திருந்த உங்கள் பத்துவருஷ ரகஸ்யம் எனக்கு எப்படித் தெரிந்தது? டாக்டர், நான் பந்தமறுந்த அந்தரத்தில் தொங்குகிறேன். பூமியின் வளைவு மட்டுமல்ல, கோளம் அந்தரத்தில், அதன் அச்சில் திரும்புவதே எனக்குத் தெரிகிறது. காலமெனும் உரை என்னின்று கழன்று விழுந்தது. உங்களுக்குத்தான் வருடம். வயது, முன், பின், இரண்டின் நிழல் தட்டிய இப்போ எல்லாம், எதுவும் எனக்கு நிமிஷம் என்ற நியமனத்தின் உப்பல்தான். 'புஸ்'ஸென்று ஊதின பலூன்—டப்! உங்கள் நெஞ்சின் ஏடுகள் என் கண்ணெதிரே புரள்கின்றன. ஆகையால் டாக்டர், முதலில் உங்களை சொஸ்தப்படுத்திக் கொள்ளுங்கள்."

அவர் விழிகள் துளும்பின. ''நான்—நான்—''

''டாக்டர்! விளக்கம் ஏதும் எனக்கு வேண்டாம். உங்கள் மனைவி வெள்ளை. உங்களுக்கே அது தெரியும். ஆனால் வரட்டுக் கௌரவத்தில் வருடங்களை அளந்து கொண்டு நீங்கள் குவிக்கும் சுமையில் நசுங்கிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அளக்கும் படியில் ஒரு தரமேனும் அக்ஷதையிருக்கட்டும்; பிடி நெல்தான் வயலாய் விருத்தியாகிறது. வெறுங்கையின் வீச்சில் விதை விழுந்துவிடாது. ஆகையால் யார் யாரை மன்னிக்கிறீர்களோ, ஒன்று சேருங்கள். அதுதான் நியாயம், நியதி, முக்கியம்.''

Oh, My God!''

''டாக்டர், உங்கள் கடவுள் சிரிக்கிறான், உங்கள் நிழலுக்கு நீங்கள் பயப்படுவது கண்டு. அவரவர்க்கு அவரவர் நிழல், அவரவர் பயங்கள். என் கணவனை எடுத்துக் கொள்ளுங்கள். எதிர்த்த வீட்டு விநோதாவுடன் நாடகம் நடத்திக்கொண்டிருக்கிறார். பாவம்! அவர் முகம் குங்குமமாய்க் கொதிக்கிறது பாருங்கள். ஒருவரையொருவர் ஏமாற்றி, ஒருவரையொருவர் மீன் பிடிக்கிறார்கள்—''

You have given your wife a shock. என்ன நடந்தது?''

''டாக்டர், நானே சொல்கிறேன், செயலளவில் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை, எண்ணமும் செயலே என்பது தவிர. ஆண்டவனின் புன்னகை இன்னதென்று புரியவைக்க உதாரணம் காட்டினேன், அவ்வளவுதான்.''

அவள் கண்கள் மூடின. நெற்றியில் வேர்வை முத்திட்டது.

''டாக்டர், என் மனைவிக்கு உடம்பு என்ன?'' அவன் குரல் நடுங்கிற்று.

ஏகாவின் முகத்தின்மேல் டாக்டர் வைத்த விழி மாற வில்லை. எழுதினாற்போன்று. முகம் அசைவற்று அமைதி யில் பிதுங்கிற்று.

"I don't know. இவங்க இதயத்தையும் சுவாசப் பையையும் இரும்பால் அடிச்சுப் போட்டிருக்குது. உடல் ஆரோக்யம் அதுவே ஒரு அதிசயம்போல் Plusஇல்தான் இருக்குது. ஆனால் அவங்களே சொன்னமாதிரி, என்ன தான் கண்டுபிடித்தாலும் நமக்குத் தெரியாது இன்னும் எத்தினி எத்தினியோ!"

"டாக்டர், என்ன செய்யலாம்?"

"வேணுமானால் தூக்கத்திற்கு ஊசி போடறேன். எழுந்தால் எப்படியிருக்காங்க பார்க்கலாம்."

குங்மட்டியில்
செந்தாமரை விரிந்தது.
ஆயிரம் தழல்கள்
ஆயிரம் இதழ்கள்
மலர் நடுவே தணல் கனிவு
நிர்மல நீராய்
தேங்கி நின்றது.

"பா! பா!! பா!!!

மேயப்போயோ, அறுத்துக்கொண்டோ, கொட்டிலில் வந்து சேராத மாட்டையோ, கன்றையோ தேடிக் கொண்டு, தெருவில் எவனோ குரல் கொடுத்துக்கொண்டு செல்கிறான்.

அறையில் சூழ்ந்த அந்தியிருளில், அக்கூவல் அவளை எட்டுகையில், அதன் அந்தரங்கம் ததும்பும் கொஞ்சல், கடலோரம் நடுநடுங்கும் அலைநுரையில் மிளிரும் சோகம்,

ஜனிப்பின் நிகப்ரமையினின்றே இழுத்த பாகு போன்ற தாபம், உள் நினைவில் தோய்ந்ததும், திரவம் தன்னையேந்தும் ஏனத்தின் வடிவையடைவதுபோல், இத்தனை வேதனைகளும் ஒருங்கே சேர்ந்து உருப்பெற்றதோர் அலை வீங்கிய திடீர் வேகத்தில், உடல் அதிரப் பெருங்கேவல் தொண்டையிலிருந்து கிளம்பி, ஏகா திடுக்கென விழித்துக் கொண்டாள்.

—!

''ஐயோ, நீயா?''

ஏகா, நான் எங்கும் போகவில்லை.

''ஏன்? ஏன்?? ஏன்?? உனக்கு வேறு இடம் இல்லையா? என் தலையில்தான் உன் சீட்டு விழணுமா?''

ஏகா, சீட்டேது? குலுக்கல் ஏது? இது விதி, இது உன் வேளை. இவ்வேளையை, இந்த ஜன்மத்தின் பிறப்பு இறப்பின் இடைவேளை கொண்டே அளவிடுதல் அல்ல. இது நேர, அந்தரத்தின் அடைகாப்பில் எத்தனை ஆயிரம் ஆயிரம் வருடங்கள் இருந்தாயோ? நானே அறியேன், நானும் அவ்வழிதான்.

''நான் ஒரு பாவத்தையறியேன், என் பாட்டுக்கு இருந்தேன். கடவுள் என்று நின்று நினைக்க என் வேலையும் ஜோலியும் எனக்கு நேரமுமில்லை ஹேதுவுமில்லை. காலையும் மாலையும் விளக்கை யேற்றி. நெற்றியை ஒரு தரம் தரையில் முட்டிக்கும்போதுகூட:

'அடுப்பில் சாதம் மிளிந்து வரதே!

பால் பொங்கிடுத்தோ?

குழம்புத்தான் வெந்ததோ?

அவருக்கு டிபன் சூடாயிருக்கோ?'

இதுதான் கவலை. உன்னை நினைத்தேனா? ஏன் என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்கிறாய்?''

ஏகா, உன் பெருமையை நீ அறியாய். அதுவேதான் உன் தகுதி. உன் நினைப்பே அற்றுப்போனாய், உன்னில் நீ நிறைந்தாய். நானும் உன்னுள் அடங்கினேன். ஏகா, பூக்கள் மணப்பதற்காகப் பூக்கவில்லை. தம் இயல்பில் பூக்கின்றன. அதனால் மணக்கின்றன. நீ என்னை நினைத்தால்தான் நான் இல்லை, இருந்துகொண்டேயிருக்கிறேன். வேளை வந்ததும் வெளிப்படுகிறேன். இது என் விதி.

''வேண்டாம், வேண்டாம்! எனக்கு தலை சுத்தறது.

''ஏகா தூங்கறையா?''

''யாரது? ஓ நீங்களா—ஊ—ஹூம் விளக்கைப் போடாதேங்கோ; இங்கே வாங்கோ.''

''ஏகா, காலையிலிருந்து ஒரு பருக்கைக்கூட நீ முகரவில்லையே!''

''எனக்கு ஒன்றும் வேண்டாம், எனக்குப் பசியேயில்லை. உங்கள் பசிதான் எனக்கு இப்போ. கிட்ட வாங்கோளேன். என்னை அணைச்சுக்கோங்கோளேன் இறுக-இன்னும்-ஊ ஹூம் நீங்கள் என்மேல் படவில்லை.''

''ஏகா, உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?''

''நாம் ஒருவரையொருவர் தொட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஒருவருக்கொருவர் எட்டாயிரம் மைல் எட்டியிருக்கிறோம்.''

அவளிடமிருந்து சிரிப்பு பீறிட்டது. க்றீச்சிட்டு அலைபாய்ந்த அதன் உருட்டு, கண்ணாடிவிரியன் போன்ற நெளிவு, இருளில் பளபளத்தது.

' ஏகா, ஏன் சிரிக்கிறாய்?''

அவள் சிரிப்பு சட்டென அடங்கிற்று.

''ஏகா, உன்னைக் கடவுள்தான் காப்பாற்றணும்.''

“சரியாப்போச்சு. அவன் என்னிடம் அடைக்கலம் கேட்கிறான்; நான் அவனுக்கே தாய் ஆகிவிட்டேன். தாய் என்று சொன்னதுமே என் மார்பு சமுத்திரமா பொங்கிப் போச்சு. தொட்டுப்பாருங்கோ. என் ரவிக்கை தெப்பமா போச்சு. அம்மா என்னடான்னா என் வயிறு ஏன் கல்லா யிருக்குன்னு கேக்கறா! வேடிக்கையாயில்லே? எனக்கு சொல் தாங்கல்லே சொல்லைச் சொன்னதுமே அதுவா யிடறேன். தாய் என்றாலே தாயாகிவிடுகிறேன். அந்தரத்தின் தாதுக்கள் அத்தனையும் என்னில் நீந்து கையில் என் தாது ஏன்று எது தனியாய், டாக்டருக்குப் பிடிபடும்? என் அடைப்பு உடைஞ்சுப் போச்சு. தெரியறதா? எனக்கு நானில்லை. உங்களை ‘உன்னை’ யென்கிறேன். இந்த ஜன்மத்தில் நீ என் கணவன். ஆனால் இதற்கு முன் எத்தனையோ பிறவிகள் உங்களை நான் பெற்ற வாசனைகள், காலம் கடந்து என்மேல் வீசுகையில், எதிர் பொங்கும் தாய்மையில் மரியாதைகள் கவிழ்ந்து போகின்றன. ஏன் கையை இழுத்துக்கறேள்?”

“ஏகா, உன்னைப் பார்த்தால் பயமாயிருக்கிறது.”

“பயப்படாதே பாப்பா, அம்மா இதோ இருக்கேனே, என்ன பயம்? பெண்ணாய்ப் பிறந்தாலே தாய்தான்.”

சற்றுநேரம் இருவரும் மௌனமாயிருந்தனர்.

“ஏகா! தூக்கமா?”

“எனக்குத் தூக்கமேது?” அவள் பதில் அவள் உள் எங்கிருந்தோ வந்தது. “சதா விழித்துக்கொண்டிருக் கிறேன். என் விழிப்பில் இமைப்புகூட இல்லை.”

“ஏகா, எனக்கு என்னென்னவோ தோன்றுகிறது. உன் கண் குழி விழுந்திருக்கிறது; குழியில் பாம்பு படுத்திருக்கிறது.”

“வாழும் பாம்பு.”

"வாலும் தலையாய், இரு விழிகளிலும் இருதலைகள் எட்டிப் பார்க்கின்றன."

"காலைச் சுற்றின பாம்பு."

என்னைக் கடித்த பாம்பு.

கடித்து என்னை விழுங்கிவிட்ட பாம்பு

"ஏகா நீ இன்று கும்மட்டியில் ஏற்றிய நெருப்பு இன்னும் எரிந்துகொண்டேயிருக்கிறது."

"என் நெருப்பு."

"அம்மா என்ன அணைத்துப் பார்த்தும் முடிய வில்லை. ஜ்வாலைகள் சீறுகின்றன!"

"என் நெருப்பு."

"ஏகா! நாம் இனியும் பழையபடி இருக்கமுடியுமோ! அந்தரங்கம் அழிஞ்சுபோச்சே!—"

பதில் இல்லை.

"ஏகா? ஏகா?"

"யாரது?"

"———"

இறுக மூடிக்கொண்ட விழிமுகட்டின் வளைவின்மேல் ஒரு பம்பரம் பெரிதாகிக்கொண்டே தோன்றிற்று. அது சுழன்ற வேகத்தில் அது தூங்கிற்று. அதைச் சுற்றி இருள் மின்னல்கள் கடைந்தன.

"போய்விடு! என்னை விட்டுப் போய்விடு!—"

மோனாகாரம் அவள்மேல் இடிந்தது.

என்னை எங்கே போகச் சொல்கிறாய்? நான் இல்லாத இடத்தைக் காட்டு, நான் போக!

"உன் தனிமைக்காக என் தனித்தனத்தை நான் இழக்கவே மாட்டேன்."

இனி உனது என்பதேயில்லை. எல்லாம் என்னதுதான்.

பம்பரத்தின் விசுவரூபம் பார்வை முற்றிலும் அடைத்து பம்பரத்தின் உரு அதில் மறைந்தது. அவள் இப்போது உணர்ந்தது அதன் வேகம்தான். அவள் கெட்டி யாய் பற்றிக்கொண்டிருக்கும் தனியுணர்வைத் தன்னோடு அடித்துச் செல்லும் அம்பர வேகம்.

''மாட்டேன் மாட்டேன் மாட்—''

கும்மட்டியில் நெருப்பு படபடவென வெடித்தது. கூடம் முழுதும் பொறிகள் சிதறின. கணத்தில் தணல் கருகிற்று.

அம்மா மாடிக்கு ஓடி வந்தாள். விளக்கைப் போட் டாள்.

ஏகாவை அணைத்த அணைப்பினின்று அவன் முகம் நிமிர்ந்தது. அவன் விழிகள் பெருகின.

''ஏகா போயிட்டாம்மா.''

''அவளைக் கீழே விடு.''

ஏகாவின் கண்களில் தேங்கிய துயரம் ஸகிக்க முடிய வில்லை. அம்மா, கண்களை மூடினாள்.

''வேதா, ஏகா போகவில்லை. ஏகத்தில் கலந்துவிட் டாள். அவள் இப்படி இருப்பதைவிடப் போனதே மேல். அவளுக்கே நன்மை வேதா, நம் குறைகள்தாம் நமக்கு ஆதாரம், நம் துணை.''

Wrapper Printed at M. K. Color Process, Phone: 841478